# நாம் யார்

பேரா.க.கிருஷ்ணமூர்த்தி

கோயம்புத்தூர் - 18

அற்புதன் செம்மை இராமாநுசன் எம்மை யாளவந்த

கற்பகம் கற்றவர் காமுறு சீலன் கருதரிய

பற்பல்லுயிர்களும் பல்லுலகு யாவும் பரனதென்னும்

நற்பொருள் தன்னை இந்நானிலத்தே வந்து நாட்டினனே

20.08.2014

ஆலமரம்

1. பள்ளிக் கூட ஆலமரத்தில் நண்பர்களோடு விளையாடுகிறோம்.

ஊருணி

2. ஊருணியில் மீன் பிடிக்கிறோம். ஊரின் மேற்கே மிகப் பிரம்மாண்டமான மலை தெரிகிறது. அடர்ந்த காடுகள் உள்ளன. மலையேற பாதைகளும் தென்படுகின்றன. இந்த மலையை இத்தனை வருடங்களாக எப்படி பார்க்காமல் இருந்தோம் என ஆச்சரியம் கொள்கிறோம்.

கிணறு

3. ஊரின் மேற்கே நேரு தோட்டத்தில் அழகிய படிக்கட்டுகளுடன் கூடிய கிணறு தெரிகிறது. தண்ணீர் மிகவும் தெளிவாக படிகம் போன்று உள்ளது. அதில் இறங்கிக் குளிக்கிறோம். பெருமாள் கோவில் முன்புறம் பரந்த கொத்தமல்லித் தோட்டம் காணப்படுகிறது. கொத்துக் கொத்தாக பச்சைப் பசேலென மல்லிப் பயிர் வளர்ந்துள்ளது. மாமாவிடம் இது என்ன பயிர் எனக் கேட்கிறோம். நமக்கே தெரியுமே, பின் எதற்கு மாமாவிடம் கேட்கிறோம் என நினைத்துக் கொள்கிறோம். மேற்கே இன்னும் சற்று தள்ளி பெரிய ஓடையொன்று இருக்கிறது. தண்ணீர் கொஞ்சமாக ஓடுகிறது. கருவேல மரங்களாக உள்ளன. ஓடைக் கரையில் ஒரு கிணறு இருக்கிறது. கிணற்றில் இரு ஆண்கள் குளிக்கிறார்கள். ஒருவருக்கு பெண் போல் மார்பு பெரியதாக இருக்கிறது. இருவரும் முத்தமிடுகிறார்கள். அதிர்ச்சியில் கண் விழிப்பு வந்துவிட்டது.

பால் கெண்டை

4. ஊரின் கிழக்குக் கண்மாயில் படிக்கட்டு போன்ற அமைப்பில் தண்ணீர் ஓடுகிறது. பால் போன்ற தண்ணீர். காவிரியிலிருந்து வருவதாகச் சொல்கிறார்கள். பெரிய நீரோடை ஊரின் வடக்கேயிருந்து வருகிறது. படிக்கட்டு தண்ணீருக்குக் கீழே நூல்வலை வைத்து மீன் பிடிக்கிறார்கள். வலையை இழுத்துச் செல்லாமல் இருப்பதற்காக அதனுள் பெரிய கற்களை வைத்திருக்கிறார்கள். அயிரை மீன்கள்

வலை கொள்ளாத அளவிற்கு மாட்டுகின்றன. இழுக்க முடியாமல் வலையை இழுக்கிறார்கள். பக்கத்திலேயே குவித்து வைத்து விற்கிறார்கள்.

கண்ணன் மீன் விற்கிறார். விவேகானந்தன் வாங்குகிறார். யாமும் அரைக்கிலோ வாங்குகிறோம். விலை குறைவு என்று மேலும் அதிகமாக வாங்க ஆசைப்படுகிறோம். யாம் தூண்டில் போட்டும் மீன் பிடிக்கிறோம். வெள்ளை வெளேர் நிறத்தில் பெரிய பால் கெண்டை மாட்டுகிறது.

24.08.2014

பனிமலைகள்

5. ஊரில் மிகப் பெரிய பனிமலைகள் தெரிகின்றன. இரண்டு உச்சியாக உள்ளன. முற்றிலும் பனியால் போர்த்தப்பட்டுள்ளன. பலரும் சறுக்கி விளையாடுகிறார்கள். மகிழ்ச்சியாக விழுந்து விழுந்து உருள்கிறார்கள். யாம் அனுஷ்யா, கௌசல்யாவோடு மலைக்கு ஏறிச் செல்ல நடக்கிறோம். உச்சிக்கு சென்று விளையாட ஆரம்பிக்கிறோம்.

6. ஊரில் மிகப் பிரம்மாண்டமான பெருமாள் கோவில் தெரிகிறது. முதலில் அருணாச்சலேஸ்வர் கோவிலாக நினைக்கிறோம். பலரும் திருநாமம் பூசியிருப்பதால் பெருமாள் கோவிலென்ற முடிவுக்கு வருகிறோம். கோவிலின் தீபத்திற்கு நெய் காணிக்கையாகக் கொடுக்கிறார்கள். அரைப்படி, ஒருபடியென்று அளக்கிறார்கள். யாமும் அரைப்படி நெய்க்கு சீட்டு வாங்குகிறோம். கோவிலினுள்ளே கருங்கற்களாலான சிலைகள் நிறையத் தெரிகின்றன. கோவிலினுள் போய் கொண்டே இருக்கிறோம்.

உயரமான பாலத்தில் நின்று பலரும் வேடிக்கை பார்க்கிறார்கள். கொட்டுச் சத்தம் கேட்கிறது. வான வேடிக்கை நடக்கிறது. நாங்கள் நின்று கொண்டிருக்கும் இடத்திற்கு அருகே மிகப் பெரிய வெடி, வண்ணங்களுடன் வெடித்துச் சிதறுகிறது. இறங்கி வரும் போது காவிரி ஆறு தெரிகிறது. இரு கரையிலும் தண்ணீர் நிரம்பி ஓடுகிறது. ஆற்றில் இறங்கிக் குளிக்கிறோம்.

வரும் வழியில் கடைகள் நிறைய உள்ள சந்தை தென்படுகிறது. நிறைய வாகனங்கள் செல்கின்றன. சிக்னலுக்காக காத்திருந்து பின்னர் போகிறோம். அச்சுதன், அக்ஷயாவும் உடன் வருகிறார்கள். பல வகையான வியாபாரப் பொருட்களை கூவிக் கூவி விற்கிறார்கள். சாப்பிடுவதற்கு கடைகள் தேடி

அலைகிறோம். நடந்து கொண்டே இருக்கிறோம். கடைசியில் ஒரு சிறிய கடைக்குச் செல்கிறோம். உட்காருவதற்கு இடமில்லை. கடை முழுதும் பொருட்களை, வாழை இலைகளை குவித்து வைத்திருக்கிறார்கள். ஒருவர் பரோட்டோ செய்து கொண்டிருக்கிறார். பரோட்டா வாங்கி நின்று கொண்டே சாப்பிடுகிறோம்.

25.08.2014

புதைகுழி

7. ஊரின் தெற்கே நடந்து செல்கிறோம். சுடுகாடு வருகிறது. புதைகுழி தெரிகிறது. கொசுவலை போன்ற வலையால் குழியை மூடி வைத்திருக்கிறார்கள். புதைகுழிக்குள் யாரோ படுத்திருப்பது போன்று இருக்கிறது. எழுந்து வரத் தயாராவது போல் தெரிகிறது. எமக்கு பயத்தில் முழிப்பு வந்துவிட்டது.

26.08.2014

குகை பாதை

8. தெருவில் விளையாடிக் கொண்டிருக்கிறோம். மணிகண்டன் வீட்டிற்குச் செல்கிறோம். இப்போதுதான் உன்னைப் பார்த்தால் குட்டிப் பையனாக சமர்த்தாக இருக்கிறாய் என்று அவரது அம்மா ஆச்சர்யப்பட்டு சொல்கிறார்.

திருமலைப்புரம் அண்ணன் தோட்டம் தெரிகிறது. தோட்டத்தின் தெற்கே நின்று பேசிக் கொண்டிருக்கிறோம். அருகே செடி, கொடிகளால் ஆன குகை போன்ற அழகிய பாதை தெரிகிறது. ரத்தினம் டாக்டர் தோட்டத்தின் கிணறு வழியே மிதிவண்டியில் செல்கிறோம். கோபால், பொண்ணுப்பாண்டி இருவரும் கைலி மட்டும் கட்டிக்கொண்டு பாதை அருகே நிற்கிறார்கள். அங்கே வேலை செய்வதாகச் சொல்கிறார்கள்.

27.08.2014

நட்சத்திரப் பூக்கள்

9. கிழக்குக் கண்மாய் வயல்களில் விளையாடுகிறாம். நண்பர்கள் ஊசி போன்ற கூர்முனையுள்ள கம்பியை வைத்து கிட்டி விளையாட்டுப் போன்று அடிக்கிறார்கள். யாம் அதைப் பிடிக்கிறோம்.

சிறு குன்று போன்று தெரிகிறது. அங்கே அக்ஷயாவோடு விளையாடுகிறோம். அருகே இருக்கும் மரங்களில் நட்சத்திர வடிவில் அழகிய

பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. பெரிய சிவப்பு நிறத்தில் பைய் போன்று பெரிய பழங்கள் இருக்கின்றன. அவற்றைப் பிடுங்கி சாப்பிடலாம் என இறங்குகிறோம்.

28.8.2014

பாலம்

10. விடுதி போன்று தெரிகிறது. யாம் அங்கே நண்பர்களோடு இருக்கிறோம். மற்றொரு விடுதிக்கு செல்கிறோம். பெண்கள் விடுதியென்று சொல்லி உள்ளே விட மறுக்கிறார்கள். பின்னர் சாப்பிடக் கூப்பிடுகிறார்கள். யாம் சாப்பிட அமர்ந்திருக்கிறோம்.

திரும்பி வரும் போது பிரம்மாண்டமான பாலம் தெரிகிறது. பரளச்சியில் உள்ள கண்மாய் பாலமாக நினைக்கிறோம். இதெப்படி இவ்வளவு பெரிதாகியதென்று வியக்கிறோம். பாலம் வளைந்து வளைந்து செல்கிறது. யாமும் நடந்து கொண்டேயிருக்கிறோம். மேலிருந்து பார்த்தால் பெரிய நகரம் போன்று தெரிகிறது. பலவிதமான கடைகள் இருக்கின்றன. பாலத்தில் இருக்கும் ஒரு இறங்கும் வழியாக கீழே இறங்குகிறோம். அது நேராக ஒரு கோவிலுக்குள் செல்கிறது.

கோவில் அருகே சென்றவுடன் முக்கிய கதவுகள் கல்லாலான கதவுகளால் அடைக்கப்பட்டிருப்பது தெரிகிறது. அருகே இருக்கும் மற்றொரு வழியில் நடக்கிறோம். அழகிய சிலைகள் இருக்கின்றன. நிறைய மக்கள் இருக்கிறார்கள். பாதையின் முடிவில் ஒரு பூங்கா வருகிறது. அதன் மையத்தில் குளம் உள்ளது. குளத்தின் பாதி வரை நடைமேடை போட்டிருக்கிறார்கள். யாம் அங்கு சென்று அதன் இயற்கை அழகை ரசிக்கிறோம். மீன்கள் துள்ளிக் குதிக்கின்றன.

சூலூர் குளம்

11. துறை பேராசிரியர்களோடு சுற்றுலா செல்வது போல் தெரிகிறது. அம்பாசிடர் போன்ற வாகனத்தில் இட நெருக்கடியாக அமர்ந்திருக்கிறோம். யாம் **நங்கை மேடம்** அருகே உட்கார்ந்து பேசிக் கொண்டு செல்கிறோம். பெரிய குளம் ஒன்று வருகிறது. தண்ணீர் தளும்பி வழிகிறது. சூலூர் குளம் பாருங்கள் என்று யாம் சொல்கிறோம். திடீரென ஊருக்கு மேற்கே ஆசாரி தெரு அருகே பெரிய மலை தெரிகிறது. யாம் அதன் உச்சியில் நிற்கிறோம். மலை இடிவது போல் தெரிகிறது.

யாம் சாகசங்கள் செய்து, குதித்து, பறந்து கீழே இறங்குகிறோம். அங்கே வந்தவுடன் மலை அப்படியே நின்றுவிடுகிறது.

30.08.2014

வாடகை வீடு

12. பெரிய நகர் போன்று இருக்கிறது. அழகிய வேலைப்பாடுள்ள பெரிய வீட்டில் அம்மாவுடன் இருக்கிறோம். தெருவில் குடத்தை வைத்து தண்ணீர் பிடிக்கிறோம். அருகேயுள்ள ஒரு வீட்டில் இராஜமணி இருக்கிறார். அவர்களது சொந்த வீடொன்றும் எம்மை வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார். வீடு மரங்களுடன் சதுரமாக உள்ளது.

மிக உயரமான மாடி வீடுகள் நிறையத் தென்படுகின்றன. யாம் வாடகைக்கு வீடு தேடுகிறோம். அருகே கடற்கரை தெரிகிறது. அருகிலுள்ள பகுதிகளில் மிகப் பிரம்மாண்ட வீடுகள் கட்டியிருக்கிறார்கள். மிக மிக உயரமான கட்டிடங்களாகத் தெரிகின்றன. கடற்கரை மணலில் யாம் விளையாடுகிறோம். வீட்டிற்கு திரும்பும் வழியில் அழகிய புல் திட்டுகளுடன் கூடிய பூங்காக்கள் உள்ளன. வானுயர்ந்த ஒரு வீட்டை யாம் விலைக்கு வாங்க முயற்சிக்கிறோம்.

01.09.2014

ஜெய்சங்கர் அண்ணன்

13. ஒரு வீட்டில் இருக்கிறோம். மாடியோடு இருக்கிறது. தமிழரசி வீடு என நினைக்கிறோம். எல்லோரும் உறங்குகிறார்கள். முனியசாமி அண்ணன் இருக்கிறார். ஏதோ விஷேசம் நடப்பது போல் தோரணம் கட்டியிருக்கிறார்கள். ஜெய்சங்கர் அண்ணன் இருக்கிறார். போட்டித் தேர்வுகளுக்குப் படித்துக் கொண்டிருக்கிறார். யாம் கணிதம் சொல்லிக் கொடுக்கிறோம். ஒரு பெண் எமக்கு அருகே உறங்குகிறார்.

குட்டிப் பையன்

14. ஊரில் ஒரு பையன் பிறந்திருக்கிறான். எமக்கு தம்பி பிறந்திருப்பதாக எல்லோரும் சொல்கிறார்கள். யாம் அவனை தூக்கி வைத்துக் கொஞ்சுகிறோம். அக்கா வீட்டிலிருந்து அவனை தூக்கிக் கொண்டு பழைய வீட்டிற்கு வருகிறோம்.

பஞ்சா அக்கா அவனுக்கு முத்தம் கொடுக்கிறார். வீட்டில் ஏதோ பூஜை நடக்கிறது. கீரைக் கடைசல் போன்ற பச்சையானதொன்றை எல்லாருக்கும் குட்டிப் பையன் கொடுக்கிறான். எமக்கும் சிரித்துக் கொண்டே தருகிறான். அவனை யாரோ தூக்கி வைத்திருக்கிறார்கள். யாரெனத் தெரியவில்லை. கிருஷ்ணா பிறந்து விட்டதாக எல்லோரும் பேசுகிறார்கள். எமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

02.09.2014

அப்பா

15. ஊரில் வீட்டில் இருக்கிறோம். அப்பா வெளியூர் சென்று விட்டதாகத் தெரிகிறது. யாம் திண்ணையில் எதையோ படித்துக் கொண்டும், வேலை செய்து கொண்டும் இருக்கிறோம். திரும்பிப் பார்த்தால் பின்னால் ஒரு அறையில் அப்பா சிரித்துக் கொண்டே எழுந்திருக்கிறார். இவர் இங்கேதான் இவ்வளவு நேரமும் இருந்தாரா என்று எமக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. அண்ணன் பசிக்கிறது என்கிறார். யாம் ஒவ்வொருவருக்கும் எத்தனை பரோட்டா வேண்டுமென்று கேட்டு கடைக்குக் கிளம்புகிறோம்.

செய்முறை வகுப்பு

16. கல்லூரியில் யாம் செய்முறை வகுப்பு நடத்துகிறோம். வெள்ளை நிறம் பூசப்பட்டு பெரிய கல்லூரியாக உள்ளது. நிறைய மரங்கள் இருக்கின்றன. பல மாடிகள் கொண்ட கட்டிடமாகத் தெரிகிறது. யாம் சொல்லச் சொல்ல மாணவர்கள் எழுதுகிறார்கள். இடைவேளை வருகிறது. மாணவர்கள் எழுந்து செல்கிறார்கள். யாம் தூங்கலாம் என்று கீழே படுக்கிறோம். அங்கேயே உறங்கியும் விட்டோம்.

**மங்கை மேடம்** வந்து எழுப்புகிறார். மாடியிலேயே நின்று முகம் கழுவுகிறோம். கீழே இருப்பவர்கள் மேல் தண்ணீர் தெறிக்கும், அவ்வாறு செய்யக்கூடாது என நினைக்கிறோம். சுத்தம் பண்ணும் ஒரு பெண் மாடியைக் கூட்டி அங்கிருந்தே கீழே தள்ளுகிறார். நிறையக் குப்பைகள் சேர்ந்து கீழே விழுகிறது. குச்சிகளும், தூசியும் ஒன்று சேர்ந்து உருண்டை போன்று கீழே விழுகிறது. எமக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. அந்தப் பெண் கோபமாக இருப்பது போல் தெரிகிறது.

யாமும் **மங்கை மேடமும்** சேர்ந்து வகுப்பைக் கவனிக்கிறோம். பின்னர் அருகே இருக்கும் மாடியில் அமர்ந்து மகிழ்ச்சியாக பேசிக் கொண்டிருக்கிறோம். தேசிய மாணவர் படை வீரர்கள் கீழே அணி வகுத்துச் செல்கிறார்கள்.

சம்பளம் கொடுப்பதாகத் தெரிந்து கீழே செல்கிறோம். அந்த அறையில் கூட்டமாக இருக்கிறது. எமக்கு அருகே தமிழரசி நிற்கிறார். அவர்களைப் பார்த்து இந்தக் கல்லூரியில் இத்தனை பேர் வேலை செய்கிறார்களா என எமக்கு ஆச்சரியம் வருகிறது. திடீரென்று பெண்களுக்கு தனி வரிசையென்று ஒருவர் சொல்கிறார். பெண்கள் தனியாக நிற்கிறார்கள். யாம் ஒரு ஆணின் பின்னே மிகவும் நெருக்கமாக நிற்கிறோம்.

சம்பளம் தருபவருக்கு முன்னே யாம் மூன்றாவதாக நிற்கிறோம். திடீரென கூட்டுபவர், ஆய்வு உதவியாளர்கள் போன்றவர்கள் பணம் தருபவரோடு சண்டை போடுகிறர்கள். ஒருவரையொருவர் இழுக்கிறார்கள். தள்ளி விடுகிறார்கள். தலையில் அடித்துக் கொண்டு அழுகிறார்கள். நான்கைந்து பேர் இவ்வாறு செய்கிறார்கள்.

பணம் தருபவரோடு சேர்த்து எல்லோரையும் ஒரு ஜிப் வைத்த பை மூடுகிறது. பணம் தருபவர் மட்டும் மறுபடியும் பணம் தர ஆரம்பிக்கிறார். பெயரைச் சொன்னவுடன் ஒரு சிறிய பணப்பை போன்ற ஒன்றைத் தருகிறார். யாம் கிருஷ்ணமூர்த்தி என்று சொன்னவுடன் ஒரு கைப்பை கொடுக்கிறார். சிறியதாக இருக்கிறது. பணம் இருக்கிறதாயென்று தேடுகிறோம். பத்து ரூபாய் தாள்கள் கையில் அகப்படுகின்றன. ஒரு மூலையில் ஆயிரம் ரூபாய் தாள்கள் மடங்கி இருப்பதை எடுக்கிறோம். 30,000 சம்பளம் என எண்ணுகிறோம்.

தமிழரசியோடு வீட்டிற்கு சாலையில் நடந்து செல்கிறோம். திடீரென இரும்புக் கம்பியை இருவரும் சுமக்கிறோம். இதை வைத்து என்ன செய்யலாம் என இருவரும் யோசிக்கிறோம். தூங்குவதற்கு ஒரு கட்டில் செய்து பயன்படுத்தலாம் என தீர்மானிக்கிறோம். வீட்டில் சிறு பையன் இருக்கிறான். சிவப்பாக அழகாக இருக்கிறான். தமிழரசி எடுத்துக் கொஞ்சுகிறார். பால் கொடுக்கிறார். கையை சின் முத்திரையாக வைத்திருக்கிறான். எப்போதும் கையை இப்படித்தான் வைத்துக் கொள்கிறானென்றும் அதிசயமான பிள்ளையென்றும் யாம் சொல்கிறோம்.

03.09.14

கபடிப் போட்டி

17. ஊரில் மாமா வீடு அருகே விளையாடுகிறோம். சிறு பையன்கள் நிறைய இருக்கிறார்கள். ரத்தினசபாபதி இருக்கிறார். பையன்களுக்கு இடையே கபடிப் போட்டி நடக்கிறது. யாம் அவர்களை போட்டிக்குத் தயார்ப்படுத்துகிறோம்.

12.9.14

காவி சாமியார்கள்

18. வீட்டில் தமிழரசியோடு அடிக்கடி வாக்குவாதம் நிகழ்கிறது. யாம் ஒரு பேருந்து நிலையத்தில் தங்கியிருக்கிறோம். காவி உடை உடுத்திய பல ஆண்கள் அங்கே தங்கியுள்ளனர். அவர்கள் அங்கேயே நாள் முழுவதும் உட்கார்ந்து பேசிக் கொண்டும், படுத்துக் கொண்டுமிருக்கிறார்கள். வெளியே போய் உணவு வாங்கி வந்து அவர்கள் சாப்பிடுகிறார்கள். இலை முழுதும் சோறு, குழம்பு நிரம்பி இருக்கிறது. பாயாசம் வழிந்து கொட்டுகிறது. யாம் காலையும், மதியமும் சாப்பிடாமல் இருக்கிறோம்.

அப்பாவும், அக்காவும் அங்கு வந்துவிட்டார்கள். எம்முடனேயே இருக்கிறார்கள். அங்கிருந்து பக்கத்து இடங்களுக்கு யாம் நடந்து செல்கிறோம். சிறிய மலை இருக்கிறது. அதில் ஏறிச் செல்கிறோம். மலையைக் குடைந்து புகைவண்டிப் பாதை செல்கிறது. மலையைத் தாண்டி அதன் சரிவில் இறங்கி நடக்கிறோம். தூரத்தில் மிகமிகப் பிரம்மாண்டமான ஒரு மலை உச்சி தெரிகிறது. உச்சியில் நிறைய விளக்குகள் எரிகின்றன. அவற்றை நெடு நேரம் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். மலை உச்சியில் ஏதேனும் பெரிய நகரம் இருக்குமோ என நினைக்கிறோம்.

மீண்டும் பேருந்து நிலையத்திற்கு வர இறங்கி நடக்கிறோம். ஆட்டோ எம்மைக் கடந்து செல்கிறது. காவி சாமியார்களிடம் உங்களுக்கு சாப்பாடு எப்படிக் கிடைக்கிறது எனக் கேட்கிறோம். அவர்கள் பக்கத்திலிருக்கும் பெரிய உணவு விடுதிகளிலிலிருந்து காசு கொடுத்து வாங்கி வருகிறோம் என்கிறார்கள். திடீரென அம்மாவை நினைந்து அழுகிறோம். விம்மி, வெடித்து அப்படி யாருமே அழவில்லையோ என நினைக்கும் அளவிற்கு கத்தி அழுகிறோம். கல்லுக்காளைப் பெரியப்பா தலையில் கோதி விட்டு எம்மைத் தட்டிக் கொடுக்கிறார்.

14.9.2014

அக்ஷயா

19. ஒரு கல்லூரி தெரிகிறது. விழா நடைபெறுகிறது. வகுப்பறை பெரிய அறையாக இருக்கிறது. எல்லோரும் அமர்ந்திருக்கிறார்கள். அச்சுதனுடன் மாவு வாங்கச் செல்கிறோம். அச்சு சிறுநீர் கழிக்கச் செல்கிறான். யாமும் உடன் செல்கிறோம். பெரிய ட்ரம்களில் தண்ணீர் நிரப்பி இருக்கிறார்கள். மேலேயிருந்து தண்ணீர் ட்ரம்களில் கொட்டுகிறது. அதில் சிறுநீர் கழிப்பதாக வசதி செய்யப்பட்டுள்ளது.

வகுப்பறையில் **உவதி மேடம்** டீச்சராக இருக்கிறார். மாணவர்களுக்கான ஒரு போட்டி நடைபெறுகிறது. விவேகானந்தன் நடுவராக உள்ளார். கேள்வி கேட்கும்போது யாருமே பதில் சொல்லவில்லை. அக்ஷயா எழுந்து ஆங்கிலத்தில் நெடு நேரம் பேசி பதில் சொல்கிறாள். அனைவரும் கைதட்டிப் பாராட்டுகிறார்கள். யாம் வெளியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். எல்லா குழந்தைகளும் வெளியில் வருகிறார்கள். அக்ஷயாவுக்காக யாம் காத்துக் கொண்டிருக்கிறோம். வராண்டாவில் **முத்தனன் சார்** எம்மைக் கடந்து நடந்து செல்கிறார். அவர் நடந்து செல்வது வித்தியாசமாக இருக்கிறது. இவருக்கு இன்னும் குணமாகவில்லையா என நினைக்கிறோம்.

19.09.2014

லட்சுமி படம்

20. சபாபதி வீட்டின் முன் பிள்ளைகள் விளையாடுகிறார்கள். அக்கா இருக்கிறார். காலில் அடிபட்டு துணியில் கட்டு போட்டிருக்கிறார். முனியசாமி அண்ணன் இருக்கிறார். பழைய வீட்டில் அழகான லட்சுமி படம் மாட்டப்பட்டிருக்கிறது. படத்தை யாரோ மாற்றி விட்டார்கள். யாம் இன்னொரு படத்தை அங்கே மாட்டுகிறோம். சிவப்புக் கலரில் பட்டும், வெள்ளைச் சட்டையும் அணிந்து லட்சுமி மிகவும் அழகாக இருக்கிறார். இன்னும் ஒன்பது நாட்களில் சொர்க்கம் சென்று விடலாம் என யாம் சொல்கிறோம்.

**பிரபை மேடம்** கல்லூரியில் இருக்கிறார். **உவகை மேடம்** கோபப்படுவதைப் பற்றி பேசுகிறார். வீட்டில் சரியில்லாததால்தான் இப்படி அதிகமாகக் கோபப்படுவதாகவும் சொல்கிறார். எமது அம்மா வீட்டிலிருந்து டிப்பன் கேரியரில்

பலவிதமான உணவுகளைக் கொடுத்து அனுப்பியுள்ளார். யாம் இவ்வளவு சாப்பாட்டையும் எப்படி சாப்பிடுவதென்று யோசித்து கொண்டிருக்கிறோம்.

26.09.2014

பறவைகள்

21. மணிகண்டனுடன் ஏதோ ஒரு நகருக்குள் சுற்றிக் கொண்டிருக்கிறோம். சாலைகள் அகலமாகவும், சுத்தமாகவும் இருக்கின்றன. வாழைப்பழம் சாப்பிட்டு விட்டு தோலை எங்கே போடுவது எனத் தெரியாமல் சுற்றுகிறோம். காலை சந்திப்பில் இருந்த காவலரிடம் கேட்கிறோம். அருகிலேயே இருந்த நீல நிற பிளாஸ்டிக் தொட்டியைக் காட்டுகிறார். இது தெரியாமலா இவ்வளவு நேரம் சுற்றிச் சுற்றி வந்தோம் என ஆச்சரியப்படுகிறோம்.

சாலை வழியே நடந்து செல்கிறோம். மிக உயரமான வீடுகள், கடைகள் தெரிகின்றன. சாலை ஓரத்தில் பெரிய பெரிய பாத்திரங்களில் சாப்பாடு வைத்திருக்கிறார்கள். அவற்றை டெம்போக்களில் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் உணவுப் பாத்திரங்களாகத் தெரிகின்றன. இங்கே சமைக்கும் உணவு தான் உணவு விடுதிக்கு செல்கிறதா எனக் கேட்கிறோம். மணிகண்டன் சாப்பிடுகிறார். யாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதே பாதையில் நடந்து கொண்டே இருக்கிறோம். வானத்தில் லட்சக்கணக்கான பறவைகள் பறந்து வருகின்றன. தலைக்கு மேலே வரும் போது அனைத்தும் செம்பூத்துப் பறவை போல் செம்பழுப்பாகத் தெரிகின்றன. வால் நீளமாக உள்ளது.

இன்னும் சிறிது தூரம் சென்ற பின் பெரிய சேரி போன்ற பகுதி வருகிறது. சிறிய சிறிய வீடுகளாக, நெருக்கமாக இருக்கின்றன. நடந்தது போதும் என்று திரும்பி நடந்து வரும் போது சேரிப்பகுதியிலிருந்து கொட்டுச் சத்தம் கேட்கிறது. வரவர சத்தம் குறைந்து கொண்டே வருகிறது.

காடுகள் வழியாக வருவது தெரிகிறது. எமது அப்பாவுடன் நடந்து வருகிறோம். வழியில் சிறு சிறு குழிகளில் செடிகள் நட்டிருக்கிறார்கள். இப்போது நிறையப் பேர் உடன் நடந்து வருவது தெரிகிறது. மற்றவர்கள் வரப்பில் நடந்து செல்ல, யாம் செடிகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் தெளித்துக் கொண்டே செல்கிறோம்.

திடீரென நிறைய விமானங்கள் கூட்டமாக நகருக்குள் பறந்து செல்கின்றன. சிறிது நேரத்திலேயே நகரிலிருந்து வெளியே மிக மிக வேகமாக விமானங்கள் பறந்து வெளியேறுகின்றன. ஒரு விமானத்தை விரட்டிக் கொண்டு பல விமானங்கள் செல்கின்றன. ஹெலிகாப்டர்களும் உடன் பறக்கின்றன. சிறிய வேன் ஒன்றும் பறந்து செல்கிறது. வேன் எப்படி பறக்க முடியும் என யாம் வியக்கிறோம்.

விரட்டிச் சென்ற விமானத்தை மடக்கி சாலையிலேயே இறக்கி விட்டார்கள். சாலையில் விமானம் ஓடி மறைந்து விட்டது. காவலர்கள் பாதுகாப்பிற்காக சாலையில் நிற்கிறார்கள். திருட்டு விமானத்தை தரையிறக்கி விட்டதாகப் பேசிக் கொள்கிறார்கள். அதிலிருந்த எடுத்த பணத்தை சாலையில் வருவோர் போவோருக்கெல்லாம் கொடுக்கிறார்கள். அச்சுதன் ஒரு தாள் வாங்குகிறான். அது 500 ரூபாய் தாள். கொஞ்சம் பெரியதாக இருக்கிறது. நடுவில் 500 என்று எழுதியிருக்கிறது. பின்னாடி திருப்பினால் ஓரத்தில் 100 ரூபாய் என்று எழுதியிருக்கிறது. எதற்காகப் பணத்தை வாங்கினாய் என்று அச்சுதனிடம் கேட்கிறோம். அவன் கேட்கவில்லை, தாமே கொடுத்தோம் எனக் காவலர் சொல்கிறார். அச்சுதன் புத்தகம் வாங்கக் கொடுத்தான் என்றும் தம்மால் வாங்க இயலவில்லை, அதனால் திரும்பித் தருகிறோம் என்றும் சொல்கிறார்.

வீட்டிற்கு வருகிறோம். வீடு அருகிலேயே இருக்கிறது. தமிழரசி வீட்டை கழுவிக் கொண்டிருக்கிறார். அச்சுதன், அக்ஷயா கீழே விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். மண்தரை ஈரமாக இருக்கிறது. இருவரும் சிறு வயதினராகத் தெரிகிறார்கள். பேபி வராண்டிவிற்குக் கீழே நின்று பாத்திரங்களைக் கழுவும் பொருட்டு வாங்குகிறார். கழுவிக் கொடுத்து விட்டு வீட்டிற்கு நடந்து செல்கிறார்.

27.9.2014

பெண் காவலர்

22. ஊரின் கிழக்கு கண்மாய் வழியாக தமிழரசியும் யாமும் நடந்து வருகிறோம். அடி குழாய் அருகே பாண்டி மாமா மீன்கள் விற்கிறார். தரையில் உட்கார்ந்திருக்கிறார். ஒரு பெரிய கெழுத்தி மீனும் சில பால் கெண்டைகளும் இருக்கின்றன. கெழுத்தி மீனின் வாய் பெரியதாகத் திறந்திருக்கிறது. செவுள் திறந்திருக்கிறது. செவுள் உள்ளே ஆழத்தில் பல வரிசையில் அமைந்த சிறு பற்கள் தெரிகின்றன. செவுள்களில் எப்படி பற்கள் வந்தன என ஆச்சர்யப்படுகிறோம்.

மீன்களை வாங்காமல் செல்கிறோம். அழகன் தாத்தா வீட்டு முற்றத்தில் நிற்கும் **ஹேமா** இப்போதான் வர்றீங்களா எனக் கேட்கிறார்.

பழைய வீட்டில், விறகு போட்டிருந்த இடத்தின் முன், கட்டிலில் அமர்ந்திருக்கிறோம். கருப்பசாமி கோவிலின் முகப்பில் வெண்கலத்தாலான அழகிய வேலைப்பாடுகளுடைய வளைவு வைக்கப்பட்டுள்ளது. வீட்டின் மேற்குச் சுவர் பூசாமல் இருக்கிறது. உதயசூரியன் அண்ணன் சுவரை சீக்கிரம் பூச வேண்டும் என்று சொல்கிறார். அப்பா எழுந்து செல்லும் போது வலதுகை தோள்பட்டை அருகே பெரிய கட்டி இருக்கிறது, சீக்கிரம் சரியாகி விடும் என்று சொல்லி எழுந்து செல்கிறார். கணேசமூர்த்தி அண்ணனுக்கு ஒரு சிறிய பையன் இருக்கிறான். எம்மிடம் குளிக்கச் சொல்லி ஒரு சோப்பு கட்டியை நீட்டுகிறான்.

வெள்ளைச்சாமி மாமா வீடு எமது வீடாக இருக்கிறது. அங்கே தூங்கச் செல்கிறோம். தங்கப்பாண்டி, அவர்களின் வீடு அருகே நின்று கொண்டிருக்கிறார். எம்மை பார்த்தவுடன் மாமா வீட்டிற்குள்ளே இருந்த பையன்கள் வெளியே வருகிறார்கள். தூங்குவதற்காக பாய் விரிக்கும் போது தரையில் சிறுசிறு பள்ளங்களாகத் தெரிகின்றன. நிறைய எறும்புகள் அங்குமிங்கும் ஊர்ந்து திரிகின்றன. பக்கத்தில் இரும்பு மடக்குக் கட்டில் இருப்பதைப் பார்த்து, அதை எடுத்து நீட்டி வைத்து படுக்கலாம் என நினைக்கிறோம். எமது புது வீடு ஞாபகம் வந்து, அங்கேயே போய் தூங்கலாம் எனக் கிளம்புகிறோம்.

ஊரில் பெரியதொரு வணிக வளாகம் இருப்பதாகத் தெரிகிறது. அங்கே பொருட்கள் வாங்கச் செல்கிறோம். அச்சுதன் இருக்கிறான். குழந்தைகளுக்கு பென்சில், இரப்பர் போன்றவற்றை எடுத்துக் கூடைக்குள் போடுகிறோம். பில் போடும் போது அதிகமான பில் என்று கருதி பென்சில் போன்றவற்றை எடுத்து விடுகிறோம். கோடாரித் தைலம் இருக்கிறதா என்று கேட்கிறோம். அதற்குப் பதிலாக கடைகாரர் ஏதோ லோசன் போன்ற ஒன்றைத் தருகிறார். யாம் அதை வேண்டாமென்று மறுத்து விடுகிறோம். பில் அறுபதாயிரம் என்கிறார். ஆறாயிரம் ரூபாய் கூட வராதே, இதென்ன இவ்வளவு பில் போட்டிருக்கிறீர்கள் என்று வாக்குவாதம் செய்கிறோம். காவல் நிலையம் செல்லலாமென்று சொல்லி கடைக்காரரோடு அங்கு செல்கிறோம்.

காவல் ஆய்வாளர் தனியே உட்கார்ந்திருக்கிறார். காவலர்கள் நிறையப்பேர் நிற்கிறார்கள். உயரமான பெண் காவலர் ஒருவர் நிற்கிறார். முகம் மிகவும் அழகாக

இருக்கிறது. மார்பகங்கள் பெரியதாக இருக்கின்றன. அவரது மார்பு அருகே முகத்தை வைத்துக் கொண்டு ஒரு ஆண் காவலர் அந்தப் பெண்ணோடு பேசிக் கொண்டிருக்கிறார்.

காவலர்கள் பலரும் தங்களது உடல் அழகைக் காட்டுகிறார்கள். ஜிம் உடலமைப்பு போன்று உடல்கள் இருக்கின்றன. யாமும் எமது கையை மடக்கிக் காட்டுகிறோம். காவல் ஆய்வாளர் ஒவ்வொருவராக பார்த்துக் கொண்டே வருகிறார். எமது அருகே வந்து நீங்க விருந்தினரல்லவா என்கிறார். யாம் இல்லை, பார்வையாளர் என பதில் சொல்கிறோம். எமது கைகளைப் பிடித்து தட்டிக் கொடுக்கிறார். அவர் இரண்டாயிரம் விளையாட்டு மாணவர்களுக்கு பொறுப்பாளராக இருப்பதாக எம்மிடம் கூறுகிறார். நன்றாக கவனித்து கொள்வதாகவும் சொல்கிறார். ஒரு மாணவர் எமக்கு அருகே வந்து அவர் பொய் சொல்கிறாரென்றும், ஒன்றுமே நன்றாக இல்லை என்றும் சொல்கிறார். நின்று கொண்டிருக்கும் இடத்திற்கு கீழே பள்ளமான பகுதியில் சாலை இருக்கிறது. அதன் வழியே விளையாட்டு மாணவர்கள் இறங்கி நடக்கிறார்கள்.

29.9.2014

பாண்டு

23. பரளச்சியிலிருந்து வருவதாகத் தெரிகிறது. வரும் வழியில் சாலையின் இருபுறமும் மிகப் பெரிய மாளிகைகள் இருக்கின்றன. உயரமான கோபுரங்கள் கொண்ட கோவில்களும் தெரிகின்றன. வேனில் சுற்றுலா செல்வதாகவும் தெரிகிறது. பரளச்சி சந்திப்பிலிருந்து வரும் போது யாம் படித்த பள்ளிக் கூடத்தை அனைவருக்கும் காட்டுகிறோம். பள்ளிக் கூடத்தின் முன்புறமாக அழகிய செடிகள் காணப்படுகின்றன.

வரும் வழியில் ஒரு கிணற்றில் இறங்கிக் குளிக்கிறோம். **உவதி மேடத்திற்கு** அழகான ஒரு குட்டிப் பையன் இருக்கிறான். அனைவரும் அவனைக் கொஞ்சுகிறார்கள். வேனில் இடம் இல்லாமல் யாம் நின்று கொண்டு வருகிறோம். **நங்கை மேடம்** எம்மை அருகே அழைத்து உட்கார வைக்கிறார்.

பரளச்சி சலூனுக்குப் போகிறோம். கடையில் ஆள் இல்லை. இன்னொரு கடையில் சிறிது நேரம் தாமதிக்கச் சொல்கிறார்கள். அருகே இருக்கும் நிலத்திற்குச் செல்கிறோம். சிறிய கிணறு போன்று தெரிகிறது. கொஞ்சம்

மண்ணை நீக்கிப் பார்த்தால் மண் முழுதும் நத்தைக் கூடுகளாக இருக்கின்றன. எங்கும் நத்தைக் கூடுகள். யாம் தூரிகை வைத்து மண்ணை நீக்கிப் பார்த்து ஆராய்ச்சி செய்கிறோம். அக்ஷயா, **ரியா** இருக்கிறார்கள். இருவரையும் ஒரு பாம்பு விரட்டுகிறது. இருவரும் பள்ளமான பகுதியை நோக்கி ஓடுகிறார்கள். திடீரென நிறையப் பாம்புகள் தெரிகின்றன. ஒன்றையொன்று பின்னிக் கொண்டு நெருக்குகின்றன. மாடுகளைக் கூட இறுக்கிக் கொண்டு கிடக்கின்றன. சில விலங்குகள் இறந்து விட்டன.

துறையில் இருக்கிறோம். கொங்கு நாடு கல்லூரிக்கு இடமாறுதல் கேட்டு அது கிடைத்து விட்டதாகத் தெரிய வருகிறது. அங்கே ஆங்கிலத்தில் வகுப்பெடுக்க வேண்டும் என நினைக்கிறோம். ஊரின் பள்ளிக் கூடம் தெரிகிறது. அங்கே உட்கார்ந்திருக்கிறோம்.

மகாபாரதம் தொடர்பான புத்தகம் ஒன்று அரண்மனையின் நடுவே வைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து பக்கங்களைப் புரட்டுகிறோம். நிறைய கேள்விகள் அச்சிடப்பட்டு இருக்கின்றன. கேள்விகள் அப்படியே புத்தகத்திலிருந்து மிதந்து வருகின்றன. ஏராளமான சித்திரங்களும், வரையப்பட்டுள்ளன.

பாண்டு சாலையில் நின்று கொண்டு சத்தமாகப் பேசுகிறார். வெள்ளை வேட்டியும் பெரிய தலைப்பாகையும் அணிந்திருக்கிறார். தாடியும் இருக்கிறது. எவ்வளவு நாள் தான் பொறுமை காப்பது என்று சொல்கிறார். மற்றவர்கள் வந்து அவரை சமாதானப் படுத்துகிறார்கள்.

03.10.2014

ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம்

24. ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் அருகே நின்று கொண்டிருக்கிறோம். கோபுரம் மிக மிக உயரமானதாக இருக்கிறது. மிகப்பிரம்மாண்டமான மூன்று அடுக்குக் கோபுரமாகக் கட்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு அடுக்கிலும் பத்து நிலைகள் வைத்திருக்கிறார்கள். கீழே நின்றுக் கொண்டு அண்ணாந்து பார்த்துக் கொண்டே, இவ்வளவு உயரமான கோபுரத்தை எப்படி அந்தக் காலத்தில் கட்டியிருப்பார்கள் என வியக்கிறோம். கோபுரம் வானத்தைத் தொட்டு நிற்கிறது. வேலைகள் முழுமையடையாமல் கோபுரத்தின் மேல் பகுதியில் மரத்தாலான சாரம் கட்டியிருக்கிறார்கள்.

கோபுரம் முழுக்க அழகிய சிலைகள் தெரிகின்றன. நிற்கும் இடத்திற்கு அருகே கொலு வைத்திருப்பது போல் பல பொம்மைகள் இருக்கின்றன. சில பொம்மைகள் முதுகுப் பகுதியை காட்டியவாறு திருப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அழகியதொரு பெண்ணின் சிலை இருக்கிறது. ஆடை இல்லாமல் பெண் சிலைகள் உள்ளன. ஒரு பெண் சிலை குழந்தை பெறுவது போல் வைக்கப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி சிலை தனியாக வைக்கப்பட்டிருக்கிறது.

மேலே அண்ணாந்து பார்க்கிறோம். கோபுரம் முழுக்கவே அழகிய சிலைகள் வடித்திருக்கிறார்கள். நிறைய தாவரங்களும், செடி, கொடிகளும் தெரிகின்றன. பல விலங்குகளின் சிலைகளும் உள்ளன. ஒரு அழகிய தங்க நண்டு கோபுரத்தில் ஓடுகிறது. அதன் உடல் முழுவதும் வைரங்கள் பதிக்கப்பட்டு அழகாக மின்னுகிறது. பக்கத்தில் ஓடி மறைகிறது. அதன் இடுக்குகள் கலை நயத்துடன் செய்யப்பட்டுள்ளன.

கோபுரத்தின் அருகே ஒரு மேடை தெரிகிறது. மேடையில் சமூக ஆர்வலர் பேராசிரியர் மார்க்ஸ் பேசுகிறார். அவரது பெண் கோவில் தர்மகர்த்தா பதவிக்கு போட்டி போடுகிறார். இவர்தான் கடவுள் மறுப்பாளராயிற்றே, எதற்காக இங்கு வந்து பேசுகிறார் என மக்கள் கேலியாகப் பேசுகிறார்கள். யாரெல்லாம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற விவரம் ஒட்டியிருக்கிறார்கள். கோவிலின் சமையல்காரர் ஒருவரும் அதில் தேர்வாகியிருக்கிறார். மேலும் சில பெயர்கள் எழுதப்பட்டுள்ளன.

ஊரில் அக்கா வீட்டில் இருக்கிறோம். பல் துலக்கியை எடுத்துக் கொடுக்கிறார். குளித்து விட்டு பேருந்துக்குச் செல்ல ஆயத்தமாகிறோம். பாலு ஊருக்குக் கிளம்புகிறான். கால்சட்டை பையிலிருந்து ரூபாய் தாள்கள் எடுத்துக் கொடுக்கிறோம். முதலில் வாங்க மறுத்து பின் வாங்கிக் கொள்கிறான். கொஞ்ச தூரம் சென்று பையைத் தடவிப் பார்க்கும் போது நிறைய பணம் இருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்திருக்கலாமோ என நினைக்கிறோம். பேருந்து நிலையம் செல்ல நடக்கிறோம். காட்டு வழியாகத் தெரிகிறது. மண் சாலை செல்கிறது.

அச்சுதன் அவ்வழியே மிதிவண்டியில் பள்ளிக் கூடத்திற்குச் செல்கிறான். மற்ற சில பையன்களும் மிதிவண்டியில் வருகிறார்கள். அச்சுதன் பின்னால் யாரோ

ஒரு பையனை வைத்து ஓட்டி வருகிறான். நாகராஜ் தேவர் நன்றாக சைக்கிள் ஓட்டுகிறான் எனப் பாராட்டுகிறார். அவர் நடந்து வருகிறார். யாம் நடப்பதை நிறுத்தி விட்டு அவனைப் பார்க்கிறோம். எம்மைப் பார்த்தவுடன் மிதிவண்டியை விட்டு இறங்குகிறான். உடலெங்கும் வேர்த்துக் கொட்டுகிறது. சட்டையெல்லாம் தொப்பலாக வியர்வையால் நனைந்திருக்கிறது. எம்மை பார்த்துச் சிரிக்கிறான்.

11.10.2014

இருதய முத்து சித்தப்பா

25. ஊரின் பெரிய கண்மாயில் தூண்டில் போட்டுக் கொண்டிருக்கிறோம். விவேகானந்தனும், சரவணனும் ஏதோ கையெழுத்துக் கேட்டு வருகிறார்கள். புத்தாக்கப் பயிற்சி நடப்பதாகவும், அதில் மூவரும் பங்கு பெறலாம் என்றும் சொல்வதாக அறிகிறோம். இராஜகோபாலபுரம் காண்டீபன் கையெழுத்துப் போடாதே என்று கோபித்துக் கொண்டே கரை வழியே நடக்கிறார்.

திருமலைபுரத்தில் அப்பத்தா இறந்து விட்டதாகச் சொல்கிறார்கள். வீட்டிலிருந்து மற்றவர்கள் வருவதற்கு நேரமாகுமென்பதால் யாம் மட்டும் அங்கிருந்தே கிளம்புகிறோம். அப்பத்தாவை தூக்குவதற்கு நேரமாகுமே என நினைக்கிறோம். சாப்பிட்டு விட்டுச் செல்லலாம் என நினைத்து விதவிதமான உணவுகளைச் சாப்பிடுகிறோம். பழைய குடியிறுப்புக்குச் செல்லும் பாதையில், சாலையேறும் இடத்தில் ஒரு பெரிய மரம் தெரிகிறது. அந்த இடத்தில் ஒருவர் தோரணம் கட்டிக் கொண்டிருக்கிறார்.

அண்ணன் பழைய வீட்டில் நிறையப் பேர் மண்ணை சமப்படுத்தும் வேலை செய்கிறார்கள். சற்று நீளமான கம்புகளை ஏராளமாக நட்டிருக்கிறார்கள். அனைத்துக் கம்புகளையும் வெள்ளை நூலால் இணைத்திருக்கிறார்கள். அண்ணன் கடப்பாரையில் குழி தோண்டுகிறார். யாம் அருகே நின்று மண்ணை அள்ளலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். இறப்பை பற்றி அண்ணன் ஏதோ கிண்டலாகச் சொல்ல (சட்டுப்புட்டுன்னு போய்ச் சேர வேண்டியதானே?) மற்ற அனைவரும் சிரிக்கிறார்கள். இருதய முத்து சித்தப்பா போலீஸ் சீருடையில் இருக்கிறார். தோல்பட்டை பெல்ட் இடுப்புப் பெல்ட்டோடு இணைந்திருக்கிறது. சித்தப்பா எப்படி இந்த உடையில் இருக்கிறார் என யாம் ஆச்சர்யம் கொள்கிறோம்.

## கீரிப்பிள்ளை

26. ஒரு குளம் போல் தெரிகிறது. அதைச் சுற்றி கடந்து போகும் போது, பாம்புகள் தெரிகின்றன. சற்று நீளமான பாம்புகளாக இருக்கின்றன. இரண்டு மூன்று பாம்புகளை அடித்து விட்டோம். படிக்கட்டுகளில் நடக்கிறோம். படிக்கட்டுகளில் அழகிய வேலைப்பாடுகள் தெரிகின்றன. மேலே ஏறும் போது சிறிய கோபுரம் போன்று தெரிகிறது. அதில் ஏறுகிறோம். அச்சுதன், அக்ஷயாவும் உடன் இருக்கிறார்கள். எங்களைக் கடந்து பாம்பு ஒன்று மிக வேகமாக கட்டிடத்தின் மேலே ஏறி ஒரு பொந்துக்குள் நுழைகிறது. பொந்துக்குள் கீரிப்பிள்ளை இருந்து பாம்பைக் கடித்து விட்டது. தலையில் இரத்தத்துடன் பாம்பு கீழே விழுந்து ஊர்ந்து செல்கிறது.

14.10.14

## அர்ஜுனன்

27. எங்கள் ஊர் தெரிகிறது. விஜய் தொலைக்காட்சி மகாபாரத அர்ஜுனன் போன்று இருக்கிறார். அவரும் யாமும் ஊரிலிருந்து கிளம்புகிறோம். இடையில் ஒரு ஆறு வருகிறது. ஆற்றைக் கடந்து செல்லும் போது அரண்மனை முகப்பு போன்று தெரிகிறது. பல கட்டிடங்கள், பெரிய பெரிய தூண்கள் தெரிகின்றன. போகும் வழியில் ஒரு இடம் மிகவும் ரம்மியமாக இருக்கிறது. இந்த இடத்தை புகைப்படம் எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என நினைக்கிறோம்.

பசிக்கிறது எனச் சொல்கிறார். இருவரும் உணவு தேடிச் செல்கிறோம். நீண்டதொரு பாலத்தின் வழியே நடக்கிறோம். பாலத்தின் முடிவில் ஏராளமான கடைகள் வரிசையாக உள்ளன. விதவிதமான பதார்த்தங்கள் கடைகளின் முன்னே பெரிய பெரிய பைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

இருவரும் ஒரு கடைக்குச் செல்கிறோம். அங்கே வட இந்திய உணவுகள் போன்று நிறைய இருக்கின்றன. முறுக்கு போன்று, குழல் அப்பம் போன்று வெள்ளைச் சாக்குப் பைகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. வேண்டாம் என்று சொல்லி அடுத்த கடைக்குச் செல்கிறோம். அங்கிருந்த ஒருவர் உணவு கொடுப்பதாகச் சொல்கிறார். பாத்திரம் மிகவும் அழுக்காக இருக்கிறது. கடையில் இருந்த சிறு பையனை கண் ஜாடைக் காட்டி பாத்திரத்தை கழுவச் சொல்கிறார். மற்றொரு பையன் படுத்திருக்கிறான். ஞாயிற்றுக் கிழமை என்பதால் அவன் படுத்திருப்பதாகச் சொல்கிறார். கடைக்காரர் பாத்திரங்களைக் கழுவி கிரில்

போன்ற சதுரமான சிறு ஓட்டை வழியே தண்ணீரை ஊற்றுகிறார். திருடன் வராமல் இருப்பதற்காக இந்த ஏற்பாடு என்று சொல்கிறார். அந்தத் திறப்பு மிகவும் வித்தியாசமாக இருக்கிறது.

கடைக்காரரிடம் இருநூறு ரூபாய் கொடுக்கிறோம். சிறிது நேரத்தில் உணவு கிடையாது என்று கடைக்காரர் சொல்கிறார். பணம் வாங்கிவிட்டு ஏன் இல்லையென்கிறாய் என்று சத்தம் போடுகிறோம். அவரை மோசமாக சபித்து விட்டு தெரு வழியாக நடக்கிறோம்.

அச்சுதன்

28. அச்சுதனும் யாமும் வீட்டிலிருந்து நடக்கிறோம். சிறிது தூரத்தில் ஒரு விடுதிக்கு கூட்டிப் போகிறான். அச்சுதனை தெரிந்த பசங்களாக இருக்கிறார்கள். ஒருவன் கிணற்றிலிருந்து நீர் இறைக்கிறான். கிணறு வட்டமாக இருக்கிறது. ஆங்கில எழுத்து ட்டி போன்ற கைப்பிடியுள்ள வாளியை மேலே தூக்குகிறான். வாளி முழுதும் தண்ணீர் நிறைந்திருக்கிறது. அருகேயிருக்கும் பித்தளைப் பானையில் ஊற்றுகிறான். போதும் என்று சொல்லி பானையைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டு அச்சுதன் நடக்கிறான். உழுது போட்டிருக்கும் வயல் ஊடே இருவரும் செல்கிறோம். யாம் பானையை வாங்கிக் கொள்கிறோம். இதற்குத்தான் அப்பாவைக் கூப்பிட்டாயா என பல முறை கேட்கிறோம். காசு கொடுத்து தண்ணீர் கேன் வாங்கிக் கொள்ளலாமே, இதற்கு ஏன் இங்கு வர வேண்டும் என்றும் கேட்கிறோம்.

கொஞ்சம் இருட்டாக இருக்கிறது. வழியில் வயதான அம்மா ஒருவர் பலாக்கொட்டை வேண்டுமா எனக் கேட்கிறார். பலாக் கொட்டையை கேரி பேக்கில் வைத்திருக்கிறார். அருகிலிருக்கும் வீட்டிலிருந்து ஒரு பெண் விலை கேட்கிறார். கிலோ எழுநூறு ரூபாய்க்கு வாங்கியதாகவும், ஆயிரம் ரூபாய் தந்தால் கொடுத்து விடுவதாகவும் கூறுகிறார்.

வழியில் அகம்படியார் தெரு இராமகிருஷ்ணன் நிற்கிறார். தெரு விளக்கு வெளிச்சம் தெரிகிறது. சாலையில் நின்று கொண்டு, அவர் தோட்டத்தில் யாரோ திருடிவிட்டதாகவும், முடிந்தால் இப்போது திருடிப் பாருங்கள் என்றும் சத்தமாகச் சொல்கிறார். அவரது தோட்டத்தின் சுற்றுச் சுவர், அருகே இருக்கிறது. பெரிய கிரில் வாசல் போடப்பட்டிருக்கிறது. அருகிலேயே நிறைய வீடுகள் இருக்கின்றன.

வேகாவின் அம்மா, திருட்டு தொடர்பாக ஏதோ சொல்லி, சத்தமாகத் திட்டுகிறார். அது போன்றே, கிராமங்களில் வழக்கமாச் சொல்லித் திட்டும் வார்த்தையால், புஷ்பம் பெரியம்மாவும் சத்தமாகத் திட்டுகிறார். இவர்கள் திட்டுவது வெகு தூரத்திற்குக் கேட்கிறது.

அச்சுதனும் யாமும் அப்பணசாமி தோட்டம் அருகே சாலையில் நிற்கிறோம். ஏராளமான வாகனங்கள் இருவரிசைகளில் சென்றும் வந்து கொண்டும் இருக்கின்றன. மேலே அந்தரத்தில் ஒரு பெல்ட் போகிறது. அச்சுதன் பெல்ட்டில் உட்கார்ந்து கால்களை கீழே மடக்கி சிறிது சிறிதாக முன்னே நகர்கிறான். அவன் பின்னால் யாமும் அதே போன்று செல்கிறோம். அவனை மிகக் கவனமாகச் செல்லுமாறும், புகைவண்டி வந்தால் ஒளிவதற்கு இடமில்லையென்றும் எச்சரிக்கிறோம்.

16.10.14

இமய மலை

29. மாமா வயல் வேலைக்கு போய் வேலை முடிந்து வருகிறார் எனத் தெரிகிறது. கருப்பசாமி கோவிலுக்குப் போகும் பாதையில் பலரும் ஏதோ தொடர்பாக வாக்குவாதம் செய்கிறார்கள். இன்னும் பலர் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்கள். அப்பா கருப்பசாமி பற்றி மற்றவர்களிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார். கருப்பசாமி சிலை மிகவும் அழகாக இருக்கிறது. தூண்களிலும் அழகிய சிலைகள் காணப்படுகின்றன.

விஷ்ணு கோவில் தெரிகிறது. அப்பா கோவிலை புகைப்படம் எடுக்கிறார். அந்த இடம் இமயமலையாக இருக்கிறது. எந்த இடத்தில் புகைப்படம் எடுத்தோம் என அவருக்கு நினைவில்லை. இதைப்பற்றி துறையில் விவாதம் செய்கிறோம். இது போன்ற கோவில் இமயமலையில் இரு இடங்களில் மட்டும் இருப்பதாக **யுவதி மேடம்** சொல்கிறார்.

ஊரிலிருந்து ஏதோ ஒரு விழாவிற்குக் கிளம்புகிறோம். தூரம் எவ்வளவு என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்கிறார்கள். சுத்தமடம் வழியாகப் போனால் இரண்டரை மைல் தூரம் இருக்கும் என செல்லவடிவு சித்தப்பா சொல்கிறார். எமக்கு வந்த கனவு குறித்து அலைபேசியில் பதிந்து வைத்திருக்கிறோம். அலைபேசியை எடுத்து அச்சுதன் விளையாடுகிறான்.

காலையில் பதிவு பண்ணி வைத்திருந்ததைக் காணாமல் அச்சுதனை திட்டுகிறோம். அம்மா எம்மை சமாதானப்படுத்துகிறார்.

அலைபேசியில் முழுதும் கணிதக் கணக்குகளாக இருக்கின்றன. அவற்றிலிருந்து எப்படி வெளியே வருவதென்று தெரியவில்லை. அச்சுதன் வாங்கி பேக் பொத்தான் கொடுத்து கணிதத்தை மொபைலிருந்து நீக்குகிறான். பேக் ஸ்பேஸ் கொடுத்து வெளியே வர வேண்டும் என்பது எமக்கு ஏன் தெரியாமல் போய் விட்டது என வியக்கிறோம். ஞானசுந்தரி அக்காவின் வீடு எங்கள் வீடாகத் தெரிகிறது.

ஊருக்குப் போவதற்காக மிதிவண்டியை எடுத்துக் கொண்டு பேருந்து நிலையம் நோக்கிச் செல்கிறோம். பாஸ்கரன் பிள்ளை வீடு அருகே சில பேர் கோபமாக நின்று கொண்டிருக்கிறார்கள். பேருந்து நிறுத்தத்தில் மிகவும் கூட்டமாக இருக்கிறது. பேருந்தில் நிறையப் பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். பேருந்தின் முன் பக்க டயரை கனகராஜ் மற்றும் இன்னும் இரண்டு பேர் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். செட்டிகுளம் சாலையிலிருந்து மற்றொரு பேருந்து வேகமாக வந்து நிற்கிறது. அடித்துப் பிடித்து அனைவரும் பேருந்தில் ஏறுகிறார்கள். யாமும் அப்பேருந்தில் ஏறி இடமில்லாமல் சிறிது நேரம் கம்பியை பிடித்துக்கொண்டு நிற்கிறோம். நிற்கும் பேருந்தில் செல்லலாம் என இறங்குகிறோம். அடுத்த பேருந்தில் ஏறுவதற்குள் இரண்டு பேருந்துகளும் வேகமாகச் சென்று விட்டன. ஓடியும் எம்மால் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

பேருந்து நிறுத்தத்தின் கிழக்கே இருக்கும், ஓட்டு வீட்டின் அருகே நின்று கொண்டிருக்கிறோம். மேகம் இருட்டிக் கொண்டு வருகிறது. கையில் மிதிவண்டி காற்றடிப்பான் வைத்திருக்கிறோம். மிதிவண்டியில் போவோமா அல்லது பேருந்தில் போவோமா என யோசித்துக் கொண்டிருக்கிறோம். **அருள்** பல் துலக்கிக் கொண்டே அந்தப் பக்கமாக நடந்து வருகிறார். பின்னாடியே சிறிது தூரத்தில் மாமா நடந்து வருகிறார். அய்யர் கண்மாய் நோக்கி நடந்தவர் சிறிது தூரத்திலேயே திரும்பவும் பின் பக்கமாக வருகிறார். பின் மறுபடியும் முன்னோக்கி நடக்கிறார்.

17.10. 2014 ?

அழகிய பெண்

30. ஊரில் தெருக் கூட்டம் நடக்கிறது. தர்மர் அண்ணன் எம்மை கூட்டத்திற்குக் கூப்பிடுகிறார். அப்பா கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். மிகவும் அழகியதொரு பெண்ணின் போட்டோவை எம்மிடம் காட்டுகிறார். பல வருடங்களாக எம்மையே அந்தப் பெண் நினைத்துக் கொண்டிருப்பதாக அந்தப் பெண்ணின் உறவினர் ஒருவர் கூட்டத்தில் பேசுகிறார். யாம் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய இயலாது என்கிறோம். யாம் முதல் திருமணத்திலிருந்தே விடுபட விரும்பும் போது இந்தப் பெண்ணை எப்படி திருமணம் செய்ய இயலும் எனக் கேட்கிறாம். அனைவரும் மிகவும் வருந்துகிறார்கள்.

எங்கள் வீட்டில் உணவு தயாரிக்கப்படுகிறது. வீடு மிகவும் பெரியதாக, அரண்மனை போன்று இருக்கிறது. அப்பா அனைவரையும் சாப்பிடுமாறு சொல்கிறார். அசைவ உணவும் தயாராக இருக்கிறது. மக்கள் சாப்பிடுவதற்காக வந்த வண்ணம் இருக்கிறார்கள். அனைவரும் எம்மைப் பார்த்து, மிகவும் அழகாக இருக்கிறோம் எனப் பாராட்டுகிறார்கள். யாம் கருப்பசாமி கோவிலுக்கும் செல்ல வேண்டும் என நினைக்கிறோம். முதல் மாடியில் இருக்கும் எமது அறைக்குச் செல்கிறோம். பையில் துணிகளை அள்ளிப் போடுகிறோம். சென்னை போக வேண்டும் என்பதற்காக கிளம்பத் தயாராகிறோம்.

20.10.2014

வேணுகோபால் சுவாமி

31. ஊரில் சித்தப்பா வீட்டில் பசு மாடு கன்று போடுவது போல் இருக்கிறது. சட்டென வேணுகோபால் சுவாமி கோவில் தெரிகிறது. யாம் இருசக்கர வாகனத்தில் செல்கிறோம். மழை தூறிக் கொண்டிருக்கிறது. மிகுந்த போக்குவரத்து நெரிசலாக இருக்கிறது. தூரத்தில் தெரியும் கோபுரத்தைப் பார்த்து முக்கிய சாலையிலிருந்து விலகி கோபுரத்தை நோக்கிச் செல்கிறோம். கோபுரம் மேலே பெரிய லெட்சுமி சிலை இருக்கிறது. சிலை மிகவும் தத்ரூபமாக உள்ளது.

கோவிலில் ஆஞ்சநேயருக்கு அபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யாம் பாாத்துக் கொண்டிருக்கிறோம். அபிஷேகம் முடிந்து அனைவரும் சென்று விட்டார்கள். மாலை இல்லாமல் இருப்பதால் யாம் இரண்டு மாலைகள்

ஆஞ்சநேயருக்கு சாத்துகிறோம். கீழே பொங்கலும், தயிா் சாதமும் சிந்திக் கிடக்கிறது. யாம் எடுத்துக் கொள்கிறோம்.

பெரிய பெரிய பாத்திரங்களில் படையலுக்காக சாதங்கள் வைக்கப்பட்டுள்ளன. சாதங்களை கலந்து விட்டதாகச் சொல்கிறாா்கள். பிரசாதம் வாங்க வரிசையில் நிற்கிறோம். மற்றொரு அறையில் வேணுகோபால் சுவாமி கோவிலின் முக்கிய அா்ச்சகா் ஏதோ பூஜை செய்கிறாா். மூலஸ்தானத்தில் நிறைய புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. பிரசாதம் வாங்க கேரி பேக் எடுத்துக் கொள்ளச் சொல்கிறாா்கள். நிறைய பிரசாதம் கொடுக்கிறாா்கள்.

திருமலைபுரத்தில் அண்ணன் வீடு தெரிகிறது. வீடு அருகே கோபுரம் கட்டும் வேலை நடக்கிறது. வீட்டு வாசலும் கோபுரத்தின் வாசலும் நேராக இருக்கின்றன. பெரியம்மா பிரசாதம் கொடுக்கிறாா். எல்லோரும் ஊருக்கு கிளம்பத் தயாராகிறோம். வாசலுக்கு வெளியே ஏராளமான இருசக்கர வாகனங்கள் நிற்கின்றன. எமது மிதிவண்டியை எடுக்க முடியவில்லை. சந்திரன் வந்து எடுத்துத் தருகிறாா். மிதிவண்டியில் பெரிய கண்மாய் கரை வழியே ஊருக்கு வருகிறோம். இன்னும் இரண்டு போ் கூடவே வருகிறாா்கள்.

27.10.2014

மின்சாரக் கோபுரங்கள்

32. புதிய நிலம் தெரிகிறது. மிகப் பரந்த நிலமாக இருக்கிறது. அந்த நிலத்தில் ஒரு புதிய நகரத்தை உருவாக்க நினைக்கிறோம். கட்டுமானப் பணிகள் நடக்க ஆரம்பித்து விட்டன. மிகவும் உயரமான மின்சாரக் கோபுரங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. அனைத்தும் மின்சாரக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளன. மின்சாரக் கோபுரங்களின் ஊடே சாலை செல்கிறது. அதில் நடந்து வருகிறோம். எம்மோடு இன்னும் சிலா் நடந்து வருகிறாா்கள். சாலையின் இருபக்கமும் இருக்கும் மின் கோபுரங்களின் கம்பிகள், மிகவும் தாழ்வாக ஒரு இடத்தில் உள்ளன. யாரேனும் தொட்டு விட்டால் என்னாவது எனப் பதறுகிறோம். இது குறித்து மின் வாரியத்திற்கு தகவல் சொல்ல வேண்டும் என நினைக்கிறோம். எந்தப் பகுதியில் தெரிவிக்க வேண்டும் என நினைத்து, பின் தொண்டாமுத்தூா? பகுதிக்கு சொல்ல வேண்டும் என நினைக்கிறோம்.

ஒரு கல்லூரியில் யாம் படிக்கிறோம். வகுப்பில் பெஞ்ச்சில் உட்காந்திருக்கிறோம். இரண்டு வரிசைகளில் பெஞ்ச் போடப்பட்டுள்ளது. மாணவர்கள் தட்டச்சு பரிட்சைக்கு தயாராகிறார்கள். ஒரு மாணவி, எவ்வாறு அந்தத் தேர்வில் வெற்றி பெற்றார் என்பதை விரிவாகச் சொல்கிறார். நேர்முகத் தேர்வு போல் அது இருக்கிறது. இரண்டு ஆசிரியைகளிடம், இரண்டு மாணவர்கள் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருவரும் தோல்வியடைந்து விட்டதாகச் சொல்கிறார்கள். அந்த மாணவி எம்மிடம்தான் பேசிக் கொண்டிருக்கிறார். ஆங்கிலத்தில் அழகாக, தெளிவான உச்சரிப்புடன் வேகமாகப் பேசுகிறார். யாம் மகிழ்ச்சியுடன் அவர் பேசுவதை கேட்டுக் கொண்டிருக்கிறோம். மெதுவாக அவரது மார்பு பெரிதாகிக் கொண்டே வருகிறது. யாம் இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது என நினைக்கிறோம்.

வகுப்பிற்கு நடந்து செல்கிறோம். சிறுநீர் கழிக்க வேண்டும் என நினைக்கிறோம். ஆனால் வகுப்பிற்குள் நுழைந்து விட்டோம். ஒரு மாணவர் மடிக்கணினியை பெஞ்ச்சில் வைத்து பார்த்துக் கொண்டிருக்கிறார். வெள்ளை நிறமான சித்திரங்களுடன் மடிக்கணினி இருக்கிறது. வகுப்பறையில் பெஞ்சுகள் ஒழுங்கில்லாமல் இருக்கின்றன. மூன்று வரிசைகள் உள்ளன. இளநிலையில் படித்த முருகேசன் உட்கார்ந்திருக்கிறார். எம்மைப் பார்த்து உட்கார இடம் கொடுக்கிறார். பெஞ்ச் அமைப்பை மாற்றிப் போடுவோமா எனக் கேட்கிறார்.

28.10.2014

விவேகானந்தன்

33. ஊருக்கு வடக்கே செவல்காட்டில் ஒரு அறை இருக்கிறது. அறையினுள் நிறையப் பொருட்கள் இருக்கின்றன. சர்க்கரை மாதிரி இருக்கும் ஒன்றை மிதிவண்டியில் ஏற்றுகிறோம். முத்துக் கிருஷ்ணன், இராஜமணி, அக்கா பையன் கருப்பசாமி இருக்கிறார்கள். தலைச் சுமையாகவே கொண்டு செல்லலாம் என்கிறோம். மறுக்கிறார்கள். மிதிவண்டியில் இரண்டு இரண்டாக கொண்டு செல்லலாம் என்கிறார்கள். பின்பு ஒவ்வொரு மிதிவண்டியிலும் ஒரு மூட்டை ஏற்றுகிறோம். மூட்டை சிறிய பைய் போன்று தெரிகிறது. மிதிவண்டி கேரியரில் வைத்து நன்றாகக் கட்டுகிறோம். அவற்றை டாக்டர் தோட்டம் வழியாகக் கொண்டு போகிறார்கள். இரண்டு மிதிவண்டி போய் விட்டது. ஒன்று நிற்கிறது. யாரோ ஒருவர் அந்தப் பக்கமாக நடந்து போகிறார்.

அந்த அறைக்கு மேலே மற்றொரு அறை உள்ளது. இப்போது பார்ப்பதற்கு அந்த இடம் சிறிய மலை போல் இருக்கிறது. உதயசூரியன் அண்ணன், திருமலைபுரத்தில் சில பேர் மறுத்ததாகவும், சண்டைக்கு வந்ததாகவும், ஆனால் அவர் எப்படியோ சமாளித்து கொடுத்து விட்டதாகவும் சொல்கிறார். இன்னும் இரண்டு நாட்கள் இருப்பதாகவும், போவதில் ஒன்றும் பிரச்சினையில்லையெனவும் சொல்கிறார். கீழே மலையில் சிறிய வரிப் பள்ளங்களாக இருக்கின்றன. யாம் கயிறு மூலமாகத் தொங்கி கொண்டு அவரிடம் செல்கிறோம்.

யாம் அங்கேயே நின்று கொண்டிருக்கிறோம். ஒரு பெண் எம்மைக் கூப்பிடுகிறார். அருகில் பார்க்கும்போது பெண் **நிஷா மேடமாக** இருக்கிறார். அவரின் முகம் மட்டும் மிக அருகே தெரிகிறது. அவரைக் காணவில்லை. பாலத்தின் கீழே யாம் ஓடுகிறோம். பேருந்து ஒன்று புறப்படத் தயாராக இருக்கிறது. உள்ளே நான்கைந்து பெண்கள் நெருக்கமாக உட்கார்ந்திருக்கிறார்கள். பார்த்த உடனேயே அவர் அங்கு இல்லையெனத் தெரிந்து அங்கேயே நிற்கிறோம். அந்த வழியே மற்றொரு பேருந்து வருகிறது. சாலை அகலமாக இருக்கிறது. பேருந்து நின்றவுடன் நிறைய பள்ளிக் குழந்தைகள் பேருந்தில் ஏறுகிறார்கள். பேருந்தின் கடைசி வரிசையில் அமர்கிறோம். எமது அருகே இன்னொருவர் உட்கார்ந்திருக்கிறார். நடத்துனர் மிகவும் பருமனாக இருக்கிறார். பயணச்சீட்டு எனக் கேட்கிறார். யாம் இரண்டு பயணச்சீட்டு எடுக்கிறோம். குழந்தைகளுக்கு எடுக்காமல் விட்டு விட்டோமே என நினைக்கிறோம். விவேகானந்தன் அனைவருக்கும் டிக்கட் எடுத்து விட்டார். அவரும் பேருந்தில் இருப்பதை அப்போது தான் பார்க்கிறோம்.

31.10.2014

தமிழரசி

34. தமிழரசி நெட் தேர்வெழுத சென்னை செல்ல வேண்டியுள்ளது. தேர்வு மையம் எங்கிருக்கிறதென்பதை அவருக்குச் சொல்கிறோம். பேருந்து நிறுத்தத்திற்கு அருகிலேயே மையம் இருக்கிறதெனவும், தேர்வு முடிந்தவுடன் ஆட்டோவில் ஏறி பேருந்து நிலையம் வந்து விடலாம் எனவும் சொல்கிறோம். ஆட்டோவுக்கு, ஐம்பது, அறுபது ரூபாய் கேட்பார்கள் என்று கூறுகிறோம். ஐந்து மணிக்கு ஏறினால் கூட அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் வீட்டிற்கு வந்து விடலாம் என்கிறோம்.

தேர்விற்கு செல்லத் தயாராகிறார். வீட்டில் குழந்தைகளும் இருக்கிறார்கள். எதிர் வீட்டில் கதவு திறந்திருக்கிறது. வெளிச்சம் இல்லாமல் இருக்கிறது. **வேலன்** தூங்குகிறான். அவனுக்கு தட்டில் தோசை கொடுக்கிறோம்.

எங்கள் வீட்டைப் பூட்டும் போது கைப்பிடி மரை கழன்று கையோடு வருகிறது. சீக்கிரமே அதை மாட்ட வேண்டும் என நினைக்கிறோம். அது போல் வீடு முழுவதும் எங்கெல்லாம் மரை கழன்றுள்ளதோ, எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் எனவும் நினைக்கிறோம். வீட்டின் அறைகள் பெரியதாக உள்ளன.

நடந்து வருவது தெரிகிறது. முனியாண்டித் தலவர் தேநீர்க் கடை வழியாக வருகிறோம். சீரங்கம் அவர்கள் வீடு அருகே நிறையப் பேர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திருவிழாவிற்கு வந்ததாகப் பேசிக் கொள்கிறார்கள். ஒரு பெண் நைட்டி போட்டிருக்கிறார். கண்மை அதிகமாக இருக்கிறது. தலைமுடியை கிராப் வெட்டியிருக்கிறார். நீய் எப்போ வந்தே என இன்னொரு பெண்ணைக் கேட்கிறார். பெரிய வீடு அருகே குழாய் ரேடியோ கட்டியிருக்கிறார்கள். சீக்கிரமே பாட்டுப் போடப் போகிறார்கள் என நினைக்கிறோம்.

இராஜதுரை வீடு வழியாக வருகிறோம். அவரது வீட்டினைத் தொடர்ந்து எங்கள் வீட்டின் சுற்றுச் சுவர் இருக்கிறது. சுற்றுச் சுவர் மிகவும் உயரமாக உள்ளது. வீட்டில் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. தமிழரசி விளக்குகளை அணைக்காமலா சென்றார் என நினைக்கிறோம். மாடியில் உள்ள அறையிலும் வெளிச்சமாகத் தெரிகிறது.

சுவர் வழியாகப் பார்த்தாலும் வெளிச்சம் தெரிகிறது. வீட்டினுள் இருக்கும் அனைத்தும் சுவர் வழியே தெரிகிறது. சுவர் வழியே எப்படி உள்ளே பார்க்க முடியும் என வியக்கிறோம். கடை அருகே நின்று வீட்டைப் பார்க்கும் போது வீட்டின் கதவுகள் அப்படியே தெரிகின்றன. கதவுகள் ரோஸ் வுட்டில் மிகவும் அழகாக இருக்கின்றன.

01.11.2014

வெல்கம் ஸ்வீட்

35. ஒரு மிகப் பெரிய நகரத்தில் இருக்கிறோம். வெளி நாடு என நினைக்கிறோம். அங்கே சாலைகளில் தமிழர்கள் தள்ளுவண்டிக் கடைகள் போன்ற கடைகளை வைத்திருக்கிறார்கள். பல சாலைகள் வழியாகச் செல்கிறோம். அங்கும் இந்த சாலையோரக் கடை தெரிகிறது. சாலைகள் மிகவும் அகலமாகவும்,

சுத்தமாகவும் உள்ளன. பிரியாணியும் விற்கிறார்கள். பலர் வாங்கி சாப்பிடுகிறார்கள். ஒரு கடையில் டீய் மாஸ்டர் பால் ஆற்றுகிறார். பால் மிகவும் கட்டியாக வழிகிறது.

யாம் பேருந்தில் உட்கார்ந்திருக்கிறோம். எம்முடன் இன்னொருவர் வருகிறார். சாலையின் இருபக்கமும் ஆர்வமாக பார்த்துக் கொண்டு செல்கிறோம். பெரிய பெரிய கட்டிடங்களாகத் தெரிகின்றன. இந்த ஊரின் பெயர் என்னவாக இருக்கும் என கடைகளின் பெயர்ப் பலகையைத் தேடுகிறோம். ஒரு கடையின் முகவரியில் கட்டாரிய புரம் என எழுதியிருக்கிறது. உடன் வரும் நண்பர் (அழகுச்சாமி சார் ?) பேராசிரியர் ஞானசம்பந்தன் இங்கு தான் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் வாங்கினாரென்று சொல்கிறார்.

சாலையில் கோவில்கள் தெரிகின்றன. ஒரு கோவிலின் கோபுரம் மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. அது அம்மன் கோவில். அப்படி ஒரு கோபுரத்தை எங்குமே பார்த்ததில்லை. தட்டையாக, உயரமாக அடுக்கடுக்காக கோபுரம் உள்ளது. கிரானைட் கற்களை அடுக்கியது போல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஊரில் எப்படி அம்மன் கோவில் என வியக்கிறோம். சாலைகளில் மிக ஆர்வமாக வேறு கோவில்கள் உள்ளனவா எனத் தேடுகிறோம். பேருந்தின் பின் சீட்டில் இருக்கும் ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி வெல்கம் ஸ்வீட் என்று, சிறிய வட்டமான இரு சாக்லேட்களை எம்மிடம் கொடுக்கிறார். யாம் நண்பருக்கு ஒன்று கொடுக்கிறோம். அவர் உடனேயே சாப்பிட்டு விட்டார். யாம் சாப்பிடக் கூடாது என நினைக்கிறோம். இவர்களை நம்பக் கூடாது, ஏதேனும் மயக்க மருந்து கலந்ததாகக் கூட இருக்கலாமென எண்ணி சாப்பிடாமல் வைத்திருக்கிறோம்.

போய்க்கொண்டிருக்கும் பேருந்தின் வலது புறம் மற்றொரு கோவில் தெரிகிறது. கோபுரம் வட்டமாக பெரியதாக உள்ளது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறோம். அதற்குள் பேருந்து கடந்து விட்டது. கோவிலின் முக்கிய கதவு சாத்தியிருப்பது தெரிகிறது.

சிறிது நேரத்தில் இடது பக்கமாக பெருமாள் கோவிலின் சங்கு தெரிகிறது. பெருமாள் கோவிலும் இருக்கிறதே என வியக்கிறோம். சங்கு பெரியதாக வெள்ளை நிறத்தில், நடுவே காவிக் கோடு போட்டதாக இருக்கிறது. மக்கள் வாசல் வழியாகச் செல்வது தெரிகிறது. நிறையப் படிக்கட்டுகள் தெரிகின்றன. கோவில் சிறியதோர்

மலை மீது இருப்பது தெரிகிறது. படிக்கட்டுகள் வளைந்து செல்கின்றன. படிக்கட்டுகளும், கோவிலும் வெள்ளை நிறத்தில் உள்ளன. மலை மேல் வாயிலுக்கு அருகே பந்தல் போடப்பட்டுள்ளது. யாம் வீட்டுக்குப் போய் விட்டு, பெருமாள் கோவிலைப் பார்க்க வர வேண்டும் என நினைக்கிறோம். பின் உடனேயே இந்த ஊர் மொழி புரியாதே என்றும் நினைக்கிறோம். சிறிது நேரத்திலேயே நமக்குத்தான் ஆங்கிலம் தெரியுமே, சமாளித்து விடலாம், வீடு போய் உடனே வந்து பார்க்க வேண்டும் என முடிவெடுக்கிறோம்.

பேருந்து போய்க் கொண்டே இருக்கிறது. பின் இருக்கையில் இருப்பவர்களின் கால் எங்கள் இருக்கையில் படுகிறது. அவர்கள் எழுந்து உட்காருவதுபோல் சத்தம் கேட்கிறது. யாம் திரும்பி பின்னால் பார்க்கிறோம். தமிழ் **வடிவான மேடம்** உட்கார்ந்திருக்கிறார். எம்மைப் பார்த்து புன்னகைக்கிறார். இவரெப்படி இங்கே என நினைக்கிறோம்.

வீடு வந்து விட்டோம். அடுக்கு மாடியாக இருக்கிறது. வீட்டைத் திறக்கும் போது, ஒருவர் அருகே நின்று எங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். வீட்டினுள் சென்று, பின் சிறுநீர் கழிக்கச் செல்கிறோம். விளக்கு சுவிட்சை போடுகிறோம். சிறிது நேரம் கழித்து குழல் விளக்கு எரிகிறது. சுவற்றில் மாற்றியிருக்கும் கண்ணாடியில் எம்மைப் பார்க்கிறோம். வெள்ளை பைஜாமா அணிந்திருக்கிறோம். புதிதாக மொட்டை போட்டியிருக்கிறோம்.

06.11.2014

புத்தாக்கப் பயிற்சி

36. எங்கோ ஒரு மலைமேல் இருப்பது போல் தெரிகிறது. மலையின் சாலைகளில் இராணுவ வீரர்கள் நடந்தும் ஓடிக் கொண்டும் இருக்கிறார்கள். யாமும் அதில் பங்கு பெற்றிருப்பதாக நினைக்கிறோம். மாணவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடன் பேசுகிறோம். ஒரு இராணுவ வீரர் எமது அருகே வந்து உட்காருகிறார். இன்னும் எவ்வளவு நாட்கள் இங்கிருப்பீர்கள் என ஆங்கிலத்தில் கேட்கிறோம். எமக்கு இந்தி தெரியாது எனவும் நினைத்து கொள்கிறோம். சில நாட்களில் கிளம்பி விடுவோம் என்கிறார். பிப்ரவரி இறுதியில் புத்தாக்கப் பயிற்சி இருப்பதாகவும் அங்கே சந்திக்கலாமெனவும் தீர்மானிக்கிறோம்.

இராணுவத்தில் புத்தாக்கப் பயிற்சி பெறுவது மிகவும் சிறப்பாக இருக்கும் என நினைக்கிறோம். கண்டிப்பாக பங்கு பெற வேண்டும் எனவும் விரும்புகிறோம். கிளம்பும் நேரத்தில் யாம் ஏற்கனவே மூன்று புத்தாக்கப் பயிற்சி முடித்து விட்டதாகவும், மேற்கொண்டு ஒரு பயிற்சிதேவை இல்லை எனவும் தமிழரசி சொல்கிறார். யாம் ஒரு புத்தாக்கப் பயிற்சி வேதியியலில் முடித்திருக்கிறோம், அதைச் சேர்க்க மாட்டார்கள் எனக் கூறுகிறோம். தமிழரசி அதை மறுத்து நீங்கள் முடித்து விட்டீர்கள், இராணுவ புத்தாக்கப் பயிற்சி வேண்டாம் எனத் தடுத்து விடுகிறார்.

ஓரிடத்தில் நடந்து சென்று கொண்டிருக்கிறோம். ஒரு பையன் நுங்கு தருகிறான். அதை ஒரு கடி கடித்து சாப்பிடுகிறோம். பின் அவருக்குக் கொடுக்க வில்லையே என நுங்கைப் பிய்த்து, நடு பாதியை அவரிடம் கொடுக்கிறோம். அருகே இன்னொருவர் ஏதோ ஒரு விளையாட்டுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார். அவருக்கு மீதி நுங்கு கொடுக்கிறோம். யாமும் விளையாடத் தயாராகிறோம். இன்னும் விடியவில்லை.

அருகில் ஒரு பெரிய கோவில் இருப்பது தெரிகிறது. கோவிலின் முன் பக்கம் பார்க்கலாம் என நடக்கிறோம். விசாலமான முன் அறை தெரிகிறது. நடுவே நீல நிற வண்ணத்தில் கிருஷ்ணர் பாம்பின் மீது நடனமிடும் அழகிய சிலை இருக்கிறது. சுவற்றில் நிறைய படங்கள் மாட்டப்பட்டுள்ளன. சற்று தள்ளி இருக்கும் பல கல் சிலைகளுக்கு பூசாரி தண்ணீர் ஊற்றி கழுவிக் கொண்டிருக்கிறார். பூசாரி மட்டும் இருக்கிறார். தனக்கு தானே ஏதோ பேசிக் கொள்வது போல் தெரிகிறது. வேறு ஒருவர் இல்லாதது தெரிந்து எமக்கு பயம் வருவது போல் உணர்கிறோம்.

சற்று தூரத்தில் விளக்கு வெளிச்சம் தெரிகிறது. டார்ச் லைட் வெளிச்சம் கொஞ்சம் கொஞ்மாக அருகே வருவது போல் இருக்கிறது. ஒரு மலை பாம்பு ஊர்ந்து செல்கிறது. அதன் மேல் டார்ச் லைட் வைத்து கட்டியிருக்கிறார்கள். பாம்பு எங்கெல்லாம் போகிறது என்பதைக் கண்டு பிடிக்க இவ்வாறு செய்கிறார்கள் என நினைத்துக் கொள்கிறோம். பாம்பின் தலைப் பகுதி தெரிகிறது. அதன் உடலிருந்து பாம்பின் தலையும் மற்றொரு விலங்கின் தலையும் தெரிகிறது. (அது என்ன விலங்கின் தலை என மறந்து விட்டது).

இரண்டும் ஒன்றுக்கொன்று மாறி மாறி இழுக்கின்றன. நாங்கள் நிற்கும் இடமருகே இரண்டும் வருகின்றன. ஒரே உடலில் இரண்டு தலை இருப்பதை எல்லோரும் ஆச்சரியமாகப் பார்க்கிறார்கள். எங்கள் இடமருகே ஒரு விலங்கு இறந்து கிடக்கிறது. அதன் சதையை இரண்டும் பிய்த்து தின்கின்றன. பாம்பு, வாயைப் பிளந்து சதையைக் கவ்வி எடுத்துத் தின்பது மிக அருகே தெரிகிறது.

எமது பாதத்தில் பாம்பின் பற்கள் இருப்பதை அறிகிறோம். எம்மைக் கடித்து விட்டதாகத் தெரிகிறது. அதன் முட்கள் பாதத்தின் ஆழத்தில் இருக்கின்றன. **குமார் சார்** இடுக்கி போன்ற ஒன்றை வைத்து எடுக்கிறார். கள்ளிப்பழ முட்கள் போன்று மிகச் சிறியதாக முட்கள் இருக்கின்றன. சதையை அறுத்து, விலக்கி, இறுதியாக இருந்த முள்ளையும் எடுத்து விட்டார். முள் எடுப்பதை வேடிக்கை பார்க்கும் கூட்டத்தில் கமல்ஹாசன் இருக்கிறார். அவரும் ஏதோ ஆலோசனை சொல்கிறார். மிகவும் இளவயதிலிருக்கிறார்.

பாம்பு இப்போது மிகவும் சிறியதாகி விட்டது. பலரும் அதைச் சுற்றி நின்று, அதற்கு வைத்தியம் பார்க்கிறார்கள். அதன் உடலை வெள்ளைத் துணியால் சுற்றி இருக்கிறார்கள். தலை மட்டும் துணி சுற்றாமல் உள்ளது. உடலின் இரு புறமும் ஸ்டேப்ளர் போல் அடிக்கிறார்கள். பாம்பு மெதுவாக ஊர்ந்து வருகிறது. இப்போது இன்னும் சிறியதாகத் தெரிகிறது. சின்னாத்தாள் பெரியாத்தா அங்கே உட்கார்ந்திருக்கிறார். பெரியாத்தா பாம்பு என்கிறோம். அவர் ஒன்றும் சொல்லாதது கண்டு அந்தப் பாம்பை காலால் தள்ளி விடுகிறோம். தள்ளி விட்டதில் பாம்பின் வால் தனியாக வந்து விட்டது. வால் தரையில் கிடக்கிறது.

நடிகர் சுரேஷ் (பன்னீர் புஷ்பங்கள்) அங்கே நின்று கொண்டிருக்கிறார். அவரால் செய்முறை வகுப்பில் கலந்து கொள்ள இயலாது என்கிறார். மிகவும் ஜாலியாக, விளையாட்டுக்குச் சொல்வது போல் பேசுகிறார். யாராவது பாம்பைக் கொடுத்தால், மிக எளிதாக அந்தத் தேர்வில் தன்னால் தேர்வாக முடியும் எனவும் சொல்கிறார்.

07.011.2014

ஆரஞ்சுத் தோட்டம்

37. தோட்டத்தில் அப்பா வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். தண்ணீர் செல்லும் வாய்க்காலில் மேடு பள்ளங்களை சரி செய்கிறார். சமமாக

இருந்தால்தான் தண்ணீர் நன்றாகப் பாயும் என்கிறார். அண்ணனும் அருகில் இருக்கிறார். பச்சைப்பசேல் என வயல்கள் இருக்கின்றன. ஓரிடத்தில் வாய்க்கால் மிகவும் பள்ளமாக உள்ளது. யாம் மண்வெட்டியை வாங்கி ஓரிடத்தில் வெட்டுகிறோம். இப்படி வெட்டக் கூடாது என அப்பா சொல்கிறார்.

தூரத்தில் ஒரு விலங்கு ஆடிக் கொண்டிருக்கிறது. உடல் முழுவதும் வெள்ளையாக இருக்கிறது. அப்படி ஒரு விலங்கை யாம் எங்குமே பார்த்ததில்லை. பெரிய நீர் நாய் போன்றோ, சீல் போன்றோ இருக்கிறது. குழந்தைகள் கார்ட்டுனில் வரும் விலங்கு போன்றும் உள்ளது. இது என்ன விலங்கு என ஆச்சரியப்படுகிறோம். கைகளைத் தூக்கி அடித்துக் கொண்டும், சுற்றி வந்தும், எம்பிக் குதித்தும் விளையாடிக் கொண்டிருக்கிறது.

எமக்கு சாப்பிட ஏதாவது இருக்கிறதா என அப்பாவிடம் கேட்கிறோம். தோட்டத்தில் நிறைய ஆரஞ்சுப் பழங்கள் இருக்கிறதே, பார்த்ததில்லையா என்கிறார். அருகிலேயே ஆரஞ்சு பழத் தோட்டம் தெரிகிறது. ஆரஞ்சு மரங்கள் ஏராளமாக இருக்கின்றன. பழங்கள் காய்த்துத் தொங்குகின்றன. பிடுங்கும் போது மிகவும் கனிந்த பழங்களாக, மஞ்சள் நிறத்தில் இருக்கின்றன. யாம் நான்கைந்து பிடுங்கி, கைகளில் கொண்டு வருகிறோம். பின், சட்டையின் நுனியில் போட்டுக் கொள்கிறோம்.

நடந்து வரும் போது தோட்டத்தின் ஒரு பகுதியில் வகுப்பு நடந்து கொண்டிக்கிறது. ஆசிரியர் மேடான ஒரு இடத்தில் நாற்காலியில் உட்காந்திருக்கிறார். மாணவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஒரு பெண் எழுந்து பிச்சைக்காரர் போல் நடித்துக் காண்பிக்கிறார். கொஞ்சம் பெரிய பெண்ணாக இருக்கிறார். இரட்டைச் சடை பின்னியிருக்கிறார். பிச்சை கேட்பது போல் குனிந்து மாணவர்களிடம் கேட்கிறார். அனைவரும் சிரிக்கிறார்கள். யாம் இப்படியெல்லாம் அடுத்தவரை கேலி செய்யுமாறு நடித்துக் காட்டக் கூடாது என்கிறோம். நமக்கு ஏதாவது மிகப் பெரிய கஷ்டமோ, மனரீதியான பாதிப்போ வந்தால் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்கிறோம். மாணவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். நாம் உடனேயே செய்ய வேண்டியது இடமாற்றம் என்கிறோம். புதிய இடத்திற்குப் போகும் போது அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நமது மனம் மாறுமென்றும், பழைய நினைவுகளிலிருந்து எளிதாக விடுப்படலாமென்றும் கூறுகிறோம். இது தொடர்பாக நிறைய நேரம் பேசுகிறோம்.

எங்கள் வீடு குடிசையாக இருக்கிறது. வீட்டு முற்றத்தில் நின்று கொண்டு சுற்றிப் பார்க்கிறோம். அப்போதும் அந்த விலங்கு அதே போன்று மகிழ்ச்சியாக ஆடிக் கொண்டிருக்கிறது. தோட்டத்தின் வழியாக யாமும் அண்ணனும் நடந்து சொல்கிறோம். தென்னை மரங்கள் அதிகமிருக்கின்றன. அந்தப் பாதையில் பலரும் போக வர இருக்கிறார்கள். ஏதேனும் மிருகங்கள் வந்தால் என்ன செய்வது என பேசிக் கொண்டு நடக்கிறோம்.

காடுகள், வயல்கள் வழியாகப் போய் கொண்டிருக்கிறோம். வேறு ஒருவரும் அவ்வழியில் தென்படவில்லை. சிறிய மலைகள் தெரிகின்றன. தூரத்தில் இரு கருஞ்சிறுத்தைகள் நிற்பது தெரிகிறது. இப்போது என்ன செய்வது என நினைக்கிறோம். ஓடினால் விரட்டுமே என யோசிக்கிறோம். ஒன்று எம்மை நோக்கி வருகிறது. அருகில் வந்தவுடன் காலால் உதைக்கச் செல்கிறோம். அது அங்கேயே நின்று விட்டது. யாமும் அதை பார்த்துக் கொண்டே பின் நோக்கி எட்டு வைக்கிறோம். அது பின் தொடராமல் அங்கேயே நிற்கிறது.

சைனா பெண்

38. ஓரிடத்தில் ஒரு கொலை நடந்து விட்டது. உடலை துணியால் மூடி வைத்திருக்கிறார்கள். சைனாக்காரர்கள் கொலை செய்து விட்டதாகச் சொல்கிறார்கள். (மங்கோலிய முகத்தை வைத்து சைனாக்காரர் என யாம் நினைக்கிறோம்). ஆண்களும் பெண்களும் நிறைய இருக்கிறார்கள். அனைவரும் மாணவர்கள் போன்று தெரிகிறார்கள். மக்கள் நிறைய பேர் கூடி விட்டார்கள். வக்கீல் ஒருவரும், இன்னொருவரும் வந்து சைனாக்கார ஆட்களை கூட்டிச் செல்கிறார்கள். அனைவரும் அவர்கள் பின்னாடியே செல்கிறார்கள். யாம் அந்த வக்கீலோடு பேசுகிறோம். உங்களால் ஒன்றும் செய்ய இயலாது எனச் சொல்கிறார்.

சீன ஆட்கள் ஓரிடத்தில் வேலை செய்கிறார்கள். கீழே இருந்து மாடிக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஒருவர் மேலே மாடியில் நின்று கொண்டு, இன்று மாலை, சென்னை சென்று அங்கிருந்து விமானத்தில் சைனா சென்று விடுவோம், எங்களை யாராலும் பிடிக்க முடியாது என்கிறார். இரு பெண்கள் இரும்பு ஏணி போன்ற ஒன்றைத் தூக்கி வருகிறார்கள். மாடிக்கு படிக்கட்டு இல்லாததால் அதை யாம் தான் எடுத்து வரச் சொன்னதாகத் தெரிகிறது.

இரு பெண்களும் தூக்கி வந்து, அதை மாடிக்குச் செல்லும் பாதையில் சாத்தி வைக்கிறார்கள். அது மடக்கு ஏணி போல் இருப்பதால் அதன் உயரத்தை நீட்டி வைக்கிறார்கள். இந்தப் பெண்கள் எப்படி இவ்வளவு கனமான ஏணியை தூக்கி வர முடியும் என நினைக்கிறோம். இவர்கள் பெண்கள் அல்ல என்றும், ஆண்கள்தான் பெண் வேடமிட்டியிருக்கிறார்கள் என்றும், இவர்களைப் பிடிக்க வேண்டும் எனவும் நினைக்கிறோம்.

இந்தப் பெண்ணை பால்தன்மை சோதனைக்கு உட்படுத்தினால் கண்டறிந்து விடலாம் என நினைக்கிறோம். அங்கே ஒரு சோதனைக் கூடம் இருக்கிறது. மிகவும் நவீனமாக உள்ளது. வாசல், கண்ணாடித் தடுப்பினால் மூடியிருக்கிறது. யாம் உள்ளே சென்று வரவேற்பறையில் இருப்பவரிடம் பால் சோதனைக்கு எவ்வளவு கட்டணம் எனக் கேட்கிறோம். அங்கிருந்த பெண், ஆயிரம் ரூபாய் என்கிறார். எளிமையான சோதனைக்கு இவ்வளவு ரூபாயா என்கிறோம். குரோமோசோம் பார் பாடியை வைத்துக் கண்டறிவதற்கு இருநூறு, இருநாற்றி ஐம்பது ரூபாய் போதுமே என நினைத்துக் கொள்கிறோம்.

அங்கிருந்து நடந்து, ஒரு பெரிய அறை வழியாக வருகிறோம். அந்த சைனா பெண் எதிரே வந்து நிற்கிறாள். என்னைக் கண்டுபிடிப்பாயா எனக் கேட்கிறார். தனது தலை முடி, ஆடையை எடுக்கிறார். இப்போது தான் ஆண் என்று சிரித்துக் கொண்டே சொல்கிறார். யாம் உம்மைக் கண்டு பிடித்து விட்டோம் பார்த்தாயா எனச் சொல்லி சிரிக்கிறோம். மேலும், அறையின் மேலே கேமரா பொருத்தப்பட்டுள்ளது, எல்லோரும் பார்த்து விட்டார்கள், இனி உன்னால் தப்பிக்க முடியாது என்றும் மகிழ்ச்சியாகச் சொல்கிறோம். அந்த சைனாக்கார ஆண் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறார். திறமையாகக் கண்டு பிடித்ததை நினைத்து யாம் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

09.11.2014

சண்டைக் காட்சி ஒத்திகை

39. ஒரு கோவினுள்ளே இருக்கிறோம். அழகிய வேலைப்பாடுகளுடைய உயரமான தூண்கள் உள்ளன. மிகவும் அழகிய மண்டமாகத் தெரிகிறது. அங்கே சண்டைக் காட்சியின் ஒத்திகை நடக்கிறது. நடிகர் அர்ஜுன் சாயலில் ஒருவர், கீழேயிருந்து எம்பிக்குதித்து, ஒவ்வொரு தூணாகத் தாவி செல்கிறார். பின்னர்

மறுமடியும் அதே போன்று செய்யச் சொல்கிறார்கள். அவரும் முன்னை விட வேகமாக தாவிச் செல்கிறார்.

கடைவீதி போன்று உள்ளது. நிறைய பிச்சைக்காரர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். தெரு மிக அசுத்தமாக இருக்கிறது. சிலர் போர்வையால் உடல் முழுவதையும் போர்த்திக் கொண்டு படுத்திருக்கிறார்கள். போர்வைக்குள் உடல் நெழிவது தெரிகிறது. அழுகுரலும், பிதற்றுவதும் கேட்கிறது. சிலர் அழுவது மிக மிக உருக்கமாக இருக்கிறது. இதென்ன நரகமா என நினைக்கிறோம். ஒரு வித பய உணர்வு வந்து விழிப்பு நிலையில் கால்களை மடக்குகிறோம்.

வாய் மொழித் தேர்வு

40. உயரமான மரங்கள் அடர்ந்த, ஒரு சாலையில் உடன் பணியாற்றுபவர்களோடு நடந்து செல்கிறோம். தமிழரசி, **நங்கை மேடம், மங்கை மேடம், உவதி மேடம்** போன்றவர்களோடு மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டு நடக்கிறோம்.

வேலைக்கான தேர்வு முடிவு குறித்து பேசுகிறார்கள். கே. கே. சார் எளிதாக தேர்வாகி விடுவார் என்கிறார்கள். யாம் எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்று விட்டதாகவும், வாய் மொழித் தேர்வு இருக்கிறதென்றும் சொல்கிறோம். **உவதி மேடம்** தனது கையில் கடிதம் ஒன்று வைத்திருக்கிறார். அதைக் காட்டுகிறார். எமது பெயர் எழுதியிருக்கிறது. வாய்மொழித் தேர்வு டெல்லியிலா நடக்கிறது என அக்கடிதத்தைப் பார்த்து நினைக்கிறோம். அக்கடிதத்தை உற்றுப் பார்க்கும் போது, சீக்கரம் உங்களுக்குத் தேவையான எல்லா உதவிகளும் வந்து சேரும் என ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறது. எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

வீட்டின் அறை ஒன்றில் தூங்குகிறோம். எமக்கு அருகே தமிழரசி உறங்குகிறார். சிறிது நேரத்தில் அவரைக் காணவில்லை. சற்று தள்ளி **நங்கை மேடம்** உறங்குகிறார். அச்சுதன் எழுந்து வந்து இருவருக்கும் இடையில் படுத்துக் கொள்கிறான்.

10.11.2014

வைகுண்ட ஏகாதசி

41. ஸ்ரீரங்கம் கடை வீதி போன்று இருக்கிறது. மக்கள் அங்குமிங்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள். நிறைய பூக்கடைகள் உள்ளன. தமிழரசி எமது அருகே இருக்கிறார். வயதான பெண்ணிடம் பூக்கள் வாங்குகிறோம். பத்து ரூபாய்க்கு பத்து பூக்கள் தருகிறார். மல்லிகைப் பூவை ஒவ்வொன்றாக எண்ணிக் கொடுக்கிறார். தமிழரசி ஊசி நூலில் பூவை கோர்க்கிறார். மல்லிகைப் பூவை கோர்த்து முடித்து, மஞ்சள் பூக்களைக் கோர்க்கிறார். மஞ்சள் பூக்கள் யாம் வாங்கவில்லையே என நினைக்கிறோம். அழகிய மாலையாகக் கோர்த்து முடித்து, எழுந்திருந்து கையில் மாலையைத் தூக்கி அளவு பார்க்கிறார். அழகான, கொஞ்சம் பெரிய மாலையாக இருக்கிறது. இன்னொரு மாலை கட்ட வேண்டும் என்கிறார்.

அக்ஷயா சற்று தள்ளி உட்கார்ந்து எங்களை பார்த்துச் சிரிக்கிறார். அக்ஷயா அருகே ஒரு பெண் பூக்கள் விற்றுக் கொண்டிருக்கிறார். பூக்கள் விற்பவர் நமக்கு வேண்டியவர், அதனால்தான் அக்ஷயா அங்கே இருக்கிறாள் என தமிழரசி சொல்கிறார். தங்கம்மாள் அக்கா எங்கள் அருகே நிற்கிறார். பக்கத்திலுள்ள கூடையில் துளசி நிறைந்துள்ளது. அதில் துழாவி ஒரு மஞ்சள் மாலையை எடுத்து வருகிறார். எங்களுக்கு எதிரே, சற்று தள்ளி பூக்கள் விற்கும் ஒருவர், தனது தோள்பட்டையில் பூக்களை மாலையாகப் போட்டு விற்கிறார். இரண்டு மூன்று பேர் அவரிடம் வாங்குகிறார்கள்.

பஜனை கோஷ்டி வருகிறது. சட்டை போடாமல் வேட்டி கட்டிக் கொண்டு ஒருவர் பாடியவாறே முன்னால் வர, பின்னால் நிறைய பேர் வருகிறார்கள். ராம கீர்த்தனை பாடுகிறார். கண்ணாடி அணிந்திருக்கிறார். புத்தகத்தைப் பார்த்து பாடிக் கொண்டு வருகிறார். பஜனை கோஷ்டி எங்களை தாண்டிச் செல்கிறது.

பஜனை வந்த திசையில் சற்று தள்ளி பெரிய ராஜகோபுரம் உள்ளது. ஸ்ரீரங்கம் கோபுரம் போன்று உயரமாக இல்லை. அகலமாகவும், ஓரளவிற்குப் பெரியதாகவும் இருக்கிறது. நிறம் பூசும் வேலை நடக்கிறது. மேல் பகுதி பளிச்சென்று வெண்மை நிறத்தில் இருக்கிறது. ஒருவர் நின்று வண்ணம் அடிக்கிறார். பாதிக் கோபுரம், நீலமும் பச்சையும் கலந்த கலவையான நிறத்தில் காணப்படுகிறது.

கோபுரத்திலிருந்து பெரிய கிருஷ்ணர் சிலையை கயிறு கட்டி இறக்குகிறார்கள். கட்டில் போன்ற ஒன்றில் சிலை இருக்கிறது. கோபுரத்தில் ஒருவர் நின்று கொண்டு, கயிறுகளை மிகவும் வலிமையோடு இழுத்து பிடித்துக் கொண்டிருக்கிறார். கட்டிலின் மறு முனையில் கயிறுகள் இணைக்கப்பட்டு, கோபுரத்தின் கீழே தரையில் சிலர் நின்று கொண்டு இழுக்கிறார்கள். மக்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். சிலை கட்டிலோடு வேகமாகக் கீழே வருகிறது. உட்கார்ந்த நிலையில் ஒரு காலை மடக்கி இன்னொரு காலை நீட்டியவாறு சிலை இருக்கிறது. வெண்மை சிலையாக இருக்கிறது. யாம் இதென்ன இப்படி இழுக்கிறார்கள் எனப் பதறுகிறோம். சிலை அந்தரத்தில் தொங்கிக் கொண்டு வருவது போல் உள்ளது. கிருஷ்ணரின் நீட்டிய காலின் பாதம் ஆடிக் கொண்டே வருகிறது.

அடுத்ததாக, தாயார் சிலையை இறக்குகிறார்கள். தாயார் குங்குமப்பூக் கலரில் பளிங்குச் சிலையாக இருக்கிறார். முகம் மிகவும் அழகாகவும், புன்சிரிப்போடும் இருக்கிறது. மேல் பாகத்தில் ஆடை இல்லாமல் மார்பு இரண்டும் தெரிகிறது. அப்படியே கீழே நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

அக்ஷயா அருகில் இருந்த பெண், கருப்பசாமியை பூக்கட்டும் வேலைக்கு வரச் சொன்னோம், இன்னும் வரவில்லை என தங்கக்காவிடம் சொல்கிறார். யாம் எங்கள் ஊர் கருப்பசாமியை நினைத்து, கருப்பசாமிக்கு பூக்கட்டத் தெரியுமா என ஆச்சரியமாகக் கேட்கிறோம்.

உங்கள் ஊர் கருப்பசாமி இல்லை, அக்கா பையன் கருப்பசாமி என அக்கா சொல்கிறார். திருவிழா வந்தால் பூக்கட்டி பணம் சம்பாதிப்பான் என்கிறார். அந்தப் பெண் பாதையைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். வீதியில் இன்னும் அதிகக் கூட்டமாக மக்கள் வந்து விட்டார்கள்.

யாம் தமிழரசியிடம், அடுத்த வாரம் வைகுண்ட ஏகாதசி வருகிறதல்லவா, அதற்காகத்தான் இத்தனை கூட்டம் என்கிறோம். நாம் கடலில் குளித்து, சாமி பார்த்து விட்டு சீக்கிரம் வீட்டிற்குச் செல்வோம் என்கிறோம். கோபுரத்திலிருந்து எடுத்த கிருஷ்ணரையும், தாயாரையும் மூலஸ்தானம் அருகே வைத்திருப்பார்கள் என்றும், நன்றாகப் பார்க்க வேண்டும் எனவும் நினைக்கிறோம். இந்த வாய்ப்பை விட்டால் இனி அடுத்த வருடம்தான் பார்க்க முடியும் எனவும் நினைத்துக்

கொள்கிறோம். இருவருக்கும் சார்த்துவதற்காகக் கட்டி வைத்திருந்த மாலை இருக்கிறதா என்பதையும் பார்க்கிறோம்.

சாமி பார்க்க நேரமாகும் என்பதால் கடலுக்கு போகும் வழியில் கழிவறை சென்று விட்டு செல்லலாம் என்கிறோம். கோபுரத்தின் இடது பக்கமாகச் செல்லும் வீதியில் நடக்கிறோம். வீடுகள் நெருக்கமாக இருக்கின்றன. அருகிலேயே டாய்லெட் என எழுதியிருக்கிறது. அச்சுதன், அக்ஷயா இருவரும் விளையாடிக் கொண்டே ஓடுகிறார்கள்.

தமிழரசியும் யாமும் ஒரு பக்கமாகச் செல்கிறோம். அது ஆண்கள் பகுதி. கழிவறைகள் அனைத்தும் மூடிக் கிடக்கின்றன. ஏதேனும் திறக்குமா எனப் பார்க்கிறோம். சற்று பெரிய இரும்பு வாளிகள் இருக்கின்றன. வயதான தாத்தா அவற்றில் குழாயிலிருந்து தண்ணீர் பிடிக்கிறார். யாம் காசு எவ்வளவு எனக் கேட்கிறோம். சிறிய வாளியைக் காட்டி அதில் தண்ணீர் எடுங்கள், குறைவுதான் என்கிறார். யாம், சிறு வாளியில் எடுத்தால் தண்ணீர் காணாது என நினைத்துக் கொண்டு பெரிய வாளியை எடுக்கிறோம். தண்ணீர் உப்பாக இருக்கிறது. அருகில் கடல் இருப்பதால் உப்பாக இருப்பதாக நினைக்கிறோம். சற்று தூரமாகப் பார்க்கும் போது அங்கிருந்து வெகு தொலைவு வரை கருப்பாகத் தெரிகிறது. சாக்கடை ஓடி இப்படி கருப்பு மண்ணாக போய் விட்டது என நினைக்கிறோம்.

தமிழரசி அங்கேயே நின்று உடைகளைக் கழற்றுகிறார். ஆண்களின் அரைக்கால் ஜீன்ஸ் கால்சட்டை போட்டிருக்கிறார். கால்சட்டையை கீழே இறக்குகிறார். அவர் ஆணாகத் தெரிகிறார்.

அக்ஷயா ஓடி வந்து எம்மை இழுக்கிறாள். இன்னொரு பகுதியில் கழிவறைகள் இருக்கின்றன. அங்கே செல்கிறோம். அதன் அருகில் அலுவலகம் உள்ளது. சிலர் உள்ளே பேசிக் கொண்டிருப்பதாக உணர்கிறோம். அங்கும் கதவுகள் மூடியிருக்கின்றன. அக்ஷயா அவசரம் என்பது போல் சைகை காட்டுகிறார். அக்ஷயா குட்டிப் பெண்ணாக இருக்கிறார். ஒன்று திறந்து இருக்கிறது. உள்ளே உட்கார்ந்து கொள்கிறார். யாம் தண்ணீர் எடுக்கப் போகிறோம். தரையில் இரும்பு வாளிகள் உள்ளன. வாளியை எடுக்கும் போது கீழேயிருந்து நீர் பொங்குகிறது. தரை மட்டத்திற்குக் கீழே வாளி போன்றே குழிகள் உள்ளன. குழிக்குச் சரியாக

வாளி இருக்கிறது. வாளியைத் தூக்கினால் குழியில் தண்ணீர் நிறைந்திருக்கிறது. யாம் சிறு வாளியில் தண்ணீர் எடுத்துச் செல்கிறோம்.

12.11.2014

சிங்கம்

42. ஒரு வீட்டில் இருக்கிறோம். வெள்ளைச்சாமி மாமா அங்கே இருக்கிறார். அவரது மனைவி வெளியூர் சென்றிருப்பதால் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டதாகத் தெரிகிறது. படிப்பதற்கு புத்தகங்கள் கேட்கிறார். ஒரு அறையில் ஆங்காங்கே புத்தகங்கள் இருக்கின்றன. புத்தகங்களின் தலைப்பு பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கிறது. கம்பராமாயணம், திருக்குறள், தொல்காப்பியம் மற்றும் சில புத்தகங்களையும் எடுத்துக் கொடுக்கிறோம். அலமாரியில் சாப்பிடுவதற்கு பருப்பு போளி இருக்கிறது. எங்கே படிக்கலாம் என்று இடம் தேடுகிறார்.

சபாபதி வீட்டில் கட்டுமான வேலை நடக்கிறது. வாசல் அருகே மேற்குப் பக்கமாக ஒரு இடைவெளி தெரிகிறது. அதை அடைப்பதற்கு சுவர் கட்டுகிறார்கள். தியாகராஜன் கொத்தனார் வேலை பார்க்கிறார். சுண்ணாம்புக் கலவையை கீழே கொட்டி கரண்டியால் சமப்படுத்துகிறார். செங்கல்கள் பெரியதாக இருக்கின்றன. செங்கல்லைத் திருப்பி வைத்து சரியாக வைத்திருக்கிறோமா என சரி பார்க்கிறார். இரண்டு கற்களுக்கு இடையில் உடைந்த சிறு செங்கல் ஒன்றை வைக்கிறார். அவரது காலில் புண் இருக்கிறது. சுண்ணாம்பு பட்டு புண்ணாகி விட்டதாகச் சொல்கிறார். ஏதோ ஒரு வார்த்தை சொல்கிறார். (வார்த்தையை நினைவில் இல்லை). பக்கத்தில் இருந்தவர், தியாகராஜன் அந்த வார்த்தை சொன்னால் வேலை முடிந்து விட்டது என அர்த்தம் என்கிறார்.

வராந்தா அகலமாக இருக்கிறது. பெரியதொரு இரும்பு கிரில் வைத்த ஜன்னல் உள்ளது. கிரிலின் நான்கு மூலைகளிலும் அழகிய வேலைப்பாடுகள் இருக்கின்றன. **அருள்** கிரிலுக்கு வர்ணம் பூசுகிறார். யாம் அதிக தூசி படிந்திருப்பதாகவும், துடைத்து விட்டு வர்ணம் பூசுமாறும் சொல்கிறோம். அவர் யாம் சொல்வதைக் கேட்காமல் கோபப்படுகிறார். பின்பு வேகமாகத் தட்டுகிறார். நிறைய தூசி ஒன்றாகச் சேர்ந்து பறந்து வருகிறது.

நிறையப் பேர் அங்கே இருக்கிறார்கள். ஏதேதோ பேசுகிறார்கள். எமது அலைபேசிக்கு ஒரு அழைப்பு வருகிறது. அழைப்பவர் யாரென எமக்குத் தெரிகிறது.

ஆங்கிலத்தில் இரு எழுத்துக்களில் அவரது பெயரை பதிவு செய்திருக்கிறோம். (எழுத்து மறந்து விட்டது). மறுபடியும் அழைப்பு வருகிறது. வெள்ளைச்சாமி மாமா அவரது மகனும், மருமகளும் வெளியூரில் இருப்பதாகச் சொல்கிறார். அவரது மருமகள்தான் எம்மோடு அலைபேசியில் பேசுகிறார். அந்தப் பெண் மலையாளத்தில் நிறைய நேரம் பேசுகிறார். எமது மருமகள் பேசுகிறார் எனச் சொல்கிறார்.

யாம் மின்சாரக் கம்பம் தாண்டி மெதுவாக நடந்து செல்கிறோம். சற்று தள்ளி நின்று எமது அலைபேசியின் அழைப்பு விவரத்தைப் பார்க்கிறோம். அழைப்பு வந்த விவரங்கள் மூன்று பகுதிகளாகத் தெரிகின்றன. அனைத்து விவரங்களும் அதில் உள்ளன. இவ்வளவு தகவல்கள் வருமா என வியக்கிறோம். அழைப்பை பற்றிய தகவல்களும், வேறு ஏதேதோ தகவல்களும் அதில் தெரிகின்றன. எமது அலைபேசியின் அழைப்பு சிம் ஒன்றிற்கா அல்லது இரண்டாவதற்கா எனப் பார்க்கிறோம். சிம் ஒன்றில் எஸ்.என். என உள்ளது. **குமரன் சார்** அழைத்திருப்பது தெரிகிறது. சிம் ஒன்று தமிழரசியுடையதல்லவா என யோசிக்கிறோம்.

பாலகிருஷ்ண மாமாவும், அத்தையும் அவர்கள் வீட்டின் முன் நிற்கிறார்கள். பெரிய வீடாகத் தெரிகிறது. முன்புறம் இரும்புக் கம்பிகள் தாங்கிய வராண்டா உள்ளது. கம்பிகள் கொஞ்சம் வளைந்து, முன் பக்கம் சிறிது சாய்வாக உள்ளது. பூச்சி மருந்து வைத்து வீடு கட்டியதைப் பற்றி எம்மிடம் சொல்கிறார். உங்கள் அப்பாதான் இப்படிக் கட்டியதாக அப்பாவைப் பற்றி மாமா குறை கூறுகிறார். யாம் கொஞ்சம் பூச்சி மருந்து வைத்துக் கட்டுவார்கள் என்றும், அதனால் சுவர் வலிமையாக இருக்குமென்றும் சொல்கிறோம். அப்பா செய்தது தவறல்ல என்கிறோம்.

கீழே வைத்திருந்த எமது கேமராவை எடுத்துக் கொண்டு பழைய வீட்டிற்கு நடக்கிறோம். கையில் கேமராவும், நிறைய புத்தகங்களும் வைத்திருக்கிறோம். கீழே போட்டு விடக் கூடாது எனக் கவனமாக நடக்கிறோம். மாமாவும் முத்துச்சாமி மாமாவும் சித்தப்பா வீட்டு சுவற்றில் சாய்ந்து கொண்டு கேமரா ஏது எனக் கேட்கிறார்கள். அச்சுதன் ஆசைப்பட்டு கேட்டானென்றும் இது அவனுக்காக வாங்கியதென்றும் சொல்கிறோம்.

யாமும், தமிழரசி, அச்சுதனும் கடலுக்குள் நடந்து செல்கிறோம். கடல் அலை இல்லாமலும் ஆழம் குறைவாகவும் உள்ளது. மெதுவாக நடக்கிறோம். யாம் தண்ணீருக்குள் பாறைகள் இருக்குமென்றும் கவனமாகப் போக வேண்டுமென்றும் நினைக்கிறோம். எங்களுக்கு முன்பாக சிலா் போனதாக யாம் உணா்கிறோம். அவா்களது பேச்சு சத்தம் கேட்பதாக நினைக்கிறோம்.

சிறிது நேரத்தில் மணலில் நடக்கிறோம். அருகிலேயே கடல் தெரிகிறது. எங்களுக்கு சற்று முன்பாக பல மீட்டர் அளவிற்கு பெரிய அலை வருகிறது. அலை சிதைந்து வெண் நிறமான நுரையாகத் தெரிகிறது. அதிலிருந்து ஒரு சிங்கம் தாவிக் குதித்து ஓடி வருகிறது. எங்களை சற்று தள்ளி சுற்றிக் கொண்டு பின்னால் சென்று எங்களைப் பாா்க்கிறது. போகும் வழியில் இது போன்று பல அதிசயங்கள் வருமென்றும், ஒரு போதும் பயப்படக்கூடாது என்றும் அச்சுதனிடம் சொல்கிறோம். மேலும் நம் பயணத்தை நிறுத்தாமல் போய்க் கொண்டே இருப்போம் என்கிறோம். அச்சுதன் பின்னால் திரும்பிப் பாா்க்க விழைகிறேன். யாம் இது போன்று பல முறை நாம் சென்றது தானே என மனதில் நினைக்கிறோம்.

13.11.2014

சென்னை பேருந்து

43. ஊரில் இருக்கிறோம். பலருக்கும் திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன. அண்ணாத்துரை, இராஜபாண்டி அண்ணன் மற்றும் சிலருக்கும் திருமணம் நடக்க இருக்கிறது. யாம் யாருடைய திருமணத்திற்கு செல்வது என யோசிக்கிறோம். பின் இராஜபாண்டி அண்ணன் திருமணத்தில் கலந்து கொள்ளலாம் எனத் தீா்மானிக்கிறோம்.

கண்மாய்க் கரை அருகே ஒரு வீடு இருக்கிறது. இருபக்கமும் பெரிய ஏரிகள் தெரிகின்றன. திருமால் ஆசாரி வருகிறாா். வேகாவும் உடன் இருக்கிறாா். தண்ணீா் வந்து ஊரே அழியப் போகிறது என கவலைப் படுகிறோம். ஏரிக்குத்தான் தண்ணீா் வரும், ஊருக்கு ஒன்றும் ஆகாது எனச் சமாதானமடைகிறோம்.

ஊட்டியில் இருக்கிறோம். பசுமையான மலைகளில் ஆடி ஓடித் திரிகிறோம். பல விளையாட்டுகள் விளையாடுகிறோம். பாடலும் பாடுகிறோம். பாடல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஊரில் அப்பாவிடம் பலரும் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் தர வேண்டியுள்ளது. அவர்களின் பெயர்கள் ஒரு வெள்ளைத் தாளில் எழுதப்பட்டுள்ளன. பெயர்கள் மிகவும் வித்தியாசமாக உள்ளன. யாம் பணம் பெற்றவர்களின் பெயர்களை ஒவ்வொன்றாக கோடு போடுகிறோம்.

ஏதோ ஒரு வீதியில் பலரும் படுத்து உறங்குகிறார்கள். மணி அக்கா எங்கள் வீட்டை சுத்தம் செய்கிறார். வீடு அரண்மனை போன்று பெரியதாக உள்ளது.

யாம், ஏதோ ஓரிடத்தில் சென்னை செல்ல பேருந்துக்குக் காத்திருக்கிறோம். நெடு நேரம் பேருந்து வரவில்லை. பேருந்து வரும் வழியிலேயே ஏறலாம் என நினைத்து சற்று தூரம் நடந்து செல்கிறோம். ஒரு வாடகை டாக்ஸி வருகிறது. யாம் நிறுத்துகிறோம். யாம் ஏறுவதற்குள் இள வயது பையனும் பெண்ணும் அதில் ஏறிக் கொள்கிறார்கள். சற்று தள்ளி ஒரு பேருந்து வருகிறது. அதன் பின்னால் மற்றொரு பேருந்து வந்து நிற்கிறது. யாம் ஓடிச் சென்று முதலாவது பேருந்தின் படியில் ஏறி நிற்கிறோம்.

### சமாதானக் கூட்டம்

44. வீட்டில் இருக்கிறோம். காலை நேரமாகத் தெரிகிறது. வீட்டிற்கு விருந்தினர்கள் வந்திருக்கிறார்கள். இராஜகோபாலபுரத்து ஆதி திராவிடர்கள் போன்று இருக்கிறார்கள். பெஞ்சில் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். தட்டில் முழு மீன்கள் உள்ள மீன் குழம்பு இருக்கிறது. கொஞ்சம் பெரிய மீன்களாகத் தெரிகின்றன. மீன்கள் பழசாகி விட்டது என்றும் நேற்றைக்குச் சாப்பிட்டிருந்தால் இன்னும் சுவையாக இருக்குமென்றும் சொல்கிறார்கள். வேலைக்காரப் பெண்கள் இருவர் சமையலறையிலிருந்து வந்து போகிறார்கள். அவர்களைப் பார்த்தாக ஞாபகம் இல்லை. ஒரு பெண் சிறு பெண்ணாக இருக்கிறார். தாவணி போட்டிருக்கிறார்.

அக்ஷயாவும் யாமும் கிருஷ்ணர் கோவிலுக்கு நடந்து செல்கிறோம். இன்றைக்குத்தான் தீபாவளியா என அக்ஷயா கேட்கிறார். இன்று முப்பத்தி ஒன்றாம் தேதி, நாளை ஒன்றாம் தேதிதான் தீபாவளி எனச் சொல்கிறோம். நாளை சம்பளம் வரும் என்றும் பேசிக் கொண்டு செல்கிறோம். சாலை முழுவதும் மழை பெய்த தண்ணீர் பாய்ந்து செல்கிறது. மழை பெய்து சற்று நேரம் கழித்து ஓடும் தண்ணீர் போல ஓரளவிற்குத் தெளிந்த நீராக ஓடுகிறது. சாலையின் அடுத்த பக்கத்தில்

இருக்கும் கோவிலுக்கு அருகே செல்கிறோம். கோவில் வாசலுக்குள் நுழையும் போது, குளிக்காமல் வந்து விட்டோமோ, போய் குளித்து விட்டு வருவோம் என நினைத்து வீட்டிற்கு நடந்து வருகிறோம்.

வரும் வழியில் ஒரு வீட்டில் சமாதானக் கூட்டம் நடக்கிறது. நரிக்குறவர்கள் போன்று இருக்கிறார்கள். ஆண்களும், பெண்களும் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களது பிரச்சனைகளைத் தீர்க்கச் சொல்லி, அரசு சார்பில் கூட்டம் நடத்துவதாகத் தெரிகிறது. ஒரு இளவயது வெள்ளைக்காரப் பெண் பேசுகிறார். வெள்ளை உடை அணிந்திருக்கிறார். அவர் பேசுவதை மொழி பெயர்ப்புச் செய்ய யாருக்குத் தெரியும் எனக் கேட்கிறார்கள். பலரும் கையைத் தூக்குகிறார்கள். இரு பையன்கள் அருகே வந்து மொழி பெயர்த்துச் சொல்ல தயாராகிறார்கள். அந்தப் பெண் ஆங்கிலத்தில் பேசுவதை ஒரு பையன் தமிழில் சொல்கிறான். இவர்களில் இத்தனை பேர் படித்தவர்கள் இருக்கிறார்களா என யாம் வியக்கிறோம்.

இருவரும் முக்கியக் சாலைக்கு வந்து விட்டோம். யாம் சற்று முன்னால் நடந்து போய், வீட்டு சாலையில் நடக்கும் முன் பின்னால் அக்ஷயா வருகிறாளா எனத் திரும்பிப் பார்க்கிறோம். கொஞ்சம் பின்னால் கையில் கேரி பேக்கில் எதையோ வைத்து தின்று கொண்டு வருகிறாள். இதை வாங்குவதற்குத்தான் தாமதமானதா என நினைக்கிறோம்.

தமிழரசியின் அப்பா பாண்டி மாமா வேலைக்கு கிளம்பிக் கொண்டிருக்கிறார். துணிகளை தேய்க்கவில்லை என்றும் அதனால் தான் கொஞ்சம் மடங்கியுள்ளது என்றும் சொல்கிறார். உடைகள் வெண்மையாக உள்ளன. யாம் தேய்த்து கொடுப்போமா என நினைக்கிறோம். பின் இவருக்கு எதற்கு நாம் தேய்த்துக் கொடுக்க வேண்டுமெனவும் நினைக்கிறோம். வெள்ளை சட்டை போட்டுக் கொண்டு கிளம்புகிறார்.

பாண்டி மாமாவிற்கு இரத்தப் பரிசோதனை நடக்கிறது. பென்சில் போன்ற நீளமான ஒன்றின் முனையில் கூர்மையான ஊசி உள்ளது. விரலின் நகம் அருகே வைத்து **இராமர் சார்** ஊசியை கையால் தட்டுகிறார். சிறு சொட்டாக இரத்தம் வர ஆரம்பிக்கிறது. விரலை அழுத்தி கண்ணாடி வில்லையில் வைக்கிறார்கள். கண்ணாடி கூம்புக் குடுவையில் தண்ணீர் இருக்கிறது. அதில் இரத்தத்தைப் பிடிக்கும் போது சொட்டுச் சொட்டாக அதில் விழுகிறது. இரண்டு, மூன்று சொட்டுகள்

விழுந்து விட்டன. தண்ணீரோடு இரத்தத் துளிகள் கலக்காமல் சிறிதளவு மட்டுமே கலந்து திட்டுகளாகத் தெரிகின்றன. இதை அப்படியே நுண்ணோக்கியில் வைத்துப் பார்த்தால் எல்லாம் அப்படியே தெரியும் என்கிறார்கள்.

**இராமர் சார்** விரலில் ஊசி குத்திய தடம் தெரிகிறது. இரத்தம் வரவில்லை. விரலை சிறிது அழுத்தும் போது இரத்தச் சொட்டு வருகிறது. அதையும் கண்ணாடி வில்லையில் பிடிக்கிறார்கள்.

14.11.2014

சாமி ஊர்வலம்

45. பெரிய அளவில் ஒரு சண்டை நடக்கிறது. கற்கள், பாறைகள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. அவை தாமாகவே பறந்து வந்து மோதுவது போல் தெரிகிறது. அந்த இடமே தலைகீழாக புரட்டிப் போட்டது போல் இருக்கிறது. யாம் அங்கிருந்து ஓடி வருகிறோம். வழியில் மண்பாதை செல்கிறது. ஜே.சி.பி. இயந்திரம் வைத்து வெட்டியது போல் பாதை உள்ளது. கிறிஸ்டியன் கம்யூனிட்டி என்ற பெயர் எழுதிய ஒரு பலகை இருக்கிறது. கிறித்துவர்களின் கல்லறை பலகை போன்று தெரிகிறது. அந்த இடம் முழுவதும் மண்மேடாகக் காட்சியளிக்கிறது.

எம்மைத் தூக்கி, தோள் மேல் போட்டுக் கொண்டு ஒருவர் ஓடுகிறார். எமக்கு காலில் காயம் பட்டதாகத் தெரிகிறது. மிகப் பெரியதொரு மலை மேல் வேகமாக நடக்கிறார். கீழே மிக ஆழமான பள்ளத்தாக்கு உள்ளது. இருட்டாகத் தெரிகிறது. ஒன்றிரண்டு விளக்குகள் மட்டுமே எரிகின்றன. அங்கெல்லாம் குண்டு போடத் தேவையில்லை, அங்கிருப்பவர்கள் தீவிரவாதிகள் இல்லை, மக்கள் என அவர் கூறுகிறார். மலையின் சாலை சமதளமாக போய்க் கொண்டே இருக்கிறது.

வழியில் ஒருவர் படுத்திருக்கிறார். அவரைக் கடந்து போகும் போது, எங்களைப் பார்த்து எழுந்து நிற்கிறார். எங்களை சுடப் போகிறார் என யாம் நினைக்கிறோம். சுடாதது கண்டு, அவர் நம் பக்கத்து வீரர் எனவும் நினைத்துக் கொள்கிறோம்.

வழியில் சிலர் பாராசூட்டில் தப்பித்துச் செல்கிறார்கள். மலையிலிருந்து பறந்து கீழே வருகிறார்கள். ஒரு பெண்ணும் இவ்வாறு பறந்து வந்திருக்கிறார். அவரது காதலன் ஏன் வரவில்லை என மற்றவர்களிடம் கேட்கிறார். அவன் எதிரியிடம் மாட்டி விட்டான் என மற்றவர்கள் அந்தப் பெண்ணைக்

கலாய்க்கிறார்கள். அவர்கள் அருகே பறந்து வந்த காதலன் ஹாய் என கையை ஆட்டிக்கொண்டே சிரித்தவாறு பாராசூட்டிலிருந்து இறங்குகிறார். அங்கிருந்தவர்கள் விளையாட்டுக்குச் சொன்னோம் என அந்தப் பெண்ணிடம் கூறுகிறார்கள்.

யாம் வீடுகள் வழியாக நடந்து வருகிறோம். அழகிய மாடிகள் கொண்ட வீடுகளாக உள்ளன. வீடுகளுக்கு இடையில் சுவர் இல்லாமல் அழகிய பூச்செடிகளும், வேறு பல செடிகளும் வைத்திருக்கிறார்கள். செடிகள் பசுமையாக ஒரு அடி உயரத்தில் வளர்ந்துள்ளன. ஒரு வீட்டின் வராந்தா சிறப்பாக இருக்கிறது. வீட்டின் மாடியில் நடிகை அனுஷ்கா ஆடுகிறார். ஏதோ ஒரு இந்திப் பாட்டுக்கு திருமணங்களில் ஆடுவது போன்று சிரித்துக் கொண்டே ஆடுகிறார்.

யாம் மலையைத் தாண்டிப் போக வேண்டுமென நினைத்து வேகமாகச் செல்கிறோம். மலையைத் தாண்டி கீழே நடந்து வருகிறோம். இராஜகோபாலபுரத்து கண்மாய் கரை போன்று உள்ளதோ என யோசிக்கிறோம். கீழே வரும் போது ஓடை போன்ற ஒரு பகுதியில் ஒரு விமானம் விழுந்து கிடக்கிறது. விபத்து போல் இருக்கிறது. அருகே ஒருவர் மல்லாக்கப் படுத்தவாறு தரையில் கிடக்கிறார். ரஜினிகாந்த் விபத்தில் இறந்து விட்டதாகச் சொல்கிறார்கள். இறந்து கிடப்பவரின் உருவம் அப்படித் தெரியவில்லை. கைலியும், வெளிர் மஞ்சள் நிறத்தில் சட்டையும் உள்ளது. மீசையும் தெரிகிறது. மீசையில் ஏதோ வித்தியாசம் உள்ளதாக நினைக்கிறோம்.

அந்த வழியாக இன்னும் சிலர் நடந்து போகிறார்கள். ஒரு புத்தகத்தைப் பற்றி பேசுகிறார்கள். ஒருவரைப் பற்றி, அவர் திருவாசகம் சொன்ன வழியில் நடப்பவராகவும், முஸ்லிம் பெரியவர்களையே தம்மிடம் வந்து ஆசிர்வாதம் பெற்றுச் செல்ல வைத்ததாகவும் கதை அமைக்கப்பட்டுள்ளதாகப் பேசுகிறார்கள். அக்கதையை ஓ.பன்னீர்செல்வம் எழுதியிருப்பதாகவும் சொல்கிறார்கள்.

யாம் தள்ளுவண்டி ஒன்றில் உட்கார்ந்து செல்கிறோம். ஊரின் செவல்காட்டு பாதை போன்று தெரிகிறது. பாதத்தை பூமியில் நெம்பி வண்டியை தள்ளிக் கொண்டு செல்கிறோம். சற்று நேரத்தில் எங்கள் ஊர் காந்தி இன்னொரு பக்கம் இருப்பதாகத் தெரிகிறது. இள வயதாக இருக்கிறார். இருவரும் கால் பாதத்தை தரையில் பதித்து

வண்டியை தள்ளிக் கொண்டு செல்கிறோம். யாம் புத்தகம் ஒன்றை படித்துக் கொண்டும் செல்கிறோம்.

வண்டி வேகமாகச் சென்று முன்னால் செல்பவா்கள் மேல் இடிக்கிறது. ஓத்தை வீட்டுப் பக்கமிருக்கும் ஒருவா் (பெயா் தெரியவில்லை) சிரித்துக் கொண்டே வண்டியை நிறுத்த முயல்கிறாா். இன்னும் சிலா் சற்று விலகி வழி விடுகிறாா்கள்.

விபத்தில் இறந்தவா் ராஜபக்ஷே என தொலைக்காட்சியில் சொன்னதாகப் பேசுகிறாா்கள். அரசுக்குத் தெரியாமல் சிங்கப்பூா் சென்றதாகவும், அங்கு விமான நிலையத்தில் விபத்து நடந்து இறந்து விட்டதாகவும் தெரிகிறது.

பேருந்து நிலைய ஆலமரம் அருகே நடந்து வருகிறோம். ஒரு சிறுவன் வேகமாக முன்னால் ஓடுகிறான். எதற்காக இப்படி ஓடுகிறான் என வியக்கிறோம். சுத்தமடம் சாலையில் சற்று தூரமாக சாமி ஊா்வலம் வருகிறது. பலவகையான வண்ணக் குடைகள் அதிக எண்ணிக்கையில் வருவது தெரிகிறது. குடைகள் பெரியதாக உள்ளன. முன்னால் மிகப் பெரிய தட்டுகளில் தீபம் ஏந்தி வருகிறாா்கள். தட்டுக்களின் விளிம்பைச் சுற்றிலும் தனித் தனி சுடராக தீபங்கள் எரிகின்றன. பெருங்கூட்டமாக வந்து கொண்டிருக்கிறாா்கள்.

வீட்டில் இருக்கிறோம். முகம் தெரியாத காதலா்கள் வந்திருப்பதாகவும், அவா்களுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டுமென்றும் தெருக்காரா்கள் பேசுகிறாா்கள். மின்சாரக் கம்பம் அருகே எல்லோரும் நிற்கிறாா்கள். சீா்வரிசை எடுத்துக் கொண்டு மலைக்கார மாரியம்மா பெரியாத்தா வீடு வழியாக வரிசையாக நடக்கிறாா்கள். மணப்பெண் அலங்காரத்தோடு இருக்கிறாா். சவுண்டு நல்லதம்பி அவா்களது வீடு அருகே நின்று ஒரு சிறுமியிடம் குனிந்து ஏதோ பேசுகிறாா். அச்சிறுமியோடு மலையாளத்தில் மெல்லிய குரலில் பேசுகிறாா். மணப்பெண் நடிகை அசினாக இருக்கிறாா். அச்சிறுமி அவா் தங்கை எனத் தெரிகிறது.

பொன்னுப் பாண்டி வீடு அருகே போய் கூட்டம் நிற்கிறது. மணமகனின் தந்தை திருமணத்திற்கு சம்மதிக்க மறுக்கிறாா். அவரது முகம் சிறியதாக உள்ளது. நாங்கள் உங்கள் உலகத்துப் பெண்ணை கட்டிக் கொள்ள இயலாது என்கிறாா். நாங்கள் வேறு என்கிறாா். அவரது புஜம் நீளமாக உயா்கிறது. தலையைச் சுற்றி கவசம் உருவாவது போல் தெரிகிறது. உடல் உயரமாகிறது.

15.11.2014

வேதநாயகம்

46. ஊரில் ஏதோ விழா நடக்கிறது. மக்கள் கூட்டமாக உட்கார்ந்திருக்கிறார்கள். வேதநாயகம் எம்மோடு இருக்கிறாரா அல்லது வேதநாயகத்துக்கு புனிதர் பட்டம் அந்த விழாவில் கொடுக்கிறார்களா என்பது ஞாபகமில்லை. குண்டுப் பெண் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். அவருடைய தோழிகள் ஏதோ சொல்லி கிண்டலடிக்கிறார்கள். அனைவரும் சிரிக்கிறார்கள். யாமும் சிரிக்கிறோம்.

ஒரு வகுப்பறை தெரிகிறது. **பாண்டி சார்** வகுப்பறையின் கதவை சாத்துகிறார். **கிருஷ்ணன் சார்** கையில் அழிப்பான் வைத்துக் கொண்டு ஏதோ சிந்தனையில், ஊரின் பள்ளிக்கூட வண்டிப்பாதையில் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருக்கிறார்.

சற்று தள்ளி கல்லூரி மாணவர்கள் பல பேர் நின்று கொண்டிருக்கிறார்கள். தேர்வுக்குப் படிக்காததால்தான் அவர்கள் தேர்வு எழுதவில்லை என எம்மிடம் சொல்கிறார்கள். யாம் ஜான் மார்ஸ் என்பவரை பற்றிக் கூறுகிறோம். முதலில் அவர் மட்டும் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து பின் அவரது மனைவியுடன் இணைந்து அதை பெரியதாக வளர்த்ததாகக் கூறுகிறோம். பின் அவரது மகள், மருமகள் இணைந்து ஐந்து பேராக அந்த நிறுவனத்தை மிகச் சிறந்ததாக உருவாக்கினார்கள் என்கிறோம். நான்கு பேர் தானே வருகிறது, நாம் ஏன் ஐந்து பேர் எனச் சொன்னோம் என நினைக்கிறோம்.

நீச்சல் விளையாட்டு

47. சுற்றுலா செல்வது போல் தெரிகிறது. வயல்கள் வழியாக நடக்கிறோம். பலவித செடிகள் இருக்கின்றன. யாமும் ரவியும் முன்னால் சற்று தள்ளி நடக்கிறோம். ஒரு ஊரின் அருகே வந்து விட்டோம். சிறிது நேரத்தில் நண்பர்கள் அனைவரும் வந்து விட்டார்கள். சத்தமாக கூச்சல் போட்டுக் கொண்டு, மிகுந்த உற்சாகமாக ஒருவரையொருவர் ஓடிப் பிடித்துக் கொண்டும், தள்ளி விட்டும் விளையாடுகிறோம். இவ்வளவு சத்தமாக கூச்சல் போட்டுக் கொண்டு விளையாடுகிறோமே, இந்த ஊர்க்காரர்கள் ஒன்றும் சொல்லமாட்டார்களா என ஒரு நண்பரிடம் கேட்கிறோம். இந்த ஊர்க்காரர்கள் அவரவர் வேலையை பார்ப்பார்கள், அடுத்தவர் விசயங்களில் தலையிட மாட்டார்கள் என நண்பர் சொல்கிறார்.

அந்த ஊரில் பெரிய கண்மாய் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் தண்ணீர் நிரம்பியுள்ளது. நண்பர்களோடு நீச்சல் அடித்து விளையாடுகிறோம். ஒரு கண்மாயில் இவ்வாறு குளித்து விட்டு அருகிலிருக்கும் மற்றொரு கண்மாய்க்குச் செல்கிறோம். இது இன்னும் பெரியதாக உள்ளது. கரை அருகே செடி கொடிகள் உள்ளன. யாம் மட்டும் தனியாக இறங்கி நீந்துகிறோம். நீந்திக் கொண்டே வெகு தூரம் செல்கிறோம். நீந்துவது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஊரில், பள்ளிக்கூட ஆலமரம் இருந்த இடத்தில் இருக்கிறோம். அச்சுதன். அக்ஷயா இருக்கிறார்கள். அருகே இருந்த கொய்யா மரத்தில் இருவரும் கொய்யாப் பழங்களை பறித்து விட்டார்கள். அச்சுதன் வைத்திருப்பது பெரியதாக இருக்கிறது. இராஜதுரை வந்து அவரது தோட்டத்தில் ஏன் கொய்யாப் பழம் பறித்தீர்கள் எனக் கோபப்படுகிறார். பறித்த கொய்யாப் பழத்திற்கு பணம் கொடுக்குமாறு கேட்கிறார். யாம் கோபத்துடன் அவரைப் பார்க்கிறோம்.

ஓரிடத்தில் எல்லோரும் கூடி இருக்கிறார்கள். அறை போல் தெரிகிறது. யாமும், ரவியும் நிற்கிறோம். அருகிலேயே ஒரு கடவுளின் சிலை இருக்கிறது. சிலை நிற்கும் விதமாக உள்ளது. பூக்கள் சூட்டி, பச்சைப் பட்டு வஸ்திரம் போர்த்தியுள்ளார்கள். கீழே இலையில் பொங்கல் மற்றும் வேறு பலகாரங்கள் படையலிட்டிருக்கிறார்கள்.

இருதயமுத்து சித்தப்பா அருகே வருகிறார். களைப்பாகத் தெரிகிறார். வெகு தூரத்திலிருந்து பசியோடு வந்தவர் போல் உள்ளார். யாம் ஏதோ கேட்கிறோம். எம்மைப் பார்க்காமல் இலை பிரசாதத்தையேப் பார்க்கிறார். அடுத்த அறையில் சாப்பாடு பரிமாறுவது கண்ணாடி வழியே தெரிகிறது. டேபிள் மேல் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். பரிமாறுபவர்கள் தெரிகிறார்கள். சித்தப்பாவை சாப்பிட அழைத்துச் செல்ல வேண்டுமென நினைக்கிறோம். அதற்குள் இலையில் இருந்த பொங்கலை எடுத்து சாப்பிடுகிறார்.

அரண்மனை போன்று உள்ளது. யாம் வேட்டி மட்டும் கட்டிக் கொண்டு துண்டால் மார்பை மூடியவாறு மெதுவாக அரண்மனையை நோக்கி நடக்கிறோம். எமது தோற்றம் மிகவும் எளிமையாக உள்ளது. எதிரில் அலங்கார உடையணிந்த பலர் நடந்து வருகிறார்கள். கணேசமூர்த்தி அண்ணன் அங்கே நிற்கிறார்.

16.11.2014

நீச்சல் குளம்

48. ஊரின் சோலைமேட்டுப் பகுதி போல் உள்ளது. கடலைக் காடுகளை உழுகிறார்கள். யாம், மணிகண்டன், வேல்முருகன் போன்றவர்கள் கடலை பொறுக்குகிறோம். செடிகள் காய்ந்து கிடக்கின்றன. ஓரிடத்தில் அதிகமாக கடலைகள் இருப்பது தெரிகிறது.

நீச்சல் குளம் தெரிகிறது. குழந்தைகள் நீந்தி விளையாடுகிறார்கள். அக்ஷயா நீந்துகிறார். குழந்தைகள் நீந்தும் போது கால் கைகளை அசைக்காமல் வேகமாகப் பாய்ந்து செல்கிறார்கள். எவ்வாறு அப்படி வேகமாகச் செல்கிறார்கள் என யாம் வியக்கிறோம். எம்மையும் கூப்பிடுகிறார்கள். யாமும் அவ்வாறு வேகமாக நீச்சல் குளத்தை சுற்றிச் சுற்றி வருகிறோம். நீச்சல் குளம் சதுரமாக உள்ளது.

இப்போது குழந்தைகள் மெதுவாகவும் யாம் வேகமாகவும் செல்கிறோம். அவர்கள் கைய் கால்களை அடித்து நீந்துகிறார்கள். யாமோ அப்படியே வேகமாகச் செல்கிறோம். அக்ஷயா சிறு மூங்கில் தட்டு ஒன்றைத் தருகிறார். அதில் உட்கார்ந்ததும் யாம் அதே போன்று வேகமாகச் சுற்றி வருகிறோம். அருகேயிருக்கும் அடுக்குமாடி வீட்டுப் பால்கனியிலிருந்து, சற்று வயதான தம்பதியர் எங்களைப் பார்த்தபடி நின்று கொண்டிருக்கிறார்கள். யாம் விளையாடுவது அவர்களுடைய கூடை, அதனால் தான் பார்க்கிறார்கள், கூடையை பத்திரமாக வைத்திருக்கிறார்கள் என அக்ஷயா சொல்கிறார்.

நீச்சல் குளம் அருகே மரம் உள்ளது. அருகே தமிழரசி உட்கார்ந்திருக்கிறார். இருவரும் அருகே கிடக்கும் குச்சிகளை, குப்பைகளை சுத்தம் பண்ணலாம் எனச் சொல்லி சுத்தப்படுத்துகிறோம். அந்த வழியாகச் செல்லும் **இராமன் சார்** எங்களிடம் ஏதோ பேசுகிறார்.

யாம் வீட்டினுள் செல்கிறோம். வீடு மாடியில் உள்ளதாகத் தெரிகிறது. ஆடை மாற்ற எண்ணுகிறோம். வரவேற்பு அறையில் ஒரு கால்சட்டை தொங்குகிறது. ரொட்டியின் நிறத்தில் உள்ளது. அதில் சேறு இருப்பது கண்டு, நேற்று கடலைக்காட்டில் ஒட்டியிருக்குமோ என நினைக்கிறோம். இப்போது செல்வது விழாவாயிற்றே, நல்ல உடையாகப் போட வேண்டும் என நினைத்துக் கொண்டு உள்ளறைக்குச் செல்கிறோம்.

18.11.2014

## தொலைபேசி

49. ஓர் ஊரில் இருக்கிறோம். நகரம் போல் உள்ளது. அங்குமிங்கும் சுற்றுகிறோம். கடைவீதியில் இருக்கிறோம். தமிழரசியோடு தொலைபேசியில் பேச நினைக்கிறோம். ஒரு கடைக்குச் செல்கிறோம். கடையில் தொலைபேசி அறை இருக்கிறது. எமக்கு முன்னர் ஒரு பெண் பேசிக் கொண்டிருக்கிறார். யாம் நாணயம் போட்டு எண்களை அழுத்துகிறோம்.

எண்கள் வரிசை மாறித் தெரிகின்றன. ஒன்றாம் எண் இரண்டாவது வரிசையின் நடுவில் இருக்கிறது. ஒன்பது மேல் வரிசையில் இருக்கிறது. எண் தவறாகப் போட்டு, நாணயம் கீழே வந்து விட்டது. அடுத்த முறையும் எண் தவறாகப் போய்விட்டது. தமிழரசியின் எண்கள் ஞாபகத்திற்கு வராமல் தடுமாறுகிறோம். அருகிலிருக்கும் இரண்டு மூன்று பேர் எமக்கு உதவி செய்கிறார்கள்.

அங்கிருந்து பேருந்தில் ஏறி வேறு இடத்திற்குச் செல்கிறோம். பின், தெரு வழியே நடந்து போகிறோம். ஆயிரக்கணக்கான பொதுவுடைமைக் கட்சித் தொண்டர்கள் கையில் உயரமான கொடிகள் பிடித்துக் கொண்டு நிற்கிறார்கள். கொடிகள் மட்டும் உயரமாக, நெருக்கமாகத் தெரிகின்றன.

மற்றொரு தொலைபேசி இடத்திற்குச் செல்கிறோம். அக்காவிற்கு பேச நினைக்கிறோம். தொலைபேசி அறை மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. ஒரே வயரிலிருந்து பல இணைப்புகள் உள்ளன. பலர் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். ஒரு இளம் பெண் மிகவும் வித்தியாசமாக இருக்கிறார். பேசுபவர்கள் அருகே ஒரு சிறிய கல்லாலான தடுப்பு சுவர் காணப்படுகிறது.

தொலைபேசி அறையில் ஒரு பையன் உட்கார்ந்திருக்கிறார். யாம் அக்காவிற்கு பேச வேண்டும் என்கிறோம். எமக்கு எண்கள் மனப்பாடமாகத் தெரியாதே என நினைத்துக் கொண்டிருக்கும் போதே அந்த பையன் எண் போட்டு பேசுங்க எனக் கொடுக்கிறார். வீட்டு இணைப்பிற்கு இருக்கும் தொலைபேசியாக அது இருக்கிறது. யாம் இரண்டு நாணயங்களை அவரிடம் கொடுக்கிறோம். அதற்குள் பேச வேண்டும் எனவும் நினைத்துக் கொள்கிறோம்.

எதிர் முனையில் அக்கா பேசுகிறார். யாம் என்ன பேசுவதெனத் தெரியாமல் ஏதேதோ உளறிக் கொட்டுகிறோம். என்னாச்சுப்பா எனக் கேட்கிறார். யாம்

ஒன்றுமில்லை என ஏதேதோ சொல்லிச் சமாளிக்கிறோம். எமக்கே யாம் குழப்பமாகப் பேசுவதாகத் தெரிகிறது. அலைபேசியைத் தொலைத்து விட்டதாகவும் சொல்கிறோம். அங்கிருந்து கிளம்பி முக்கியச் சாலையில் நடந்து வருகிறோம். இடப்புறம் திரும்பி பேருந்திற்காக நிற்கிறோம்.

ஊரில் இருக்கிறோம். நல்லதம்பியின் மேட்டு நிலம் அருகே அனைவரும் மகிழ்ச்சியாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம். பாலு எதிரேயிருக்கும் கருவேல செடிகளுக்குள்ளே இரண்டுக்கு போவதற்குச் செல்கிறான். பெரிய பையனாகிட்டான், எதுக்குள்ளே போறான் பாருங்க என அச்சுதன் கேலி செய்கிறான். பாதையில் திருமலைபுரத்தைச் சேர்ந்த சில பேர் நிற்கிறார்கள். இராமநாத அண்ணன் போல் தெரிகிறது. அங்கிருந்து சாமி ஊர்வலம் வருவதாகவும், பாதையைச் சரி பார்க்க, அவர்கள் முன்னரே வந்ததாகவும் சொல்கிறார்கள். எங்கள் ஊர் தலைவரிடம் சொல்லி விட்டுச் செய்யுங்கள் என யாம் அவர்களிடம் சொல்கிறோம்.

அக்காவின் குழந்தைக்குப் பசிக்கிறதாகக் தெரிகிறது. யாம் உணவு எடுத்து வர வீட்டிற்குச் செல்கிறோம். வாசலில் அம்மா ஏதோ சொல்கிறார். யாம் ஏதோ கோபமாகப் பேசுகிறோம். (என்ன நடந்தது, என்ன பேசினோம் என மறந்து விட்டது)

வீட்டிற்குள் சென்று கிண்ணத்தில் சாதம் எடுக்கிறோம். சாம்பார் ஊற்றி, கரண்டி வைத்துக் கிளறுகிறோம். அண்ணன் வீட்டில் பேசுவது கேட்கிறது. அவர் வெளிநாடு கிளம்புவதற்குத் தயாராகி விட்டதாகப் பேசுவதிலிருந்து தெரிகிறது. அவரது மனைவி, போக வேண்டாம் எனச் சொல்கிறார். பிள்ளைகளைப் பெற்று விட்டு, அவர்களைக் காப்பாற்ற வேண்டாமா எனக் கேட்கிறார். பேச்சின் ஊடே, யாமே பொருட்கள் வைக்க இடமேயில்லாமல் பேஸ்டைக் கூட கவர் போடாமல் கொண்டு செல்கிறோம் என அண்ணன் சொல்கிறார். மணி அக்காவும் அங்கே இருக்கிறார். அவரும் அவர்களோடு சேர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். போய் விட்டு வேண்டுமானால் வரட்டுமே என்கிறார்.

யாம் சாதம் போட்டு, காரக்குழம்பு ஊற்றிக் கிளறுகிறோம். குழம்பு அதிகமானதாகத் தெரிகிறது. கொஞ்சம் சாதம் சேர்த்துப் போட்டு கிண்டுகிறோம். இரண்டு விதமான சாதத்தையும் தனித்தனி உருண்டை போல் வைத்து, எடுத்து வருகிறோம்.

மாமா எமது அருகே வந்து எப்ப வந்தீங்க எனக் கேட்கிறார். இப்போதான் வந்தோமென்றும், உங்களைப் பார்க்க வர வேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தோம் எனவும் சொல்கிறோம். அண்ணனோடு சண்டை வந்ததால், மாமா நம்மோடு பேச மாட்டார் என நினைத்தோம், பேசி விட்டாரே, நல்ல மாமா என மனதிற்குள் நினைக்கிறோம். மாவீரன் படத்திற்கு மாமா போறாராம், நீயும் போறியா என அக்கா சிரித்துக் கொண்டே கேட்கிறார். அப்படியா மாமா எனக் கேட்டு, போய் பார்க்க வேண்டியதுதான் எனச் சொல்கிறோம். போய்ட்டு வரோம் என மாமா கிளம்புகிறார்.

குழந்தை திண்ணையின் மேற்குப் பக்கத்தில் நிற்கிறாள். மிகவும் அழகாகச் சிரிக்கிறாள். வெளிர் பச்சை நிறத்தில் கவுன் போட்டிருக்கிறாள். சாதத்தை வாயில் வாங்கிக் கொள்கிறாள். யாம் திண்ணையின் கிழக்குக் கடைசியில் உட்கார்ந்திருக்கிறோம். இடையில் அக்கா, அப்பா, அம்மா இருக்கிறார்கள். குழந்தை எம்மை நோக்கி, கையை தூக்கிக் கொண்டு, நடந்து வருகிறாள். யாம் இரு கைகளாலும் தாங்கிக் கொள்கிறோம். அவளது உடல் வெல்வெட் போன்று இருப்பதாக உணர்கிறோம். அது யாரு யாரு எனக் கேட்கிறார்கள். சிரித்துக் கொண்டே இருக்கிறாள். மறுபடியும் கேட்கிறார்கள். தித்தப்பூ என மழலை மொழியில் சிரித்துக் கொண்டே சொல்லி, எம்மை கட்டிச் கொள்கிறாள். அனைவரும் சிரிக்கிறார்கள்.

21.11.2014

முனைவர் ஆய்வேடு

50. ஊரின் பள்ளிக் கூடத்தில் உட்கார்ந்திருப்பது போல் இருக்கிறது. அச்சுதன் ஒரு பெரிய கொய்யாப்பழத்தை, ஒரு பையிலிருந்து எடுத்துக் கொடுக்கிறான். சிறிது நேரத்தில் பாலசுப்ரமணி கைய் நிறைய கொய்யாப் பழங்களைப் பறித்து வருகிறான். எங்களின் அருகே ஒரு சிறு பையனும் இருக்கிறான். அனைவரும் கொய்யாவை வெட்டிச் சாப்பிடுகிறோம். கடித்துச் சாப்பிடும் போது வெள்ளரிக்காய் போன்று குச்சியாக இருப்பது தெரிகிறது.

**மங்கை மேடம்** ஒரு பெரிய கோரைப் பெட்டியைக் கொண்டு வந்து தரையில் வைத்திருக்கிறார். பாய் போல் இருக்கிறது. பெட்டியின் மேலே, மடங்கு வட்டமாக, பானை போன்று வளைந்தும் உள்ளது. பாயை மடக்கினால் எந்த அளவு உயரம் வருமோ அவ்வளவு உயரமாக அந்தப் பெட்டி இருக்கிறது. தம்மிடம்

சொல்லியிருந்தால் இன்னும் அழகான பெட்டியாகப் பார்த்து வாங்கியிருப்போம் என **நங்கை மேடம்** சொல்கிறார். பெட்டியைச் சுற்றி நின்று பலரும் வேடிக்கை பார்க்கிறார்கள்.

எம்மிடம் ஒரு மடிக்கணினி இருக்கிறது. **ராஜ மேடத்தின்** முனைவர் ஆய்வேடு அதில் இருப்பதாகவும், எம்மை பார்க்கும்படியும் சொல்கிறார்கள். ஒரு போல்டரைத் திறக்கிறோம். மூன்று கோப்புகள் உள்ளன. ஒன்றை தவறாக நீக்கி விட்டதாக உணர்கிறோம். அடுத்த கோப்பில், அவரது ஆய்வேடு தலைப்பிலிருந்து தொடங்குகிறது. (தலைப்பு மறந்து விட்டது).

தண்ணீர், பூச்சிகள், பூச்சிக் கொல்லி பற்றி நிறையத் தகவல்கள் வருகின்றன. ஒரு பெரிய நீர்த் தொட்டி அப்படியே மரமாக மாறுகிறது. அது மாறுவது மெதுவாக மிக அற்புதமாகத் தெரிகிறது. இதுபோலவே வேறு சில புகைப்படங்களும் தானாகவே வேறொன்றாக மாறுகின்றன.

மிகச் செழிப்பான மரங்கள் தெரிகின்றன. தரையில் ஒரு குப்பை கூட இல்லாமல் மிகவும் சுத்தமாகத் தெரிகிறது. மரங்கள், மலைகள், காடுகள், நீர்த்தேக்கங்கள் என திரையில் வந்து கொண்டே இருக்கின்றன. அனைத்துக் காட்சிகளும் மிக அருகாமையில் தத்ருபமாக அப்படியே தெரிகின்றன. இப்படியெல்லாமா ஆராய்ச்சிக் கட்டுரை இருக்கும் என நினைத்துக் கொண்டே யாம் பார்க்கிறோம்.

எந்த புகைப்படக்கருவி மூலம் இக்காட்சிகளை எடுத்தீர்கள் என **ராஜ மேடத்திடம்** கேட்கிறோம். அவர் சிரித்துக் கொண்டே, அதிக விலையுள்ள புகைப்படக் கருவியால் எடுத்தோம் எனச் சொல்கிறார்.

23.11.2014

விக்ரபாண்டியன்

51. ஒரு சிறிய மலை மேல் உட்கார்ந்திருக்கிறோம். அச்சுதன், அக்ஷயா இருக்கிறார்கள். இருவருக்கும் ஏதோ சாப்பிடச் கொடுத்திருக்கிறோம். விக்ரபாண்டியன் மச்சான் இருக்கிறார். இருவரும் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர் வேலை பார்க்கும் இடத்திற்கே கூட்டிச் செல்வதாகவும் கூறுகிறார்.

வயல்கள் வழியாக யாம் நடந்து செல்கிறோம். நடுத்தரமான தென்னை மரங்கள், சீரான வரிசையில் தெரிகின்றன. குட்டையன் சித்தப்பா ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கிறார். ஒரு சிறிய கூரை வீட்டிற்குள் செல்கிறோம். வீடு, கோழிக் கூண்டு அளவே இருக்கிறது. உள்ளே, உதய சூரியன் அண்ணனும், அவரது முதல் மனைவியும் இருக்கிறார்கள். வீட்டினுள்ளே வாழை, தென்னை மரச் செடிகள் இருக்கின்றன. இந்த சிறிய வீட்டிற்குள், எப்படி இந்த செடிகள் வளர்ந்தன என நினைக்கிறோம். வாழை மரங்கள் அதிகமிருக்கின்றன. யாம் உட்காருவதற்கு இடமில்லாமல், சில வாழைகளை ஒடித்து உட்காருகிறோம்.

எமக்கு ஒரு தட்டில் சாப்பாடு தருகிறார்கள். குழம்பு சிறு உருண்டைகள் போல் உள்ளது. இரண்டு வாய் சாப்பிட்டு விட்டோம். பின், இது அசைவமா எனக் கேட்கிறோம். அவர்கள் ஆமாம் எனச் சொல்கிறார்கள். யாம் அசைவம் சாப்பிட மாட்டோம் எனச் சொல்லி, சாப்பாட்டை வைத்து விடுகிறோம்.

வாசலில் நின்று சுற்று முற்றும் பார்க்கிறோம். இந்த வீட்டைப் போன்றே, சிறிய வீடுகள் அதிகமான இடைவெளி விட்டு நிறைய இருக்கின்றன. யாம் எழுதும் புத்தகத்திற்கு, இந்த வீடுகளையே, அட்டைப் படமாகப் போட வேண்டும் என நினைக்கிறோம். நகரத்திலிருந்து இந்தப் பகுதி மட்டும் தனித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த வீட்டிலா குடியிருக்கிறீர்கள் என மச்சானிடம் கேட்கிறோம். வேலை பார்க்க வந்த இடத்தில், வசதியை எதிர்பார்க்க முடியுமா எனக் கேட்கிறார்.

நடந்து வரும் போது, ஓட்டு வீடுகள் தெரிகின்றன. திருமலைபுரம் பொன்ராமன் ஒரு வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருக்கிறார். மற்றொரு பக்கம், வரிசை வீடுகள் உள்ளன. அங்கே செல்கிறோம். பெரிய வீடுகளாகத் தெரிகின்றன. செல்லவடிவு சித்தப்பா இருக்கிறார். அவரோடு பேசிக் கொண்டிருக்கிறோம்.

25.11.2014

நம்பெருமாள்

52. யாம், தமிழரசி வீட்டிலிருப்பது போல் இருக்கிறது. ஏதோ விழா நடப்பதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. உறவினர்கள் பலரும் வந்திருக்கிறார்கள். எமக்கு பரிச்சயமானவர்களாகத் தெரியவில்லை. பலரும் இனிப்புகள் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். பால்கோவா போல் பாலிதீன் பைகளில் இருக்கிறது.

யாம், இனிப்பை எடுத்து சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறோம். மனதிற்குள் இவ்வளவு சாப்பிடுகிறோமே என நினைத்துக் கொள்கிறோம்.

இருவரும் அறையை விட்டு வரும் போது, பள்ளியில் படிக்கும் வயதில் இரண்டு பையன்கள் வாசலில் நிற்கிறார்கள். கொஞ்சம் பெரிய பையனாக இருந்தவரிடம், தமிழரசி ஏதோ பேசுகிறார். எம்மிடம், அவனை நல்ல பையன் எனச் சொல்லி அறிமுகப்படுத்துகிறார். தண்ணீர் எடுப்பதற்காக இருவரும் நடந்து செல்கிறோம். அப்போது கையில் இனிப்பு வைத்து யாம் தின்று கொண்டிருக்கிறோம்.

யாம், கோவிலில் சாமி கும்பிடுகிறோம். உடன் இன்னொருவர் வந்திருப்பது தெரிகிறது. (யார் என நினைவில்லை). இரண்டாம் முறையாக, சாமியைப் பார்க்க வருவதாக உணர்கிறோம். பட்டர் பெரிய வெள்ளித் தட்டு வைத்து ஆரத்தி காண்பிக்கிறார். நம்பெருமாள் இருக்கிறார். யாம் குனிந்து வணங்குகிறோம். பட்டர் நம்பெருமாள் சிலையை எடுத்து, எமது தலையில் அழுத்தி வைத்து எடுக்கிறார். சிலையின் அடிப்பகுதியில் துணி இருக்கிறது. தலையில், சிலையின் அடிப்பகுதியின் தடம் படுமாறு, அழுத்தி வைத்து எடுத்ததை தலையில் உணர்கிறோம். தட்டில் நூறு ரூபாய் போடுகிறோம். மூன்று நான்கு பட்டர்கள், கீழே வட்டமாக உட்கார்ந்து, பேசிக் கொண்டு ஏதோ செய்கிறார்கள். யாம், நம்பெருமாளை தலையில் வைத்து, ஆசிர்வதித்ததை நினைத்துக் கொண்டே வருகிறோம். நடந்து வரும் போது, வேறு பணம் இருக்கிறதா என சரி பார்க்கிறோம். வேட்டி மடிப்பில் நூறு ரூபாய் தாள் இருப்பதைப் பார்க்கிறோம்.

ஒரு வீட்டிற்குள் செல்கிறோம். சமையலறை பெரியதாக இருக்கிறது. உயரமான இடத்திலும் இருப்பதாகத் தெரிகிறது. முதுகைக் காட்டியவாறு, **ஹேமா** ஏதோ சமையல் செய்கிறார். யாம் அருகே செல்கிறோம். பின் ஏதோ நினைத்தவராக, தண்ணீர் குடித்து விட்டு வாசல் தாண்டி வருகிறோம். வீட்டின் கீழே, வாசல் அருகே வந்து, **ஆனந்தி** தலையை மட்டும் நீட்டி, எட்டிப் பார்க்கிறார். யாம் என்ன செய்கிறோம் எனப் பார்ப்பதற்காக, எட்டிப் பார்க்கிறாரோ என நினைத்துக் கொள்கிறோம். வாசலைத் தாண்டி பால்கனி கைப்பிடியோடு அழகாக இருக்கிறது. பால்கனி வெள்ளை நிறத்தில் இருக்கிறது. அருகே பல வீடுகள் தெரிகின்றன. கையில் புகைப்படக்கருவி வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எமது அப்பா

வந்து, புகைப்படக்கருவியை வாங்கி, இப்படிப் பார்க்கணும் எனச் சொல்லிக் கொடுக்கிறார்.

ஒரு தெரு தெரிகிறது. சற்று தள்ளி, தெருவிற்கான அலங்கார வளைவொன்று இருக்கிறது. தெருவின் மையத்தில், ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறோம். இரு பையன்கள் வந்து கல்யாண வீடு எங்கிருக்கிறது எனக் கேட்கிறார்கள். யாம், இங்கு அப்படி ஒன்றும் நடக்கவில்லையெனச் சொல்கிறோம். இயற்பியல் துறையைச் சேர்ந்த ஒருவர் வீட்டில், திருமணம் நடப்பதாகச் சொல்கிறோம். பையன்களில் ஒருவன் ஒரு பத்திரிக்கையைக் கொடுக்கிறான். அது கிழிந்திருக்கிறது. நடு பகுதியைக் காணோம். அதில் தேதிகள் பழையதாக இருக்கின்றன. தேதி தெளிவாகத் தெரிந்தது. (மூன்று, ஐந்து எனப் பார்த்தாக ஞாபகம்).

தமிழரசி அங்கே வந்து விட்டார். அந்தப் பையன், மற்றொரு அழைப்பிதழ் கொடுக்கிறான். அது புதியதாக இருக்கிறது. அதில் சமீபத்திய தேதிகள் உள்ளன. (ஆறு, எட்டு என்று ஞாபகம்). மூன்று வீடுகளில், ஒருவர்தான் பழக்கமென்றும், ஒருவருக்கு மட்டும் கொடுத்தால் தப்பாக நினைத்துக் கொள்வார்கள் என நினைத்து, மூன்று பேருக்கும் தமிழரசியின் அப்பா, அழைப்பிதழ் கொடுத்து விட்டிருப்பதாகவும் தமிழரசியிடம் சொல்கிறோம். சிறது நேரம் சென்ற பிறகும், இதையே மறுபடியும் அவரிடம் சொல்கிறோம்.

பக்கத்தில், ஆடுகள் ஒரு கம்பத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கின்றன. இருபது ஆடுகளாவது இருக்கும். இளம் ஆடுகள். வெள்ளாடு போல் உடல் இருக்கிறது. தலை, செம்மறி ஆடு போல் சற்று வித்தியாசமாகவும் தெரிகிறது. யாம் சற்றுக் குழம்பி, இவை என்ன ஆடுகள் என நினைக்கிறோம். கல்யாணத்திற்கு வெட்டுவதற்கு கொண்டு வந்திருக்கிறார்கள் எனவும் நினைக்கிறோம்.

தமிழரசி உட்கார்ந்து ஏதோ வேலை செய்கிறார். கல்யாண வீடு போலவே இல்லையென்கிறோம். அலங்காரம் ஒன்றும் செய்யவில்லை, காலையில் கல்யாணம், உன் தம்பி கூட இன்னும் வரவில்லையே என அவரிடம் சொல்கிறோம்.

28.11.2014

அருப்புக்கோட்டை விடுதி

53. ஓரிடத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருப்பது போல் தெரிகிறது. வெள்ளை உடையில் தாதிகள் இருப்பதால், மருத்துவமனையாக இருக்க வேண்டும் என நினைக்கிறோம். எமது அருகே இரண்டு செவிலியர்கள் நிற்கிறார்கள். அதில் ஒருவர், எம்மோடு நன்றாகப் பேசுகிறார். இருவரும் பேசிக் கொண்டே நடந்து செல்கிறோம். இதற்கு முன், பெண்களை காதல் செய்தது போல், இந்தப் பெண்ணையும் காதலித்து விடக் கூடாது என மனதினுள் நினைக்கிறோம். நம்மால் நட்பாக இருக்க முடியுமா எனவும், எண்ணம் வருகிறது. மேலும், இந்தப் பெண், சுமாராகவே இருக்கிறாள் எனவும் நினைக்கிறோம். பேசிக் கொண்டே பூக்கள் நிறைந்த ஒரு பகுதிக்கு வந்து விட்டோம். எங்கே தங்குவது என்பது பற்றி பேசியதாகத் நினைவில் உள்ளது.

விடுதியில் நண்பர்கள் இருப்பார்கள் என விடுதிக்குச் செல்கிறோம். பத்து வருடங்களாவது இருக்கும், இப்போது தான் மறுபடியும் விடுதிக்கு வருகிறோம் என நினைத்துக் கொள்கிறோம். மாடி அறையில் நண்பர்கள் பலரும் எம்மை வரவேற்கிறார்கள். கூட்டமாக உட்கார்ந்து, ஏதோ விளையாடுவது போல் இருக்கிறது. அருப்புக்கோட்டை விடுதியில் இருந்த பல நண்பர்களும் இருக்கிறார்கள். அதே வயதினர்களாக, அதே உருவத்தில் இருக்கிறார்கள்.

எம்மோடு பள்ளியில் படித்த, தெற்குத் தெரு கணேசன் அங்கு இருக்கிறார். எம்மோடு மிகவும் அன்பாகப் பேசுகிறார். சபாபதியும், எம்மோடு பேசுகிறார். வேல் முருகன், அதே அன்பான சிரிப்போடு எமது அருகில் வந்து பேசுகிறார். முத்துக்குமாரும், எம்மைப் பார்த்துச் சிரிக்கிறார். ஒரு சிலர் எம்மைக் கண்டு கொள்ளாமல் இருப்பது கண்டு, இங்கு வந்தது இவர்களுக்குப் பிடிக்கவில்லையோ என நினைக்கிறோம்.

துண்டை மட்டும் இடுப்பில் கட்டிக் கொண்டு, குளிப்பதற்குச் செல்கிறோம். தண்ணீர் மேலிருந்து ஷவர் போன்று கொட்டுகிறது. ஷவர் மையத்தில், சற்று பெரிய இரப்பர் குழாயில் கொட்டுவது போல் தண்ணீர் மடமடவெனவும் விழுகிறது. அதன் கீழே வாளி வைத்துப் பிடிக்கிறார்கள். சிலர் குளிக்கவும் செய்கிறார்கள். யாம், கழிவறை செல்ல நினைக்கிறோம். வரிசையாக இருப்பது தெரிகிறது. சில தாழிடப்பட்டிருக்கின்றன. ஒன்றைத் திறந்து கொண்டு நுழைகிறோம்.

ஒரு அறையில் படுக்க ஆயத்தமாகிறோம். பகலில் தூங்குவதாக நினைக்கிறோம். மதியம் எழுந்து, வேலைக்குச் செல்ல வேண்டுமே, சரியான நேரத்திற்கு எழுந்து விடுவோமா என நினைத்துக் கொள்கிறோம்.

நெருக்கமான பெண்

54. ஒரு ஊருக்கு போய்க் கொண்டிருக்கிறோம். சாலையில் இறங்கி நடக்கிறோம். அக்ஷயாவும், கருப்பசாமியும் இருப்பது தெரிகிறது. எமக்கு சாப்பிடுவதற்கு, இருவரும் ஏதோ அள்ளி அள்ளித் தருகிறார்கள்.

அந்த ஊருக்குள் சென்று விட்டோம். பலரும், நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். எமக்கு சில வருடங்களாக, மிகவும் நன்கு தெரிந்த ஒரு பெண் இருக்கிறாா். இருவரும் பேசுகிறோம். எம்மைப் பிடிக்குமா எனக் கேட்கிறோம். எப்போது எம்மைப் பாா்த்தாரோ, அப்போதிலிருந்தே எம்மைப் பிடிக்குமென்றும், யாம்தான் அவரைக் கண்டும் காணாமல் இருந்ததாகச் சொல்கிறாா். இருவரும் நெருக்கமாகி விடுகிறோம். பலரும், அப்போதும் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

சிலா், திரையில் காண்பது போல் அசையாது நின்று, எங்களையே பாா்ப்பது தெரிகிறது. முகங்கள் அருகாமையில் தெரிகின்றன. பாா்த்த முகங்களாக இல்லை. இருவரும் உடலின்பத்தில் ஈடுபடுவதை, இப்படி நின்று வேடிக்கை பாா்க்கிறாா்களே என யாம் நினைக்கிறோம். ஆடாமல் அசையாமல் முகத்தை காட்டிக் கொண்டிருப்பவா்களைப் பாா்த்து, யாா் இவா்கள் என மறுபடியும் நினைக்கிறோம்.

30.11.2014

கோவில்

55. எமக்கு ஒருநாள் விடுமுறை விட்டிருக்கிறாா்கள். அதைக் கொண்டாட பேருந்தில் பயணமாகிறோம். பேருந்தின் பின்புறமாக நின்று கொண்டு பயணிக்கிறோம். சாலையின் இரு பக்கமும், மிக அழகான கட்டிடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறாா்கள். கட்டிடங்களின் அமைப்பு மிகவும் வித்தியாசமாக உள்ளது. இரண்டு மூன்று மாடிகள் கொண்ட வீடுகள் கட்டுவதாகத் தெரிகிறது. நிறைய, அலங்காரத் தூண்களும், மாடியில் கிடைமட்டத் தூண்களும் அதிகமாக வைத்திக்கிறாா்கள். சாலையிலிருந்து பாா்க்கும் தொலைவு வரை மட்டுமே கட்டிட வேலை நடைபெறுகிறது. புதிதாக இந்தப் பகுதி வளா்ந்து வருவதாக

நினைக்கிறோம். இடையிடையே பல கட்டிடங்கள் முழுமை பெற்று, ஆட்கள் குடி வந்தது தெரிகிறது. வேடிக்கை பார்த்துக் கொண்டே செல்கிறோம்.

பேருந்தின் பின்புற கண்ணாடி வழியே பார்க்கும் போது, சாலை ஓரமாக மாதவன் நடந்து வருவது தெரிகிறது. மாதவன் எப்படி இங்கே (சேலம் என ஞாபகம்) என நினைக்கிறோம். பேருந்து சென்று, ஒரு திருப்பத்தில் வளைந்து, பின் சற்று பின்னோக்கி வந்து, நிற்கிறது. இதன் பின் பேருந்து செல்லாது எனவும், வேறு பேருந்தில் செல்ல வேண்டுமெனவும் சொல்கிறார்கள். ஒரே பேருந்தில் அங்கு செல்லலாம் எனச் சொன்னார்களே என நினைத்துக் கொண்டே இறங்குகிறோம்.

இடையில் ஒரு நிறுத்தம் தள்ளித்தான் அந்த கோவில் என நினைத்துக் கொண்டு, நடந்தே அருகிலிருந்த நிறுத்தத்திற்கு செல்கிறோம். நிறுத்தம், பேருந்து வளைந்து செல்வது போன்ற வடிவத்தில் இருக்கிறது. அது ஆட்டோ நிறுத்துமிடமாகவும் தெரிகிறது. பெரியதொரு மரம் உள்ளது. நிறுத்தத்தில் நிற்பவர்களிடம், கோவில் எங்கேயுள்ளது எனக் கேட்கிறோம். அக்கோவில் தாமரைக் கோவிலுக்கு (லோட்டஸ் டெம்பிள்க்கு) அருகே இருக்கிறதென அடையாளம் சொல்லிக் கேட்கிறோம்.

இரண்டு காவலர்கள் அங்கே வருகிறார்கள். ஒருவர் உயரமாகவும், சற்று தடிமனாகவும் இருக்கிறார். எம்மைப் பற்றி கேட்கிறார். யாம், கோவிலுக்கு செல்வதாகத் தெரிவிக்கிறோம். கோவில் மிக அருகிலேயே இருப்பதாகச் சொல்கிறார். சிறிது தூரம் சென்றால், பெரிய கடை வீதி வருமென்றும், அதன் அருகே கோவில் இருக்குமென்றும் எமக்குத் தெரிகிறது. யாம் ஏற்கனவே ஒரு முறை வந்ததாகவும் நினைக்கிறோம். யாம் நிற்குமிடத்திலிருந்து, பார்க்கும் தூரத்தில், ஒரு கடைவீதி தெரிகிறது. இருந்தாலும், அந்த கடைவீதி, கோவிலின் அருகே இருக்கும் கடைவீதியாக இல்லை என்பதை திட்டவட்டமாக உணர்கிறோம்.

சட்டைப் பையில், கழுத்துப் பட்டையால் சுற்றப்பட்டிருந்த அடையாள அட்டையை எடுத்து, நாடாவை நேர் செய்த பின், காவலரிடம் காண்பிக்கிறோம். காவலர், நீங்கள் துணை வேந்தராகக் (வி.சி.யாக) கூட இருங்கள். முதலில் வீட்டிற்கு கிளம்பிச் செல்லுங்கள் எனச் சொல்கிறார்.

மரத்திற்குக் கீழே, சிலர் குழி தோண்டுகிறார்கள். ஒருவர் மரக் குச்சிகளை ஊன்றுகிறார். ஒரு குச்சியை வைத்தும் கட்டுகிறார். அந்தப் பேருந்து நிறுத்தம்,

மதுரை மாட்டுத் தாவணிக்குச் செல்லும் போது, தமிழ் சங்கத்தை சுற்றிக் கொண்டு செல்லும் பேருந்து நிறுத்தம் போல் இருப்பதாக நினைக்கிறோம்.

01.12.2014

கால்வாய்

56. நிறையக் குழந்தைகள் குதூகலமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஊர் பள்ளிக் கூடத்தின் தெற்குப் பாதையில் முன்னர் குருசாமி குப்பை இருந்த இடமருகே விளையாடுகிறார்கள் எனத் தெரிகிறது. குதித்து விளையாடுகிறார்கள். குதிக்கும் போது, அந்தரத்தில் அனைவரும் மிதக்கிறார்கள். சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும், மகிழ்ச்சியாக விளையாடுகிறார்கள். இறக்கை இல்லாமல் எப்படி குழந்தைகள் பறக்கிறார்கள் என வியக்கிறோம்.

ஓரிடத்திற்குச் செல்கிறோம். மிகவும் ரம்மியமான இடமாகத் தெரிகிறது. நான்கு புறமிருந்தும் ஓரளவிற்குப் பெரிய கால்வாய்கள் மூலமாக, நீர் பாய்ந்து வருகிறது. கால்வாய்கள் படு நேர்த்தியாக, நேராக இருக்கின்றன. தண்ணீர், ஒளி பட்டு பிரகாசிப்பதைப் போல் வெள்ளையாக, தெளிவாக வருகிறது. நான்கு பக்கத்திலிருந்தும் ஒரே இடத்திற்கு தண்ணீர் வந்தால், அங்கிருந்து பின் எந்தப் பக்கம் செல்லும் என நினைக்கிறோம். கால்வாய்களைப் பார்க்கும் போது டெல்லி அணிவகுப்பு பாதை போன்று நேராக இருப்பதாக உணர்கிறோம்.

கூர்ந்து பார்க்கும் போது, மூன்று பக்க கால்வாய் தண்ணீர் சேர்ந்து, நுரை தழும்ப, நேர் திசையில் போய் கொண்டிருக்கிறது. தண்ணீர் பாய்ந்து வரும் திசையில், கால்வாய் நடுவில் யாமும், தமிழரசியும் நீந்திக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கிடையே நீச்சல் போட்டி நடக்கிறது. இருவரும் மிதந்தபடியே, பின்னோக்கிய நீச்சல் அடித்து வேகமாக வருகிறோம். தமிழரசியை யாம் முந்தி விட்டோம்.

கரையருகே குளிக்கிறோம். அதிகமானோர் மகிழ்ச்சியாகக் குளித்துக் கொண்டிருக்கிறார்கள். கரை ஓரத்தில், இரும்புக் கம்பியால், தடுப்பு போடப்பட்டுள்ளது. வட இந்திய இளவயது தம்பதியர் குளிக்கிறார்கள். பெண்ணின் பனியன் நனைந்து, கீழே இறங்கியிருக்கிறது. யாம், வாய் நிறைய நீரைக் குடித்து, பெண்ணின் மார்பு மீது ஊற்றி விட்டோம். பெண், பையனிடம் இதைப் பற்றி புகார்

செய்கிறார். யாம், என்ன இப்படிப் பண்ணி விட்டோம் என நினைக்கிறோம். பையன், எம்மைப் பார்த்துக்கொண்டே, பரவாயில்லை, விடு என பெண்ணிடம் சொல்லி, அருகே நீந்திச் செல்கிறார்.

ஆற்றுக்குப் போகும் வழியில், வலது பக்கமாக பல மாடிகள் கொண்ட, அழகிய கட்டிடம் இருக்கிறது. கட்டிடத்தில் மினிஸ்ட்ரி ஆப் என்விரான்மெண்ட் என ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறது. (மினிஸ்ட்ரி ஆப் என்விரான்ட்மெண்ட அன்ட் நேச்சர் என இருந்ததாகவும நினைவு). கட்டிடம் அரக்கு நிறத்திலும் வெண்மையிலும் வர்ணம் பூசப்பட்டு, அநேக கண்ணாடி ஜன்னல்களுடன் இருக்கிறது.

குளிக்கும் இடத்திற்கு மேற்கே, சற்று தள்ளி, உயரமான ஒரு இடத்தில், மிகப் பெரிய கப்பல் இருப்பது போல் உள்ளது. அது அணு மின் உற்பத்தி நிலையமாக இருக்கும் எனவும் நினைக்கிறோம். நிலையம் மட்டும் தனித்து, மிகப் பெரியதாக இருக்கிறது.

என்விரான்மெண்ட் கட்டிடம் அருகே யாம் வரும் போது, **உவகை மேடம்** மற்றும் **உவகை மேடத்தின் கணவர்** குளிப்பதற்காக மற்ற ஆட்களோடு, எதிர் திசையிலிருந்து நடந்து வருகிறார்கள். **மேடத்தோடு** யாம் பேசுகிறோம். மிக மிகத் தெரிந்தவர் போன்று, அந்தச் சந்திப்பு நடக்கிறது. அவர் தலையைக் கோதிவிட்டும், கன்னத்தில் தட்டிக் கொடுத்தும், சிரித்துக் கொண்டும் பேசுகிறோம். அவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பது தெரிகிறது. **கணவர்** சற்று தள்ளி நிற்கிறார்.

ஒரு வீட்டில் நின்று கொண்டிருக்கிறோம். **மேடத்தின் கணவர்** அந்த வீட்டில் தூங்வதற்கு இடமில்லாதது குறித்து, சற்று கோபமாகப் பேசுகிறார். எப்போது வந்தாலும், இங்கே தான் தூங்கச் சொல்கிறார்கள் என ஒரு இடத்தைக் காட்டுகிறார். இரண்டு வீடுகளுக்கு இடையில் இருக்கும் சிறு பகுதியாக அந்த இடம் இருக்கிறது. அழுக்காகவும், அதிகமான நூலாம்படை ஒட்டிக் கொண்டும் இருக்கிறது. யாம், அப்பா மற்றும் அக்கா அந்த வீட்டைச் சுத்தம் செய்கிறோம். பல அறைகள் கொண்ட பெரிய வீடாக அது இருக்கிறது.

வீட்டின் மறுபக்கமிருந்த வாசல் வழியாக, எதையோ எடுத்து வர யாம் செல்கிறோம். செல்லும் பாதை அருகே, கோவில் அல்லது அரண்மனை போன்ற கட்டிடம் இருக்கிறது. திரும்பி வரும் போது, சற்று மேடான இடத்தில், ஒரு வீடு

இருக்கிறது. வீட்டின் முன்பு, மலைராஜா நின்று கொண்டிருக்கிறார். முன்பக்கத்தில் இருக்கும் புல்வெளியில் உட்கார்ந்து, மாமா ஏதோ வேலை செய்கிறார்.

செல்லச்சாமி வீடு இருக்கிறது. வீட்டின் முற்றத்தில் நடக்கும் போது, ஒரு குழாயில் கால் பட்டு, அரிசி தரையில் கொட்டுகிறது. குழாய் நீளமானதாக போய்க் கொண்டிருக்கிறது. அவரும் யாமும் சேர்ந்து கையால் குழாயை அடைக்கிறோம். அரிசி கொட்டுவது நிற்கவில்லை. அரிசி நல்ல வெள்ளை நிறத்தில், சிறியதாக, சற்று குண்டாக இருக்கிறது. வாளியில் பிடிக்கலாம் என நினைத்து யாம், வாளி எடுத்துவரச் செல்கிறோம்.

வீட்டிலிருந்து, ஒரு பெரிய நீலநிற பிளாஸ்டிக் டிரம்மைத் தூக்கி வருகிறோம். வழியில், ஒரு பெரிய குழாயும், அதன் அருகே, மிகவும் சிறிய குழாய் ஒன்றும் இருக்கிறது. கீழே சற்று, பள்ளமாகத் தெரிகிறது. எப்படி இதைக் கடந்து போவது என யோசிக்கிறோம். குழாயில், இரண்டு கால்களையும் தொங்கப்போட்டு, மெதுவாகத் தவழ்ந்து, கடந்து விட்டோம். அங்கே செல்லச்சாமியிடம் நான்கு வாளிகள் இருப்பது தெரிகிறது.

எமது குழந்தைகளோடு உட்கார்ந்து, சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். அப்பா, முதலில் போட்ட சாதத்தை சாப்பிட்டு விட்டு, புளிக்குழம்பு ஊற்றி, மறு சோறு சாப்பிடுகிறார். யாம், வண்டிப்பாதையில் நின்று கொண்டிருக்கிறோம். பஞ்சா அக்கா, உடம்பில் மண்ணெண்ணைய் ஊற்றிக் கொண்டு நிற்கிறார். இளவயதாக இருக்கிறார். வண்டிப்பாதையிலிருந்து பார்க்கும்பொது, அவரது உருவம் அப்படியே தெரிகிறது. அவரைப் பார்த்து மிகவும் பதறுகிறோம். பஞ்சாக்கா தீக்குளிக்கப் போறாங்க, அவரைக் காப்பாற்றுங்க எனக் கத்துகிறோம்.

04.12.2014

தேர்வாளர்

57. ஒரு கல்லூரிக்கு, செய்முறை புறமதிப்பீட்டுத் தேர்வாளராகச் சென்றிருக்கிறோம். மாணவர்கள் வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். வகுப்பறைக்கு சற்று மேலே சிறிய மேடை இருக்கிறது. அங்கே அக மதிப்பீட்டுத் தேர்வாளர் உட்கார்ந்திருக்கிறார். யாம், வகுப்பைக் கடந்து போய் அங்கே அமர்கிறோம். மாணவர்களுக்கு தேர்வு ஆரம்பித்தாயிற்று. யாம் அவர்களைப் பார்க்கிறோம்.

அனைவரும், பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஒரு பையனும் பெண்ணும் ஒருவருக்கொருவர் கைகளை அடித்துக் கொண்டும், கைகளை மாற்றி வைத்து பிணைத்து கொண்டும், இழுத்துக் கொண்டும் இருக்கிறார்கள். மாணவர்கள் இரண்டு மூன்று பேரே உள்ளனர். மாணவிகள் அதிகமாக இருக்கிறார்கள். சில மாணவிகள், குழுவாக உட்கார்ந்து பேசுகிறார்கள். தேர்வாளர் இருப்பதையே அவர்கள் கண்டு கொள்ளாதது போல் இருக்கிறது.

மாணவர்களுக்கு, பூச்சிக் கொல்லி அளவினைக் கண்டறியும் பரிசோதனை கொடுத்துள்ளோம். மாதிரி நீரில், பூச்சிக் கொல்லி மருந்தை எவ்வளவு கலந்துள்ளீர்கள் என அகமதிப்பீட்டாளரிடம் கேட்கிறோம். அவர் பதில் சொல்லாமல் இருக்கிறார். எந்த ரேன்ஜ்சுக்கு கொடுத்துள்ளீர்கள் என்பதையாவது சொல்லுங்கள் என்கிறோம். அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

எங்களுக்குள் வாக்குவாதம் வந்துவிட்டது. எமக்கு அருகிலேயே இரண்டு பேர், கூம்புக் குடுவையை கையில் வைத்துக் கொண்டு நிற்கிறார்கள். அவர்களை சுட்டிக் காட்டி, இவர்களிடம் சொல்லி, சரியான அளவைக் கண்டுபிடித்து விடட்டுமா எனக் கேட்கிறோம். மாணவர்கள் எண்ணிக்கை குறித்து கடுமையான விவாதம் வருகிறது. முப்பத்து ஆறு மாணவர்களை ஒரே அலகாக எப்படி நீங்கள் செய்முறைக்கு அனுமதிக்கலாம் எனக் கேட்கிறோம். பல்கலைக் கழக மான்யக் குழுவின்படி, இது தவறு எனவும் சுட்டிக் காட்டுகிறோம். **முத்தனன் சார்** வந்து எங்கள் இருவருக்குமிடையில் உட்காருகிறார். இருவரும் அமைதியாக பேசித் தீருங்கள் எனச் சொல்கிறார். யாம் வேலை பார்க்கும் கல்லூரி, இதை விட எவ்வளவோ மேம்பட்டது என மனதிற்குள் நினைக்கிறோம்.

அகத்தேர்வு மதிப்பீட்டாளர் எழுந்து சென்று வாசல் அருகே நிற்கிறார். கழுத்தை சுற்றி கைப்பக்கமாக இறகுப்பந்து மட்டையை உறையோடு மாட்டியிருக்கிறார். சற்று உயரமானவராக இருக்கிறார். வெள்ளை சட்டையை, கால்சட்டைக்குள் நுழைத்திருக்கிறார். இதென்ன, இறகுப்பந்தை மட்டையை தோளில் மாட்டிக்கொண்டு வகுப்பறையில் இருக்கிறார் என நினைக்கிறோம். அங்கிருந்து எழுந்து யாம் வெளியே வருகிறோம்.

சற்றே பழைய கட்டிடமாகத் தெரிகிறது. தங்குவதற்கு சிறிய அறையொன்றும் கட்டப்பட்டுள்ளது. சாலைக்கு இறங்கிச் செல்ல படிக்கட்டு உள்ளது.

யாம், சாலையில் இருக்கிறோம். பலரும், வேகமாகப் போய்க் கொண்டும், வந்து கொண்டும் நடந்து செல்கிறார்கள். சீருடை மாணவர்கள் நடப்பதும் தெரிகிறது. அச்சுதன் சாலையின் எதிர் திசையிலிருந்து, சிறிய இரப்பர் பந்தை உதைத்து விளையாடிக் கொண்டே ஓடி வருகிறான். இந்த பக்கமாக வரும் தமிழரசி, மகிழச்சியுடன் சற்று எம்பிக் குதித்து பந்தை உதைக்கிறார். அவர் உதைப்பது மிகவும் நளினமாக இருக்கிறது.

ஊரின் கிழக்குக் கண்மாய்க்குள், மடை ஓரமாக, பல சிறுவர்களோடு விளையாடுகிறோம். (அடுத்து நடந்தவை நினைவில் இல்லை). இறப்புக்கு அடிக்கும் கொட்டுச் சத்தம் கேட்கிறது. விரைந்து வீட்டிற்கு வருகிறோம். ஒரு வீட்டைத் திறந்து அம்மா, அக்கா மற்றும் யாம் உள்ளே நுழைகிறோம். நிலைப்படி கொஞ்சம் சிறியதாக இருக்கிறது. வீடு இருட்டாக உள்ளது. சுவிட்சை போட்டு பின்புற விளக்கை எரிய வைக்கிறோம். மிகவும் அமைதியான சூழல் நிலவுகிறது.

யாரோ வெளியிலிருந்து கதவைத் தட்டுகிறார்கள். கதவைத் திறக்காமல் யார் எனக் கேட்கிறோம். விக்கிரபாண்டி மச்சான் பேசுகிறார். பேச்சு சத்தம் அவரது குரலில் கேட்கிறது. கதவை மெதுவாகத் திறந்து அவரைப் பார்க்கிறோம். ஜெயபால் நின்று கொண்டிருக்கிறார். எமக்கு சட்டென பயம் வந்து விட்டது.

(நிஜத்தில் அந்தப் பயத்தை உணர்கிறோம். இதயத் துடிப்பு அதிகரிக்கிறது. மூளையில் திடீரென அழுத்தத்தை உணர்கிறோம். வயிற்றிலிருந்து ஒரு அதிர்வு எழுந்து உடலெங்கும் பரவுகிறது. உடல் விறைப்படையத் தொடங்குகிறது. ஏன் எமக்கு இந்த அளவிற்கான பயம் வருகிறது என நினைக்கிறோம். சற்று நேரம் கழித்தே உடல் இயல்பு நிலைக்குத் திரும்புகிறது)

05.12.2014

58. ஒரு அறையில் படுத்திருக்கிறோம். ஒரு ஆண் அங்கு வருகிறார். அவரை பார்த்த ஞாபகம் இல்லை. எமது ஆணுறுப்பை எடுத்து வாய் வழி உறவு கொள்கிறார். கதவை திறந்து அப்பா பார்க்கிறார். உடனே அந்த ஆள் சென்று விட்டார்.

ஊரில் மச்சு வீட்டில் இருக்கிறோம். நன்கு தெரிந்த பெண்ணோடு உறவு கொள்கிறோம். வழக்கமான பெண்ணாக இல்லாமல், மிகவும் வித்தியாசமானவராக இருக்கிறார். உடல் மிகவும் இறுகிப் போய் காணப்படுகிறது. யாம் பின்னாலிருந்து அணைத்தபடி உடல் முழுவதும் முத்தமிடுகிறோம். முகம் மாறுபட்டுத் தெரிகிறது.

மார்புக் காம்புகளில் பால் சுரந்து வடிகிறது. பாலைக் குடிக்கும் போது கட்டி, கட்டியாக இருக்கிறது. இன்னொரு பெண்ணும் அந்த அறைக்கு வருகிறார். (பின்னர் நடந்தவற்றை தவிர்க்கிறோம்)

கால் தடம்

59. பைஜாமா, குர்தா அணிந்த முஸ்லிம்கள், கையில் அருவாளுடன் இன்னொரு முஸ்லிமை விரட்டிக் கொண்டு ஓடி வருகிறார்கள். தலையில் வெள்ளைக் குல்லா போட்டிருக்கிறார்கள். காவலர்களும் விரட்டிக் கொண்டு ஓடி வருகிறார்கள். ஆனால் அவர் தப்பி ஓடி விட்டார்.

மறுபடியும் அவரைக் கூட்டமாக வளைத்து விட்டார்கள். ஒருவர், வளைந்த அருவாளால் அவரது இடது புஜத்தில், தூசியைத் தட்டி விடுவது போல் செய்கிறார். பின் முதுகுப் பக்கமும் அவ்வாறே செய்கிறார். எல்லோரும் அவரைப் பயம் காட்டும் விதமாக முக சைகை செய்கிறார்கள். அவரது கையைப் பிடித்து அருவாளால் சீவுகிறார்கள். காவல் ஆய்வாளர், மற்ற காவலர்களோடு அங்கு வந்து வானத்தை நோக்கிச் சுடுகிறார். அனைவரும் விலகி விட்டார்கள்.

பெண் குரலில், இனிமையானதொரு இஸ்லாமியப் பாடல் ஒலிக்கிறது. பாடல் மிகவும் ரசிக்கும் படியாக இருக்கிறது. அனைவரும் உற்சாகமாக ஆடுகிறார்கள். சிலர், இசைக்கேற்றவாறு மிகவும் நளினமாக ஆடுகிறார்கள். இரண்டு சிறுவர்கள் கடைசியாக நின்று ஆடுகிறார்கள். இருவரும் ஆடுவது இன்னும் சிறப்பாக இருக்கிறது.

சட்டென, அனைவரின் இடது கையிலும், இரத்தம் வழிய வழிய, ஒரு செம்மறியாடு இருக்கிறது. தலை இருக்கிறதா அல்லது தலை இல்லாமல் அந்த இடத்தில் இரத்தம் பீறிடுகிறதா என தெளிவாகத் தெரியவில்லை. செம்மறி ஆடு வெள்ளை நிறமாக, நடுத்தரமாக உள்ளது. ஆடும் சேர்ந்து ஆடுகிறது. இந்த ஆட்டம் சாலை நடுவே நடக்கிறது.

சாலையின் ஓரமாக, தேநீர் கடை இருக்கிறது. அங்கே காவல் ஆய்வாளர், இரு காவர்களிடம் எப்படி இது நடந்தது என வெகு சிரத்தையாகக் கேட்கிறார். ஒருவரின் கால் தடமும் இல்லையே எப்படி என வினவுகிறார். கீழே பார்க்கிறார்கள். சில கால் தடங்கள், மிகவும் தெளிவற்றுத் தெரிகின்றன. அங்கு நின்று கொண்டிருந்த ஒரு பெண் நடக்கிறார். அவர் நடந்து போன கால் தடம் அப்படியே

அச்சாகத் தெரிகிறது. இது மட்டும் எப்படித் தெரிகிறது பார்த்தீர்களா என ஆய்வாளர் சொல்கிறார். அவர்கள் மட்டும் தடமில்லாமல் எங்கு சென்றிருப்பார்கள் எனவும் மற்ற காவலர்களிடம் கேட்கிறார்.

08.12.2014

கிருஷ்ணா

60. ஊரில் இருக்கிறோம். வெளியே செல்ல விரும்புகிறோம். மாமா ஒரு அழகிய இருசக்கர வாகனம் வைத்திருக்கிறார். அவரிடம் அதைக் கேட்கிறோம். யோசித்து சொல்வதாகக் கூறுகிறார். நெடு நேரம் கழித்து அலைபேசியில் அழைத்து, இப்போதைக்கு இருசக்கர வாகனம் தர இயலாது என்கிறார்.

எங்கோ வெகு தொலைவாகச் சென்று கொண்டிருக்கிறோம். காடுகள், மலைகள் அதிகமாகத் தெரிகின்றன. இமயமலை சுற்றுலா செல்வதாகப் பேசுகிறார்கள். மிகப் பெரியதொரு மலை உச்சியில் இருசக்கர வாகனத்தில் செல்கிறோம். எதிரே, எம்முடன் படித்த பூமிநாதனும், மற்றொருவரும் வருகிறார்கள். இப்போதுதான் இமயமலை சுற்றுலா முடித்து வருவதாகவும், எம்மை அங்கு அழைத்துச் சென்று, சுற்றிக் காட்ட விரும்புவதாகவும் சொல்கிறார்.

மூவரும் உச்சியிலிருந்து, படிக்கட்டுகளில் கீழே இறங்கி வருகிறோம். படிக்கட்டுகள் ஆங்காங்கே வளைந்தும், குறுகியும் கீழே செல்கின்றன. பூமிநாதன் அவருடைய குளிர் அங்கியை கழட்டி எமக்குத் தருகிறார். யாம், இவர் போட்டிருந்ததை எப்படி நாம் போடுவது என நினைத்து, இடது கைமேல் போட்டுக் கொண்டு நடக்கிறோம்.

கீழே, கிருஷ்ணாவுக்கு நாற்பது கோவில்கள் இருப்பதாகச் சொல்கிறார். முதலாவது கிருஷ்ணாவைப் பார்த்து விட்டு, அடுத்த கோவிலுக்குச் செல்கிறோம். கூட்டம் அதிகமிருந்ததால், கிருஷ்ணரை சரியாகப் பார்க்க முடியவில்லை. ஒரு வளைவான திருப்பத்தில், இரண்டாவது கிருஷ்ணர் சிலை இருக்கிறது. சேறு கிருஷ்ணா எனச் சொல்கிறார்கள். சிலையில் சேறு பூசியிருக்கிறது. உட்கார்ந்த நிலையில், ஒரு காலை சற்று முன்னே நீட்டியவாறு சிலை இருக்கிறது. பாதத்திலும் சேறு பூசியிருக்கிறது. யாம் பாதத்தை தொட்டுக் கும்பிட்டு விட்டு, சூடம் ஏற்றுகிறோம்.

மூன்றாவது கிருஷ்ணாவைப் பார்க்க, கொஞ்ச தூரம் நடந்து செல்கிறோம். நீண்ட வரிசை இருக்கிறது. இருபுறமும் கயிறு கட்டியிருக்கிறார்கள். மூவரும் வரிசையில் நிற்கிறோம். வரிசையில் நிற்பவர்கள் பெரும்பாலும் வட இந்தியர்கள் போல் இருக்கிறார்கள். பத்து வயதிற்கும் குறைவான இரண்டு சிறுமிகள், பிச்சை கேட்கிறார்கள். யாம், பிச்சை போட மறுத்து விட்டோம். வரிசையில் நின்று கொண்டிருந்த மற்ற சில பிச்சைக்காரர்களையும், மற்றவர்கள் விரட்டி விடுகிறார்கள். கூட்டம் அதிகமிருப்பதால் இரண்டு வரிசையாகப் பிரித்து அனுப்புகிறார்கள். எமக்கு அருகே இன்னொரு வரிசை வருகிறது. அதில் பெண்கள் நிறையப் பேர் நிற்கிறார்கள்.

09.12.2014

நேரு

61. காட்டின் வழியாக நடந்து செல்கிறோம். மரங்களின் அடர்த்தி குறைவாக உள்ளது. ஒரு மரத்தின் கிளையில், சற்று பெரிய வண்ணத்துப் பூச்சி ஒட்டியிருக்கிறது. வெளிர் நீலம், சாம்பல் வண்ணத்தில், அதன் சிறகுகள் இருக்கின்றன. உற்று பார்க்கும் போது, அதன் வயிற்றுப் பகுதிக்கும் கிளைக்கும் இடையே, ஸ்பான்ஞ்சு போன்று ஏதோ இருக்கிறது. அது தன்னைச் சுற்றி, கூட்டினை உருவாக்கப் போகிறதோ என நினைக்கிறோம். பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அந்த வண்ணத்துப் பூச்சி ஒரு வௌவாலாக மாறுகிறது.

மரத்தில் ஏராளமான வௌவால்கள் இருப்பது தெரிகிறது. வௌவால்கள் சிறியதாகவே உள்ளன. ஒரு பெண் வௌவாலோடு, ஒரு ஆண் வௌவால் இணை சேருகிறது. இணை சேருவது மிகவும் நெருக்கமாகத் தெரிகிறது. கலவி உறுப்புகள் அண்மைக் காட்சியாக அப்படியே தெரிகின்றன. அண்ணாந்து பார்க்கும் போது, எமது தலைக்கு மேலே இப்படி இரண்டும் இணை சேர்ந்திருப்பது தெரிகிறது. வௌவாலின் விந்து, எமது தலையில் விழப்போவது போல் கொட்டுகிறது.

ஒரு வீடு தெரிகிறது. அங்கு யாம் குடியிருக்கிறோம். கடையில் ஏதோ வாங்கிக் கொண்டு மாடிப்படி ஏறிச் செல்கிறோம். படிகள் வளைந்து வளைந்து செல்கின்றன. படிகள் ஏதோ வித்தியாசமாக இருப்பதாக உணர்கிறோம்.

ஊரில், அழகன் தாத்தா வீடு அருகே, ஒரு பொதுக் கூட்டம் நடக்கிறது. நேரு பேசுவதாகச் சொல்கிறார்கள். யாம், அங்கே நின்று பேசுவதைக் கேட்டுக்

கொண்டிருக்கிறோம். (என்ன பேசினார் என்பது மறந்து விட்டது). கூட்டம் முடிந்து நேரு தனியாக நடந்து வருகிறார். அவரைப் பார்ப்பதற்கு நேரு போல் தெரியவில்லை.

எமக்கு முடியவில்லை என ஒரு மருத்துவரிடம் சென்றிருக்கிறோம். அக்காவும் உடன் வந்திருக்கிறார். மருத்துவர் கோழிக்கறி வெட்டிக் கொடுத்து, வியாபாரம் செய்கிறார். இதென்ன, மருத்துவர் கறி வெட்டிக் கொண்டிருக்கிறார் என யாம் நினைக்கிறோம். சில பெண்களுக்கு ஊசி போடுகிறார். சிலருக்கு காதுக்குப் பின்னே ஊசி போடுகிறார். காதுக்குப் பின்னே எப்படி ஊசி போடுவார்கள் என வியந்தபடி பார்க்கிறோம்.

சித்தப்பா பெண், பாண்டியம்மாள் அக்கா வந்திருக்கிறார். அவர் கொண்டை போட்டிருப்பது மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. அவரைப் பார்த்து, நாம் ஒன்றுமே பேசவில்லையே என நினைக்கிறோம். அவர் கறி வாங்கிக் கொண்டு, சாலை வழியே நடந்து செல்கிறார். இந்தச் சாலையின் அடுத்து உள்ள இடங்கள், விரைவிலேயே வளர்ச்சி பெறும் எனவும், ஒரு வீட்டு இடம் வாங்கி போடலாமே எனவும் யோசிக்கிறோம்.

10.12.14

ஜெய் ஸ்ரீராம்

62. கரிசல் காட்டில் இருக்கிறோம. அக்கா இருக்கிறார். அவரது வயலில் வேலை செய்கிறார். மிளகாய்ச் செடிகள் வளர்ந்திருக்கின்றன. தூரத்தில் கருப்பு நிறமாக ஏதோ தெரிகிறது. அங்கே தெரிவது பேயா எனக் கேட்கிறோம். அது எங்கள் கரிசல் காடு என்றும் அங்கே நிறையப் பேய்கள் திரியும் எனவும் சொல்கிறார். எங்கள் வயல் தரிசு நிலமாக இருக்கிறது. அருகே இருக்கும் வயல்கள், பச்சைப் பசேலெனத் தெரிகின்றன.

எங்கள் வயல் அருகே இருக்கும், மற்றொரு வயலில், இரண்டு கல் தூண்கள் நட்டியிருக்கிறார்கள். ஒரு பீடமும் இருக்கிறது. மணிகள் மாட்டப்பட்டிருக்கின்றன. அந்த இடத்தைப் பற்றி அக்காவிடம் கேட்கிறோம். அங்கு, இருதயமுத்து சித்தப்பா, ஒரு பேயைப் பிடித்து, பூமிக்குள் அடித்து வைத்திருக்கிறார் எனச் சொல்கிறார். அந்த இடத்தையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் நிற்கும் வயலில், மிளகாய்ச் செடிக்கு யூரியா வைத்திருக்கிறார்கள். யூரியா முழுவதும் கரையாமல், செடியைச் சுற்றி வெள்ளையாகத் தெரிகிறது. வயலில் சற்று தள்ளி கருப்பு புகை போன்று தெரிகிறது. புகை அடர்த்தியாகி, ஒரு மனித உருவம் போல் உண்டாகிறது. இதுங்க, இங்கொன்னும் அங்கொன்னுமா சுத்தித் சுத்தித் திரியுங்க என அக்கா சொல்கிறார்.

வயலிலிருந்து வீட்டிற்குக் கிளம்புகிறோம். அச்சுதனும், அக்ஷயாவும் எங்களோடு நடந்து வருகிறார்கள். யாம், திரும்பிப் பார்க்கும் போது, அடர் கருப்பான புகை, மிக அருகே தெரிகிறது. புகை ஒன்றாகச் சேர்ந்து, ஒரு பெண் உருவம் வருகிறது. பேய் சிரிப்பது போல் செய்கிறது. எமக்குப் பயம் வருவது தெரிகிறது. குழந்தைகள் திரும்பிப் பார்த்து பயப்படப் போகிறார்களோ எனப் பதற்றமடைகிறோம். இருவரையும் கையைப் பிடித்துக் கொண்டு வேகமாகக் கூட்டி வருகிறோம். மிகவும் இருட்டாகத் தெரிகிறது. அதற்குள் இருட்டி விட்டதே என நினைத்துக் கொள்கிறோம். கையில் தீப்பந்தம் ஒன்றை எடுத்துக் கொண்டு, ஜெய் ஸ்ரீராம் எனச் சொல்லிக் கொண்டே, குழந்தைகளைக் கூட்டி வருகிறோம்.

11.12.14

பிரசாந்த்

63. ஊரில் பேருந்துக்காக காத்திருக்கிறோம். ஒரு பேருந்து வருகிறது. மிகவும் கூட்டமாக இருக்கிறது. நெரிசலோடு பேருந்திற்குள் ஏறுகிறோம். படிக்கட்டு அருகே, உயரமான ஒரு பெண் நிற்கிறார். எம்மைப் பார்த்து சிரிக்கிறார். யாம், அந்தப் பெண் அருகே, மிகவும் நெருக்கமாக நின்று கொள்கிறோம். பெண் உயரமாக, அழகாக இருக்கிறார். பேருந்து போய்க் கொண்டேயிருக்கிறது. அடுத்த நிறுத்தத்தில் பல பேர் இறங்குகிறார்கள். அந்தப் பெண்ணும் இறங்குகிறார். ஆந்திரா பெண்ணாக இருப்பாரோ என நினைத்துக் கொள்கிறோம்.

பேருந்து தொடர்ந்து செல்கிறது. வழியில், ஒரு பேருந்து சாலை ஓரமாக, தலை குப்புறக் கவிழ்ந்து கிடக்கிறது. ஒரு வயதான தாத்தா, மாட்டு வண்டியில் மணல் ஏற்றிச் செல்கிறார். மணல் அள்ளியதால், வண்டிப் பாதையில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கிக் கிடக்கிறது. தண்ணீர் கொஞ்சமாக வழிந்தும் செல்கிறது.

வழியில் ஒரு விபத்து நடந்து விட்டதாகத் தெரிகிறது. லாரியை மடக்கச் சொல்கிறார்கள். லாரியின் அடையாள எண் தகட்டில் உள்ள எழுத்துக்களைப்

பார்க்கிறோம். ஆங்கில எழுத்து எ.ப்பி என்று இருக்கிறது. (மற்ற எண்கள் மறந்து விட்டன). எழுத்தை வைத்து, ஆந்திரா வண்டி எனத் தெரிந்து கொள்கிறோம்.

தொலைக்காட்சி விவாதம் நடக்கிறது. நடிகர்கள் பிரசாந்த், கனகராஜ் மற்றும் இன்னொருவர் பேசுகிறார்கள். பிரசாந்த் பேசும் போது அவரது, முகத்தையே திரையில் காட்டுகிறார்கள். கண்களை இமைக்காமல் மிகவும் நேர்த்தியாகப் பேசுகிறார். (என்ன பேசினார் என்பது மறந்து விட்டது).

யாம், ஒரு காட்டில் நடந்து கொண்டிருக்கிறோம். நிகழ்ச்சியின் இடைவேளையின் போது எம்மைப் பார்க்க, பிரசாந்த் வருகிறார். இருவரும் பேசிக் கொண்டே நடக்கிறோம். எம்மிடம், ஒரு அணு முதல், முழு பிரபஞ்சமும் அப்படியே வேறொன்றாக மாறுவதைப் பற்றிய, ஒரு கதை இருக்கிறது என்றும், அதைப் படமாக எடுக்கலாமென்றும் சொல்கிறோம்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி தொடர்ந்து நடக்கிறது. வரவேற்பறையில் இருந்த ஒரு பெண், எம்மை நன்கு தெரியும் எனச் சொல்கிறார். எம்மை, தமிழ்ச்செல்வன் என்று பதிவு செய்திருக்கிறார். எமது அலைபேசி எண்ணையும் காட்டுகிறார். அதில் சில எண்கள் தவறாக உள்ளன. தமிழ்ச்செல்வன் என்று தானே பதிந்திருக்கிறார், பரவாயில்லை என நினைத்துக் கொள்கிறோம்.

நிகழ்ச்சி முடிந்து பிரசாந்த் கிளம்புகிறார். ஓட்டுனர், ஒரு மரம் அருகே, வெள்ளை சீருடையில் நிற்கிறார். காரை எடுத்துக் கொண்டு வருகிறார். பிரசாந்த் ஏறியவுடன் கார் வேகமாகச் செல்கிறது. மேடு பள்ள மண் பாதையில், கார் குலுங்கிச் செல்வதை, பார்த்துக் கொண்டு நிற்கிறோம். விலையுயர்ந்த கார் என நினைத்துக் கொள்கிறோம். யாம், நிற்கும் இடம் அருகே, சிறிய கடைகள் இருக்கின்றன. குழந்தைகள் சாப்பிடும் பானிபூரி கிடைக்குமா எனக் கேட்க வேண்டுமென நினைக்கிறோம். அச்சுதனும், அக்ஷயாவும் சற்று தொலையில் இருந்து, எம்மை பார்த்து ஓடி வருகிறார்கள்.

16.12.2014 (மார்கழி ஒன்று)

வாய்ப்பாடு எந்திரம்

64. மிக உயர்ந்ததொரு கட்டிடம் தெரிகிறது. மிக மிகப் பாதுகாப்பான முறையில் ஒரு புத்தகத்தை அங்கே வைத்திருக்கிறார்கள். கண்ணாடி அறைகள், பாதுகாப்பு பெட்டகங்கள் என அந்த அறை உள்ளது. அவ்விடம் அமெரிக்கா என

நினைக்கிறோம். அனைத்து பாதுகாப்புகளையும் மீறி, இரண்டு குரங்குகள் கட்டிடத்தின் மேல் ஏறி விடுகின்றன. புத்தகம் இருக்கும் அறைக்குள் நுழைந்து புத்தகத்தை பிரித்துப் படிக்கின்றன. அங்கிருக்கும் வேறு பல புத்தகங்களையும் படிக்கின்றன. அனைத்தையும் எடுத்துக் கொண்டு, அங்கிருந்து தப்பி விடுகின்றன. இதைப் பற்றி அனைவரும் பரபரப்பாகப் பேசுகிறார்கள்.

ஊர் பள்ளிக் கூடத்தின் முதல் நாள் ஆரம்பிக்கிறது. மாணவர்கள் உள்ளே வருகிறார்கள். கிழக்கு வாசல் வழியாக வந்து, எட்டாம் வகுப்பு அருகே நிற்கிறார்கள். சில மாணவர்கள் சற்று உயரமாக இருக்கிறார்கள். வகுப்பு, தடுப்பு இல்லாமல் பெரிய அறையாக உள்ளது. எட்டாம் வகுப்பு இருந்த இடம் அருகே, சிறிய மேடை காணப்படுகிறது. நான்கைந்து ஆசிரியர்கள் அங்கே அமர்ந்திருக்கிறோம். மாணவர்கள் இன்னும் வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒருவர் பூஜை செய்த பிரசாதம் கொண்டு வருகிறார். கையில் சிவப்பு, வெள்ளை நிற மலர்கள் கொண்ட ரோஜாக் கொத்து வைத்திருக்கிறார். ஒவ்வொரு ஆசிரியராக பிரசாதம் கொடுத்து வருகிறார். எமக்கு தீர்த்தம் போன்ற ஒன்றை கையில் ஊற்றுகிறார். குடிப்பதற்குள்ளாக நெய் போன்ற ஒன்றையும் ஊற்றி விட்டார். என்ன இவர், எதையோ ஊற்றி விட்டாரே என எண்ணுகிறோம். குடிக்காமல் அப்படியே வைத்திருக்கிறோம். வெள்ளை ரோஜாப் பூவை, கொத்திலிருந்து பிடுங்கித் தருகிறார். கிழக்கு வாசலின் முதலாவது அறையில் தமிழரசி இருக்கிறார். அவரிடம் சென்று வெள்ளை ரோஜாவை கொடுக்கிறோம். அருகே மாட்டப்பட்டிருக்கும் சற்று பெரிய கண்ணாடியில் முகம் பார்க்கிறோம்.

**சங்கரன் சார்** நீல நிற ஜுன்ஸ் பேண்ட் போட்டு, காலை மடக்கி, வகுப்பு மேடையிலேயே படுத்துத் தூங்குகிறார். வெகு தூரத்திலிருந்து வருவதால், அசதியில் தூங்குகிறார் என நினைத்துக் கொள்கிறோம். அறையைப் பார்க்கும் போது, மாணவர்கள் அனைவரும் தரையில் படுத்து உறங்குகிறார்கள். இதென்ன முதல் நாளே இப்படித் தூங்குகிறார்கள் என வருத்தப்படுகிறோம். சுகுமார் சாரிடம் இதை பற்றிக் கேட்கிறோம். எப்பவுமே, முதல் நாள் பள்ளிக் கூடம் வரும் போது, இப்படித் தான் வழக்கமாகத் தூங்க வைப்போம் எனச் சொல்கிறார். பதிலில் திருப்தி அடையாமல், முதல் நாளே யாராவது தூங்குவார்களா என நினைக்கிறோம். யாம் வேண்டுமானால் மாணவர்களை எழுப்பி சொல்லிக் கொடுப்போமா என எண்ணுகிறோம்.

அறையில் வெளிச்சமே இல்லை. ஜன்னல் கதவுகள் கூட மூடி இருக்கிறது. **சங்கரன் சார்** தலைமையாசிரியர் அறை அருகே போர்வையில் உடலைப் போர்த்திக் கொண்டு கால் நீட்டித் தூங்குகிறார். முகத்தை மூடாமல் இருக்கிறார். அலைபேசியில் கண்ணன் பாடல்களை, சத்தம் கொஞ்சம் அதிகமாகக் கேட்கும்படி வைத்திருக்கிறார் (என்ன பாடல்கள் பாடியது என்பது மறந்து விட்டது). அந்த பாடல்களை யாம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அருகே பெஞ்சில் தூங்கிக் கொண்டிருந்த அக்ஷயா, எம்மைப் பார்த்து சிரித்துக் கொண்டே, தலையை எட்டிப் பார்க்கிறார். அக்ஷயாவுக்கு மேலும், கீழும் தூங்குவதற்கான பெஞ்சு உள்ளது. இவர் நடுவில் படுத்திருக்கிறார்.

அறையை விட்டு தெற்கேயிருக்கும் வராந்தாவிற்குச் சென்று, புத்தகத்தை எழுதி முடிப்போமா என நினைக்கிறோம். சீக்கிரம் எழுதி முடிக்க வேண்டும் என விரும்புகிறோம். பள்ளிக்கூடம் வழியாக **ஹேமா** விறகுக் கட்டு சுமந்து வருவது தெரிகிறது. அறைக்குள்ளிலிருந்தே அவர் வருவதைப் பார்க்கிறோம். பெரிய கட்டாக சுமந்து வருகிறார். கிராமத்து பெண்ணாக, எவ்வளவு அழகாக இருக்கிறார் என அவரைப் பற்றி நினைக்கிறோம். அகமுடையர் தெருவில் ஒரு பெண் இறந்து விட்டதாகவும் தெரிகிறது.

பள்ளிக் கூட சுவர் அருகே, வடக்குப் பக்கமாக வயல்வெளி இருக்கிறது. மேடான பகுதியாகவும் உள்ளது. உழுது போட்டிக்கிறார்கள். அந்தப் பக்கமிருந்து, ஆசாரி தெரு பாண்டியும், கண்ணனும், மேட்டு நிலத்திலிருந்து குதித்து, பள்ளிக் கூட அறைக்குள்ளே வருகிறார்கள். கண்ணன், சற்று நீளமான ஒரு பரிசுப் பெட்டியை சுகுமார் சாரிடம் கொடுக்கிறார். சுகுமார் அதை பிரித்துப் பார்க்கிறார். வாய்ப்பாடு எந்திரம் (டேபிள் மிஷின்) இருக்கிறது. சிறிய சுவர் கடிகாரம் போன்று, நீளமான கம்பியோடு, அந்த இயந்திரம் இருக்கிறது. கீழே உட்கார்ந்து அந்த இயந்திரத்தில் எண்களை தட்டச்சு செய்கிறார். இருபத்தி ஒன்று (அல்லது இருபது?) என அடித்து இயந்திரத்தைச் சரிபார்க்கிறார்.

கண்ணனும் அவரது அண்ணன் பாண்டியும் சுவற்றில் சாய்ந்து உட்காருகிறார்கள். வெள்ளை முண்டா பனியன் போட்டிருக்கிறார்கள். கன்னம் புஷ்டியாக, இளமையாக, பணக்காரத் தோரணையில் இருக்கிறார்கள். இந்த பள்ளியில (ஸ்கூல்ல) எப்படி கிருஷ்ணமூர்த்தி வேலை பார்க்குற எனக் கேட்கிறார்கள். எம்மைப் பற்றி அவர்களிடம் சொல்கிறோம்.

கல்லூரியில் வேலை பார்க்கும் போது அமெரிக்கா சென்று, அதிபர் ஒபாமாவுக்கு எதிராகப் போராடியதாகவும், ஒபாமாவே எம்மைப் பற்றி புகார் சொன்னதால், இங்கு பணிமாற்றம் செய்து விட்டதாகவும் சொல்கிறோம். ஒபாமா அறைக்குள்ளேயே போய் போராட்டம் பண்ணினால் சும்மா இருப்பார்களா எனவும் சொல்கிறோம். பள்ளியில் எமது நிலை என்ன என்றும், கல்லூரியில் வேலை பார்த்ததால், சுகுமார் சாரிடம் எப்படி வேலை செய்வது எனவும் நினைக்கிறோம். எவ்வளவு சம்பளம் கிடைக்கும், எத்தனை நாட்கள் இங்கு வேலை பார்க்க வேண்டுமோ எனவும் மனதிற்குள் நினைத்துக் கொள்கிறோம்.

தூரமாக, இறப்பு ஊர்வலம் செல்வது தெரிகிறது. பல்லக்கை வேட்டியால் மூடியிருக்கிறார்கள். வேட்டி மட்டும் தனித்து, பந்தல் போட்டிருப்பது போல் நான்கு மூலைகளும் புடைத்துத் தெரிகிறது. பலரும் பல்லக்கை தூக்கிச் செல்கிறார்கள்.

அச்சுதன் வாய்ப்பாட்டு இயந்திரத்தில் சுகுமார் சாருக்கு விளக்கம் செய்து காண்பிக்கிறான். அச்சுதன் விரலை வைத்து இயந்திரத்தில் சொல்லிக் கொடுப்பதை சுகுமார் சார் கவனமாக பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மேட்டு வயலில் நின்று கொண்டு, ஆசாரி தெரு இராமர் எம்மைக் கூப்பிடுகிறார். வயலின் அடுத்த பகுதிக்கு இருவரும் நடந்து செல்கிறோம். சாமியாடி தோட்டம் போன்று இருப்பதாக நினைக்கிறோம். வயலின் முடிவில், சாலை ஓரமாக, தடுப்பு வேலி இருக்கிறது. இரும்பு கிரில் போன்று வேலி உள்ளது. அந்த வழியாகத்தான் இறப்பு ஊர்வலம் சென்றதாகத் தெரிகிறது. தடுப்புக்கு அந்தப் பக்கம், சாலை ஓரமாக விவேகானந்தன் நிற்கிறார். சமையல் பாத்திரங்கள் நிறைய இருக்கின்றன. அண்டாக்களில் உணவுப் பதார்த்தங்கள் உள்ளன.

விவேகானந்தன் எம்மை பரோட்டா சாப்பிடும் போட்டிக்கு அழைக்கிறார். யாம் ஐந்து சாப்பிட்டால் வேகா பத்து சாப்பிடுவார் என்றும், ஐம்பது சாப்பிட்டால், அவர் நூறு சாப்பிடுவார் எனவும் இராமர் எம்மிடம் சொல்கிறார்.

17.12.2014

முயலும் கிளியும்

65. மிகப் பெரியதொரு அடுக்குமாடிக் குடியிறுப்பு தெரிகிறது. அங்கே குடியிருக்கிறோம். ஒரு விழாவிற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறோம். வீட்டில் தனித்தனி அறைகள் இல்லாமல், சற்று அகலமான நீண்டதொரு அறை

மட்டும் இருப்பது போல் உள்ளது. அறையின் முடிவில் தரையிலிருந்து சற்று மேடான பகுதி உள்ளது. புதிய வீடாகத் தெரிகிறது. பக்கத்து வீட்டில் **ரங்கா சாரும், அவரது மனைவியும்** இருக்கிறார்கள்.

எங்கள் வீட்டில் தரையில் உட்கார்ந்திருக்கிறோம். பலரும் மும்முரமாக, தாள்களில் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சஞ்சிகைகளுக்கு ஆராய்ச்சிக் கட்டுரை அனுப்பும் ஆயத்தங்களில் இருக்கிறார்கள். எம்மைப் பற்றி, தமிழரசி குறை சொல்கிறார். எல்லோரும் அனுப்புகிறார்கள், இவர் மட்டும் வேண்டுமென்றே அனுப்பாமல் இருக்கிறார் என்கிறார். இவருக்கு எல்லாம் தெரியுமென்றும், நினைத்தால் உடனே அனுப்ப முடியும் எனவும் கூறுகிறார். சாருக்கு உதவட்டுமா என **வசிகரன் சார்** கேட்கிறார். உதவி செய்ய தயாராக இருப்பதாகவும் தமிழரசியிடம் சொல்கிறார். எமக்கு கொஞ்சம் கோபம் வருகிறது. யாருடைய உதவியும் வேண்டாமென்றும் எம்மால் முடியாதா எனவும் கேட்கிறோம்.

நடிகர் நாஸரின் காட்சி அறையில் நடக்கிறது. பல்வேறு விதமான விலங்குகளின் உருவத்தில், மனிதர்கள் ஆடுகிறார்கள். வெல்வெட் துணி போன்ற ஒன்றினால், விலங்குகளின் தோல்கள் செய்யப்பட்டுள்ளன. விலங்குகள் குதித்தும், கீழே உருண்டும், கைகளைத் தூக்கியும் செய்து காண்பிக்கின்றன. இராஜமணி முயல் போன்றும், பேபி கிளி போன்றும் வேடமிட்டிருக்கிறார்கள். முயலும் கிளியும் ஒன்றாகச் சேர்ந்து ஆடுகின்றன. கிளியின் கால்கள் நீளமாக இருக்கின்றன. இரண்டு மூன்று முறை தரையில் கொத்தி, கிளி வித்தியாசமாக நடனமாடுகிறது. நாய், டால்பின், பொம்மைகள் கீழே கிடக்கின்றன. அவை வெளிர் நீலநிற பொம்மைகளாக உள்ளன. யாம் நடந்து செல்லும் போது இவற்றைப் பார்க்கிறோம்.

காட்சி முடிந்தவுடன் இராஜமணியும், பேபியும் வீட்டிற்கு கிளம்புகிறார்கள். அவர்களுக்கு நாஸர் பணம் கொடுக்கிறார். சற்று தள்ளி ஒரு பாலம் இருக்கிறது. அருகே ஒரு மதுபானக் கடை உள்ளது. அங்கே நிற்கும் ஆட்டோக்களில் ஏறி, வீட்டுக்குச் செல்லுமாறு யாம் அவர்களுக்கு வழி சொல்கிறோம்.

நாஸரின் அலுவலகம் மேலே இருக்கிறது. அவர் அறையில் இருக்கிறோம். யாம் அவரை பார்க்கச் செல்கிறோம். அலுவலக வாயிலில் நின்று கொண்டிருக்கிறோம். ஒரு சுடிதார் அணிந்த இளம் பெண்ணும், அவரது அம்மாவும் அங்கு வந்து, எமது அருகே நிற்கிறார்கள். சற்றே வயதான பெரியவர் அங்கு

வருகிறார். லுங்கியும், சட்டையும் போட்டிருக்கிறார். மூன்று ரூபா இருந்தாக் கொடுங்க, மூன்று ரூபா இருந்தாக் கொடுங்க, மூன்று ரூபாய் மட்டும் கொடுத்தால் போதும் என சத்தமாகக் கேட்கிறார். உண்மையிலேயே இவரிடம் காசு இல்லையா அல்லது நம்மை ஏமாற்றி காசு வாங்க நினைக்கிறாரா என யாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். அவரது காசு கேட்கும் செய்கை வித்தியாசமாகத் தோன்றியதால், இவருக்கு காசு கொடுக்கக் கூடாது என நினைக்கிறோம். இளம் பெண் பணப்பையைத் திறந்து பைசாவை எடுக்கிறார். அவரை யாம் பார்க்கிறோம்.

அறையிலிருந்து வெளியே வந்த நாஸர் கீழே இறங்குவதற்குத் தயாராகிறார். மாடிப்படி இருக்கிறது. மூங்கில் போன்ற ஒன்றால், ஏணி கட்டப்பட்டுள்ளது. ஏணியில் இறங்குவது ஒரு கூண்டுக்குள் இறங்குவது போல் உள்ளது.

யாம், அருகே சென்று எட்டிப் பார்க்கிறோம். கூண்டு வெள்ளைத் துணியால் செய்யப்பட்டுள்ளது. மிகவும் பளிச்சென உள்ளது. நான்கைந்து குச்சிகளுக்கு கீழே இறங்கி, பின் உட்கார்ந்து சர்ரென சறுக்கிக் கொண்டு வேகமாகப் பாய்ந்து செல்கிறார். அவர் செல்வதையே பார்த்துக் கொண்டிருக்கிறோம். வெகு தூரம் கீழே சென்று, கூண்டின் ஒரு வளைவான திருப்பத்தில் மறைகிறார். கீழே செல்வதற்கு இப்படியொரு எளிதான வழி இருக்கிறதா என யாம் வியக்கிறோம். கூண்டாக உள்ள துணி உறுதியாக இருக்குமா என்றும் அறுந்து விட்டால் என்ன செய்வதென்றும் நினைக்கிறோம். யாம் மாடியிலிருந்து இறங்குகிறோம். இரும்பு ஏணி வைத்திருக்கிறார்கள். இறங்கி ஏணியைப் பார்க்கும் போது, ஏணியின் முனையில் இருந்த இரண்டு மூன்று இணைப்புகள் நொறுக்கியிருக்கின்றன.

அச்சுதனும், யாமும் வீட்டிற்கு வருவதற்காக வெகுதொலைவிலிருந்து இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருக்கிறோம். இருவரும் பேசிக் கொண்டே வருகிறோம். வழியில் ஒரு வீட்டைக் காட்டி, நாம் முதலில் இந்த வீட்டில்தான் வாடகைக்கு இருந்தோம் என்கிறான். வழியில் சாலையின் ஓரமாக நிறைய வீடுகள் இருக்கின்றன. இன்னொரு வீட்டைக் காட்டி இரண்டாவதாக இங்கு இருந்தோம் என்கிறான். அது நீளமான வீடாக இருக்கிறது.

இருட்டாகி விட்டது. வரும் வழியில், சாலையின் வலது பக்கமாக இருக்கும் காட்டில் ஒரு சிறிய அழகான முயல் குட்டி (அல்லது மான் குட்டி) துள்ளிக் குதித்து ஓடுகிறது. அது குதித்து ஓடுவது கண்கொள்ளாக் காட்சியாகத் தெரிகிறது. சற்று

நேரத்தில் அதன் பின்னால் வேறொரு விலங்கு அதை விரட்டிக் கொண்டு ஓடுகிறது. அதை பிடிக்கப் போகிறதோ எனச் சற்று பதற்றமடைகிறோம்.

போய்க் கொண்டிருக்கும் போதே இருவரும் சாலையின் இடது பக்கமிருந்த ஒரு கிணறு போன்ற குழிக்குள் விழுந்து விட்டோம். யாம் அச்சுதன் காலைப் பிடித்துக் கொள்ள, இருவரும் தலைகீழாக விழுகிறோம். கீழே கொஞ்சம் தண்ணீா இருக்கிறது. இரண்டு பேர் அங்கே இருக்கிறார்கள். இருவரும் ஏதோ பேசிக் கொள்கிறார்கள். அச்சுதன் ஒரு பந்தைத் தேடுகிறான். வெகு நேரம் தேடியும் அது கிடைக்கவில்லை. யாமும் தேடுகிறோம். கிணற்றுக்குள் ஆழ்துளை குழி போன்று தெரிகிறது. குழி முழுவதும் நீர் நிறைந்திருக்கிறது. கையை விட்டுத் துழாவும் போது ஒரு பந்து இருப்பதைக் பார்த்து விட்டோம். பந்து தண்ணீருக்குள் கீழே போவதும் மேலே வருவதுமாக இருக்கிறது. அச்சுதன் பந்தை எடுத்துக் கொள்கிறான். பந்து மஞ்சள் நிறமாக இருக்கிறது.

தமிழரசியும், அக்ஷயாவும் அங்கே வந்து விட்டார்கள். நால்வரும் இரு சக்கர வாகனத்தில் அங்கிருந்து பயணத்தைத் தொடர்கிறோம். இட நெருக்கடியாக இருப்பதை உணர்கிறோம். அக்ஷயா முன்னாடி உட்கார்ந்திருக்கிறார். சாலையைப் பார்ப்பது சிரமமாக இருக்கிறது. வழியில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. அதன் கரையருகே வண்டியை நிறுத்துகிறோம். அங்கிருந்து பார்க்கும் போது சற்று தூரமாக, விளக்கு வெளிச்சத்தில் எங்கள் குடியிறுப்பு தெரிகிறது.

18.12.2014, (1 - 2)

அம்மன் சிலை

66. ஊரில் இருக்கிறோம். வெளியூர் பயணம் செய்யத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. பள்ளிக்கூட ஆலமரம் அருகே பலரும் விளையாடுகிறோம். பள்ளம் தோண்டி அதில் ஒளிந்து விளையாடுகிறோம். கிழக்கு மேற்காக இருக்கும் ஒரு குழிக்குள் யாமும், அக்ஷயாவும் ஒளிந்திருக்கிறோம். எங்கள் குழிக்கு அருகே, வடக்கு தெற்காக மற்றொரு குழி மூடப்பட்டிருக்கிறது. அதன் ஸ்லாப் போன்ற மூடியை திறக்கிறோம். உள்ளே கணேசமூர்த்தி அண்ணனும் வேல்முருகனும் படுத்திருக்கிறார்கள். எம்மைப் பார்த்து, ஏன் திறந்தாய் என அண்ணன் கோபமாகப் பேசுகிறார். இருவரையும் போங்கள் என விரட்டுகிறார். ஊருக்கு, நாம் சேர்ந்து போகலாம் அல்லது அவரவர் பாட்டுக்கு, தனித் தனியாகப் போய்க் கொள்ளலாம்

என யாம் கூறுகிறோம். நுழைவுச் சீட்டு எடுப்பது பற்றி பேசுகிறோம். மலை, ஆறு போன்று தெரிகிறது. (அடுத்து நடந்தது நினைவில்லை)

ஒரு கோவில் அருகே இருக்கிறோம். முக்கிய கதவு வழியாக நடந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கு எதிரிலிருந்து ஒரு அம்மன் சிலை அப்படியே நடந்து வருகிறது. உயரமாகவும், கொஞ்சம் பருமனாகவும் சிலை இருக்கிறது. எம்மோடு அப்பாவும் வருகிறார். அவரிடம் அம்மன் சிலை வருவதைச் சொல்கிறோம். வழிவிட்டு, சற்று வலது பக்கமாகத் தள்ளி நடக்கிறோம். எங்களைக் கடந்து சிலை சென்றுவிட்டது.

உட்பிரகாரத்தில் நடக்கிறோம். சிலை எங்கள் பின்னாலிருந்து நடந்து வந்து, மறுபடியும் கோவிலினுள்ளே நடந்து செல்கிறது. சாமியைப் பார்க்க நீண்ட வரிசையில் மக்கள் நிற்கிறார்கள். யாம் நிற்கும் இடத்திலிருந்து சாமியை எட்டிப் பார்க்கிறோம். சாமி தெரியவில்லை. மக்கள் முண்டியடிக்கிறார்கள். காவலர் ஒருவர் வந்து தரையில் கம்பால் அடிக்கிறார். கூட்டம் சிதறுகிறது. யாம் முன்னால் சென்று விட்டோம். ஒரு பெரியவரின் பொடி டப்பா பறந்து சென்று தூரமாக விழுகிறது.

சாமி அறை அருகே சென்று விட்டோம். அறையினுள்ளே எட்டிப் பார்க்கிறோம். அறையின் வாசல் அருகே, இடது பக்க பாதி சுவற்றில், ஒரு பெண் கடவுளின் சிலை இருக்கிறது. தூணிலிருந்து புடைப்புச் சிற்பமாக சாமி உள்ளது. உட்கார்ந்த நிலையில் இருக்கிறார். முகத்தின் ஒரு பாதி மட்டும் தெரிகிறது. கால் சற்று மடக்கி உட்கார்ந்திருக்கிறார். மிகவும் அழகிய சிலையாக இருக்கிறது. வயிறு சற்று உப்பலாகத் தெரிகிறது.

சிலையின் எதிரே கருப்பசாமி, அருவாளோடு இருக்கும் சித்திர வடிவம் இருக்கிறது (சிலை போன்று தெரியவில்லை). மேலும் சில உருவங்கள் உள்ளன. யாம் சாமியைப் பார்த்து விட்டு, இடது பக்க வாசல் வழியே, வெளிப் பிரகாரத்திற்கு வருகிறோம். அங்கே மிக நீண்டதொரு சிலை இருக்கிறது. சிலை படுத்த வண்ணம் இருப்பதாகவும், கால்கள் எமக்கு அருகே இருப்பதாகவும் உணர்கிறோம். அங்கிருந்து கீழே பார்க்கும் போது, மிகுந்த பள்ளமாகத் தெரிகிறது. இவ்வளவு உயரத்திலா கோவில் இருக்கிறது என நினைக்கிறோம்.

யாம் நிற்கும் இடம் நோக்கி முனியசாமி அண்ணன் வருகிறார். அவரை அழைத்துக் கொண்டு உள் பிரகாரம் வழியாக சுற்றிச் செல்கிறோம். வழியில் பெரிய விதானமுள்ள ஒரு அறை வருகிறது. மேலே அண்ணாந்து பார்க்கிறோம். சுவற்றில் பெயர்கள் உள்ளன. முதலாவதில் MTS (அல்லது MTN) என எழுதப்பட்டுள்ளது. பெயர்கள் ஆங்கில எழுத்தில் பெரியதாக எழுதப்பட்டுள்ளன. இரண்டாவதில் ஒரு முஸ்லிம் பெயரை (பஷீர் என்பதாக இருக்கலாம்) அடுத்து இன்னொரு MTS வருகிறது. இவர் வேறொரு ஆள் எனத் தெரிகிறது. இவர்கள் ஆறு பேரும் மொத்தமாகச் சேர்ந்து, அந்தப் பெண்ணை கொலை செய்து விட்டார்கள் எனப் பேசுகிறார்கள்.

19.12.2014, (2 - 3)

பூமி உருண்டை

67. ஒரு பெரிய வீடு அல்லது விடுதி போல் இருக்கிறது. உயரமான தூண்களாலான வராந்தாவில் நிறையப் பேர் படுத்திருக்கிறோம். வராந்தாவினை அடுத்து வெட்ட வெளியாக உள்ளது. வெளியே இருட்டியது போல் தெரிகிறது. மணிகண்டன் எமக்கு அருகே படுத்திருப்பது தெரிகிறது. வியர்ப்பதாகச் சொல்லி, எழுந்து உட்கார்ந்து, எமது சட்டையை கழட்டிப் போடுகிறோம். கொஞ்சம் நகர்ந்து படுத்து மற்றவர்களுக்கு இடம் கொடுக்கிறோம்.

யாரோ ஒரு பையன் தொலைக்காட்சிப் பெட்டியைப் போடுகிறான். நிறைய வெளிச்சம் வருகிறது. திரையில் பூமி உருண்டையைக் காட்டுகிறார்கள். பூமியை காட்டி, வெகு நேரம் ஏதோ பேசுகிறார்கள். (பேசியது நினைவில் இல்லை) இந்தியா பற்றியும் சொல்கிறார்கள். ஆறு முக்கிய செய்திகளையும் சொல்கிறார்கள். அ.தி.மு.வைச் சேர்ந்த, மத்திய ஆதிதிராவிடர் நலத்துறை பெண் அமைச்சர் முருகேசன் (பெயருக்கு முன் உள்ள பெண் பெயர் மறந்துவிட்டது), தனது தங்கைக்கு அவரது செல்வாக்கைப் பயன்படுத்தி, சட்ட மன்ற உறுப்பினர் இடம் வாங்கி கொடுத்ததாக செய்தி சொல்லப்படுகிறது.

வீட்டிற்கு நடந்து வருகிறோம். முற்றத்தில் உட்கார்ந்து அப்பா சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். யாம்தான் இருவருக்கும் சேர்த்து சமையல் செய்ததாக நினைக்கிறோம். வீட்டினுள்ளே அம்மா உறங்குகிறார். அம்மா எப்போது வந்தார் என நினைக்கிறோம். வரும்போதே சமைத்துக் கொண்டு வந்து விட்டாரோ என்று நினைக்கிறோம். அடுப்பு அருகே பாத்திரங்கள் உள்ளன. ஒரு தட்டில் மஞ்சள்

நிறத்தில் சாதம் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. யாம் சமைத்ததை, எடுத்துப் பார்க்கிறோம்.

யாமும், மணிகண்டனும் முதன் முதலாகச் சந்தித்த போது, அந்தச் சந்திப்பு எப்படி இருந்தது என்பதைப் பற்றி, மணிகண்டனை கேலி பேசுகிறோம். பெரிய வீட்டுக்காரர்கள், தெல்லி குளம் தோட்டம் அருகே, நாடகம் போடுகிறார்கள் என்றும் அதை பார்க்கப் போகலாமா என்றும் பேசுகிறோம். யார் முதலில் கிளம்புவது என இருவருக்குமிடையே போட்டி நடக்கிறது. சீக்கிரம் கிளம்புவதற்காக மணிகண்டன் வேகமாக வீட்டிற்குச் செல்கிறார்.

கிழக்கு கண்மாயில், ராணி அக்கா வீடு அருகே நிற்கிறோம். ஒரு நாய் எம்மைப் பார்த்துக் குரைக்கிறது. கட்டிப் போட்டிருக்கிறார்கள். நேரம் ஆக ஆக, நாய் ஆக்ரோசமாகவும், மிக அருகே வந்தும் குரைக்கிறது. கடித்து விடுமோ என பதற்றமாகிறோம். வீட்டுக்குள்ளிலிருந்து நாயை சத்தம் போடுகிறார்கள். மணிகண்டன் வந்து நாயின் வாயினுள் கையை விட்டு பல்லை அமுக்குவது போல் செய்கிறார். அது மிகவும் அமைதியாகி விட்டது. இதுங்களெல்லாம் இப்படிச் செய்தால்தான் அடங்கும் எனச் சொல்கிறார்.

வேல்முருகனும் எங்களோடு நடந்து வருகிறார். காரவீட்டுக்காரர் வீடு அருகே வரும் போது, பொடி டப்பா போன்ற ஒன்றிலிருந்து, கருவேல முள்ளால் தடவி, சுண்ணாம்பு போன்றதொன்றை எடுக்கிறார். நாடகம் பார்க்கும் போது சண்டை வந்தால், இதை வைத்துக் குத்தலாம் என்கிறார். ஜோதி வீடு அருகே, எமது அப்பாவும் செல்லச்சாமியும் நிற்கிறார்கள். மூன்று பேரும், இருசக்கர வாகனத்தில் செல்வது சிரமமாக இருக்குமோ என நினைக்கிறோம். வேல்முருகனை விட்டு விட்டு மணிகண்டனை கூட்டிச் செல்ல முடிவெடுக்கிறோம்.

20.12.14

தண்ணீர் பாட்டில்

68. இறகுப் பந்து விளையாட்டுப் போட்டிகள் நடக்கின்றன. குழந்தைகள் விளையாடுகிறார்கள். யாமும் விளையாடுகிறோம். எமக்கு எதிராக ஒருவர் விளையாடுகிறார். அவர் யாரென நினைவில்லை. இருவரும் தீவிரமாக விளையாடுகிறோம். அவர் முதலாவது புள்ளி எடுத்து விட்டார். இரண்டாவதாக யாம் அடித்த பந்து, வலையை உரசிக் கொண்டு, எமது பக்கமே விழுந்து விட்டது.

அவர் மூன்றாவதாக அடித்த பந்து, எல்லையை தாண்டி விழுந்து விட்டது. யாம், அடுத்து ஒரு புள்ளி எடுத்து விட்டோம். ஆட்டம் தொடர்ந்து நடக்கிறது. மூன்று இரண்டு என யாம் விளையாட்டை தொடர்கிறோம்.

விளையாட்டு முடிந்து அச்சுதன், அக்ஷயா கிளம்புகிறார்கள். ஊருக்கு நடந்து செல்கிறார்கள். வழியில், தாகம் எடுத்தால் என்ன செய்வார்கள் என நினைக்கிறோம். தண்ணீர் பாட்டில் வாங்கிச் செல்லலாம் என கடையைத் தேடுகிறோம். வரிசையாக பல கடைகள் உள்ளன. பாட்டில்கள் நிறைய அடுக்கப்பட்டிருக்கின்றன. கைப்பிடி வளையமுள்ள பாட்டிலாக இருந்தால், சுமந்து செல்வதற்கு வசதியாக இருக்குமே என அப்படியான பாட்டில்களைத் தேடுகிறோம். ஒரு கடையில் கைப்பிடியுள்ள பாட்டில்கள் இருக்கின்றன. இரண்டு லிட்டர் பாட்டில்களாக உள்ளன. அக்குவாபினா பாட்டில்கள் கொடுக்குமாறு கேட்கிறோம். அவர் ஒரு பாட்டிலை எடுக்கிறார். அக்ஷயா என பெரிய எழுத்துக்களில், ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறது. யாம் வேண்டாம் எனச் சொல்லி விட்டோம்.

வேறு கடைகளில் இருக்கிறதா என, அடுத்த பக்கம் சென்று தேடுகிறோம். சாலையருகே சிறியதொரு கடையில், சற்று வயதான பெண் இருக்கிறார். அதற்கு அடுத்துள்ள கடைக்குச் செல்கிறோம். தாத்தா இருக்கிறார். அவரிடம் தண்ணீர் பாட்டில் வாங்கிக் கொண்டு பணம் தருகிறோம். மீதி சில்லறை இல்லை என்கிறார். பின்னர் நாணயங்களாகத் தருகிறார். அவற்றை எண்ணி சரிபார்க்கிறோம். மீதிக்கு பீடி தருகிறார்.

பீடியை வாங்கிப் பற்ற வைக்கிறோம். பீடியைக் குடிக்கிறோமே என மனத்திற்குள் நினைத்துக் கொள்கிறோம். முனியசாமி அண்ணனோடு பேசிக் கொண்டு நடக்கிறோம். பெரியதொரு கண்மாய் கரையில் நடக்கிறோம். கரை சற்று உயரமானதாக உள்ளது. நாங்கள் நடப்பதற்கு இடது பக்கம், பரந்து விரிந்த வயல்கள் உள்ளன. நெல் வயல்களுக்கு இடையிடையே தென்னந்தோப்புகள் இருக்கின்றன. பார்ப்பதற்கே மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நமது ஊர் எவ்வளவு பசுமையாகவும், செழிப்பாகவும் இருக்கிறதென மனதிற்குள் எண்ணுகிறோம். கீழே ஒரு வயலில், பெரியம்மா வேலை செய்து கொண்டிருக்கிறார்.

22.12.14

## இயந்திரத் தூக்கி

69. ஒரு ஊரில் திருவிழா நடக்கிறது. பெரியதொரு கோவிலில் இருக்கிறோம். சாமி சிலையைப் பார்க்கிறோம். ஒரு இயந்திர தூக்கியில் மேலே சென்று கொண்டிருக்கிறோம். அதிலிருந்து மாறி வேறொரு இயந்திரத் தூக்கியில் பயணிக்கிறோம்.

ஓரிடத்தில், மிக அதிகமான கூட்டமாக இருக்கிறது. மேடைபோன்ற ஒன்றில், ஒருவரையொருவர் நெருக்கியடித்துக் கொண்டு, மேலே ஏற முயற்சிக்கிறார்கள். எமக்கு முன்னால் ஒரு சிறு பையன் நின்று கொண்டு, மேலே ஏறுவதற்கு இடம் தர மறுக்கிறான். அவனை விலக்கி, யாமும் அச்சுதனும் உச்சியில் ஏறி நிற்கிறோம். அங்கிருந்து கீழே பார்க்கும் போது, அதிகமான மக்கள் கூட்டம் இருப்பதைக் காண்கிறோம். தூரத்தில் கூட்டமாகப் பலரும், பதாதைகளையும், தோரணங்களையும், பெட்டிகளையும் தூக்கிக்கொண்டு வருவதைப் பார்க்கிறோம்.

23.12.14

## மகாத்மா காந்தி

70. மைதானம் போன்ற ஓரிடத்தில் நிற்கிறோம். சில நண்பர்களும் இருக்கிறார்கள். நேரு வரப்போவதாகப் பேசிக் கொள்கிறார்கள். அவரைப் பார்க்கலாம் என நின்று கொண்டிருக்கிறோம்.

மகாத்மா காந்தி உணவு உட்கொள்வது தெரிகிறது. அருகே பலரும் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வெள்ளாட்டை வைத்துக் கொண்டு ஒருவர் நிற்கிறார். இது ஏதோ காட்சிப்படம் பார்ப்பது போல் தெரிகிறது.

ஒரு ஹெலிகாப்டர் வந்து நிற்கிறது. இரண்டு வாயில்கள் உள்ளதாக இருக்கிறது. உள்ளே ஆட்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். விமானம் போல் முன்னே நீட்டியிருக்கிறது. அப்பகுதியின் மேல் நாற்காலி போன்ற ஒன்று இருக்கிறது. அதில் ஒருவர் உட்காருகிறார். அடர் நீலத்தில் கால் சட்டை போட்டிருக்கிறார். உட்கார்ந்து, கருப்பு முழுக்காலணியை, ஒரு கொக்கியினுள் மாட்டுகிறார். சரியாக மாட்டவில்லை. சரியாக மாட்டவில்லை, கீழே விழுந்து விடப்போகிறார் என நினைக்கும் போது, குனிந்து காலணியை சரியாக மாட்டுகிறார்.

ஹெலிகாப்டர் பறந்து செல்லாமல், தரையில் வேகமாகச் செல்கிறது. சிறிய ரக விமானம் போன்றும் தெரிகிறது. நாங்கள் ஐந்து பேர் இரு சக்கர வாகனத்தில் செல்கிறோம். யாம் வண்டியை ஓட்டுகிறோம். எங்களுக்கு பின்னே ஹெலிகாப்டர் வருவது தெரிகிறது.

மண் சாலையிலிருந்து சற்று விலகிச் செல்ல முற்படுகிறோம். பின்னால் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வேகமாக வந்த ஹெலிகாப்டர், எங்கள் வண்டியை இடித்துவிட்டது. இரண்டு நண்பர்கள் அருகேயிருந்த சாலையில் தூக்கி வீசப்பட்டு, கீழே விழுந்து கிடக்கிறார்கள். உடலிலிருந்து இரத்தமாகக் கொட்டுகிறது. மக்கள் ஓடி வந்து பார்க்கிறார்கள். இருவரும் இறந்து விட்டதாகச் சொல்கிறார்கள்.

யாமும், விஜயமோகனும் ஒரு மருத்துவமனையிலிருக்கிறோம். இருவருக்கும் கால் முட்டியில் அடிபட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். காலை மடக்க முடியவில்லை. முட்டியில் ஏதோ திரவம் போன்று இருப்பதாகத் தெரிகிறது. செவிலி ஒருவர் துணியால் சுற்றுகிறார். மீன் சாப்பிட்டீர்களா என சிரித்துக் கொண்டே கேட்கிறார். அறுவைச் சிகிச்சையின் போது, வயிற்றில் பார்த்ததாகவும் சொல்கிறார். யாம், அசைவம் சாப்பிடுவதில்லையென்றும், ஒருவேளை அவர் சாப்பிட்டிருப்பார் என்று சொல்லி விஜயமோகனைப் பார்க்கிறோம்.

25.12.2014

அரண்மனை வீடு

71. ஓரிடத்தில் தமிழ் பாடல்கள், கவிதைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அறை முழுக்க பேனர்களில், போஸ்டர்களில் கவிதைகள் அச்சிடப்பட்டுள்ளன. சிறு சிறு கவிதைகளாக இருக்கின்றன. பெண் உரிமை, பெண்கள் பற்றிய கவிதைகள் நிறைய உள்ளன. யாம் ஒவ்வொரு கவிதையாக, பொறுமையாக வாசிக்கிறோம். (கவிதைகள் நினைவில்லை). பல எழுத்தாளர்களின் பெயர்கள் கவிதைகளுக்கு கீழே எழுதப்பட்டுள்ளன. அறிந்த பெயர் பார்த்தாக ஞாபகமில்லை. நான்கைந்து வரிகளாலான கவிதைகள் நிறைய இருக்கின்றன. கவிதைகள், வெட்டி ஒட்டியது போல் உள்ளதாக நினைக்கிறோம். கவிதைகளை எழுதியவரில் ஒருவர், வாழ்க்கையில் மிகவும் சிரமப்பட்டவரென்றும், மும்பை சென்று ஏதேதோ வேலை செய்ததாகவும் குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அவரது முகமும், அவரது மும்பை சிரமங்களும் காட்சியாகத் தெரிகிறது.

இறுதியாக ஒரு போஸ்டர் உள்ளது. அவர் பெயர் ராஜரத்தினம் என அச்சாகியிருக்கிறது. மிகவும் குண்டாகத் தெரிகிறார். அவரது முகம் அளவுள்ள புகைப்படம் இருக்கிறது. மீசை இல்லாது, புஷ்டியான கன்னங்களோடு கொழு கொழுவென இருக்கிறார். அவரது மருத்துவமனையில் பெண்களை பாலியல் ரீதியாகப் பயன்படுத்தினார் என்ற குறிப்பு எழுதப்பட்டுள்ளது. அவரது அண்ணனது பெயரும் உள்ளது.

புகைப்படத்தை பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அதிலிருந்து அவர் வெளியே வருகிறார். வெள்ளை மேல் அங்கியில் தொங்கிக் கொண்டிருந்த சிறு பட்டையை இடுப்பில் மாட்டிக் கொண்டே, அந்த அறையில் நடக்கிறார். வராந்தா போன்ற ஒன்றில் வேகமாக நடக்கும் போது, இரண்டு மூன்று பேர் அவரது பின்னால் நடக்கிறார்கள். அவர், வழக்கமாக மூன்று மணிக்கு மேல், மோர்ஸ் என்ற பெயரில், தனது அறையில், அத்தனை மருத்துவர்களையும் வரவழைத்துப் பேசுவார் எனச் சொல்கிறார்கள். அதன்போது, ஒவ்வொரு மருத்துவரும் செய்ய வேண்டிய வேலைகளைத் தெளிவாகச் சொல்லி விடுவார் என்றும், அந்தத் திட்டமிடலே மருத்துவமனையின், அவரின், அனைத்து வெற்றிகளுக்கும் காரணம் என்றும் எமக்கு தெரிய வருகிறது. இந்த திட்டத்திற்கு, மோர்ஸ், மார்சியன் என்ற பெயரை, செவ்வாய் கிரகத்தை ஞாபகப்படுத்தும் விதமாக உருவாக்கினார்கள் என்பதும் அறிய முடிகிறது.

தரைதளத்தின் வராந்தாவில் யாம் நடக்கிறோம். அந்த மருத்துவமனையின் பணியாளர் தேர்வு பற்றி பேசுகிறார்கள். அவர்கள் நுழைவுத் தேர்வு வைத்தே ஆட்கள் எடுப்பார்களெனவும், அத்தேர்வில் வேண்டியவர்களுக்கு, பணம் கொடுப்பவர்களுக்கு, அதிக மதிப்பெண்கள் போட்டு, வெற்றி பெறவைப்பதாகவும் சொல்கிறார்கள். அந்தக் கட்டிடம் மிகப் பிரம்மாண்டமானதாக உள்ளது. அவரது பையன், இரு சக்கர வாகனத்தில், வேகமாகச் செல்கிறார். தந்தை எங்களோடு நடந்து வருகிறார். மதிய உணவுக்கு வீட்டிற்குச் செல்வதாகச் சொல்கிறார். இவ்வளவு எளிமையாக இருப்பவர்களா மக்களை ஏமாற்றுகிறார்கள் என யாம் நினைக்கிறோம்.

எங்களோடு எமக்குத் தெரிந்த இன்னொருவரும் வருகிறார். அவர் யாரெனத் தெரியவில்லை. இருவரும் ஒரு விடுதியில் (ஹோட்டல்) தங்கியிருப்பதாகவும், அங்கு போய் உணவருந்தி, மீண்டும் வருவதற்கு நேரம் ஆகிவிடுமென்றும்

பேசுகிறோம். ஏதேனும் வாகனம் கிடைத்தால் சென்று வரலாமெனக் காத்திருக்கிறோம்.

மூவரும் நிற்குமிடம், புற்கள் வளர்ந்துள்ள காடாகத் தெரிகிறது. அருகிலேயே விமான ஓடு பாதை உள்ளது. அந்த ஓடு பாதை, ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்கும் மேலுள்ளதாக அவர் சொல்கிறார். கட்டிடத்திலிருந்து கிளம்பிச் செல்லும் ஒரு ஆட்டோவைக் கூப்பிடுகிறோம். பக்கத்தில் வரும் போது உள்ளே ஒரு பெண் இருப்பது தெரிகிறது. ஆட்டோ நிற்காமல் செல்கிறது. கட்டிடத்துக்குள்ளே ஒரு ஆட்டோ, நிறையப் பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்கிறது. வரும் போது இந்த ஆட்டோவைப் பிடித்துக் கொள்ளலாம் என பேசுகிறோம். திரும்பி வரும் ஆட்டோவைக் கூப்பிட்ட உடன் அருகே வந்துவிட்டது. மூவரும் அதில் ஏறி முக்கிய கதவு வழியாக வெளியே செல்கிறோம். சற்று வயதானவர் ஆட்டோவை ஓட்டிச் செல்கிறார்.

ஆட்டோ முக்கிய சாலை வழியாகச் செல்கிறது. பார்க் ஹோட்டலில் நிறுத்தும் படி, பையனின் அப்பா சொல்கிறார். பையனின் அப்பா, நடுத்தர வயதானவராகத் தெரிகிறார். கட்டிடத்தில் பார்க் ஹோட்டல் என ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறது. ஒரேயொரு கொடி பறக்கிறது. மாடியில் பசுமையான செடிகள் இருப்பது தெரிகிறது. இங்குதான் தாம் தங்கியருப்பதாகச் சொல்கிறார். இறங்கி, வாசல் சற்று சிறியதாக உள்ள வாயில் வழியே, உள்ளே செல்கிறார்.

ஆட்டோவில் திரும்பி வரும் போது, அவர் வீட்டைப் பார்க்கிறோம். நான்கு மாடிக் கட்டிடத்தினைத் தொடர்ந்து, மேலே அரண்மனை போன்று ஒரு வீடு உள்ளது. சாம்பல் நிற வண்ணத்தில் கோடுகளும், தூண்களும், வளைவுகளும், கூம்புகளும் கொண்டதாக, அற்புதமான பழைய கட்டிட வடிவமைப்புடன் இருக்கிறது. ஆட்டோ செல்லச் செல்ல, வீடு இன்னும் அழகாகத் தெரிகிறது. மரவேலைப்பாடுகளும் மிகவும் நேர்த்தியாக உள்ளன. நான்கு தளங்களாக, ஒவ்வொரு தளமும், தனித்துத் தெரிவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்கு பேர் தங்குவதற்கு எதற்கு இத்தனை பெரிய அரண்மனை என நினைக்கிறோம். விருந்தினர்கள் வந்தால், பையன்களுக்குத் திருமணமானால் பயன்படுத்துவார்கள் எனவும் நினைத்துக் கொள்கிறோம்.

வீட்டைப் பார்த்து ஏங்கினால் எப்படி, நீங்களும் நன்றாகச் சம்பாதித்து, இதே போல் ஒன்றை வாங்க வேண்டும் என **நங்கை மேடத்திடம்** சொல்கிறோம். (**நங்கை மேடம்** தானா என்பதில் சிறிது ஐயம் உள்ளது). அவர் ஆட்டோவில் எமது அருகே அமர்ந்திருக்கிறார். அவரை அடுத்து **வல்லமை மேடம்** இருக்கிறார். யாம் **நங்கை மேடத்தை** அந்த வீட்டை வைத்து, ஏதேதோ சொல்லி கிண்டல் செய்து கொண்டே செல்கிறோம். **வல்லமை மேடம்** ஒன்றும் பேசாமல் சிரித்துக் கொண்டே வருகிறார்.

ஆட்டோ செல்லச்செல்ல அரண்மனை வீடு கீழே போய்க்கொண்டிருக்கிறது. நாங்கள் மேலே சென்றுகொண்டே இருக்கிறோம். ஆகாயத்தில் இருப்பது போல் தெரிகிறது. இருட்டாக உள்ளது. கீழே பார்க்கும் போது, விமான ஓடு தளம், சிறிய செவ்வகம் போன்று அழகாகத் தெரிகிறது. யாம் ஆட்டோவில் நின்று கொண்டிருக்கிறோம். மேலேயிருந்து தொங்கும் ஒரு நாடா போன்ற கயிறை, வலது உள்ளங்கையில் சுற்றிப் பிடித்திருக்கிறோம். கயிறு நழுவிச் செல்கிறது. கீழே விழப் போகிறோம் எனத் தெரிகிறது. மிகவும் பயப்படுகிறோம். கீழே கொண்டு போங்க எனக் கத்துகிறோம்.

26.12.2014

ஜெயலலிதா

72. ஒரு வீட்டில் இருக்கிறோம். வரவேற்பு அறை சற்று பெரியதாக உள்ளது. சென்னையிலிருந்து நாளைக்கு **லலிதா** வரப்போவதாக தமிழரசி சொல்கிறார். முனியசாமி அண்ணன், அண்ணி மற்றும் குழந்தையோடு வருகிறார் எனச் சொன்னதாக யாம் கூறுகிறோம். காலையில் **லலிதா** வீட்டிற்கே வந்து விடுவாரா அல்லது யாம் சென்று அவரை அழைத்து வர வேண்டியதிருக்குமா என நினைக்கிறோம். இந்த முறை, அவளை அழைத்துக் கொண்டு மலைகள், காடுகளைச் சுற்றிக் காட்டுங்கள் என தமிழரசி சொல்கிறார். **லலிதா** வருவதை நினைத்து எமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இரண்டு பனியன்கள் இருப்பதாகவும், அதில் ஒரு பனியனுக்கு ஏற்ற வகையில், ஒரு ஜீன்ஸ் கால்சட்டை வாங்க வேண்டுமெனவும் நினைக்கிறோம்.

கல்லூரியில், எமக்கு பணியிடமாறுதல் வந்திருப்பதாகத் தெரிகிறது. தமிழரசி மாறுதலில் செல்ல வேண்டாமென்கிறார். இடமாறுதலை எப்படி தவிர்ப்பது என்பது குறித்து யோசிக்கிறோம். தமிழரசியோடு, குடும்ப பிரச்சினை வந்ததில் இடமாறுதல் கேட்டு விண்ணப்பித்து விட்டதாகவும், தற்போது சரியாகி விட்டதால்

இடமாறுதலை நீக்க வேண்டுமெனச் சொல்லி, ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தால் மாறுதலை நீக்கிவிடுவார்கள் என நம்புகிறோம்.

கிழக்கு கண்மாய்க் கரை அருகே இருக்கிறோம். அச்சுதன் இருக்கிறான். கரையருகே இருக்கும் குட்டியின் வயலில் நெல் விளைந்திருக்கிறது. வயலில் இறங்கி நெல்லைத் தொடுகிறோம். கொத்துக் கொத்தாக மணிகள் இருக்கின்றன. சுகுமார் சார் நிற்கிறார். நெல்லை நடவு செய்யாமல் விதைத்து விட்டார்கள் என அவரிடம் சொல்கிறோம். நெல் பயிர்கள் அதிக இடைவெளியோடு இருக்கின்றன. ஒவ்வொரு தூரிலிருந்தும், அதிகமான நெல் கொத்துகள் வளர்ந்திருக்கின்றன. முன்னரெல்லாம் நடுவார்கள், இப்போது யார் நடுகிறார்கள் என அவர் சொல்கிறார். நெல் மணிகளைப் பிடுங்கி, ஒவ்வொன்றாக வாயில் போட்டு, கூட்டை நீக்கி, யாம் உண்கிறோம். ஒவ்வொரு கொத்திலும் அதிகப்படியான மணிகள் இருக்கின்றன.

தெருவின், பழைய சங்கமடம் அருகே நிற்கிறோம். பாதையருகே கட்டிலில் அம்மா இருக்கிறார். யாம், அவர் அருகே சென்று உட்கார்ந்து கொள்கிறோம். ராஜபாண்டி அண்ணன் வருகிறார். கணேஷமூர்த்தி அண்ணன் வந்து ஏதோ கேட்கிறார். பின் வெளியே போய்ட்டு வரோம் எனச் சொல்லி நடந்து செல்கிறார். அம்மா படுத்திருக்கிறார். யாமும் படுத்துக் கொள்கிறோம். வேட்டி கட்டி துண்டு வைத்திருக்கிறோம். துண்டை மூடி அப்படியே படுத்திருக்கிறோம்.

திடீரென அந்த இடம் மிகவும் பரபரப்பாகிறது. எல்லோரும் ஓடி வருகிறார்கள். ஜெயலலிதா அம்மையார் அங்கு வருகிறார். முத்துச்சாமி மாமா வீடு இருக்கும் இடம், கோவில் கட்டிடமாகத் தெரிகிறது. வடக்குப் பார்த்த வாசல் இருக்கிறது. சுவற்றில் சாமி படங்கள் நிறைய மாட்டியிருக்கிறார்கள். உள்ளே சென்று அம்மையார் சாமி கும்பிடுகிறார். பலரும் அவர் கூடவே நிற்கிறார்கள். அவருக்குக் கொடுப்பதற்காக, கையில் விறகு வெட்டும் அருவாள் ஒன்றை, யாம் வைத்திருக்கிறோம். அருவாளின் ஒரு இடத்தில், சிறிய கொருவாய் உள்ளது. அருவாளைக் கொடுக்கலாமென்று நினைக்கிறோம். அம்மையார் அருகே, இன்னொருவர் பெரிய இரும்பு அருவாள் வைத்திருக்கிறார். அருள் வந்தவராக, அம்மையார், பக்கத்தில் நிற்பவரிடமிருந்து அந்த அருவாளை வாங்கிக் கொள்கிறார். வேகமாக ஓடுகிறார். அங்கே இன்னொரு ஆளிடம் அதே போன்றதொரு பெரிய அருவாள் இருக்கிறது. அம்மையார் பின்னாடியே அனைவரும் ஓடுகிறார்கள். ஒவ்வொரு வீடாகச் சென்று, அருள் கொடுப்பார் என்கிறார்கள்.

சற்று நேரத்தில், அம்மையாரைப் பார்க்க பாலசுப்ரமணி, அச்சுதனோடு சேர்ந்து யாமும் செல்கிறோம். பெரிய வீட்டு மேற்குப் பாதை வழியாகச் செல்கிறோம். பாதை சிறியதாக இருக்கிறது. எங்கள் புது வீட்டு பின்பக்கச் சந்து அருகே இரண்டு பெரியவர்கள் ஒரு சிறுமியோடு விளையாடுகிறார்கள். யாம் அவர்களை இடிக்காமல் கவனமாகச் செல்கிறோம். அந்த தெரு வழியே நடந்து, தாசில்தார் வீடு அருகே வந்து நிற்கிறோம். ஆசாரி தெரு மேற்குக் கடைசியில் அம்மையார் நிற்கிறார். மஞ்சள் ஊற்றி வணங்குகிறார்கள்.

கூட்டத்தில் நிற்கும் ஒரு பெண், எம்மைப் பார்த்து, நீங்க செட்டியார் வீட்டுக்கு வந்திருக்கீங்களா என்கிறார். யாம், சரிகை போட்ட வேட்டி கட்டி, துண்டால் மார்பை சுற்றிக் கட்டியிருக்கிறோம். யாம், இல்லை எனப் பதில் கூறுகிறோம். பின் யார் எனக் கேட்கிறார். செல்வி தம்பி, விக்ரபாண்டியன் தெரியுமா, அவங்க வீட்டிற்கு வந்திருக்கிறோம் என்கிறோம். பொன்னம்மாள் மகன் என்றே சொல்லியிருக்கலாமே என நினைத்துக் கொள்கிறோம். கேட்ட பெண் ஒல்லியாக, உயரமாக இருக்கிறார்.

ஆசாரி சங்கமடம் அருகே இரண்டு பெண்கள் நிற்கிறார்கள். அமைச்சர்களாக இருந்திருப்பார்களோ என நினைக்கிறோம். இருவர் முகமும், உருவமும் நன்றாகத் தெரிகிறது. (பார்த்த முகமாய் இல்லை). அதில் ஒருவர், அவர் சொல்வதற்கு மட்டுமே வாழ்க கோஷம் போட வேண்டுமென, சற்று கடுமையாக, கூட்டத்தாரைப் பார்த்துச் சொல்கிறார். அவர் அம்மையாரைப் புகழ்ந்து சொல்ல, கூட்டத்தார் ஆக்ரோசமாக, வாழ்க வாழ்க என்கிறார்கள். சிறிது நேரத்தில் அந்த இரண்டாவது பெண்மணியும் வாழ்த்துக் கோஷத்தில் இணைந்து கொள்கிறார். இருவரும் போட்டி போட்டுக் கொண்டு புகழ்ந்து சொல்ல, மக்கள் சத்தமாக வாழ்த்துவது, பிரம்மிப்பாக இருக்கிறது.

அம்மையார், நாங்கள் நிற்கும் இடத்தின் அருகேயிருந்த, ஒரு வீட்டிற்கு வந்து நிற்கிறார். வீட்டின் இளம் பெண், தட்டிலிருந்த மஞ்சள் தண்ணீரை காலில் ஊற்றுகிறார். அந்தப் பெண், அம்மையார் காலில் விழுந்து ஏன் வணங்காமலிருக்கிறார் என நினைக்கிறோம். ஒரு வேளை தண்டனை பெற்றதால் வணங்கவில்லையோ எனவும் எண்ணிக் கொள்கிறோம்.

அம்மாவின் முகம் நன்றாகத் தெரிகிறது. தற்போதயை தோற்றமாக இல்லாமல், மிகவும் இளமையாகத் தெரிகிறார். உடை நனைந்திருக்கிறது. அந்தப்

பெண் ஊற்றிய தண்ணீரை, இரண்டு முறை எடுத்து, தரையில் விட்டு, குனிந்து, பூமியைத் தொட்டு வணங்குகிறார். எழுந்திருக்கும் போது ஏதோ நினைத்தவராக, சுற்றுமுற்றும் பார்த்து, மாராப்பை சரி பண்ணுகிறார். கோஷம் போட்ட பெண்கள், அவர் அருகே நிற்கிறார்கள். பலரும் முண்டியடிக்க, அடுத்த வீட்டிற்குச் செல்கிறார்.

யாம், அம்மையார் சுற்றி வர, வெகு நேரம் ஆகும் என நினைத்து, வீட்டிற்கு வருகிறோம். அக்கா வீட்டின், உள் வாசல் படியில், தவனேஷ்வர் தவழ்ந்து வருகிறான். அண்ணன் அருகே படுத்திருக்கிறான். அவனை கையில் தூக்கி, உனக்கு உங்க வீடு பிடிக்குதா, இந்த வீடு பிடிக்குதா எனக் கேட்கிறோம். அவன் இந்த வீடு என்கிறான். இந்த வீடு, ரொம்ப பிடிச்சிருக்கா, இல்ல அந்த வீடா என புது வீட்டைக் காட்டிக் கேட்கிறோம். அவன் அந்த வீடு என எங்கள் வீட்டைக் காட்டுகிறான். மிகவும் சமத்துப் பையன் என்கிறோம். திண்ணையில் வயர், பேட்டரி வைத்து, ஏதோ விளையாடுகிறான். இவன் மிகவும் புத்திசாலி எனவும், வரும் காலத்தில் பெரிய விஞ்ஞானியாக வருவான் எனவும் சொல்கிறோம்.

பாதையில், ஜோதி மகள் மாரியம்மாள், தேங்காய், பழம் வாங்கிச் செல்கிறார். சிரித்த முகமாய், தூரத்தில் யாரிடமோ பேசிக் கொண்டு நடக்கிறார். இன்னொரு ஆளும் வாங்கிச் செல்கிறார். உப்பு வாங்க, கந்தபுரத்துக்குப் போகலாமா மாமா என பாலசுப்ரமணி கேட்கிறான். போனால், ஒரு மூட்டை வாங்கி வரலாம் என்கிறான். கந்தபுரத்தில் கடல் இருப்பது போல் தெரியவில்லையே, உப்பு எப்படிக் கிடைக்கும் என்கிறோம். பூமியிலேயே கிடைப்பதாகவும், போய் வாங்கி வரலாமா எனவும் கேட்கிறான்.

28.12.2014

பறக்கும் மீன்

73. திருப்பதிக்கு சாமி கும்பிடச் சென்றிருக்கிறோம். அக்கா இருக்கிறார். அதிகமான கூட்டம் இருப்பதாகச் சொல்கிறோம். சாமியைப் பார்க்க, வெகு நேரம் ஆகுமெனச் சொல்லி, அக்காவை, ஒரு பாதை வழியாக அழைத்துச் செல்கிறோம். ஒரு திருப்பத்தில் நின்று, இந்த இடத்திற்கு அடுத்துதான் சாமி இருக்கிறார் என்கிறோம். வேறு சிலரும் எங்களோடு இருக்கிறார்கள்.

ஒரு தெரு வழியாக நடந்து வருகிறோம். மக்கள், கம்பி போட்ட கூண்டு போன்ற பகுதிகளில் இருக்கிறார்கள். பார்ப்பதற்கு, மிருகக் காட்சிச் சாலையில்,

விலங்குகளை அடைத்திருப்பது போல் உள்ளது. ஏழை, எளிய மக்களாக இருக்கிறார்கள். சாமி தரிசனத்துக்கு வருகிறவர்கள், இலவசமாக தங்கிக் கொள்வதற்காக, இவ்வாறு கட்டி இருப்பதாகப் பேசுகிறார்கள். ஓரிடத்திலேயே அதிகமான மக்கள் தங்கியிருக்கிறார்கள். உட்கார்ந்தும், படுத்தும் இருக்கிறார்கள். கூண்டுகள் வரிசையாக உள்ளன. காலியாக இருக்கும் ஒரு கூண்டு தெரிகிறது. ஒரு பெண் அவசரமாக வந்து படுத்துக்கொள்கிறார். அருகிலேயே இன்னொரு ஆணும் இருக்கிறார்.

ஒரு கல்லூரியில் இருக்கிறோம். வராந்தாவில் நடப்பது தெரிகிறது. அந்த இடம், பார்ப்பதற்கு ஊரின் பள்ளிக் கூட, தெற்கு வராந்தா போல் இருக்கிறது. உள்ளே மாணவர்களுக்கு வகுப்பு நடக்கிறது.

அறையொன்றில் உட்கார்ந்திருக்கிறோம். **உவதி மேடம்** மற்றும் **நங்கை மேடம்** இருவரும் எம்மோடு பேசுகிறார்கள். **நங்கை மேடம்** எதற்காக யாம் வருத்தப்படுகிறோம் எனக் கேட்கிறார். **உவதி மேடம்** கட்டிலில் உட்கார்ந்து, சோகமாக இருக்கக் கூடாது என்றும், அவர்கள் எல்லாம் எம்மை நன்றாகப் பார்த்துக் கொள்வார்கள் எனவும் சொல்கிறார். பேசும் போது அவரது கால் பாதத்தை தடவிக் கொண்டே பேசுகிறார். தமிழரசியோடு ஏதும் பிரச்சனையா எனவும் கேட்கிறார்.

யாம் நன்றாக இருப்பதாகவும், எமக்கு ஒன்றுமில்லை எனவும் அவர்களிடம் சொல்கிறோம். கொஞ்சம் தூங்காமல் இருப்பதாகவும், நன்றாகத் தூங்கினால் எல்லாம் சரியாகிவிடுமெனவும் கூறுகிறோம்.

சுற்றுலாவிற்குச் சென்ற போது, சிலரை கூட்டிக் செல்லாமல் விட்டு விட்டதாகவும், அவர்கள் மிகவும் வருத்தமாக இருப்பதாகவும் எமக்குத் தெரியவருகிறது. பொறுப்பாசிரியர்கள் என்பதால் **உவதி மேடமும்,** யாமும் சென்றதாகவும், அடுத்த முறை சுற்றுலா செல்லும் போது, அனைவரையும் அழைத்துச் செல்வதாகவும் கூறுகிறோம்.

வராந்தாவில் அழகிய சிறு பூச்சியொன்று பறக்கிறது. அதை பிடித்துப் பார்க்கிறோம். மிக மிகச் சிறிய குதிரை போல் உள்ளது. எமது கண்ணுக்கு நேராக வைத்துப் பார்க்கிறோம். முகம் அச்சு அசலாக குதிரை முகமாகத் தெரிகிறது. அழகிய சிறிய இறக்கை இருக்கிறது. வண்ணத்துப் பூச்சி ஒன்றையும் பிடித்து விட்டோம்.

உள்ளறையில், **உவதி மேடம்** இருக்கிறார். அவருக்கு கொடுப்போமா என நினைக்கிறோம். தமிழரசி வந்து வாங்கிக் கொள்கிறார். அவரும் அவற்றை ஆச்சரியமாகப் பார்க்கிறார். வெளியே வரும் **உவதி மேடத்திடம்,** பறக்கும் மீன் (ப்ளையிங் ஃபிஷ்) எனக் கொடுக்கிறார். யாம் நினைத்ததை தமிழரசி செய்து விட்டாரே என வியக்கிறோம். பறக்கும் குதிரையை, இவரென்ன பறக்கும் மீன் என்கிறாரே என நினைத்துக் கொள்கிறோம். அந்த வழியாக வரும் **வல்லமை மேடம்,** இவர்களைப் பார்த்து, நட்பாகச் சிரிக்கிறார்.

மழை பெய்கிறது. வராந்தாவில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு நாள் மழைக்கே இப்படி ஆகி விட்டதே, தீபத் திருநாள் பத்து நாட்கள் கொண்டாட வேண்டுமே, என்ன செய்வது என அவர்களிடம் கூறுகிறோம்.

05.01.2015

கருடன்

74. வீட்டில் இருக்கிறோம். அப்பா, அம்மா எல்லோரும் இருக்கிறார்கள். வீட்டில் முக்கிய நிகழ்ச்சியொன்று, நடக்க இருப்பது போல் தெரிகிறது. அக்காவிற்கு திருமணம் எனப் பேசிக் கொள்கிறார்கள். வீட்டில் நெல் பயிர் வளர்த்திருக்கிறோம். இரண்டு கூடைகளில் வைக்கப்பட்டிருக்கிறது. கூடைகள், சாணம் போட்டு மெழுகி வைக்கப்பட்டுள்ளன. வீட்டின் முற்றத்தில் வைத்து, நெற்பயிர் கூடைகளை, பிச்சை கொத்தனார், சேறு தண்ணீரோடு எடுத்துத் தருகிறார். அவற்றை மிதிவண்டியில் வைத்து, காட்டிற்குக் கொண்டு செல்லுமாறு , எம்மைச் சொல்கிறார்கள்.

எம்மோடு, நிதிஷையும் கூட்டிச் செல்லுமாறு, அப்பா சொல்கிறார். இரண்டு மூன்று முறை இப்படி வலியுறுத்திச் சொல்லிவிட்டார். யாம், விடுமுறைக்கு வந்திருப்பதாகவும், அவனை எப்படி அழைத்துச் செல்வது எனவும் கேட்கிறோம். நிதிஷை அழைத்துப் பேசுகிறோம். அவன் கூடவே இன்னொரு சிறுவனும் வந்து நிற்கிறான். வண்டிப்பாதையில் வைத்து, நீயுமா வருகிறாய் எனக் கேட்கிறோம். இருவரும் வருகிறோம் என்கிறார்கள்.

எமது உடலில் ஏதோ மாறுதல்கள் உண்டாவதைக் கவனிக்கிறோம். முகத்தில், வேர்க்குறு போன்று நிறைய வருகிறது. கைகளைப் பார்க்கிறோம். அம்மைப் பொக்குளங்கள் போல் ஏராளமாக வந்திருக்கின்றன. அக்காவிடம்

சென்று, என்ன இப்படி இருக்கிறது எனக் கேட்கிறோம். அவர் அம்மை போட்டிருக்குமோ எனச் சொல்கிறார்.

யாம், வயல்வெளியில் மிதிவண்டி ஓட்டிச் செல்கிறோம். ஒரு திருப்பத்தில், பாதையை விட்டு சற்று ஓரமாக மிதிவண்டியை நிறுத்தி, அதன் மேல் படுத்து புத்தகம் படிக்கிறோம். சற்று நேரத்தில் கண்ணயர்ந்து விட்டோம்.

திருடன் மிதிவண்டியைத் தூக்க வருகிறான். கைலி கட்டியிருக்கிறான். எம்மைப் பயங்காட்டுவது போல் அருகே வந்து, மிதிவண்டியைத் தூக்க முயல்கிறான். அவனை மிதிவண்டியைத் தூக்க விடாமல் கற்களை எடுத்து எறிகிறோம். பயந்து ஓடுகிறான். கல்லெறிந்து கொண்டே, பிடிங்க பிடிங்க எனச் சத்தம் போடுகிறோம். அவன், ஓடிச் சென்று, ஒரு தெருவிற்குள் நுழைகிறான். அங்கிருந்தவர்கள் அவனைப் பிடித்துவிட்டார்கள்.

தேநீர்க் கடையில், நான்கைந்து காவலர்களோடு திருடன் இருக்கிறான். காவலர்களிடம் ஏதோ பேசுகிறான். அவனை, முன்னரே அவர்களுக்குத் தெரியும் போல் இருக்கிறது. இரண்டு காவலர்கள் மட்டுமே சீருடையில் இருக்கிறார்கள். ஒருவர் மற்ற காவலர்களிடம், இவன் மேல் எப்.ஐ.ஆர் போடுங்க என்கிறார். காவலர், எப்.ஐ.ஆர் போட்டு என்னாகப் போகுது, இவன் தப்பித்தாலும் தப்பி விடுவான் என எம்மைப் பார்த்துக்கொண்டே சொல்கிறார்.

ஓரிடத்தில் நடந்து கொண்டிருக்கிறோம். தர்மர் அண்ணன் மற்றும் இன்னொருவர் வருகிறார்கள். தர்மர் அண்ணன் நடப்பது மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. அவர் ஊர்ந்து வருவது போல் தெரிகிறது உடலைச் சுற்றி, வெள்ளை நிறத்தில் கவசம் போல் வைத்திருக்கிறார். ஊர்ந்து வரும் போது, துடுப்பு போல் பல கைகள் உள்ளன. வேகமாக நடக்கிறார். தாம் ஒரு இயந்திரத்தைப் பொருத்தியிருப்பதாகவும், அதனால் வேகமாக நடக்க முடிகிறதெனவும் கூறுகிறார். உடற்கவசத்தை பிரித்துக் காட்டவும் செய்கிறார். அதனுள் காற்றை நிரப்பி வேகமாகச் செல்கிறார். நாங்களும் வேகமாக நடக்கிறோம். கண்மாய்க் கரை போன்ற ஒரு பகுதியில் நடக்கிறோம். கரை, உயரமாக உள்ளது. ஓரிடத்தில் உடைப்பு இருக்கிறது. அப்படியே அதனுள் ஊர்ந்து இறங்கி, பின் மேலே ஏறுகிறார். யாம் தள்ளி நின்று அதைப் பார்க்கிறோம். அந்தக் காட்சி, மிகவும்

வியப்பாக இருக்கிறது. கரை முடிவில் சாலை தெரிகிறது. அவரவர் வீடுகளுக்குச் செல்வோமா எனச் சொல்லி கிளம்புகிறோம்.

திரைப்பட படப்பிடிப்பில் இருக்கிறோம். ஒருவருடன் பேசிக் கொண்டே நடக்கிறோம். இவர் மிகவும் திறமையானவர், இவரை உதவி இயக்குநராக சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி, படத்தின் இயக்குனரிடம் எம்மை அறிமுகப்படுத்துகிறார். இயக்குநரும் யாமும் நடந்து செல்கிறோம். பெரிய பெரிய அறைகளினுள் படப்பிடிப்பு கருவிகள் வைத்திருக்கிறார்கள். சில இடங்களில் படப்பிடிப்பும் நடக்கிறது.

மிகப் பிரம்மாண்டமான ஒரு வணிக வளாகம் இருக்கிறது. அங்கே உள்ள உணவு விடுதியில், உணவிற்கு ஏற்பாடு ஆகியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு நடிகையோடு, தேநீர்க் கடையில் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர் துணை நடிகை எனத் தெரிகிறது. மிகவும் பசியாக இருக்கிறது என்கிறார். உணவிற்கு அங்கே ஏற்பாடாகியிருக்கிறதே என அந்த வணிக வளாகத்தைக் காண்பிக்கிறோம். அங்கே உணவு முடிந்து விட்டதாகச் சொல்கிறார்.

அருகே ஏதாவது கோவில் இருக்கிறதா என இயக்குனர் கேட்கிறார். கண்டிப்பாகச் சொல்கிறோம் என அவருக்குப் பதில் சொல்கிறோம். இங்கிருந்து சிறிது தூரம் சென்று, ஒரு வளைவைச் சுற்றி வந்தால், காமாட்சி கோவில் இருப்பதாகக் கூறுகிறோம். அங்கே சென்று பார்க்கும் போது, சிறியதொரு அம்மன் கோவில் இருக்கிறது.

கோவிலுக்கு, சற்று தள்ளி பார்க்கும் போது, மிகப் பிரகாசமாகத் தெரிகிறது. கோபுரங்களும், மதில்களுமாக மிக அற்புதமான ஒரு கோவில் தெரிகிறது. கண்கவர் விளக்கு வெளிச்சம், கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரிகிறது. உயர்ந்த கோபுரங்கள் தங்கத்தால் உருவாக்கப்பட்டது போல் ஜொலிஜொலிக்கின்றன.

உச்சியில் கிருஷ்ணரின் உருவம் தெரிகிறது. சர விளக்குளால் கிருஷ்ணர் உருவம் உருவாக்கப்பட்டிருப்பது போல் தெரிகிறது. மயில்பீலி சூடிய குழந்தை கிருஷ்ணர் உருவம், மிகவும் அருகாமையில் தெரிகிறது. யாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, கிருஷ்ணர் உருவம், கருடனாக மாறுகிறது. கருடன் மறுபடியும் கிருஷ்ணாவாக மாறுகிறது.

கிருஷ்ணா மற்றும் கோபுரங்களுக்குப் பின்புலமாக, ஒரு பிரம்மாண்ட மலை தெரிகிறது. நிலவு வெளிச்சத்தில், மலை தெரிவது அருமையாக இருக்கிறது. மலையின் ஒரு பகுதி, அருகாமையில் தெரிகிறது. மலையைப் பார்த்து, யாம், நாமக்கல் மலை என நினைக்கிறோம். (கனவு முடிந்தும், கண்ணனும், கருடனும் கண்களை விட்டு நீங்காமல் இருக்கிறார்கள்).

12.01.15

சுற்றுலா

75. பேருந்தில் சென்று கொண்டிருக்கிறோம். கூட்டம் அதிகமாக இருக்கிறது. ஓட்டுனர் எம்மைப் பார்த்து, பேருந்தை ஓட்டச் சொல்கிறார். எமக்கு பேருந்தை ஓட்டத் தெரியாதே என நினைக்கிறோம். பரவாயில்லை, எளிதாக ஓட்டிவிடலாம் என நினைத்துக் கொண்டு, ஸ்டியரிங்கைப் பிடிக்கிறோம். நினைத்தது போலவே, பேருந்தை ஓட்டுவது எளிதாக இருக்கிறது. சிறிது தூரம் ஓட்டிச் செல்கிறோம். பிரேக்கை மிதிப்பதற்குப் பதிலாக ஆக்ஸிலேட்டரை மிதித்து விட்டோம். பேருந்து வேகமாகச் சென்று, முன்னே செல்லும் காரை இடிப்பது போல் மிக அருகே செல்கிறது. யாம் மிகவும் பதட்டமாகி, மோதாமல் இருப்பதற்கு முயற்சி செய்கிறோம். அதற்குள் ஓட்டுனரும் வந்து விட்டார்.

சாலையில் இரு சக்கர வாகனத்தில் செல்கிறோம். பூவு வாங்கிச் செல்லலாமென நினைத்து பூக்கள் கட்டி விற்கும் ஒரு பெண்ணிடம் விலை கேட்கிறோம். அவர் பூவை மடித்துக் கொடுக்கிறார். பக்கத்துக் கடைக்கு டெம்போவில் வாலை இலைகளைக் கொண்டு வந்து இறக்குகிறார்கள்.

மாணவர்களுடன் சுற்றுலா வந்திருக்கிறோம். ஒரு ஏரி அருகே மாணவர்கள், செயல்முறை விளக்கத்தில் இருக்கிறார்கள். ஏரி முழுவதும் நீர் நிரம்பி இருக்கிறது. யாம், ஏரியில் இருக்கும் குறுகியதொரு இரும்பு பாலத்தில், உட்கார்ந்த நிலையில், இரண்டு கால்களையும் தொங்கப்போட்டபடியே தவழ்ந்து செல்வதாகத் தெரிகிறது.

ஒரு சாலை முடிவில் அழகிய பூங்கா ஒன்று இருக்கிறது. ஒரு குடும்பத்தார் இருக்கிறார்கள். கல்லூரி படிக்கும் வயதில், ஒரு பெண் இருக்கிறார். பார்ப்பதற்கு மிகவும் லட்சணமாகத் தெரிகிறார். அவரது அப்பாவிடம், என்.சி.சி. பற்றி சந்தேகம் கேட்கிறார். அப்பா, அந்தப்பெண் மேல் எரிந்து விழுந்து, உனக்கு எப்போ

பார்த்தாலும் ஏதாவது சந்தேகம் வருகிறது என கடிந்து சொல்லி அழைத்துச் செல்கிறார்.

13.01.15

அமெரிக்க பல்கலை

76. மிகப் பெரியதொரு கட்டிடத்தில் இருக்கிறோம். கல்லூரி படிப்பதற்காக, அமெரிக்கா கிளம்புவதற்கு ஆயத்தமாவது தெரிகிறது. எம்மோடு ஒரு பையனும் வருவதாகச் சொல்லிக் கிளம்புகிறான். பையன் கொஞ்சம் குண்டாக இருக்கிறான். விமானத்தில் செல்லும் போது கண்களை மூடிக் கொள்கிறோம்.

கல்லூரி பெரியதாக, பரந்து விரிந்திருக்கிறது. பல்கலைக்கழகம் என நினைத்துக் கொள்கிறோம். நடந்து வரும் வழியில் தமிழ் பதாகைகள் தெரிகின்றன. தமிழ் எழுத்துக்களில் பெயர் பலகைகள் இருக்கின்றன. அமெரிக்க பல்கலையில் எப்படி தமிழ் துறை இருக்கிறது என வியப்பாக இருக்கிறது. நிறையப் பேர் கூடி இருக்கிறார்கள். மாவிலைத் தோரணங்கள் கட்டி, ஏதோ விழா நடப்பதற்கான ஏற்பாடுகளில் இருப்பது தெரிகிறது. நீண்ட தூரத்திற்கு தமிழ் துறை வந்து கொண்டே இருக்கிறது.

யாம், கணித வகுப்பில் அமர்ந்திருக்கிறோம். இங்கு கணிதம் பயிலவே வந்திருக்கிறோம் என அப்போதுதான் உணர்கிறோம். கணிதம் சரியாகப் படிக்க வில்லையென்றும், இம்முறை நன்றாக கற்றுக் கொள்ள வேண்டுமென்றும் நினைத்துக் கொள்கிறோம். கட்டணம் மிகவும் குறைவாக இருப்பதாக உணர்கிறோம். எமது குழந்தைகளைக் கூட இங்கேயே படிக்க வைக்கலாம் எனவும் மனதில் நினைக்கிறோம். சில மாணவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். தமிழ் முகமாகத் தெரிகிறார்கள். ஒரு மாணவர், நீங்கள் குளத்தூரிலிருந்து வருகிறீர்களா எனக் கேட்கிறார். யாம் இல்லை என்கிறோம். அப்படியெனில் கயத்தாரிலிருந்து வருகிறீர்களா என்கிறார். இல்லை என்கிறோம். இந்த ஊர்களைப் பற்றி தெரியுமா எனக் கேட்கிறார். யாம் இவ்வூர்களின் இருப்பிடம் பற்றிச் சொன்னவுடன், நீங்கள் மிகவும் புத்திசாலி, தமிழ்நாட்டைப் பற்றி நிறைய தெரிந்து வைத்திருக்கிறீர்கள் எனப் பாராட்டுகிறார்.

பெண் பேராசிரியர் வந்து வகுப்பெடுக்கிறார். ஆங்கிலத்தில் சில கணிதங்களை, பலகையில் எழுதிப் போடுகிறார். அவை வாக்கிய அமைப்பு

முறையில் உள்ளன. வாக்கியங்களில் ஒரு சில தமிழ் எழுத்துக்களாக உள்ளன. தமிழ் வார்த்தைகளை ஆங்கில எழுத்தில் எழுதியிருக்கிறார். யாம் இப்படி Muyalga என்ற வார்த்தைப் பார்த்து, தமிழில் எப்படி எழுதுகிறார்கள் என ஆச்சரியமடைகிறோம். எல்லோருக்கும் தமிழ் வார்ததைகள் எப்படிப் புரியும் எனவும் யோசிக்கிறோம். அவர் சொல்வதை மாணவர்கள் எழுதுகிறார்கள். யாம், அருகிலிருக்கும் மாணவர் நோட்டைப் பார்த்து எழுதுகிறோம்.

14.01.15, (3 - 4)

படகுகள்

77. நண்பர் ஒருவருடன், சுற்றுலா செல்வது போல் தெரிகிறது. (நண்பர் யார் என்பது மறந்து விட்டது). இருவரும் மணல் பகுதியில் நடந்து செல்கிறோம். ஆற்றுக்கு வந்திருப்பதாக நினைக்கிறோம். ஒகேனக்கல் என்பதாகத் தெரிகிறது. ஆனால், காவிரி ஆறு வேறு மாதிரி இருப்பதாகவும் உணர்கிறோம். ஆறு மிகவும் அகன்று காணப்படுகிறது. ஆற்றில் தண்ணீர் இல்லை.

ஆற்றின் மையப் பகுதியில் கிணறு போன்ற ஒரு பள்ளம் இருக்கிறது. குகை போன்று பள்ளம் போய்க் கொண்டேயிருக்கிறது. யாம், உள்ளே சிறிய சுவர் போன்ற பகுதியில் நிற்கிறோம். பாதிக்கும் மேல் தண்ணீர் இருக்கிறது. வெளியே வருவதற்கு முயற்சி செய்கிறோம். படிக்கட்டோ, பிடித்துக் கொள்ள பிடிமானமோ ஒன்றும் இல்லை. எப்படி வெளியே வருவது என நினைக்கிறோம். சுவற்றில் கையை அழுத்தி அழுத்தி வைத்து மெதுவாக நகர்கிறோம். கீழே பார்க்கும் போது பயம் வருவது போல் இருக்கிறது.

ஓரளவிற்கு மேலே வந்து விட்டோம். நண்பர் வெளியே நிற்கிறார். எமக்கு வெளியே வர உதவுமாறு அவரிடம் கேட்கிறோம். அவரால் உதவ இயலவில்லை. கம்பி போட்ட கிரில்கள், ஆங்காங்கே சுவற்றில் இருக்கின்றன. மெது மெதுவாக அவற்றைப் பிடித்து, ஒவ்வொறு கம்பி வாசலாகக் கடக்கிறோம். வெளியே வந்து கம்பி வாசலைப் பார்க்கிறோம். அதில் பூட்டு போடாமல், கொக்கியில், பட்டி மட்டும் மாட்டியிருக்கிறது. பட்டி திறக்காமல் எப்படி வெளியே வந்தோம் என யோசிக்கிறோம்.

இருவரும், ஆற்றின் சற்று மேடான பகுதிக்கு நடந்து வருகிறோம். ஆற்றின் குறுக்கே மண்ணாலான, நீண்ட, சற்று உயரமான அணை இருப்பது தெரிகிறது.

ஆற்றில் தண்ணீர் வரும் போது அணை மேலிருந்து நீர் வீழ்ச்சியாகக் கொட்டும் போல என நினைத்துக் கொள்கிறோம். ஆற்றில் எங்குமே தண்ணீர் இருப்பது போல் தெரியவில்லை.

அருகிலிருந்த ஒரு கிராமத்திற்கு வந்து விட்டோம். சிறிய கிராமமாகத் தெரிகிறது. சிறிய வீடுகளாக இருக்கின்றன. அந்த கிராமத்தின் வழியே நடந்து வரும் போது, ஆற்றின் முழுத்தோற்றமும் தெரிகிறது. ஆறு மிகவும் பள்ளமாக இருக்கிறது. மாட்டு வண்டிகளை மணலுக்குள் புதைத்து வைத்து, மேலே விறகுகளால் மூடி இருக்கிறார்கள். இவையே வீடாக இருக்கிறது. பார்க்கும் தூரம் மட்டுக்கும், இது போன்ற, சிறிய சிறிய மாட்டு வண்டி வீடுகளாகவே இருக்கின்றன. மக்கள் நடமாட்டம் தெரிகிறது. இப்போது பார்க்கும் போது, அது கிராமம் போல் இல்லாமல், சிறிய நகரமாகத் தெரிகிறது. மாட்டு வண்டி வீடுகளும், வேறு பல வீடுகளும் இருக்கின்றன.

ஆறு முழுவதுமாக, கண்ணுக்குத் தெரிகிறது. ஆற்றில் சிறியதும், பெரியதுமான ஏராளமான படகுகள் இருக்கின்றன. தண்ணீர் இல்லாமல் மணலில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளன. வளைந்த, அகலமான மரக்கட்டைகள், படகுகளின் மேலே, வளைந்த சட்டகம் போன்று இருக்கின்றன. படகுகளில் ஆட்கள் இல்லை.

ஒரு மிகப் பெரிய படகு, அணையின் கரையிலிருந்து ஆற்றுக்குள் விழுவது போல், பாதி அளவிற்கு நிற்கிறது. அதுதான் இருப்பதுலேயே பெரிய படகாகத் தெரிகிறது. படகு வெகு அருகாமையில், அண்மைக் காட்சியாகத் தெரிகிறது. வளைந்த சட்டகங்கள் நிறைய இருக்கின்றன. அணைக்குள் விழுவது போல் பல படகுகள் நிற்கின்றன. தண்ணீர் வரும் போது, படகுகள் எல்லாம் நீரில் அடித்து வரப்படும் போல என நினைத்துக் கொள்கிறோம்.

இருவரும், அந்த வழியாக வரும் ஆட்டோவில் ஏறுகிறோம். அருகே, சாப்பிடக் கிடைக்கும் இடத்திற்கு, போகச் சொல்கிறோம். அவர் கேட்கும் பணம் குறைவாக இருப்பதாக நினைக்கிறோம். ஒரு உணவு விடுதியில் உட்கார்ந்திருக்கிறோம். சாதம் வாங்கிச் சாப்பிடலாமா என நினைக்கிறோம்.

20.01.15, (5 - 6)

ஆற்று வெள்ளம்

78. மிகப் பெரியதொரு வீட்டில் இருக்கிறோம். மாடியில் அக்கா, அவரது தோழிகளோடு ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கிறார். இளவயது அக்காவாக இருக்கிறார். மிகவும் சத்தமாக பேசிக் கொண்டும், ஓடிக் கொண்டும் இருக்கிறார்கள். கீழே இருக்கும் எமக்கு, சத்தம் அதிகமாகக் கேட்கிறது. யாம், மேலே ஏறிச் செல்கிறோம். இங்கு வரக்கூடாது என எம்மை அக்கா விரட்டுகிறார்.

வீட்டின் பின் பக்கத்தில் யாம் நிற்கிறோம். எமக்கு அங்கு ஒருவர் குறிப்பகுதியில் சவரம் செய்து விடுகிறார். யாம், மேலே பார்க்கும் போது, பெண்கள் மாடியிலிருந்து எம்மைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனிக்கிறோம். அவர்களைப் பார்த்து கூச்சலிட்டுக் கத்துகிறோம். உங்கள் எல்லோரையும் அப்பாவிடம் சொல்கிறோம் எனக் கூறிவிட்டு, அப்பாவிடம் செல்கிறோம். அவர் வீட்டின் முன் பகுதியில் படுத்திருக்கிறார். அங்கே கோவிலின் தூண்கள் இருப்பது போன்றும், அவ்விடம் கோவிலின் ஒரு பகுதி போன்றும் தெரிகிறது.

சுரங்கம் போன்றதொரு பகுதியில், ஏணி வழியாகக் கீழே இறங்கிறோம். நண்பர் ஒருவரும் உடன் வருகிறார். கீழே, இரண்டு சிறுவர்கள் நிற்கிறார்கள். கறுப்பாக, எலும்பும் தோலுமாக இருக்கிறார்கள். அவர்கள் முகம் அருகாமையில் தெரிகிறது. எம்மிடம் ஒரு பையன் வந்து, வாய்வழி உறவு செய்வதாகச் சொல்கிறான். அவன் மிகவும் சிறப்பாகச் செய்வதாகவும், அவனுக்கு பணம் வேண்டும் எனவும் கேட்கிறான். இன்னொரு பையன், நண்பருக்கு அது மாதிரி செய்ய ஆரம்பித்து விட்டான். எமக்கு அதிர்ச்சியாகவும், ஆச்சர்யமாகவும் வருகிறது. யாம், ஏணிப்படி வழியாக வேகமாக ஏறி ஓடுகிறோம்.

ஆற்றின் கரையொன்றில் நிற்கிறோம். நிறையப் பேர் இருக்கிறார்கள். வேணுகோபால சுவாமி கோவில் பட்டரும், முஸ்லிம் மத குரு ஒருவரும், வாக்குவாதம் செய்கிறார்கள். முஸ்லிம் மதகுரு, தாடி வைத்திருக்கிறார். பட்டர், ஆற்றுக்குள் நீரை அள்ளித் தெளித்து, இன்னும் கொஞ்ச நேரத்தில், ஆற்றில் பெருவெள்ளம் வருமெனச் சபதம் போல் சொல்கிறார்.

கூட்டத்தில் **பிரபை மேடம்** நிற்கிறார். கீழே மிகவும் பள்ளத்தில் ஆறு இருக்கிறது. ஐம்பதடிக்கும் மேல் இருக்கலாம். நாங்கள் பாறை பகுதியில்

நிற்கிறோம். காலுக்குக் கீழே பார்க்கும் போது, மிகவும் குறைவான அடி ஆழத்தில் தண்ணீர் செல்வது தெரிகிறது. இவ்வளவு ஆழத்தில் ஓடும் ஆற்றில், எப்படி தண்ணீர் நிறைந்து வரும் என ஆச்சரியத்தோடு, யாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

சிறிது நேர இடைவெளியில், யாம், ஆற்றை எட்டிப் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். தண்ணீர் நிறைந்து வருவது போல் தெரியவில்லை. நேரம் போய்க்கொண்டே இருக்கிறது. பட்டர் சற்று ஆக்ரோசமாக, இந்த ஆற்றை வெள்ளம் வந்து நிறைக்கும் என உறுதியாகச் சொல்கிறார்.

சட்டென, தண்ணீரின் அளவு அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். ஆழத்திலிருந்து, தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக மேலே வந்து கொண்டிருக்கிறது. பார்த்துக் கொண்டிருக்கும் அனைவரும் பரவசமாகிறார்கள். சற்று நேரத்திலேயே, முழு ஆறும் வெள்ளக் காடாக மாறிவிட்டது. ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதை, அத்தனை பேரும் ரசிக்கிறார்கள்.

யாம், பட்டரிடம் சென்று, முஸ்லிம் மத குருவால், இந்த நீரை வற்றச் செய்ய முடியுமா என சவாலுக்கு கேட்கச் சொல்கிறோம். வேண்டாம், இதை விட்டு விடலாம், அவரால் முடியாது என பட்டர் சொல்கிறார். தண்ணீர் கலங்கலாகவும், செம்மண் நீர் போன்றும் ஓடுகிறது.

எல்லோரும் குளிக்கலாம் எனக் கிளம்புகிறார்கள். யாமும் குளிக்கச் செல்கிறோம். எமது கையில் ஒரு வெள்ளி டம்ளர் இருக்கிறது. இதை, பயணப் பையில் வைத்துவிட்டுச் சென்றால், யாராவது எடுத்துச் சென்று விடுவார்கள் என நினைக்கிறோம். யாம் போட்டிருக்கும் உள்ளாடையின் பையில், டம்ளரை திணித்துக்கொண்டு, அப்படியே குளிக்கச் செல்கிறோம். பாறைகள் வழியாக நடக்கிறோம். குளிப்பதற்கு வசதியான இடமாகப் பார்த்துக் கொண்டே செல்கிறோம்.

ஓரிடத்தில், தெரிந்த சில நண்பர்கள் குளிப்பது தெரிகிறது. சுமார் இருபது அடி உயரமுள்ள பாறை மேலிருந்து, ஆற்றுக்குள் குதிக்கிறார்கள். தெரிந்த நண்பர் குதித்து விட்டார். யாம் குதிப்பதற்குத் தயாராகும் போது, எமக்கு அடையாளம் தெரியாத ஆள் ஒருவர், சட்டெனக் குதித்து விட்டார். அவர் குதித்து நீருக்கு மேலே வருவதற்கு முன்னால், யாம் கீழே குதித்து விட்டோம். யாம் கீழே குதித்து,

அந்தரத்தில் பறந்தபடி வரும் போது தான், அவர் நீருக்கு மேலே வருகிறார். யாம் வருவதைப் பார்த்து, அவசரமாக நகர்கிறார். அவரது கால் அருகே, யாம் குதித்து விட்டோம்.

யாம், நீருக்குள் சென்று, பின் மேலே வருகிறோம். வந்து கொண்டே இருக்கிறோம். நீரின் மேற்பரப்பிற்கு வந்தது போல் தெரியவில்லை. என்னது, இவ்வளவு நேரம் மேலே செல்கிறோம், இன்னுமா மேற்பரப்புக்கு வரவில்லை எனக் குழம்புகிறோம். மூச்சு முட்டுவது போல் உணர்கிறோம். மனத்திற்குள் வினாடிகளாக எண்ணுகிறோம். இடது கையை மேலே நீட்டிக் கொண்டு, நீரின் மேற்பரப்பு எப்போது வரும் எனத் துலாவிக்கொண்டே நீந்தி வருகிறோம்.

ஆற்றுக்குள், ஒரு சிறிய கால்வாய் போன்று கட்டியிருப்பது தெரிகிறது. அங்கு குளிக்கிறோம். முன்பக்கம் பார்க்கும் போது, அகன்ற, பரந்து விரிந்த, ஆற்றைப் பார்க்கிறோம். அங்கிருக்கும் நண்பரைப் பார்த்து, இருவரும், முன் பக்கமாகத் தெரியும் ஆற்றில் நீந்தி, அடுத்த பக்கத்திற்குச் செல்வோமா எனக் கேட்கிறோம். தண்ணீர் படிகம் போன்று மிகவும் தெளிவாகவும், சிறிது நீல நிறமாகவும் உள்ளது. தண்ணீரை கையில் அள்ளிப் பார்க்கிறோம்.

கால்வாயில் யாம் நின்று கொண்டிருக்கும் இடத்திற்குப் பின் பக்கத்திலிருந்து, தெற்குநத்தம் சுப்பையா அண்ணன் வருகிறார். கால்வாய் வழியாகவே நடந்து, எமக்கு முன்புறம் சென்று, தண்ணீரை அள்ளி காதுகளைக் கழுவுகிறார். அவரைத் தொடர்ந்து, எமது கிராமத்திலிருந்து பலரும் வருகிறார்கள்.

தேவர் தெரு ஆட்கள் பலரும், எம்மை தாண்டிச் சென்று, குளித்து முடித்து, அதே கால்வாய் வழியாகத் திரும்பி வருகிறார்கள். கால்வாய் சிறியதாக உள்ளதால், நெருக்கடியாக இருக்கிறது. **திருக்கணன்** எம்மைக் கடக்கும் போது முதுகில் உரசுகிறார். யார் இது என கோபமாக கேட்டுக்கொண்டே எம்மைப் பார்க்கிறார். எம்மைப் பார்த்து, கிருஷ்ணமூர்த்தியா என சிரித்துக் கொண்டே கேட்கிறார்.

இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் எமது தெருக்காரர்கள், கால்வாயின் ஒரு ஓரத்தில், மார்பு தெரியும் ஆழத்தில், வரிசையாக நிற்கிறார்கள். நிற்கும் போது, இடது கையை, தலைக்கு இடது புறமாக நீட்டி, வலது தோள் பகுதியில் பிடித்துக்

கொண்டிருக்கிறார்கள். அந்த வரிசையில், கோபால் இருப்பதைப் பார்க்கிறோம். இவர்களைக் கடந்து, தேவர் தெரு ஆட்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

எமக்கு முன்பாக தேவர் ஒருவர், கால்வாயின் சிமெண்ட் போட்ட கரைப் பகுதியில், படுத்துக் கொண்டு ஏறுகிறார். படுத்து ஏறும் போது, பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் ஆளின் முகத்தில், வேண்டுமென்றே இடிக்கிறார். முதலாவது முயற்சியில் கால் இடிக்கவில்லை. இரண்டாவது முறையாக இப்படி உதைத்து இடித்துவிட்டார். வலி தாங்காமல், அழகன் தாத்தா அழுகிறார். இடித்தவர் வேண்டுமென்றே இடிக்கவில்லை எனவும் தவறுதலாகப் பட்டுவிட்டது எனவும் சொல்கிறார். இவர் வேண்டுமென்றுதானே இடித்தார், பார்த்துக் கொண்டுதானே நிற்கிறோம் என மனதிற்குள் யாம் நினைக்கிறோம்.

பாண்டி மாமா அருகேயிருந்து, தாத்தாவுக்கு ஆறுதல் சொல்கிறார். தாத்தா அழுது கொண்டே, தற்போது தான் கண் அறுவைச் சிகிச்சை செய்ததாகச் சொல்லி, கண்களைக் காட்டுகிறார். கண்கள் மூடிய நிலையில், இரு கண்ணிலும் சிவப்பான பெரிய இரத்தக் குழாய் தெரிகிறது.

21.01.14, (5 - 6)

தருமர் அண்ணன்

79. ஓரிடத்தில் தங்கியிருக்கிறோம். கண்ணாடித் தடுப்புகள் அதிகமிருக்கின்றன. யாம் கண்ணாடி வாயில் வழியாக, நடந்து செல்கிறோம். உதயசூரியன், நல்லதம்பி போன்றவர்களும், இன்னும் சிலரும் இருக்கிறார்கள். உதயசூரியன் அண்ணன், ஏதோ ஒன்றை தவறாகச் செய்ததற்காக, மற்றவர்கள் அவரை கேலி செய்து சிரிக்கிறார்கள். ஒரு இடத்தில், சிறிய மரபெஞ்சுகள் கிடக்கின்றன. பெஞ்சுகளின் அகலம் மிகவும் குறைவாகத் தெரிகிறது. அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து, ஓரிடத்தில் அடுக்கி ஒழுங்குபடுத்துகிறோம்.

பலரும், பந்தல் போன்ற ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். யாம் பந்தலைச் சுற்றி, வெளிப்புறமாக நடக்கிறோம். ஓரிடத்தில் கொஞ்சம் பெரியதான, சர்க்கரைக் கட்டி போன்ற ஒரு இனிப்பு உருண்டை, திறந்த வெளியில் வைக்கப்பட்டிருக்கிறது. யாம் இனிப்பு உருண்டையிலிருந்து கொஞ்சம் பிய்த்துத் தின்கிறோம். அதே சமயம், இரண்டு பேர் அந்த இனிப்பு உருண்டையை எடுக்க

வருகிறார்கள். தெரியாத்தனமாக இப்படி இனிப்பை எடுத்துத் தின்று விட்டோமே என வெட்கப்படுகிறோம்.

அறையொன்றில், பயணப் பையினுள், துணிகளை அள்ளி அமுக்குகிறோம். இரண்டு பெட்டிகளினுள் வைத்தது போக, இன்னும் அதிகமான துணிகள் இருக்கின்றன. இறுதி பையினுள்ளே துணிகளைத் திணிக்கிறோம். ஜிப்பை மூட முடியாத அளவிற்கு வைத்த பின்னும், துணிகள் மீதி இருக்கின்றன. குடும்பத்தினர், முன்னமே, தொடர்வண்டி நிலையம் சென்று விட்டதாக நினைத்துக் கொள்கிறோம். போர்வைகள் நிறைய மீதம் கிடக்கின்றன. இவற்றை எப்படி எடுத்துச் செல்வதென யோசிக்கிறோம்.

வரவேற்பறையில், சற்றே பெரியதொரு திரையில் படம் ஓடிக் கொண்டிருக்கிறது. யாம், அங்கே கிடக்கும் நாற்காலியில் உட்கார்கிறோம். இன்னொருவரும் அருகே இருக்கிறார். நேரம் 7.06 ஆகத் தெரிகிறது. 7.30 குத் தானே தொடர்வண்டி, சிறிது நேரம் படம் பார்த்து விட்டுச் செல்லலாம் என முடிவெடுக்கிறோம். அங்கே நிற்கும் ஒருவர், திரையில் அம்புக்குறியை நகர்த்துகிறார். யாம், அதை அப்படியே வைத்து அழுத்தினால், அடுத்த நிகழ்ச்சி வருமே என மனதிற்குள் நினைக்கிறோம். அவர் அம்புக் குறியை நகர்த்தி, திரையின் இடது ஓரத்தில் தெரியும் பெருக்கல் போன்ற குறியில் அழுத்துகிறார். அடுத்த நிகழ்ச்சி வருகிறது. பெருக்கல் குறியில் வைத்து அழுத்தினால், நிகழ்ச்சி மாறும் என்பது தெரியாமல் இருக்கிறோமா என வியப்படைகிறோம்.

திரையில் யாம் தெரிகிறோம். கையில் கொடியொன்றைப் பிடித்து, மலையில் ஏறுவதாக அந்தக் காட்சி இருக்கிறது. தொடர்வண்டிக்கு நேரமாகி விட்டதா என நினைக்கிறோம். போக்குவரத்து நெரிசல் ஏதேனும் வந்தால், குறித்த நேரத்தில் செல்ல முடியாதே என நினைத்து, அவசரமாகக் கிளம்புகிறோம்.

ஒரு திரையரங்கில் இருக்கிறோம். கட்டணச்சீட்டு வாங்குவதற்குச் செல்கிறோம். துப்புரவு ஊழியரிடம் வாங்க வேண்டியிருக்கிறது. அவர் சுத்தமில்லாத ஓரிடத்தில், கழிப்பறைகள் உள்ள பகுதியில், சீட்டு கொடுத்துக் கொண்டிருக்கிறார். யாம் வாங்கி வரும் போது, இரண்டு பேர், இந்த அசுத்தமான வழியாக, அங்கே சென்று வாங்க முடியாதென்று சொல்லி, இந்தப்பக்கம் தானே

வருவார், அப்போது வாங்கிக் கொள்ளலாமென, அங்கேயே நின்று கொண்டிருக்கிறார்கள்.

வெளியில் நிற்கிறோம். திரையரங்கு, சற்று பழையதாகத் தெரிகிறது. தமிழரசி, ஒரு பாதை வழியாக தியேட்டருக்குள் நடக்கிறார். மாடிக்குச் செல்ல வேண்டுமே, இவரென்ன வேறு பாதையில் செல்கிறார் என நினைத்து அவரைக் கூப்பிடுகிறோம். அவர் கவனிக்கவில்லை. அவர் நடக்கும் இடம் அருகே, மாடிக்குச் செல்லும் வழி என ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறது. அவர் போய் விட்டார். அச்சுதனும், அக்ஷயாவும் மாடிக்குச் செல்லும் வழியாக நடக்கிறார்கள். மரக் கைப்பிடியோடு மேலே ஏறும் அந்தப் பாதையில், இன்னும் சிலரும் செல்கிறார்கள்.

திரையரங்கின் முன் பகுதியில், பலரும் இருக்கிறார்கள். ஆங்கில எழுத்து சிய் - வரிசையில், இருக்கை எண் 29, 30, 31, 32 யாரிடமாவது உள்ளதா எனக் கேட்கிறோம். அவரவர்களிடம் இருக்கும் சீட்டுகளைப் பார்த்து விட்டு, இல்லை எனச் சொல்கிறார்கள். தியேட்டரில் கதவு திறக்கிறது. உள்ளே இருட்டாக உள்ளது. வெளியே நிற்கும் ஒருவர் உள்ளே செல்கிறார். மறுபடியும் கதவு பூட்டப்படுகிறது.

யாம், திண்ணை போன்ற ஒன்றில், காலை தொங்கப்போட்டு உட்கார்ந்திருக்கிறோம். எமக்கு இருபக்கமும் மாமாவும், அண்ணனும் அதே போன்று உட்கார்ந்திருக்கிறார்கள். எமக்கு முழங்கால் மூட்டு வலிப்பதாகச் சொல்லி, கால் சட்டையைத் தூக்கிவிட்டு, மொலியைக் காட்டுகிறோம். அண்ணன், ஒன்றும் ஆகாது என்றும், வீக்கமில்லை சரியாகிவிடும் எனவும் சொல்கிறார். மாமா மூட்டு, சிறியதாக, வீங்காமல் இருக்கிறதென்றும், அது போன்று எமது மூட்டு இல்லையென்றும் கூறுகிறோம்.

ஒருமுறை கருங்குரங்கு ஒன்று, எமது மார்புப் பகுதியில் வந்து உட்கார்ந்ததாகவும், அது பேசியதாகவும், அவர்களிடம் சொல்கிறோம். அதை நல்ல முறையில் கவனித்துக் கொண்டதாகவும் தெரிவிக்கிறோம். இதனைச் சொல்லும் போது, அந்த நிகழ்வானது, திரையில் நிகழ்வது போன்று தெரிகிறது.

தருமர் அண்ணன், தமது குடும்பத்தோடு, ஒகேனக்கலுக்கு சுற்றுலா செல்லப் போவதாக, எம்மிடம் கூறுகிறார். தெரியாதவர்கள் போனால், அங்கே ஏமாற்றி பணத்தைப் பிடுங்குவார்கள், போகும் போது சொல்லுங்கள், யாமும் உடன் வருகிறோம் எனச் சொல்கிறோம். சீக்கிரமே செல்வதாகவும், எம்மையும் துணைக்கு

அழைத்துப் போவதாகவும் கூறுகிறார். இது அனைத்தையும் நடந்து கொண்டே பேசுகிறார்.

படம் முடிந்து, ஒரு குடும்பம் வருகிறது. காதல் விவகாரமொன்று நடப்பதாகத் தெரிகிறது. பள்ளிக் கூடம் செல்லும் வயதுள்ள ஒரு சிறுவனிடம், அவனது அப்பா, சற்றே கடுமையாக, இதெல்லாம் நடக்காது, ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம், அவளை வீட்டுக்கு வரச் சொல் எனச் சொல்கிறார். பிராமணக் குடும்பமாக இருக்கிறது. அக்காவிடம் வந்த சிறுவன், அப்பா சொன்னதாகச் சொல்லி அழைக்கிறான். பையனின் அக்கா அமைதியாக நின்று கொண்டிருக்கிறார்.

ஒரு நடுத்தர வயதுப் பெண், சிறுவனின் அப்பாவிடம் பேசுகிறார். காதலனின் அக்கா எனத் தெரிகிறது. அவரது தம்பி நல்ல பையன் என்கிறார். அவரது கணவரைப் பார்த்து, அவர் காலில் விழுந்தாவது, மகளைக் கொடுக்க சம்மதிக்க வையுங்கள் எனச் சொல்கிறார். அந்தக் கணவரும் பேசிக் கொண்டே, காலில் விழப் போவது போல் செல்கிறார். தம்பிக்கு பெண் வேண்டுமென்றால், அக்காகாரி காலில் விழவேண்டியதுதானே, எதற்கு கணவரைப் போய் விழச் சொல்கிறார் என மனதிற்குள், யாம் நினைக்கிறோம். பெண்ணின் அப்பா, சத்தமாக ஏதோ பேசிவிட்டு, எதிர்ப்பக்கத்தில் குடும்பத்தோடு, கோபத்துடன் நடந்து செல்கிறார்.

காதலன் குடும்பத்தார், வேறு பாதையில் நடக்கிறார்கள். யாம், அவர்கள் பின்னால் நடந்து செல்கிறோம். எமக்கு சற்று முன்பாக, காதலன் நடக்கிறார். இளைஞராகத் தெரியவில்லை. அருகே நடக்கும் பெண், அவரது மனைவியாக இருக்கிறார். அப்படியெனில் அந்தப் பெண்ணை, இரண்டாம் தாரமாக மணமுடிக்கக் கேட்டிருக்கிறார்கள் என நினைக்கிறோம். மனைவி மிகவும் ஒல்லியாகவும், செம்பழுப்பு நிறத்தில் சேலையும் அணிந்திருக்கிறார். பழுப்பான, குறைவான தலை முடியில், சடை பின்னியிருக்கிறார். பரிதாபகரமான ஒரு கிராமத்துப் பெண் தோற்றத்தில் இருக்கிறார்.

திரையரங்கில் நின்று கொண்டிருக்கும் பெண்ணை, யாம் திரும்பிப் பார்க்கிறோம். இவர்கள் நடக்கும் பாதையையே பார்த்துக் கொண்டிருக்கிறார். பூப்போட்ட, சிவப்பு நிறச் சேலையில் இருக்கிறார். படித்து வேலையில் இருக்கும் பெண் தோற்றத்தில், கொஞ்சம் குண்டாகத் தெரிகிறார். வயிறு சற்று பெருத்துள்ளது. இவ்வளவு அழகான பெண், தொப்பையோடு இருக்கிறாரே என

நினைக்கிறோம். இவர்கள் நடக்கும் திசையிலேயே, அவரும் நடந்து வர ஆரம்பிக்கிறார்.

25.01.15, (5 - 6)

ஓலைச் சுவடிகள்

80. ஒரு கோவிலில் இருக்கிறோம். கோவிலின் வாசல் மூடியிருக்கிறது. ஒரு பெண், இலையில் சாதம் போட்டு சாப்பிடுகிறார். அவர், வழக்கத்தை விட அதிகமான சோறு வைத்து சாப்பிடுவதாக உணர்கிறோம். நிறையப் பேர் இருக்கிறார்கள். ஒருவர், சவரம் செய்து இரண்டு மூன்று நாள் ஆன வெள்ளை மயிர் கொண்ட முகத்தோடு இருப்பது தெரிகிறது. மீசை மட்டும் சிறியதாக, சற்று வித்தியாசமாக உள்ளது. முகம் புஷ்டியாகத் தெரிகிறது. அலைபேசியில் கண்ணன் பாடல்களை கேட்டுக் கொண்டிருக்கிறார்.

யாம், தரையில் படுத்திருக்கிறோம். சற்று ஒல்லியான ஒருவர் வருகிறார். அவரும் தரையில் துண்டை விரித்துப் படுக்கிறார். அவருடைய அலைபேசியிலும் பாடல்கள் வைக்கிறார். பலரும் பாடல்கள் வைத்திருப்பதால், பல வகையான பாடல்கள் கேட்கின்றன. எமக்கு அருகில் இருப்பவர் வைத்திருக்கும், புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே பாடல், மற்ற பாடல்களைக் காட்டிலும், அதிக ஒலியுடன் கேட்கிறது.

அங்கிருந்து நடந்து, அருகேயிருந்த ஒரு பேருந்து நிலையத்திற்கு வருகிறோம். பதினேழு என்ற எண் கொண்ட பேருந்து வருகிறது. அதில் ஏறுகிறோம். பேருந்து சாலையில் வளைந்து, சற்று பின்புறமாகச் சென்று, பின் வந்த வழியாகவே ஓடுகிறது. யாம் இறங்க வேண்டிய நிறுத்தம் வந்தும், பேருந்து நிற்காமல் செல்கிறது. யாம், நடத்துனரைச் சத்தம் போடுகிறோம். நீண்ட தூரம் சென்று, அடுத்த நிறுத்தத்தில் இறக்கி விடுகிறார். இறங்கியபின் நடத்துனரோடு யாம், வழக்கடிக்கிறோம். பேருந்து சற்று தூரம் சென்று நிற்கிறது. ஓட்டுநர் இறங்கி நின்று ஏதோ பேசுகிறார். யாம் அவரைத் திட்டுகிறோம். கையில் கம்பு ஒன்றும் வைத்திருக்கிறோம்.

சாலை, கண்மாய் ஓரமாகச் செல்கிறது. கரை வழியாக நடந்து வரும் போது, சில சிறுவர்களைப் பார்க்கிறோம். செய்தித் தாள் ஒன்றைப் படிக்கிறோம். விநாயகர்

கோவிலின், கீறல் விழுந்த கோபுரத்தை, சரி செய்தது பற்றிய செய்தி ஒன்று வந்துள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிலில், மிகப் பழமையான ஓலைச் சுவடிகள் கண்டெடுக்கப்பட்டதும், அதைப் பற்றிய செய்தியும் உள்ளது. அந்த ஓலைச் சுவடிகளின் பெருமையைப் பற்றி பட்டர் ஒருவர் பேசுகிறார். அது கேரோ (கேரோ வார்த்தைதானா என்பதில் சிறிது ஐயம் உள்ளது) என்ற தொழில் நுட்பத்தில் பாதுகாக்கப்பட்டதாகவும், அதனாலேயே ஆயிரக்கணக்கான வருடங்கள் அப்படியே இருப்பதாகவும் சொல்கிறார். ஓலைச் சுவடிகளும் கட்டுக் கட்டாக கண்களுக்குத் தெரிகின்றன.

09.02.15, (5 - 6)

புத்தகம்

81. நண்பர்களோடு வயல்கள் ஊடாக நடந்து செல்கிறோம். நெடுநேரம் நடந்துகொண்டேயிருக்கிறோம். எதிரே மிகப் பிரம்மாண்டமானதொரு கோபுரம் தெரிகிறது. தூரத்திலிருந்து பார்த்தபோது அகலமான பட்டைக் கம்பிகளாலான கோபுரம் போன்று (அலைபேசி) தெரிந்தது, அருகே வர வர கட்டுமானக் கோபுரமாக இருப்பதை அறிகிறோம். சிறு விட்டமுடைய நீளமான குழாய் போன்ற அமைப்புகளால் கோபுரம் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மிகப்பெரிய நான்கு தூண்கள் போன்ற அமைப்பினால் கோபுரம் தாங்கப்பட்டுள்ளது. கோபுரத்தின் வடிவமைப்பு மிகவும் வித்தியாசமாகவும் அழகாகவும் உள்ளது.

வழியில் குளம் ஒன்று தெரிகிறது. வளர்ப்பு மீன் குளம் போல் உள்ளது. குளக்கரையின் ஓரத்தில் நிறைய மீன்கள் கூட்டமாக இருக்கின்றன. வாத்துகளும் உள்ளன. அனைத்துமே மிகவும் கருப்பான நிறத்தில் காணப்படுகின்றன. ஒரு பெரிய மீன் நீருக்கு வெளியே முதுகை காட்டி வளைந்து செல்வது மிகவும் ரசிக்கும் படியாக உள்ளது. இதுங்கள அடிங்கடா என யாம் சொல்கிறோம். சபாபதி ஒரு கட்டையை எடுத்து ஓங்கி அடிக்கிறார். பெரிய மீன் அடிபட்டு நீரில் துள்ளுகிறது. சிறிது நேரத்தில் செத்து விட்டது. வாத்தும் செத்து மிதக்கிறது. அய்யய்யோ இப்படிக் கொன்னுட்டோமே, அடிக்க வேண்டாம் எனச் சொல்லியிருந்தால் சபாபதி அடித்திருக்க மாட்டாரே என மனதிற்குள் யாம் வருந்துகிறோம்.

பேருந்தில் ஏறுவதற்காக நிற்கிறோம். இராமகிருஷ்ணன் எங்களோடு நடந்து வராமல் குளம் அருகிலேயே நிற்கிறார். உடல்நிலை சரியில்லை எனவும் முட்டுவலிக்கு இவற்றை சமைத்துச் சாப்பிடுவது நல்லது எனச் சொல்லி மீனை எடுத்துக்கொண்டு நடக்கிறார்.

பேருந்தில் போகிறோம். பேருந்து தெற்கு திசையில் பயணிக்கிறது. எமக்கு மிகவும் தாமதமாக உள்ளது. ஏதேனும் பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நிற்குமா என பார்த்துக் கொண்டே வருகிறோம். ஒரு நிறுத்தத்தில் நிற்கிறது. வேகமாகக் கீழே இறங்கி அருகிலிருந்த கடையில் தண்ணீர் பாட்டில் தேடுகிறோம். நிறைய பாட்டில்கள் உள்ளன. ஆனால் தெரிந்த பெயரில் (பிராண்ட்) இல்லாமல் வேறு வேறு பெயர்களில் பாட்டில்கள் இருக்கின்றன. யாம் வாங்காமல் திரும்புகிறோம். மிகவும் குறுகிய நேரத்திற்குள் பேருந்து கிளம்பிவிட்டது. யாம் பாய்ந்து சென்று கம்பியைப் பிடித்து மிகுந்த சிரமத்துடன் பேருந்தினுள் ஏறிவிட்டோம்.

பேருந்தின் கடைசி வரிசையில் அமர்ந்திருக்கிறோம். பேருந்தினுள் கூட்டமாக உள்ளது. எமக்கு அருகே ஒருவர் காலை நீட்டித் தூங்குகிறார். அவரது கால் எம்மீது படுகிறது. பல முறை யாம் காலை தள்ளி விடுகிறோம். அவரது கால் மேலேயே உட்கார்ந்து இருப்பதாகவும் தெரிகிறது. பின்னர் அவர் எழுந்து இருக்கையில் உட்கார்ந்து வருகிறார். பேருந்தினுள் கூட்டம் மிகவும் குறைந்து விட்டது. எமக்கு முன்னால் இருந்த இருக்கையில் யாருமே இல்லை. இருக்கை தொடர் வண்டியில் இருப்பது போல் நீளமாக உள்ளது. எமக்கு அருகே உட்கார்ந்து வரும் விக்ரபாண்டி மச்சானை, தூக்கம் வந்தால் இந்த இருக்கையில் படுத்துக்கொள்ளுங்கள் என முன்னால் இருக்கும் இருக்கையை காட்டிச் சொல்கிறோம். தூங்காவிட்டால் தனக்கு ஒரு மாதிரி வரும் என்று சொல்லி அந்த இருக்கையில் படுத்துக் கொள்கிறார். கண்ணை மூடாமல் படுத்திருக்கிறார். அதன் பக்கத்து இருக்கையில் இன்னொருவர் உறங்கிக் கொண்டு வருகிறார். பேருந்தினுள் நல்ல வெளிச்சமாக உள்ளது.

கோவில் ஒன்றில் இருக்கிறோம். மதில் அருகே பலரும் அமர்ந்திருக்கிறார்கள். ஒரு புத்தகத்தில், சில வார்த்தைகள், பாடல்கள் இல்லாதது குறித்துப் பேசுகிறார்கள். வேண்டுமென்றே அந்த வரிகளை மட்டும் வெள்ளைகாரர்கள் நீக்கி விட்டதாகச் சொல்கிறார்கள். அவை ஒன்றும் தவறான வார்த்தைகள் இல்லை என்றும் ஆண்குறியை மறைமுகமாகக் குறிப்பவை எனவும் பேசுகிறார்கள். பெருமாள் தலைவர், ஒத்த வீட்டு பாண்டி, இன்னும் சிலரும் அங்கே

இருக்கிறார்கள். ஆண்குறி தொடர்பான வரிகளை மட்டும் நீக்கியது ஏன் என பெருமாள் தலவர் கேட்கிறார்.

யாம் டென்ட் போன்ற ஒன்றில் படுத்துக்கொண்டு இவர்களின் பேச்சை கவனித்துக்கொண்டிருக்கிறோம். பாரதியார் அனைத்தையும் அப்படியே எழுதியிருப்பதாக, எம்மிடம் இருந்த ஒரு புத்தகத்தை வாங்கி பெருமாள் தலவர் பார்க்கிறார். எழுத்துக்களை தொட்டு தடவிப் பார்க்கிறார். படித்துப் பார்த்து இதில் அப்படியே இருக்கிறதாகவும், நகல் எடுத்துவிட்டுத் தருவதாகவும், அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு, நகலெடுக்க நடக்கிறார்.

15.02.2015, (4 - 5)

பச்சை நிற மீன்

82. ஓரிடத்தில் வலைபோட்டு மீன் பிடிக்கிறார்கள். அந்த இடம் மிகப்பெரிய ஏரி போலவும், கடல் போலவும் தெரிகிறது. பல நாட்களாக வலை போட்டிருப்பதாகத் தெரிகிறது. வலையினுள் மீன்கள் மாட்டிக்கொண்டிருக்கின்றன. தந்தையும் வளரிளம் பருவத்தில் இருக்கும் இரு மகன்களும் இருக்கிறார்கள். மூவரும் கருப்பாக உள்ளனர். மகன்கள், அவ்வப்போது வலையில் சிக்கியுள்ள மீன்களை எடுத்து வலையினுள் போடுகிறார்கள்.

அனைவரும் சேர்ந்து வலையை இழுக்கிறோம். எம்மோடு சேர்ந்து நண்பர்கள் ஒரு பத்து பேர் இருப்பார்கள் என நினைத்துக் கொள்கிறோம். வலை சிறிது சிறிதாக மேலே வருகிறது. வலையினுள் ஏராளமான மீன்கள் சிக்கியிருப்பது தெரிகிறது. வலை கரையருகே வருகிறது. அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே மூச்சாக வலையை இழுத்து விட்டோம். பையன்கள் மீன்களை அள்ளுகிறார்கள். குரவை போன்ற ஊளி போன்ற மீன்களாகத் தெரிகின்றன மீன்கள் சற்று பெரிய அளவாகவே உள்ளன. மீன்களை லாரி போன்ற வண்டியில் ஏற்றுகிறோம். வண்டியின் பக்கப் பகுதிகள் தடுப்பு இல்லாமல் தரைப்பகுதி மட்டுமே உள்ளது. சற்று அதிக உயரத்திற்கு, நேர்த்தியாக மீன்களை வண்டியில் அடுக்கியிருக்கிறோம்.

பையன்களின் தந்தை அங்கே வந்து பேசுகிறார். சற்று உயரம் குறைந்தவராக, சிறிது வெள்ளைத் தாடியுடன், ஆப்பிரிக்க பழங்குடி முகச் சாயலுடன் இருக்கிறார். மிகவும் நேர்த்தியாக ஆங்கிலத்தில் பேசுகிறார். நண்பர்கள் அனைவரும் கூர்ந்து கவனிக்கிறோம். சிவப்பு நாடா முறை ஒழிய வேண்டும் எனவும்,

பியூராக்கிரட் அமைப்பு இருக்கக் கூடாது எனவும், மனித மேம்பாடு, உலக நன்மை குறித்தும் சிறப்பாகப் பேசுகிறார்.

தந்தை பேசி முடித்தவுடன், மகன்கள் மீன்களை அள்ளி அள்ளி அனைவருக்கும் கொடுக்கிறார்கள். நண்பர்கள் அனைவரும் கூடைகளில் வாங்கிச் செல்கிறார்கள். யாம் தனியே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். மீன்களை வாங்காமல் நடந்து செல்கிறோம். வழி நெடுகிலும் சந்தை போன்று மீன்களாக் குவித்து வைத்திருக்கிறார்கள். ஓரிடத்தில் தரையில் மீன்கள் கொட்டிக்கிடக்கின்றன. மீன்கள் மேல் சுண்ணாம்பு போன்ற ஒன்றை கொட்டியிருக்கிறார்கள்.

வீட்டினுள் நுழைகிறோம். ஒரு அறையில் தமிழரசி இருக்கிறார். எம்மையும் மீன் வாங்கி வருமாறு சொல்கிறார். மீண்டும் சில முறை வற்புறுத்திச் சொல்கிறார். தமிழரசியின் தம்பி மணிகண்டன் வீட்டிலிருக்கிறார். யாம் மீன் வாங்கச் செல்கிறோம். பையன் எமக்கு பெரியதொரு பச்சை நிற மீனைக் கொண்டு வருகிறான். பச்சை மீன் சற்று பெரியதாக, உருளை போன்று, பெரிய கண்களோடு மிகவும் அழகானதாக இருக்கிறது. பின் எதையோ நினைத்தவனாக, பச்சை மீனை வண்டியில் வைத்து விட்டு வேறோரு மீனைத் தருகிறான்.

லாரி ஒன்றின் ஓட்டுனர் அருகே அமர்ந்து சென்று கொண்டிருக்கிறோம். ஆராய்ச்சிக் கட்டுரைகள் கொண்ட ஒரு சஞ்சிகையை படித்துக் கொண்டு செல்கிறோம். அருப்புக்கோட்டையில் பெண்களின் இன்றைய நிலை என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது. கட்டுரையை எழுதியவர்களென வேல்முருகன் மற்றும் சிலரது பெயர்கள் காணப்படுகிறது. பெண்களைப் பற்றிய மேலும் பல தலைப்புகளில் கட்டுரைச் சுருக்கங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றை படித்துக் கொண்டே பயணத்தில் இருக்கிறோம்.

தள்ளுவண்டியில் மீன்களை வைத்து பெரியதெரு சாலையில் தள்ளிகொண்டு செல்கிறோம். தள்ளுவண்டியின் பக்கப் பகுதிகளில் தடுப்பு இல்லை. தள்ளுவண்டியின் அடிப்பகுதி முழுக்க மீன்கள் நிறைந்து, போகும் வழியில் மீன்கள் சாலையில் சிதறிக்கொண்டு வருகின்றன. ஒரு பள்ளிக் கூடத்தின் சுற்றுச் சுவர் அருகே வண்டியை நிறுத்துகிறோம். பள்ளிக் கூடத்தின் நுழைவு வாயில் வளைவு பெரியதாகவும், அழகாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எமக்கு அருகேயிருந்த பையினுள் கணினி இருப்பதை கவனிக்கிறோம். கணினி விளக்குகள் ஒளிா்ந்த படி இருக்கின்றன. கணினி திரை வெளிச்சமாக மாறுகிறது. எக்ஸெல் அமைப்பில் எழுத்துக்கள் இருக்கின்றன. எழுத்துக்கள் தலைப்பெழுத்தாக திரையின் கிடைமட்டமாக இல்லாமல் மூலைக்கு மூலை என்ற அமைப்பாக, சற்று பெரியதாக உள்ளன.(என்ன எழுதி இருந்தது என்பது மறந்து விட்டது)

யாம் கணினியை எடுத்து கா்சரைப் பயன்படுத்தி கீழிருந்து மேலாக ஒவ்வொரு எழுத்தாக அழிக்கிறோம். எல்லா எழுத்துகளையும் அழித்த பின்னா் திரையில் முத்து நாடாா் அவரது மனைவியோடு இருக்கும் புகைப்படம் தெரிகிறது. அவா்களது குழந்தைகளுடனான புகைபடங்களும் நிறைய இருக்கின்றன. தங்கம் மட்டும் இருக்கும் ஒரு படம் தெரிகிறது. கீழே ஸ்குரோல் பண்ணும் போது பெரிய கருப்பாயி அத்தையின் படம் வருகிறது. அக்ஷயாவின் முகம் மட்டும் இருக்கும் ஒரு படமும் தெரிகிறது.

16.02.15, (4 - 5)

பத்மநாபசுவாமி கோவில்

83. ஒரு கோவிலினுள் தமிழரசியோடு இருக்கிறோம். திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் எனத் தெரிகிறது. ஒரு வாசல் வழியாகச் செல்கிறோம். கூட்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. நெடுநேரம் காத்திருக்கிறோம். கூட்டம் நகா்வதாகத் தெரியவில்லை. தமிழரசி எங்கிருக்கிறாா் எனத் தெரியவில்லை. யாம் மாடிக்குச் செல்லும் ஒரு படிக்கட்டு வழியாக நடந்து செல்கிறோம்.

எம்மோடு அக்ஷயாவும் நடந்து வருகிறாா். மாடிப்படி சற்று அகலம் குறைவாக உள்ளது. மாடிக்குச் செல்லும் படி மேலே சென்று சட்டெனத் திரும்பி பின் கீழே செல்கிறது. நாங்கள் இரண்டு முறை மேலே ஏறி பின் இறங்கிச் செல்கிறோம். அக்ஷயா எம் கையை பிடித்துக்கொண்டு மகிழ்சியாக வருகிறாா்.

யாம் நீண்டதொரு வராந்தா வழியாக நடக்கிறோம். வழியில் ஆங்காங்கே நிறையப் போ் அமா்ந்திருக்கிறாா்கள். கேரளாவின் பாரம்பரிய உடையணிந்த அழகான பெண்கள், ஒரு அற்புதமான இராகத்தில் அமைந்த பாடலை சுருதி லயத்தொடு பாடிக்கொண்டு ஆடுகிறாா்கள். பாடி, ஆடும் பெண்களைச் சுற்றிலும் மற்றவா்கள் வட்டமாக உட்காா்ந்து கொண்டு, ஆடும் பெண்களை உற்சாகப்

படுத்துகிறார்கள். சில வெள்ளைக்காரப் பெண்களும் அதே இராகத்தோடு அமைந்த பாடலை பாடிக் கொண்டு ஆடுகிறார்கள். இப்படி வழிநெடுகிலும் கூட்டம் கூட்டமாக இருக்கிறார்கள். அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியாக இருப்பது தெரிகிறது.

சற்று தூரத்தில் இரண்டு வரிசையில் மக்கள் நிற்கிறார்கள். யாம் ஒரு வரிசையில் சென்று நிற்கிறோம். வரிசை சற்று வேகமாக முன்னோக்கிச் செல்கிறது. இந்த வரிசைக்கு வந்து நின்றிருந்தால் சீக்கிரத்தில் சாமியைப் பார்திருக்கலாமே, எப்படி இது நமக்கு தெரியாமல் போனது என நினைத்துக் கொள்கிறோம். வரிசை சென்று கொண்டே இருக்கிறது.

கடைவீதி ஒன்றில் நடந்து செல்கிறோம். தமிழரசி விடுதியில் இருப்பார், மீன் வாங்கிச் செல்ல வேண்டும் என நினைக்கிறோம். **யுவராணி மேடம்** அங்கே இருப்பதாகத் தெரிகிறது. கடைகளில் மீன் சந்தை எங்கிருக்கிறது என வழி கேட்கிறோம்.

17.02.15, (5 - 6)

துப்பாக்கி சண்டை

84. ஓரிடத்தில் சண்டை நடந்து அண்ணன் தம்பி இருவரும் அருவாள்களால் வெட்டிக் கொண்டு இறந்து விட்டதாகவும்,. அது தெரிந்த அவர்களது தந்தை தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிகிறது. இவர்களது உடலை பெட்டிகளில் வைத்து, ஒரு கட்டிடத்தின் மாடியில் வைத்திருக்கிறார்கள். யாம் அங்கு செல்கிறோம். கூட்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. இறந்தவர்களது முகத்தை பார்க்க யாம் தயங்குகிறோம். பலரும் முண்டியடித்துக் கொண்டு இறந்தவர்களைப் பார்க்க முயற்சிக்கிறார்கள்.

கட்டிடத்தின் மேல் தளத்தின் வராந்தா வழியாக நடந்து செல்கிறோம். இரவு நேரமாக இருக்கிறது. எமக்கு அருகில் வந்து கொண்டிருந்த தங்கப்பாண்டி, கீழே தரையில் நடந்து செல்வதை பார்க்கிறோம். அதற்குள் எப்படி கீழே இறங்கிச் சென்றிருப்பார் என வியப்பாக இருக்கிறது. வராந்தாவில் நடந்த வேல்முருகனையும் காணவில்லை. எப்படி இறங்கி மாயமாகிறார்கள் என யோசிக்கிறோம். மாடியை ஒட்டியிருக்கும் மரங்கள் மேல் தாவி கீழே சென்றுவிடுகிறார்களோ எனவும் நினைக்கிறோம். தொடர்ந்து வராந்தாவில் நடந்து செல்கிறோம்.

இறந்தவர்களின் உடல் இருக்கும் பெட்டியை இறக்குகிறார்கள். முதலில் தந்தையின் பெட்டி வருகிறது. எமது அப்பாவும் பெட்டியை தூக்கி வருவதைப் பார்க்கிறோம். பெட்டியின் பின் பக்க முனை வாசலை விடப் பெரியதாக உள்ளது. மாடியின் வளைவில் இறக்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். பெட்டியின் மூக்கால் பகுதி வெளியே வந்துவிட்டது. பெட்டியை அப்படியே தாங்கிக் கொண்டு நிற்கிறார்கள்.

மண் தரையில் ஒரு சதுரமான இடத்தின் மத்தியில் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. சதுரத்தின் நான்கு பக்கங்களிலும் உயரமான கட்டிடங்களின் சுவர் இருக்கிறது. சதுரத்தினுள் ஏதோ சண்டை நடக்கிறது. நடிகர் மம்முட்டி, கைத்துப்பாக்கியைத் தூக்கி எறிகிறார். துப்பாக்கி பூமிக்குள் மண்ணைக் கிழித்துக் கொண்டு பெட்டியை நோக்கிப் பாய்ந்து செல்கிறது. புழுதி பறப்பது மிகவும் தத்ருபமாகத் தெரிகிறது. துப்பாக்கி பெட்டியில் மோதியவுடன் பெட்டி இருந்த இடத்தில் பெரிய பள்ளம் உண்டாகி அதற்குள் பெட்டி கிடக்கிறது. புழுதி இன்னும் அதிகமாக வருகிறது.

எதிர் திசையில் இருந்து நடிகர் மோகன்லால் கைத்துப்பாக்கியால் சுடுகிறார். குண்டு புழுதியை பரப்பி கொண்டு தரைக்கு மேல சீறிப்பாய்ந்து வருகிறது. மம்முட்டி நிற்கும் இடத்தில் பட்டு, அங்கே பள்ளம் உண்டாகிறது. மம்முட்டி அந்தப் பள்ளத்தில் நிற்கிறார். பலரும் துப்பாக்கியால் பெட்டியிருக்கும் திசை நோக்கி சுடுகிறார்கள். சாலையில் ஒரு சவ ஊர்வலம் செல்வதைப் பார்க்கிறோம். மிகுந்த சத்தத்துடன் ஊர்வலம் செல்கிறது.

யாம் நீண்ட தூரம் நடந்து கொண்டே இருக்கிறோம். சாலையின் ஓரத்திலிருக்கும் ஒரு கிணற்றிலிருந்த தொட்டிக்குள் தண்ணீர் குழாய் மூலம் கொட்டுகிறது. தொட்டிக்குள் இறங்கிக் குளிக்கிறோம். தொட்டிக்குள் ஒரு இளம் பசுமாடும் குளிக்கிறது. அதனுடைய குறி எமக்கு அருகே இருக்கிறது. அதனோடு உறவு கொள்ள வேண்டும் எனும் ஆசை மனதினுள் எழுகிறது. பசுமாட்டோடு எப்படி உறவு கொள்வது என்ற எண்ணம் வந்து அந்த ஆசையிலிருந்து விடுபடுகிறோம். பின்னர் வெகுநேரம் தொட்டிக்குள் குளிக்கிறோம்

தமிழரசி, அச்சுதன் மற்றும் அக்ஷயா சாலையில் நிற்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து பேருந்து நிறுத்தத்திற்கு நடக்கிறோம். ஓரிடத்தில் நிறையப்

பேருந்துகள் நிற்கின்றன. எமது ஊருக்குச் செல்லும் பேருந்தை அடையாளம் கண்டு அதை நோக்கி ஓடுகிறோம். பேருந்து மெதுவாக செல்ல ஆரம்பித்துவிட்டது. எஸ்.ஏ. ரோடுவேய்ஸ் என்ற பேருந்தின் பின்பக்க மேற்கூரை எழுத்து அப்படியே தெரிகிறது. நிற்கும் வேறோரு பேருந்தை முந்திக் கொண்டு, ஊருக்குச் செல்லும் பேருந்து வேகமெடுக்கிறது. யாம் வேகமாக ஓடியும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை. கருப்பையாவும் எங்களோடு ஓடி வருகிறார். அவரும் சத்தம் போட்டுப் பார்க்கிறார். பேருந்து நிற்கவில்லை. உங்களோடு சேர்ந்து ஓடி வந்து தாமும் பேருந்தை விட்டு விட்டோமே எனச் செல்லிக் கொண்டே பேருந்தை நோக்கி ஓடுகிறார்.

ஒரு வீட்டில் தங்கியிருக்கிறோம். அறையினுள் கட்டில் மேலே பயணப் பைகளும் பெட்டிகளும் உள்ளன. அங்கே பலர் இருக்கிறார்கள். ஒரு நாய் பற்றிய கதையைச் சொல்கிறோம். குளிக்கப் போவதற்கு துண்டு எடுக்கப் போகும் போது நாய் ஒன்று எம்மை விரட்டியதாகவும், அதற்குப் பயந்து யாம் இரவெல்லாம் மரத்தின் மேல் உட்கார்ந்திருந்ததாகவும், விடியும் வரை நாயும் அங்கிருந்து அகலாமல் இருந்ததாகவும் கூறுகிறோம். (முழுக் கதையும் மறந்து விட்டது). கதையைக் கேட்டு எல்லோரும் சிரிக்கிறார்கள்.

அவசரமாக அறையைச் காலி செய்கிறோம். பல பைகளையும் சூட்கேஸ் பெட்டிகளையும் தூக்கிச் செல்கிறோம். பைகளை எடுப்பதற்கு தமிழரசியும் உதவி செய்கிறார். **வல்லமை மேடமும்** அறையைக் காலி செய்கிறார்.

பேருந்து ஒன்றில் பயணிக்கிறோம். அருகே கடல் இருப்பது தெரிகிறது. வழியில் வலது பக்கமாக பல மாடிகள் கொண்ட பெரியதொரு கட்டிடம் தெரிகிறது. ஜன்னல் பால்கனி அமைப்பைப் பார்த்து எவ்வளவு பெரிய குடியிருப்பு என வியக்கிறோம். பேருந்து சென்று கொண்டேயிருக்கிறது. கட்டிடமும் தொடர்ந்து இருக்கிறது. நீண்ட தூரத்திற்குச் சென்று பார்க்கும் போது அந்தக் கட்டிடம் கடற்கரை அருகே இருப்பது தெரிகிறது. கடற்பரப்பில் அலைகள் இல்லை. பாறைகள் அதிகமிருக்கின்றன. கரையின் பாறைப்பகுதியின் மேலேதான் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. கட்டிடத்தின் முக்கிய வாசல், கடற்கரைக்கு மிக அருகில் உள்ளது. தூரத்துப் பார்வையில் அது பள்ளிக்கூடம் எனத தெரிகிறது. பள்ளியின் கட்டிடத்திற்கும் கடலுக்கும் இடையே இடமில்லாததால் பள்ளியில் காலை வணக்கம், கூட்டங்கள் எப்படிக் கூட்டுவார்கள் என நினைத்துக் கொள்கிறோம்.

ஓரிடத்தில் நிற்கிறோம். குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது பற்றி ஒருவர் பேசுகிறார். யாமும் அச்சுதனை ஏழாவதிலும், அக்ஷயாவை ஆறாவதிலும் சேர்ப்பது பற்றி யோசிக்கிறோம். அவர் சிறந்த சில பள்ளிகளின் பெயர்களை சொல்லிக் கொண்டே வருகிறார். யாமும் கேந்திரியா வித்யாலயா உட்பட பல பள்ளிகளின் பெயர்களைச் சொல்லி, அப்பள்ளிகளில் விண்ணப்பம் வாங்கவேண்டும் என நினைத்துக் கொள்கிறோம்.

11.02.2015 ?, (4 - 5)

அழகான கோவில்கள்

85. பேராசிரியர்கள் அறையில் இருக்கிறோம். மாணவர்கள் தேர்வெழுதுகிறார்கள். அவர்கள் எழுதும் தாள் நன்றாக இல்லை என நினைக்கிறோம். இரண்டு மாணவர்கள் எழுதும் தாள்களை அருகருகே வைத்து ஒப்பிட்டுப் பார்கிறோம்.

**நங்கை மேடத்தின்** உணவை **வசிகரன் சார்** சாப்பிடுகிறார். உணவு மிகவும் ருசியாக இருப்பதாகவும், வெண்ணெயில் செய்தது போன்று உள்ளதாகவும் கூறுகிறார். **நங்கை மேடத்திடம்** எதற்கு இப்படியெல்லாம் வழிகிறார் என யாம் மனதிற்குள் நினைத்துக் கொள்கிறோம்.

எமது குடும்பத்தினரோடு ஒரு காட்டிற்குள் இருக்கிறோம். காடு மிகவும் ரம்மியமாக உள்ளது. சற்றுப் பெரிய தட்டான்பூச்சிகள் ஏராளமாக அங்குமிங்கும் சுற்றி வருகின்றன. குழந்தைகளோடு விளையாடுகிறோம். முன்பக்கமாகத் தெரியும் சாலையில் யாம் நடந்து செல்கிறோம். சட்டென ஓரிடத்தில் நின்று குழந்தைகள் என்ன ஆனார்கள் எனத் திரும்பிப் பார்க்கிறோம். எமக்கு மிக அருகில் அச்சுதன் சிரித்துக்கொண்டே மிதி வண்டியிலிருந்து இறங்குகிறான். அக்ஷயாவும், தமிழரசியும் எப்படி அங்கே வருவார்கள் என யோசிக்கிறோம். சற்று தூரத்தில் அக்ஷயா மிதி வண்டியை ஓட்டிக் கொணடு வருகிறார். தமிழரசியும் உடன் நடந்து வருவது தெரிகிறது.

நான்கு பேரும் சாலையில் நடக்கிறோம். சாலையின் மறுபுறத்தில், பேருந்து நிறுத்த நிழற்குடையில் நிறைய பெண்கள் இருப்பதைப் பார்க்கிறோம். மேலும் சிறிது தூரம் நடக்கிறோம். ஆட்டோ ஒன்று நிற்கிறது. ஆட்டோ வருமா எனக் கேட்கிறோம். ஓட்டுநர் காக்கிச் சட்டையின் பொத்தானைப் போட்டுக்கொண்டே

ஆட்டோவிலிருந்து இறங்குகிறார். ஆட்டோக்காரர் அதிகம் கேட்பார் என தமிழரசி சொல்கிறார். அறுபது ரூபாயாவது கேட்பார் எனச் சொல்கிறார். யாம் மீட்டர் போடச் சொல்லிக் கேட்போம் என்கிறோம். ஆட்டோ ஓட்டுனர் மீட்டருக்குச் சம்மதித்து, ஆட்டோவில் அமர்ந்து வண்டியைக் கிளப்புகிறார்.

யாம் பேருந்தில் செல்கிறோம். விழா ஒன்றில் கலந்துகொள்ளச் செல்வதாகத் தெரிகிறது. சிறிய நகரம் போல் தெரிகிறது. கட்டிடங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிகின்றன. பசுமையான மரங்கள் ஏராளமாக உள்ளன. அகன்ற நேரான ஒரு சாலையை குறுக்காக கடந்து பேருந்து செல்கிறது.

பேருந்தின் வலது பக்கத்தில் பசுமையான வயல்கள் இருக்கின்றன. நெல் விதைப்பிற்கான பணிகள் நடக்கின்றன. ஆங்காங்கே வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இடது புறம் சற்று மேடாக உள்ளது. சற்றுப் பெரியதும், சிறியதுமான ஏராளமான கற்சிலைகள் இருக்கின்றன. (பேருந்தின் வேகத்தில் என்ன சிலைகள் என அடையாளம் தெரியவில்லை). பேருந்து செல்லச் செல்ல சிலைகளும் வந்து கொண்டே இருக்கின்றன. இதே வழியில் இதற்கு முன் வந்திருப்பதாக நினைக்கிறோம். பல்வேறு கடவுள்களின் சிலைகளும் அடுக்கடுக்காக பல வரிசைகளால் இடம் பெற்றுள்ளன. சிலைகள் பழமையாகவும், குங்குமம், சந்தனம் வைத்துள்ளதாகவும் நினைவுள்ளது.

சிலைகளின் முடிவில் இன்னும் சற்று உயரமான இடத்தில் மிக பிரம்மாண்டமானதொரு பெருமாள் கோவில் இருக்கிறது. கோவில் கருடன் தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தூரத்துப் பார்வையில் கருடன் மட்டும் இருப்பது போல் மிகவும் அழகாக தெரிகிறது. ஜன்னல் ஓரத்திலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டே செல்கிறோம். இப்படியொரு அழகான கோவில் இருந்ததை இதுநாள் வரை எப்படி கவனிக்காமல் விட்டோம் என வியக்கிறோம். விரைவில் இந்தக் கோவிலைப் பார்க்க வர வேண்டும் என நினைத்துக் கொள்கிறோம். கோவில் சுண்ணாம்பு பூச்சோடு பழமையானதாகத் தெரிகிறது.

சற்று தூரப் பயணத்தில் சிவபெருமான் கோவில் ஒன்றும் வருகிறது. கோவில் நந்தி வடிவத்தில் மிகப்பிரம்மாண்டமானதாகத் தெரிகிறது. தூரமாக சென்று பார்க்கும் போது நந்தி மிகவும் தத்ருபமாக உள்ளது. இதுவும் சுண்ணாம்பு பூச்சோடு பழமையானதாகவே உள்ளது.

பேருந்து சென்று கொண்டேயிருக்கிறது. திடீரென யாம் பேருந்தை நிறுத்துமாறு சொல்கிறோம். ஓட்டுனர் பேருந்தை உடனே நிறுத்தி விட்டு சிரித்துக் கொண்டே எம்மை திரும்பிப் பார்க்கிறார். அக்ஷயாவும், யாமும் பேருந்திலிருந்து இறங்குகிறோம். பேருந்து பயணத்தை தொடர்கிறது. பேருந்து செல்வதையே பார்த்துக்கொண்டே நிற்கிறோம்.

பேருந்து செல்லும் பாதை மிகவும் ரம்மியமாக, மனதை மயக்குவதாக உள்ளது. சிறு சிறு மலைகளும், அவற்றிற்

குப் பின்னே நெடிதுயர்ந்த மலைகளும் தெரிகின்றன. எங்கும் பச்சைப் பசேல் என உள்ளது. மலைச் சரிவுகளின் வளைந்த சாலைகளில் பேருந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. வானம் சற்று நீல நிறமாக, பனிமூட்டம் போன்ற மங்கலான வெளிச்சத்தில் உள்ளது. விடியும் காலைப் பொழுது போல் மிகவும் அருமையான காட்சியாக அது உள்ளது. பேருந்து கண்ணிலிருந்து மறையும் வரை வெகு நேரத்திற்கு பேருந்தையே பார்த்துக் கொண்டு நிற்கிறோம்.

யாம் வந்த வழியை சரியாக நினைவுப்படுத்திக் கொள்கிறோம். எங்கும் விலகாமல் நேராகச் சென்று கொண்டேயிருந்தால் போதும் என நினைக்கிறோம். ஒரு குறுக்குச் சாலையை கடந்தால் கோவில் பாதை வந்து விடும் எனவும் தெரிகிறது. பாதையில் நடக்க ஆரம்பிக்கிறோம்.

மைதானம் ஒன்றில் சிறுவர்களோடு விளையாடுகிறோம். பந்தை தூக்கி எறிந்து பிடித்து விளையாடுகிறோம். அச்சுதன் விளையாடுகிறான். இரண்டு பிரிவுகளாக விளையாடுகிறார்கள். யாம் அச்சுவோடு இருக்கிறோம். அச்சுதன் இருக்கும் பிரிவே அதிகமாகப் பந்தை வைத்துக் கொள்கிறோம். அடுத்த பிரிவுக்கு பந்தை இல்லாமல் எங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். **செல்வனும், விஷ்வனும்** விளையாட வருகிறார்கள். அச்சுதன் எறிந்த பந்து மதில் சுவரைத் தாண்டி விழுந்து விட்டது. பந்து விழுந்த இடத்தை சுற்றிலும் புராதனக் கட்டிடங்கள் இருக்கின்றன. அவற்றை பார்த்துக் கொண்டே பந்தைத் தேடுகிறோம்.

ஊரில் பெரியப்பா வீடு அருகே ஒரு சிறு பையன் நடக்கிறான். யார் இந்தப் பையன் எனக் கேட்கிறோம். கருப்பையா பையன் எனத் தெரிகிறது. அதனால் தான் கருப்பையா போலவே இருக்கிறானா என பையனை உற்றுப் பார்க்கிறோம்.

வளர்மதி கருப்பையாவுக்கு சாப்பாடு பரிமாறுகிறார். அதிகம் படிக்காமல் இருந்த பெண் வெளிமாநிலங்களில் எப்படி சமாளிக்கிறார் என நினைத்துக் கொள்கிறோம்.

21.02.2015 ? (4 - 5)

கெழுத்தி மீன்கள்

86. ஓரிடத்தில் விழா நடக்கிறது. நான்கைந்து பேர் வட்டமாக நின்று கொட்டடிக்கிறார்கள். மக்கள் சுற்றிலும் நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். கொட்டடிப்பதும் கொட்டுச் சத்தமும் மிகவும் அற்புதமாக இருக்கிறது. விழா முடிந்தவுடன் அனைவரும் வீடுகளுக்குச் செல்கிறார்கள். யாமும் ஒரு சாலையில் நடக்கிறோம். சாலை மிகவும் அகலமாகவும், சுத்தமாகவும் இருக்கிறது.

பெரியதொரு நகரம் போன்று உள்ளது. சாலையில் வாகனங்கள் சென்றும், வந்து கொண்டும் இருக்கின்றன. வேன் ஒன்று வேகமாகச் செல்கிறது. சாலையில் இடிப்பது போல் அங்குமிங்கும் வளைந்து செல்வதை பார்த்து எங்காவது போய் இடித்துவிடப் போகிறது என வருந்துகிறோம். சபாபதி மற்றும் சில நண்பர்கள் ஒரு வேனில் செல்கிறார்கள். எம்மையும் வேனில் வருமாறு அழைக்கிறார்கள். யாம் நடந்தே வருகிறோம் எனக் கூறிவிட்டு தொடர்ந்து நடக்கிறோம். அவ்வழியாகச் செல்லும் **சந்தானம்** எம்மை வரச்சொல்லி அழைக்கிறார்.

பெரியதொரு பாலத்தைத் தாண்டி நடக்கிறோம். பரளச்சியின் கண்மாய் பாலம் என மனதில் நினைத்துக் கொள்கிறோம். நடந்து செல்லும்போதே இருட்டி விடுகிறது. சிறிது நேரத்திலேயே மனதிற்குள் பயம் வருகிறது. அடர்ந்த காடு வழியாக நடக்கிறோம். பின்னர் வயல்கள் ஊடாகவும் நடக்கிறோம். அவ்வப்போது திரும்பி டார்ச் லைட் அடித்துப் பார்க்கிறோம். யாரோ பின் தொடர்வது போன்ற உணர்வு வருகிறது. பயம் இன்னும் அதிகமாகிறது. மனதில் ஸ்ரீராம ஜெயம் சொல்லிக் கொண்டே நடக்கிறோம்.

வரும் வழியில் ஒரு அழகிய குளம் இருக்கிறது. அதில் இறங்கிக் குளிக்கிறோம். நிச்சலடித்து மிதக்கிறோம். ஒரு மனிதர் எம்மை குளத்தை விட்டு வெளியே போகுமாறு சொல்கிறார். குளத்தின் ஒரு பக்கத்தில் குதித்து மூழ்கி மறுபுறத்தில் எழுந்திருக்கிறோம். குளம் அருகே கோவில் இருக்கிறது, வீடுகளும் உள்ளன. இருட்டில் தெளிவாகத் தெரியவில்லை. தொடாந்து நடக்கிறோம்.

இப்போது மனதில் மிகுந்த தைரியத்தை வளர்க்கிறோம். பயம் விலகிவிட்டதை உணர்கிறோம். மகிழ்ச்சியாக நடந்து ஊருக்கு வந்து விட்டோம். வீட்டின் மின்சாரக் கம்பம் அருகே சற்று ஆழமான கால்வாய் செல்கிறது. அதில் இறங்கி விளையாடுகிறோம். ரஜினிகாந்த் பற்றி ஒலிபெருக்கியில் ஏதோ அறிவிப்புச் செய்கிறார்கள். நடிகர் அஜித்தோடு ஏதோ ஒரு விசயத்தை இணைத்துச் சொல்கிறார்கள். (என்ன செய்தி என்பது மறந்து விட்டது).

சிறிய அளவிலான மீன்கள் கால்வாயில் அதிகம் இருக்கின்றன. யாம் கைகளால் அவற்றை அள்ளிப் பிடிக்க முயற்சிக்கிறோம். உற்று பார்க்கும் போது சிறிய கெழுத்திமீன்கள் நீந்திச் செல்கின்றன. சிலவற்றை பிடித்து பின்னர் நீருக்குள்ளே விடுகிறோம்.

கணேச அண்ணன், தங்கப் பாண்டி மற்றும் சிலரும் மீன் பிடிக்கிறார்கள். அவர்கள் பிடிக்கும் மீன்கள் சிறியதாக, வெள்ளையாக இருக்கின்றன. கூர்ந்து பார்க்கும் போது, பக்கவாட்டில் அழுத்தப்பட்டது போன்ற சிறிய மீன்களாக உள்ளன. அவை கூட்டமாக நீந்துகின்றன. யாமும் அம்மீன்களை தேடித் தேடி பிடிக்கிறோம். அகப்படாமல் அவை ஓடிக்கொண்டே இருக்கின்றன.

**சந்தானத்திடமிருந்து** எமது அலைபேசிக்கு அழைப்பு வருகிறது. யாம் பத்திரமாக ஊர் வந்து சேர்ந்து விட்டோமா என விசாரிக்கிறார். எமது மாணவர் எம் மீது எவ்வளவு அக்கறையாக இருக்கிறார் பாருங்கள் என அவரைப் பற்றி பெருமையாகச் சொல்கிறோம்.

27.02.15, (2 - 3) ?

அரிசி

87. பலரும் களை வெட்டும் வேலை செய்கிறோம். பல விசயங்களையும் பேசிக்கொண்டே வேலை பார்க்கிறோம். **நங்கை மேடம்** இருக்கிறார், அவரும் யாமும் அருகருகே பேசிக்கொண்டு களை வெட்டுகிறோம். எவ்வளவு அழகான பெண்ணாக இருக்கிறார் என நினைக்கிறோம். அவரது முகம் மிகவும் அண்மைக் காட்சியாக இளமையான தோற்றத்தில் தெரிகிறது.

வேலை பார்த்த அனைவரும் தரையில் படுத்திருக்கிறோம். திடீரென வயலுக்கு சொந்தக்காரப் பெண்மணி அனைவரையும் கம்பால் அடிக்கிறார். பலரும் அடிவாங்குகிறார்கள். எம்மையும் அடிக்கிறார். எம்மை எப்படி அடிக்கலாம் எனச்

சொல்லி அவரை அடிப்பதற்குப் பாய்கிறோம். எமக்கு ஆதரவாகப் பலரும் எம்மோடு இணைகிறார்கள்.

ஊரில் இருக்கிறோம். நண்பர்கள் வெளியே செல்வதற்கு தயாராக உள்ளார்கள். அண்ணன், சபாபதி மற்றும் சிலரும் அதிகாலையிலேயே கிளம்பி விட்டார்கள். சிறுவர்கள் பலரும் கிளம்புவதற்குத் தயாராக இருப்பது தெரிகிறது. யாமும் அவசரமாக மிதிவண்டியில் புறப்படுகிறோம்.

இரண்டு, மூன்று பேர் சத்துருண்டை மாவு கொடுக்கிறார்கள். கடந்த மூன்று மாதமாக சத்துருண்டை கொடுக்க வில்லை என அவர்களிடம் புகார் செய்கிறோம். எமக்கு இரண்டு பெரிய உருண்டைகளைக் கொடுக்கிறார்கள். பின் மேலும் இரண்டு உருண்டைகள் தருகிறார்கள். யாம் கைகொள்ளாத அளவிற்கு உருண்டைகளை வைத்திருக்கிறோம். ஒரு உருண்டை கீழே விழுந்த உருள்கிறது. விழுந்ததில் இரண்டாக உடைந்து விட்டது. அதை எடுத்து ஏதேனும் மணல் ஒட்டியிருக்கிறதா எனப் பார்க்கிறோம். சிறு கற்களை எடுத்துக் கீழே போடுகிறோம். பின் உருண்டைகளை மணிகண்டன், தங்கப்பாண்டியோடு சேர்ந்து சாப்பிடுகிறோம்.

ஒரு படுக்கையில் யாமும், இரவியும் பேசிக்கொண்டு படுத்திருக்கிறோம். கதவை யாரோ தட்டுகிறார்கள். ரவியின் உறவினர் அவரது குழந்தையோடு வந்திருப்பது தெரிகிறது. ரவி அவசரமாக எழுந்து கதவைத் திறக்கிறார். அவரோடு பேசிக்கொணடிருக்கிறோம். சின்னப் பசங்க வந்தா சாப்பிட ஏதும் தரமாட்டீங்களா என அந்தச் சிறுவன் கேட்கிறான். அப்படி அவன் கேட்பது மிகவும் அழகாக இருக்கிறது. மிகவும் சிறுவனாக இருக்கும் அவனா இப்படிப் பேசியது என வியக்கிறோம். முகம் சற்று முதிர்ச்சியாக இருப்பது போல் தெரிகிறது கைகளை நீட்டி, தலையை அசைத்து மழலைக் குரலில் அவன் கேட்டது குறித்த ஆச்சர்யம் அப்படியே இருக்கிறது.

பெருமாள் கோவில் அருகே இருக்கிறோம். ஒரு நாடார் பையன் தொடர்பாக கருப்பசாமியோடு பேசுகிறோம். அந்தப் பையனைப் பார்க்கும் போது நாடார் பையன் போன்று தெரியவில்லையே எனச் சொல்கிறோம். பின்னர், அவர்களுக்கு கரிசல் காட்டில் கிணறு இருக்கிறதென்றும், குடும்பத்தினரோடு வேலை செய்து பார்த்திருக்கிறோம், எனவே நாடாராகத்தான் இருப்பான் எனவும் கூறுகிறோம். அந்த

பையன் வீட்டார் நமது ஊர் இல்லையென்றும், வெளியூரிலிருந்து நமது ஊருக்கு வந்தவர்கள் எனவும் கருப்பசாமி சொல்கிறார்.

பெருமாள் கோவில் பாதையில் ஆசாரி தெரு முடியும் இடத்தில் யாம் மாவாட்டுவதற்கான தயாரிப்பில் இருக்கிறோம். மாவாட்டும் குலவியைக் கழுவிக்கொணடே இருக்கிறோம். ஆட்டுக்கல் மட்டும் ஒரு மேடான இடத்தில் உள்ளது. கீழே பார்த்தால் மிகுந்த பள்ளமாகத் தெரிகிறது. நிறைய தண்ணீர் ஊற்றிக் கழுவுகிறோம். அந்த இடம் மண் தரையாக இருப்பது தெரிகிறது. எவ்வளவு கழுவியும் சிறு சிறு கற்கள் இருந்து கொண்டே உள்ளன. மறுபடியும் மறுபடியும் தண்ணீர் ஊற்றிக் கழுவுகிறோம். அந்த இடத்தில் விரிசல்களும் ஓட்டைகளும் இருப்பதையும் பார்க்கிறோம்.

அரிசியைக் கொட்டினால் கீழே போய்விடுமோ என நினைக்கிறோம். பள்ளிக்கூடம் அருகேயிருக்கும் மேட்டு நிலத்தில் நின்று கொணடு விக்ரபாண்டி மச்சான் யாருடனோ தொலைபேசியில் பேசுகிறார். வெகுநேரத்திற்குப் பேசுகிறார். அவர் வந்து அரிசியை அள்ளிப் போட்டு இப்போ ஆட்டுங்க சரியாப் போய்டும் எனச் சொல்கிறார்.

கல்லூரியின் இளநிலை படிக்கும் மாணவியர் அங்கே இருக்கிறார்கள். அரிசி வேண்டும் எனச் கேட்கிறார்கள். ஒரு பெண்ணைக் காட்டி, சார் இவ அரிசி நல்லாத் திம்பா, அள்ளிக் கொடுங்க என்கிறார்கள். யாம் ஒரு டப்பாவில் அரிசியைப் போட்டு அந்தப் பெண்ணிடம் கொடுக்கிறோம். ஒரு மாணவியைப் பார்த்து அவர் கற்பமாக இருப்பதைத் தெரிந்து என்ன, காதல் திருமணமா எனக் கேட்கிறோம். மற்றொரு பெண்ணும் தனக்கு அரிசி வேண்டும் எனக் கேட்கிறார்.

07.03.15 (3 - 4)

பட்டர்

88. கிராமத்தில் இருக்கிறோம். வேணுகோபால சுவாமி பட்டரும் எமது அப்பாவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கிழக்கு கண்மாயின் மேட்டு நிலத்தில் சிலைகள் செய்கிறார். மண் வெட்டி அள்ளிய ஒரு குழிக்குள் சபாபதியோடு யாம் உட்கார்ந்து சாதம் சாப்பிடுகிறோம். சாதம் மிகவும் ருசியாக இருக்கிறது.

திடீரென சூழ்நிலை மாறுகிறது. காற்று வேகமாக சுழன்றடிக்கிறது. எங்கும் தூசிப்படலமாக இருக்கிறது. மழை வரும் போல் உள்ளது. கிழக்குப் பக்கமிருந்து

புழுதியோடு காற்று வருகிறது. சிறு, சிறு கங்குகளாக ஆங்காங்கே விழுகின்றன. யாமும், சாபாபதியும் பள்ளத்திற்குள் பதுங்கிக்கொண்டு தலையை மட்டும் சிறிது நீட்டி பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ராணி அக்கா வீட்டில் இரண்டு பேர் கூரை வேய்ந்து கொண்டிருக்கிறார்கள். கூரையின் ஓரிடத்தில் நெருப்பு பற்றிக் கொண்டுவிட்டது. எம்மை அங்கே சென்று நெருப்பை அணைக்க உதவி செய்யுமாறு அப்பா சொல்கிறார். கிண்ணத்தில் மீதி இருந்த சிறிது உணவையும் உண்டு விட்டு, அந்த வீட்டை நோக்கி யாம் வேகமாக ஓடுகிறோம்.

தண்ணீர் அல்லது குச்சி ஏதாவது இருக்குமா எனத் தேடுகிறோம். கூரையில் இருப்பவர்கள் எம்மைப் பார்த்து ஒன்றும் செய்ய வேண்டாம் எனச் சொல்கிறார்கள். ஆட்டுக்கார முனியாண்டி மாமாவும் தெரிந்த மற்றொருவரும் மேலே நிற்கிறார்கள். யாம் தொரட்டிக் கம்பு மூலம் எரிகிற தட்டியை மட்டும் இழுத்து கீழே தள்ளுகிறோம்.

பெரியதொரு மண் பானையில் யாம் தண்ணீர் குடிக்கிறோம். பட்டர் டம்ளரை எடுத்து தண்ணீர் அள்ளப் போனவர், கடைசி நேரத்தில் ஏதோ யோசித்தவராக தண்ணீர் குடிக்காமல் டம்ளரை அப்படியே வைத்துக் கொள்கிறார். அங்கே நிற்கும் மற்றொரு பட்டர் தண்ணீர் குடிக்கிறார்.

**பட்டரும்,** அப்பாவும் கிழக்குக் கண்மாயின் உள்பாதை வழியாக பேசிக் கொண்டே நடந்து செல்கிறார்கள். அடிகுழாய் வரை வந்துவிட்டார்கள். அடுத்தது என்னவென்று அப்பா கேட்கிறார். அம்மனுக்கு திருமணம் செய்துவைக்கலாமென்றும் அதற்கு 3000 ரூபாய் மட்டுமே செலவாகுமென்றும் பட்டர் சொல்கிறார். நாங்கள் மூன்று வார்டுகளில் உள்ளவர்கள் தயாராக இருக்கிறோம் என அப்பா கூறுகிறார். அருகே நிற்கும் மாமா, மூன்று வார்டுகளில் மூன்றாயிரம் பேர் இருக்கிறோம், திருமணத்தை எளிதாக நடத்தி விடலாம் எனச் சொல்கிறார்.

மூன்று வார்டுகளிலும் முந்நூறு பேர்தானே இருக்கிறோம், மாமா என்ன மூவாயிரம் பேர் இருப்பதாகச் சொல்கிறார் என யாம் மனதிற்குள் நினைக்கிறோம். மூன்று வார்டுகளில் உள்ளவர்கள் மட்டும் தயாராக இருக்கிறார்கள் என்றும் மீதியுள்ள ஐந்து வார்டுகளில் உள்ளவர்களும் திருமணத்திற்குச் சேரவேண்டும் எனவும் பட்டர் சொல்கிறார்.

ஊரின் செம்மண் நிலத்தில் ஒரு தோட்டத்தில் பட்டரின் வீடு இருக்கிறது. சிலைகள் செய்யும் வேலை மும்முரமாக நடக்கிறது. வேலை முடிந்த சிலைகளும், செதுக்கிக் கெண்டிருக்கும் சிலைகளும் ஆங்காங்கே இருக்கின்றன.

10.03.15, (5 - 6)

முனியசாமி அண்ணன்

89. அருப்புக்கோட்டை எஸ்.பி.கே கல்லூரியில், கல்லூரி முதல் நாள் வகுப்பில் இருக்கிறோம். மரப்படி அமைப்பு போன்ற வகுப்பறையாக இருக்கிறது. நிறைய மாணவர்கள் அமர்ந்திருக்கிறோம். அனைவரும் புதியவர்களாக இருக்கிறார்கள். யாம் ஒரு மாணவியின் அருகே உட்கார்ந்திருக்கிறோம், சபாபதியும் வகுப்பில் இருக்கிறார். பேராசிரியர் வகுப்பிற்கு வரவில்லை. சும்மா உட்கார்ந்து பேசிக்கெண்டிருக்கிறோம். வெளியே சென்று உணவருந்திவிட்டு வருகிறோம். வகுப்பறை உள்ளாகவே மாடிக்குச் செல்லும் படி அமைக்கப்பட்டுளளது. முன்னர் மிகச் சிறந்த பேராசிரியர்கள் இருந்ததாகவும், அப்போது துறை நன்றாகச் செயல் பட்டதாகவும் சொல்கிறோம். தற்போதுதான் இது மாதிரி மோசமாக மாறிவிட்டதாகக் கூறுகிறோம். எமக்கு தமிழ் இலக்கியம் படிக்க மிகுந்த விருப்பம் இருப்பதாகவும் பேசுகிறோம்.

சபாபதியைப் பார்த்து சாப்பிட்டாயா எனக் கேட்கிறோம். அவர் இன்னும் இல்லை என்கிறார். நாளையிலிருந்து மறக்காமல் உணவு எடுத்துவரவேண்டும் என அவரிடம் சொல்கிறோம். மேலும் உணவு உண்ணாமல் இருக்கக் கூடாது எனவும் அறிவுரை கூறுகிறோம். மாணவிகள் சாப்பிடாமல் இருந்தால் என்னாகும் எனக் கேட்கிறார்கள். செரிமான மண்டலம் பற்றியும் செரித்தல் பற்றியும் அவர்களுக்கு விரிவாக விளக்குகிறோம் குடல் வில்லைகள் பற்றிச் சொல்லும் போது விரல்களை உதாரணமாகக் காட்டி விளக்குகிறோம்.

ஓரிடத்தில் பலரும் கூடியிருக்கிறார்கள். இலங்கையில் முன்னாள் விடுதலைப் புலியான நடராஜ் என்பவர் கவர்னராகப் பதவியேற்பதை தொலைக்காட்சியில் காட்டுகிறார்கள். அவர் இராணுவ உடையிலிருக்கிறார். சட்டென அவரது இளமையான முகம் தெரிகிறது. மிகவும் இளமையாக, நல்ல உடற்கட்டோடு இருக்கிறார். வெட்டி சீராக்கப்பட்ட நறுக்கு மீசை வைத்திருப்பது தெரிகிறது. குத்துச் சண்டை வீரர் போல் அங்குமிங்கும் செல்வது போல் காட்டுகிறார்கள்.

அவரது இடது பக்க மேல் கையில் குண்டு பாய்ந்து இரத்தம் வழிகிறது. வலகை கையின் விரலை குண்டு துளைத்த ஓட்டைக்குள் நுழைத்து குண்டுகளை நெம்பி வெளியே எடுக்கிறார். இரத்தம் சொட்டுகிறது. அவரது முகத்தில் வலியைக் காட்டுவதற்கான எந்தவொரு பாவனையும் இல்லை. நான்கைந்து குண்டுகளை இவ்வாறு எடுக்கிறார். அவரது கையில் கருப்பு நிறத்தில் நான்கைந்து துவாரங்கள் இருந்ததற்கான அடையாளம் தெரிகிறது.

சுற்றி நிற்கும் மக்களைப் பார்த்து மிகவும் ஆக்ரோசமாகப் பேசுகிறார். நாங்கள் உங்களுக்கு ஒரு தீமையும் செய்யாத போது எங்களை ஏன் அடித்தீர்கள் எனக் கேட்கிறார். அவர் இருப்பது மேடை போல் இருக்கிறது. நான்கைந்து பேர் நிற்கிறார்கள். நடராஜ் உடன் இன்னொருவர் இணைந்து கொள்கிறார். சுற்றிலும் எதிரிகள் நிற்பதுபோல் தெரிகிறது.

ஒரு அறையில் நடராஜ் வயதானவராக அமர்ந்திருக்கிறார். அவருக்கு வெண்கலக் கும்பாவில் உணவு வைக்கப்பட்டிருக்கிறது. தரையில் குத்துக்கால் வைத்து உணவருந்தத் தயாராகிறார். அகரத்துபட்டி தேவேந்திரர்கள் நிறையப்பேர் அங்கே இருக்கிறார்கள். யாம் அவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறோம். முனியசாமி அண்ணன் வருகிறார். அவரை அனைவரும் மிகுந்த மரியாதையோடு வரவேற்கிறார்கள். அவர்கள் ஊரின் திருவிழாவிற்கு எம்மை வருமாறு அழைக்கிறார். முத்துக் கிருஷ்ணன் அங்கே நிற்கிறார். அவரிடம் நீங்களே ஊரில் சண்டை போட்டு அடுத்த ஊர்களுக்குச் சென்றுவீட்டிர்கள், யாம் எப்படி உங்கள் ஊருக்கு வருவது எனக் கேட்கிறோம். நாங்கள் சமாளித்துக் கொள்வோம், நீங்கள் வாருங்கள் என அங்கிருந்தவர்கள் அழைக்கிறார்கள்.

முத்துக் கிருஷ்ணன் எம்மிடம் புதியதொரு காக்கி கால் சட்டையும், மேல் சட்டையும் கொடுக்கிறார். ஆடைகள் இரவிக்காக தைத்தது எனத் தெரிகிறது. கால் சட்டை சிறியதாக இருப்பதாகச் சொல்கிறோம். ரவி அங்கே வருகிறார். ஆடையை அணிகிறார். மேல் சட்டை பைஜாமா போன்று முழங்கால் வரை உள்ளது. கால்சட்டை மூன்றில் ஒரு பங்கு அளவாக உள்ளது. ஒரு அரைகால் சட்டையும் அருகே உள்ளது.

எமக்கு அது போன்றதொரு காக்கி ஆடை வாங்க விரும்புகிறோம். கடை அருகிலேயே உள்ளது. ஒரு கால் சட்டை அணிந்து பார்க்கிறோம். அது முழுக்கால்

சட்டையாக இல்லாமல் அரைக்காலாக இருக்கிறது. கடையில் முழுக்கால் சட்டை இல்லை எனத் தெரிகிறது. கடையில் தேடுகிறார்கள். யாம் அணிந்திருப்பது போன்ற சான்டல் நிற கால் சட்டை இருந்தாலும் பரவாயில்லை எனச் சொல்கிறோம். அணிந்திருக்கும் கால் சட்டையில் சிப் பகுதி விடைத்து இருக்கிறது. இது போன்று தூக்கி இல்லாமல் சிப் நன்றாக தைத்த கால்சட்டையாகக் கொடுங்கள் எனக் கேட்கிறோம். அனைவரும் சிரிக்கிறார்கள்.

அகரத்துப்பட்டி பையன்கள் பலரும் கட்டணக் குளியல் விடுதி போன்றதொரு இடத்தில் இருக்கிறார்கள். அந்தக் கட்டிடம் பல மாடிகள் கொண்டதாக இருக்கிறது. உள்ளே செல்லாமல் தடுப்பதற்காக பெரிய இரும்பு கம்பியாலான தடுப்பு வைத்திருக்கிறார்கள். ஒரு பெண் பணம் வாங்குகிறார். அருகே நிற்கும் சீருடை அணிந்த காவலர் அனைவரையும் விரட்டுகிறார். ஒரு பையன் அட்டை போல் ஒட்டிக் கொண்டு தலைகீழாக மேல் மாடிக்கு சுவர் வழியே ஏறிச் செல்கிறார். யாம் அதைப் பார்த்து மிகவும் வியக்கிறோம். மற்ற பையன்கள் மாடிப்படி வழியாக உள்ளே செல்கிறார்கள்.

ஓரிடத்தில் நடந்து செல்கிறோம். பரளச்சியிலிருந்து வரும் பொம்மநாயக்கன்பட்டி பாதை போல் உள்ளது. ஊரின் கிழக்கே வரும் போது வானத்தில் ஏராளமான பறவைகள் பறப்பதைக் காண்கிறோம். மிகவும் அழகான பெரிய பறவைகளாக உள்ளன. மிகவும் அருகே பறக்கின்றன. புகைபடக் கருவியை எடுத்துவராமல் வந்துவிட்டோமே என நினைக்கிறோம்.

ஒரு பூச்சி ஒன்று நகராமல் அப்படியே நிற்பது தெரிகிறது. மிகவும் ஆர்வத்தோடு அதனைப் பார்க்கிறோம். நெருங்கிப் பார்க்கும் போது, அது சிலந்தி வலையில் அகப்பட்டிருப்பது தெரிகிறது.

பலரும் நடந்து செல்வதைப் பார்க்கிறோம். எம்மைக் கடந்து, விலகி வடக்காகச் செல்கிறார்கள். பலரும் தலையில் சுமைகளோடு செல்கிறார்கள். பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். குழந்தைகளையும் பார்க்கிறோம். அவர்களது முகம் வட இந்திய முகமாக இருக்கிறது. பேசிக்கொண்டும் சிரித்து கொண்டும் செல்கிறார்கள். அருகே தற்காலிக குடில் அமைத்திருப்பதாகத் தெரிகிறது.

அச்சுதன் வருகிறான். என்ன ஆயிற்று எனக் கேட்கிறோம். யார் ஜெயித்தார்கள், எத்தனை செட் எனக் கேட்டதற்கும் அவன் பதில் சொல்லாமல்

அமைதியாகவே நிற்கிறான். அனைத்தையும் யாம் ஆங்கிலத்திலேயே கேட்கிறோம். எமது அப்பா அங்கே இருக்கிறார். செல்லச்சாமி எங்களைப் பார்த்தபடி நிற்கிறார்.

11.3.2015, (3 - 4)

லாலி பாப்கள்

90. வாடகை வீட்டில் இருக்கிறோம். சிறிய வீடாக உள்ளது. வீட்டிற்குச் சொந்தக்காரர் **யுவராணி மேடமாக** இருக்கிறார். எமது குழந்தைகள் சிறுவயதினராக இருக்கிறார்கள். புதிதாக ஒரு வீடு வாங்க வேண்டும் என நினைக்கிறோம். வீட்டுக்காரர் வீட்டைக் காலி பண்ணச் சொன்னால் எங்கே போவது எனவும், சொந்த வீடு இருந்தால் நன்றாக இருக்கும் எனவும் யோசிக்கிறோம். நல்ல வேளையாக வீட்டுச் சொந்தக்காரரோடு நல்ல உறவில் இருப்பதாகவும் மகிழ்சியடைகிறோம்.

குழந்தைகள் இனிப்பு அல்லது ஐஸ்க்ரிம் சாப்பிட ஆசைப்படுகிறார்கள். லாலி பாப் உற்பத்தி செய்வதற்கான தகவல்கள் ஒரு புத்தகத்தில் இருக்கின்றன. திறந்த வயல் வெளிகளில் பலரும் வேலை செய்து கோடிக்கணக்கான லாலி பாப்களை உண்டாக்கியிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் லாலி பாப்கள் நிறைந்துள்ளன. பல்வேறு விதமான வண்ணங்களில், லாலி பாப்களின் காம்புப் பகுதி மேலே தெரியுமாறு, உருண்ட பாகத்தை வயல்களில் அமிழ்த்தி இருக்கிறார்கள். ஓரிடத்தில் லாலி பாப்பிற்கான கம்புகளுக்காக கனமான இரும்புக் கம்பிகளை பற்றவைக்கும் இயந்திரம் மூலம் வெட்டிக் குவித்திருக்கிறார்கள்.

முக்கிய சாலையின் மையத்தில் பெரியதொரு தட்டையான தொலைக்காட்சி இருக்கிறது. லாலி பாப் தயாரிப்பதைப் பற்றி ஒரு சைனா பெண் அதில் விளக்கிக் கொண்டிருக்கிறார். இரண்டு நெகிழ்வான, நிறமுள்ள பாகுகளை கைகளில் வைத்திருக்கிறார். உருளையான ஒன்றில் இரண்டு பாகுகளையும் போட்டு வேகமாகச் சுற்றுகிறார். அதிலிருந்து அழகான லாலி பாப்கள் உண்டாகின்றன. யாம் இவ்வாறு செய்வது எளிதென்றும், நம்மாலும் லாலி பாப்களை உருவாக்க இயலுமென்றும் கூறுகிறோம்.

கல்லூரியில் முதுநிலை மாணவர்களுக்கு பாடம் நடத்துகிறோம். **உவகை மேடத்திற்கும், உவதி மேடத்திற்கும்** முனைவர் பட்ட பொது வாய் மொழித் தேர்வு நடக்க இருக்கிறது. அவர்களது ஆய்வேடுகளைப் பார்க்கிறோம். ஆய்வேடு தனித்

தனி காகிதங்களாக இருக்கின்றன. **உவதி மேடம்** ஆய்வேட்டின் பக்கங்கள் மாறி உள்ளன. பக்கங்களின் எண் 31, 29, 28, 27 என பின்னோக்கி அடுக்கப்பட்டுள்ளன. அவற்றை எடுத்து ஏறு வரிசையில் சரியாக அடுக்கி வைக்கிறோம். ஆய்வேடுகள் காகித விசிறி போன்று மடிப்பாக உள்ளன. நடுவில் சிறுத்தும் முனைகள் அகன்றும் இருக்கின்றன.

**உவகை மேடம்** கரும்பலகையில் தனது ஆய்வுத் தலைப்பை எழுதி, பூச்சிக் கொல்லிகள் குறித்து விளக்குகிறார். நிறையப் பேர் வந்திருக்கிறார்கள். மின்சாரம் தொடர்புடைய வோல்ட் என்பதனைப் பற்றி ஏதோ சொல்கிறார். ஒரு வயதான மனிதர் எழுந்து அவர் சொல்வதை தவறு என்கிறார். இவர்கள் எதற்காக வந்தார்கள், இப்படிதான் கேள்வி கேட்டுக் கொண்டேயிருப்பார்கள் என **உவகை மேடம்** கோபமாகச் சொல்கிறார்.

கருப்பணன் சார் எமது தலையில் பூவு இருப்பதாகச் சொல்கிறார். யாம் தலையை தொட்டுப் பார்க்கிறோம் பின் தலையில் மல்லிகைப் பூவு வைத்து ஊக்கு மாட்டியிருக்கிறோம். விளையாட்டாக நீய் வைத்ததை ஏன் எடுக்கவில்லை என தமிழரசியிடம் கோபமாகக் கேட்கிறோம். இப்படி தலையில் பூவு வைத்துக்கொண்டேவா முதுநிலை மாணவர்களுக்கு வகுப்பெடுத்தோம் எனவும் நினைக்கிறோம். மாணவர்கள் கூட ஒன்றும் சொல்ல வில்லையே எனவும் வருந்துகிறோம்.

வாய்மொழித் தேர்வு அறையிலிருந்து வெளியே செல்கிறோம். உயரமான அடர்ந்த மரங்களும், பூக்களும் இருக்கின்றன. சற்று தள்ளி இருக்கும் ஒரு ஆய்வு கூடத்தை மிகச் சிறந்த நுண்ணுயிரி ஆய்வுக் கூடத்தில் அதுவும் ஒன்று என அறிகிறோம். ஆய்வுக் கூடம் பூட்டி இருக்கிறது.

நடந்து வரும் வழியில் கற்கள் விழுந்து கிடக்கும் ஒரு சிதலமான கட்டிடத்தைப் பார்க்கிறோம். எமது கால்களைப் காணும் போது இடது கால் வீங்கியும், மொளி சற்று கீழேயும் இருப்பதை உணர்கிறோம். இதைப்பற்றி தமிழரசியிடம் சொல்கிறோம். அவர் குனிந்து கால்களைப் பார்க்கிறார். என்ன செய்யலாம் என எம்மிடம் கேட்கிறார். அந்த வழியாக செல்லும் பூபதி அக்காவிடம் எமது கால் வீக்கத்தைப் பற்றி கூறுகிறார்.

சிறு பையனொருவன் இரண்டுக்கு செல்கிறான். தமிழரசி காகிதம் கொண்டு அவனை சுத்தம் செய்கிறார். யாம் கைகளைக் கழுவுமாறு அவரிடம் சொல்கிறோம். அருகே இரு தண்ணீர் குழாய்கள் உள்ளன.

அச்சுதன் மிதிவண்டியில் வேகமாக வந்து அதே வேகத்தோடு ஒரு வளைவில் திரும்பி எங்கள் அருகே வருகிறான். வேறு பல சிறுவர்களும் மிதிவண்டியில் ஆங்காங்கே சுற்றுகிறார்கள். இவண் மற்ற யார் மீதும் மோதாமல் இருக்க வேண்டுமென நினைக்கிறோம்.

வாய்மொழித் தேர்வுக்குச் செல்ல வேண்டுமென நினைத்து சாலையொன்றைக் கடக்கிறோம். சாலையில் ஆட்டோக்கள் செல்கின்றன இரண்டு ஆட்டோக்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவது போல் மிகவும் நெருங்கி, பின்சக்கரம் தூக்கிக் கொண்டதால் மோதாமல் ஒன்றையொன்று விலகுகின்றன. ஒரு ஆட்டோவின் சக்கரம் குழியொன்றில் இறங்கி ஏறுகிறது. அதிலிருந்து நீரும், சகதியும் சாலையில் கொட்டுகிறது.

27.03.15, (4-5)

சுழலும் இருக்கை

91. வீட்டில் இருக்கிறோம். தேர்வுக்காக படித்துக் கொண்டிருக்கிறோம். சித்தப்பா வீட்டிற்குப் பின்புறத்தில் பலரும் அமர்ந்திருக்கிறார்கள். பின்புறம் திண்டு போல் கட்டியிருப்பது தெரிகிறது. பலரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். **ஆனந்தி** மேற்கு மூலையில் உட்கார்ந்திருக்கிறார். அவரது முகம் மிகவும் அழகாக இருப்பதாகத் தெரிகிறது. அவரைப் பற்றி சில எண்ணங்கள் மனதில் எழுகின்றன.

அழகான சுழலும் இருக்கையொன்றில் இருக்கிறோம். அங்குமிங்கும் அதில் செல்கிறோம். தர்மன் அண்ணன் வீட்டுப் பக்கம் சென்று வருகிறோம். இருக்கையைத் தள்ளாமல், கால்களை மட்டும் காற்றில் அசைத்து அதை உருட்டுகிறோம். கால்களை முன்னும் பின்னும் காற்றில் அசைத்தால் இருக்கை எப்படி நகரும் என ஆச்சர்யமடைகிறோம். கால்களை அசைப்பதைப் பார்த்தவாறு மகிழ்ச்சியாகச் சுற்றுகிறோம்.

கிழக்கு கண்மாய்க்குள் சேரி போன்ற பகுதி இருப்பது தெரிகிறது. அதிகமாக விளக்குகள் போடப்பட்டுள்ளன. இவ்விடத்தில் சேரிப் பகுதி இருந்ததில்லை, எப்போது வந்தது என யோசிக்கிறோம். மின்சாரக் கம்பம் அருகே இருக்கும் பொது

இடத்தில் அகம்படியார் தெருவைச் சேர்ந்த ஒரு இளம் பெண் தினமும் இரவில் வந்து மற்றவர்களோடு சேர்ந்து பல்லாங்குழி ஆடுகிறார் எனத் தெரிகிறது. அந்தப் பெண்ணின் பெற்றோர் இதற்கெப்படி சம்மதிக்கிறார்கள் என நினைக்கிறோம்.

அக்கா வீட்டில் இருக்கிறோம். லாவண்யா மாசமாக இருக்கிறார். அவரால் உணவு உட்கொள்ள முடியவில்லை. எங்களோடு வருகிறாயா என தமிழரசி கேட்கிறார். எமக்கும் தமிழரசிக்கும் வரும் சண்டையைப் பற்றி அச்சுதன் எல்லோரிடமும் கிண்டலாகக் கூறுகிறான். இவங்க ரெண்டு பேரும் இப்போ சண்ட போடுவாங்க, அப்புறம் உடனே பேசிடுவாங்க எனச் சொல்கிறான். அம்மா, அப்பா உட்பட எல்லோரும் சிரிக்கிறார்கள். அவனிடம் அடுத்து என்ன, அடுத்து என்ன என ஆர்வமாகக் கேட்கிறார்கள்.

தேர்வுக்கு மும்முரமாகப் படித்துக் கொண்டிருக்கிறோம். இன்று வியாழக் கிழமை என்றும், வெள்ளிக் கிழமை தான் உயிர் வேதியியல் தேர்வு எனவும் நினைத்துக் கொள்கிறோம். தேர்வெழுத ஊருக்குக் கிளம்புகிறோம். அடர் நீல நிறத்தில் முழுக்கை பனியன் அணிந்திருக்கிறோம். பனியன் அழகாக உள்ளதாக நினைக்கிறோம். சுப்பையா தலவர் கடை அருகே நடக்கிறோம். மாணவர்கள் பலரும் நடந்து செல்கிறார்கள். தெரிந்த முகங்களாக இல்லை.

கலையரங்க மேடை அருகே இருக்கும் தண்ணீர் குழாயில் சாப்பிட்ட தட்டை கழுவுகிறோம். தட்டு சற்று பெரியதாக உள்ளது. குழாயிலிருந்து தண்ணரை சிறிது திறந்து கழுவுகிறோம்.

பேருந்து வந்து விட்டது. வேகமாக ஓடுகிறோம். அதற்குள் பேருந்து போய்விட்டது. எக்ஸ்யூஸ்மீ.. பஸ்ஸ நிப்பாட்டுங்க என மிகவும் சத்தமாகக் கத்துகிறோம். தட்டை அடித்தும் ஒலி எழுப்புகிறோம். சற்று தூரத்தில் சென்ற பேருந்து திரும்பி வருகிறது. நிறுத்தத்தில் இறங்க வேண்டியவர்கள் இறங்க வில்லையெனத் தெரிகிறது.

ஓட்டுனர் எம்மைப் பார்த்து தலையை ஆட்டி வரச் சொல்கிறார். பேருந்தில் கூட்டமாக இருக்கிறது. முன்வாசல் வழியாக ஏறுகிறோம். ஓட்டுனரைத் திட்ட வேண்டும் எனும் எண்ணத்தோடு முன்னால் நகர்கிறோம்.

30.03.15, (5 - 6)

கோயம்புத்தூர்

92. அழகியதொரு கடற்பரப்பு தெரிகிறது. கடல் நீல நிறத்தில் அற்புதமாக இருக்கிறது. பின்னர் கடல் இருந்த இடம் மேடு பள்ளங்களாகத் தெரிகிறது. கால்வாய்களும் சிறு குன்றுகளும் இருக்கின்றன. சாலையின் ஓரத்தில் தெரியும் பள்ளத்தைப் பார்த்து, கடலின் ஆழம் குறைவாகத்தான் இருக்கும் என நினைக்கிறோம். மேலும், தண்ணீர் இருக்கும் போது முங்கி மண் அள்ளிக்கூட வந்து விடலாம் என நினைக்கிறோம்.

தூரத்தில் கடல் நீர் தெரிகிறது. ஒரு ஆற்றின் மையப்பகுதியில் நிற்கிறோம். பாலத்தில் நிற்பது போல் இருக்கிறது. ஆறு இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து செல்கிறது. தண்ணீர் ஓடவில்லை. ஆற்றின் வரப்புகள் தூர்வாரியது போல் பளிச்சென்று தெரிகின்றன.

கிணறு போன்ற ஒரு இடத்தில் சிறுவர்கள் விளையாடுகிறார்கள். யாம் கிணற்றின் படியில் அமர்ந்து ஒரு சிறு குழந்தையைப் பிடித்திருக்கிறோம் படிகள் குறுகலானதாக, கிணற்றின் அடி ஆழம் வரை செல்கின்றன. அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து கீழே பார்க்கும் போது கிணறு மிகவும் ஆழமானதாகத் தெரிகிறது. நின்று கொண்டிருக்கும் குழந்தையின் கைகளைப் பிடித்திருக்கிறோம். தமிழரசியும் பிடித்திருக்கிறார். யாம் குழந்தையைக் கவனமாகப் பிடித்துக் கொள்ள வேண்டுமென நினைத்து எமது கைகளை அணை போல் வைத்திருக்கிறோம்.

**சர்வன்** படிக்கட்டு வழியாக வேகமாக ஓடி வருகிறான். எங்களைத் தாண்டி படியில் குதித்து ஓடுகிறான். மறுமுறை குதிக்கும் போது சமநிலை தடுமாறி கிணற்றின் உள்ளே விழுகிறான். தரையில் கிடப்பவனின் உடலைப் பார்க்கும் போது இரத்தமாகத் தெரிகிறது.

**சௌந்தர்யா** அழுதுகொண்டு ஓடி வருகிறார். மற்ற குழந்தைகள், போட்டி என்று சொன்னதாலேயே கீழே குதித்தான் எனச் சொல்கிறார்கள். அவனை தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்குச் செல்கிறார்கள்.

யாம் ஒரு முள் புதருக்குள் மாட்டிக் கொண்டு வெளியே வருவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். முட்களை சிரமப்பட்டு தள்ளுகிறோம். சிறிது

நேரத்தில் வெளியே வந்துவிட்டோம். **சர்வனை** எந்தப் பக்கமாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள் எனத் தெரியாமல் தடுமாறுகிறோம்.

ஓரிடத்தில் நடந்து செல்கிறோம். கோயம்புத்தூரிலுள்ள ஒரு இடத்தைச் சொல்லி (இடம் பெயர் மறந்துவிட்டது) அங்கே கொண்டு சென்றிருப்பதாகத் நினைக்கிறோம். விரைவில் அவ்விடத்திற்குச் சென்றுவிடலாம் எனவும் தெரிகிறது.

எம்மோடு சபாபதி நடந்து வருகிறார். யாம் கோயம்புத்தூரில் புத்தாக்கப் பயிற்சியில் இருப்பதாகவும், விடுதிக்கு சென்று கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. ஒரு குறுகலான படிவழியாக நடந்து செல்கிறோம். அருகே மது விற்பனை நிலையம் இருப்பது போல் உள்ளது. நிறையப் பேர் நடந்து செல்கிறார்கள்.

மாடியின் மேல் படிகள் செல்கின்றன. அதன் மேல் ஏறிச் செல்கிறோம். படிகள் வளைந்து பின்னோக்கி பல வீடுகளின் மேற்பகுதி வழியாகச் செல்கிறது. அந்த இடம் உயரமாக இருக்கிறது. கீழே பள்ளத்தாக்கு போன்று உள்ளது. கீழே மிக அதிகமான விளக்குகள் அமைக்கப்பட்டிருப்பதும் தெரிகிறது.

மரங்கள் அடர்ந்த ஒரு சாலையில் நடக்கிறோம். சாரல் மழை தூவுகிறது. காலநிலை மிகவும் அருமையானதாக உள்ளது. குறைந்த காற்றும், மழைத் தூறலும், பனி படர்ந்திருப்பதும் மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியானதாக இருக்கிறது. மேகங்கள் மிக அருகில் தவழ்ந்து செல்கின்றன. கோயம்புத்தூர் மிகவும் அற்புதமான ஊர் என நினைத்துக் கொள்கிறோம். நீண்ட தூரத்திற்கு காலநிலையை ரசித்தபடியே நடக்கிறோம்.

எதிரே சாலை வருகிறது. அகலமான சாலையாக இருக்கிறது. அக்ஷயாவின் கையைப் பிடித்திருக்கிறோம். சாலையை மிகவும் கவனமுடன் கடக்க வேண்டுமென நினைக்கிறோம். சாலையின் இருபுறமும் பார்க்கிறோம். வண்டிகள் சில கடக்கின்றன. தூரமாக ஒரு வண்டி வருவது தெரிகிறது. சாலையைக் கடந்து விட எண்ணி அக்ஷயாவை பிடித்து கொண்டு சாலையைக் கடந்துவிட்டோம்.

ஒரு அறையில் இருக்கிறோம். **நங்கை மேடமும், மங்கை மேடமும்** தனித்தனி கட்டில்களில் படுத்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் பேசுவதை யாம் கட்டிலில் படுத்துக்கொண்டு தலையணையால் முகத்தை மூடி அதன் சிறு ஓட்டை வழியே பார்க்கிறோம். சிறு ஓட்டை வழியாக இருவரின் முகமும் நன்றாகத் தெரிகிறது. மிகுந்த சாகஸத்தோடு அவர்களின் பேச்சைக் கவனிக்கிறோம்.

**மங்கை மேடமும்** அவரின் உள்ளங்கையைக் காட்டி விபத்தில் சிக்கிவிட்டதாகச் சொல்கிறார். உள்ளங்கையில் கருப்பான தடயங்கள் தெரிகின்றன. அவர் சதை போட்டவராகவும், முகம் கன்னச் சதையோடும் வெளுப்பாகவும் தெரிகிறார். மலைப்பகுதிக்கு சுற்றுலா சென்றதாகவும், தேநீர் விடுதியில் இருக்கும் போது ஒரு வாகனம் வந்து இடித்து விட்டதாகவும் தெரிவிக்கிறார். எந்தெந்த பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்கள் என்ற பட்டியலையும் சொல்கிறார். (சாய்பாபா கோவில் எனச் சொன்னது தவிர மற்ற இடங்கள் மறந்து விட்டன ).

**சர்வனை** மேலும் சில நாட்கள் மருவமனையில் வைத்திருக்க வேண்டும் என அனைவரும் சொல்கிறார்கள். ஆனால் **சௌந்தர்யாவின் கணவர்** வேண்டாம் என மறுக்கிறார். அவன் விரைவில் சரியாகி விடுவான் எனச் சொல்கிறார். **சௌந்தர்யாவைப்** பார்த்து மருந்து, மாத்திரைகள், மருத்துவக் குறிப்புகள் என எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு கிளம்புமாறு சொல்கிறார். எதையும் விட்டு விடாதே என அழுத்தமாகக் கூறுகிறார்.

அந்த பெரிய அறையின் கடைசி அறையில் **சர்வன்** அருகில் தமிழரசி படுத்திருக்கிறார். அறையில் வெளிச்சம் குறைவாகத் தெரிகிறது.

03.04.15, (5 - 6)

நெல் வயல்கள்

93. காஷ்மீருக்கு சுற்றுலா சென்றிருக்கிறோம். ஓரிடத்தைப் பார்த்துவிட்டு மற்றொரு இடத்திற்குச் செல்கிறோம். பெரியதொரு ஏரி தெரிகிறது. பசுமையான மலைகள் சுற்றிலும் இருக்கின்றன. குறைவான உயரமுள்ள மலைகளாகத் தெரிகின்றன. உயரம் குறைவான கோபுரம் போன்ற அமைப்பை (இசுலாமியரின் மினார் போன்ற ) கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கோபுரத்திற்கு முன்பக்கமாக சமையல் வேலை நடக்கிறது. காய்கறிகளும், பழங்களும் நகரும் பலகை போன்ற ஒன்றில் வைக்கப்பட்டு சுற்றி வருகின்றன. நகரும் படிக்கட்டு போன்ற அமைப்பில் மிக மிக அதிகமான காய்கறிகள் நகர்ந்து கொண்டே இருப்பது தெரிகிறது. அவ்விடத்தில் கோட்டை அல்லது கோவில் போன்ற அமைப்பு இருப்பதும் தெரிகிறது.

பேருந்தில் செல்கிறோம். மலையின் உச்சியில் மிக அழகான, பெரியதொரு கோட்டை அமைப்பு தெரிகிறது. அங்கே செல்கிறோம். அண்ணாந்து பார்க்கும் போது தலைக்கு நேராக அந்த அமைப்பு இருப்பது தெரிகிறது. தூரம் மிக மிக அதிகமாக உள்ளதாக நினைக்கிறோம். மலை மேல் ஏறி பேருந்து செல்லத் தொடங்குகிறது. பேருந்து செல்லும் ஒலி அப்படியே கேட்கிறது. சிரமப்பட்டு பேருந்து செல்வதாகப் படுகிறது.

பேருந்து செல்லும் வழியில் சமதளப்பரப்பாக காணப்படுகிறது. ஒரு பெண்மணி வீட்டின் முன்பாக இருக்கிறார். எங்கு பார்த்தாலும் நெல் வயல்களாக இருக்கின்றன. அனேக வயல்களில் அறுவடை முடிந்து விட்டது. கீழேயுள்ள வயல்களில் நெல்மணிகள் தலை சாய்ந்து கிடக்கின்றன. மேலே மலையில் பெய்யும் மழை நீர் தான் இப்படி வயல்களில் நிறைந்திருப்பதாகத் தெரிகிறது. வயல்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

11.04.15, (8 - 9)

பெருமாள் ஊர்வலம்

94. மிகப் பெரியதொரு கோவிலில் இருக்கிறோம். கோவிலின் உள்சுற்று தெரிகிறது. ரங்கநாதர் கோவிலாக இருக்கிறது. பட்டர் பால் அபிசேகத்திற்குத் தயாராகிறார். சிலைகளை ஊர்வலமாகத் தூக்கி வருகிறார்கள். நம்பெருமாள் போல் இருக்கிறார். கூட்டத்தினர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். குறைவான மக்களே இருக்கிறார்கள்.

ஒரு சிறுவன் மகிழ்ச்சியாக தண்ணீரை அள்ளி தலையில் ஊற்றிக் கொள்கிறான். சற்று குண்டாக இருக்கிறான். அவ்விடத்தில் விவேகானந்தன் நிற்கிறார். மேலும் பலரும் தண்ணீரை அள்ளி தங்கள் தலையில் ஊற்றிக் கொள்கின்றனர்.

சற்று பெரிய அறையினுள்ளாக சாமிக்கு ஆரத்தி காட்டுவது தெரிகிறது. மேளம் அடிப்பவருக்கு அருகே வெள்ளை சட்டை அணிந்த ஒருவர் நிற்கிறார். மேளக்காரர் கண் ஜாடை காட்டி உள்ளே அழைக்கிறார். கண் ஜாடையால் அழைப்பது அருமையாக உள்ளது. மக்கள் கூட்டம் மேளம் நோக்கி நகர்கிறது. மிக மிக அருமையான மேளச்சத்தமாக் கேட்கிறது. மேளச்சத்தத்திற்கேற்ப அனைவரும் உற்சாகமாக ஆடுகிறார்கள். யாமும் வேல்முருகனும் நொண்டியடிப்பது போல்

ஆடிக் கொண்டு மேளம் நோக்கிச் செல்கிறோம். நமக்கே ஆடணும் போல இருக்குல்ல எனச் சொல்லிக் கொள்கிறோம்.

கோவில் ஒன்றின் முன்பாக சிறிய அளவிலான சிலைகள் நிறைய வைக்கப்பட்டிருக்கின்றன. கோவில் நகருக்கு வெளியே சற்று தொலைவில் உள்ளதாகத் தெரிகிறது. புதிதாகக் கட்டப்பட்டதாகவும் முழுக்க கற்களால் ஆனதாகவும் உள்ளது. பெருமாளும், முருகனும் ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளுமாறு இருக்கும் மிகப் பெரிய சிலைகள் தெரிகின்றன. இருவருடைய முகமும் பெரியதாகவும், அழகு நிரம்பியதாகவும், சிரித்தவாறும் உள்ளன.

நாங்கள் கோவிலுக்கு வெளியே பெரியதொரு சுற்றுச் சுவரையொட்டி நின்று கொண்டிருக்கிறோம். கோவிலின் வாயிலில் மிகப் பெரியதொரு மயிலின் சிலை இருக்கிறது. மயில் மிகவும் அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக நினைக்கிறோம். நாங்கள் இருவரும் அங்கு படிப்பதற்காக அடிக்கடி வந்திருப்பதாகத் தெரிகிறது. வேல்முருகன் கோவிலின் உட்சுவரில் எழுதப்பட்டிருக்கும் MUGUES (எழுத்துகள் சரிதானா என்பதில் சற்று மறதி உள்ளது) என்ற எழுத்துகளை காண்பிக்கிறார். MUGUES முருகேஸ்வரி எஞ்சினியரிங் காலேஜ் என ஆங்கித்தில் பெரிய அளவுள்ள கொட்டை எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது. யாம் சுற்றுச் சுவர் அருகே சிதறிக் கிடக்கும் குச்சிகளை எடுத்து, சுற்றுச் சுவருக்கு வெளியே வீசுகிறோம்.

பெருமாள் புறப்பாடு நடக்கிறது. கோவிலின் அருகே நகருக்குள் செல்லும் சுற்றுச் சாலையில் பெருமாள் ஊர்வலம் செல்கிறது. கோவிலின் உள்ளே அருணாச்சலேஸ்வர் லிங்கம், அழகாக அலங்கரிக்கப்பட்டு இருக்கிறது. லிங்கத்திற்கு ஆரத்தி காட்டுகிறார்கள். பெருமாள் கோவிலுக்குச் செல்ல யாம் நடக்க ஆரம்பிக்கிறோம். ஊர்வலம் புறப்பட்டு சிறிது நேரம் தான் ஆகிறது என்றும் சுற்றுச் சாலையில் சென்று விரைவில் கூட்டத்தோடு சேர்ந்து கொள்ளலாமென்றும் நினைக்கிறோம்.

( கனவுகள் தொடரும்)

ஸ்ரீவேங்கட நிவாஸாய  ஸ்ரீநிவாசாய மங்களம்!

ஸர்வலோக நிவாஸாய  ஸ்ரீநிவாசாய மங்களம்!

மங்களானாம் நிவாஸாய  ஸ்ரீநிவாசாய மங்களம்!

